# பொருளடக்கம்


**பிரிவு – 1 – சங்கம் - இடைக்காலம் - பல்லவர் காலம்**

1. மொழி வரலாற்றுச் சான்றுகள் - தொல் திராவிடம்
2. தொல்காப்பியத் தமிழ் - சங்ககாலத் தமிழ்
3. தமிழ் பிராமிக் கல்வெட்டுத் தமிழ்
4. இடைக்காலத் தமிழ் - பல்லவர் காலத் தமிழ்

**பிரிவு – 2 – சோழர் - நாயக்கர் - இக்காலம் - மொழிபெயர்ப்பு**

5. சோழர் காலத் தமிழ் - நாயக்கர் காலத் தமிழ் - மராட்டியர் தமிழ்
6. இக்காலத் தமிழ் - உடைநடையியல் - பிறமொழிச் சொற்கள்
7. அறிவியல் தமிழ் - உரைநடையியல் - பிறமொழிச் சொற்கள்
8. மொழிபெயர்ப்பு

**பிரிவு – 3 – கல்வெட்டுத் தமிழ் - மாற்றங்கள்**

9. வானொலி – தொலைக்காட்சித் தமிழ்
10. கல்வெட்டுத் தமிழ் - உயிரொலி மாற்றங்கள்
11. மெய்யொலி மாற்றங்கள் - தமிழ்க் கிளைமொழிகள்

**பிரிவு – 4 – தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்**

12. தமிழ் வரிவடிவ வரலாறு
13. தொல்காப்பியர் காலம் - இடைக்காலம் - எழுத்துச் சீர்திருத்தம்
14. வீரமாமுனிவர் - பெரியார் - வா.செ. குழந்தைசாமி இவர்களின் எழுத்துச் சீர்திருத்தம்

# 1. மொழி வரலாற்றுச் சான்றுகள்

குறிப்பு

உலக அரங்கில் மொழியின் வரலாறு என்பது அம்மொழியில் காலப் போக்கிலான வளர்ச்சிநிலையினைச் சுட்டுவதாகும். உலகில் பல மொழிகள் ஒவ்வொரு சூழலில் தோன்றினாலும் அவற்றில் பல மொழிகள் காலப்போக்கில் மறைந்தழிந்தன. அவற்றுள் இதனை 'பரிணாம வளர்ச்சி' என்று அறிவியல் சுட்டுகின்றது. அறிவியல் நுட்பங்களின் வளர்ச்சியினைப் போன்றுதான் மொழியியல் துறையின் வளர்ச்சிகளும் அமைகின்றன. இவை காலந்தோறும் என்று அடிப்படையில் சுட்டுகின்றபோது உயிரினங்களின் வளர்ச்சிநிலையினை, டார்வின் பரிணாமக் கொள்கையினை ஒட்டி நிலையில் இயற்கையாக மொழி வளர்தல் என்பதான சூழலிலேயே அமைகின்றது.

இதனை ஒட்டியே என்றும் அழகு மொழியாகவும் இலக்கியம், நீதி, சாத்திரம், சமயம், தத்துவம் என்பதான பல நிலைகளையும் நாம் நம்முடைய இன்தமிழ்மொழியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாகவேப் பெற்றிருந்துள்ளோம் என்பதனையே இது 'கன்னித் தமிழ்' என்றும் சுட்டப்படுகின்றது. மனோன்மணியனார் "உன் சீரம் இளமைத் திறம் வியந்து" என்று போற்றி வியந்து நிற்கின்றார். இம்மொழி வரலாற்றினை ஆராய்வதற்கு காலமுறைப்படி தோன்றிய இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுக்கள், பிற நாட்டார் குறிப்புகள், தமிழினை ஒட்டிப் பிறந்த கிளைமொழிகளில் தமிழின் அமைப்புக் கூறுகள் என்பதான பலவற்றைத் தொட்டுக் காட்டியே நம்முடைய மொழி வரலாற்றினை நாம் உணர இயலும் .

## இலக்கியங்கள் (Literatures)

அடிப்படைச் சான்றுகளில் மிக முக்கியமான மொழி வரலாற்றின் பார்வையில் அம்மொழியில் எழுந்துள்ள இலக்கியங்களே ஆகும். இலக்கியம் என்றால் சங்க இலக்கியம் அல்லது மிகச்

சிறந்த பெருமைக்குரியதான இலக்கியம் என்பதான பாகுபாடுகள் இன்றி, தமிழில் தோன்றிய அனைத்து இலக்கியங்களும் இவ்வறையரையினுள் உட்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும். காரணம் நாம் சங்க இலக்கியதினை மட்டும் எடுத்துக்கொண்டால், சங்க காலத்திற்குட்பட்டதான மொழி ஆளுமையினையினையே அறிய இயலும். எனவே ஆய்விற்குரிய காலத்தில் எல்லை வரையிலும் தோன்றிய அனைத்து வகையான இலக்கியங்களினையும், அவை நல்ல தமிழ் இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுந்தனவாயினும், தள்ளப்படும் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுந்தனவாயினும் அவை அனைத்தினையும் நாம் கொள்ள வேண்டும். அப்போதுதான் மிகச் சரியானதொரு வளர்ச்சி வரலாற்றினை நாம் அறிய இயலும்.

இலக்கியங்களை இருவகையாகப் பகுக்கலாம். முதலாவதாக இலக்கிய மொழி நடையுடையனவான செய்யுள் மற்றும் உரைநடை நூல்கள். இதனை எழுத்திலக்கியம் (Written Literature) என்றும் நடையினை (Literary Language) என்றும் சுட்டலாம். இரண்டாவதாக எழுத்து மொழியின்றி பேச்சு மொழியில் அமைந்த வாய்மொழி இலக்கியங்கள். இதனை நாம் நாட்டுப்புற இலக்கியங்கள் (Folk Literature) என்றும் அதன் நடை அடிப்படையில் (Colloqvial Language) என்றும் நாம் கூறலாம். இவற்றில் மொழிவளர்ச்சிக் கூறினை மிகுதியும் உணர வாய்மொழி இலக்கியங்களே உதவுகின்றன. காரணம் அவையே மக்களின் நடைமுறை வாழ்வியலோடு இணைந்த மொழி ஆளுமையினை எடுத்துரைக்க வல்லவை ஆகும்.

இலக்கியங்களில் பல பதிப்புகளால் மாற்றங்கள் உள்ளதனால் சில நேரம் பிழைபடக் கூடியச் சூழலும் எழும். எனவே மிகுந்த கவனத்துடன் இலக்கியங்களை அணுக வேண்டிய தேவை உள்ளது. அவ்வாறான சூழல்களில் நாட்டுப்புற இலக்கியங்களான பேச்சு வழக்கினையும் ஒட்டிப் பலவற்றை ஆய்ந்திட ஏதுவாகின்றது.

தமிழின் மிகப் பழமையான நூலாகிய தொல்காப்பியம் அதனைத் தொடர்ந்து எழுந்த தனிப் பெரும் நூலான சிலப்பதிகாரம். ஒன்று இலக்கணமாகவும் மற்றொன்று இலக்கியமாகவும் பார்க்கப்படுகின்றது.

குறிப்பு

காலத்தால் சிலம்பு பின்னது என்பதும் ஏற்கப்படுகின்றது. இதனுள் தொல்காப்பியத்தின் ஆளுமைக்குள்ளாகிய 'அல்' என்னும் விகுதி காலப்போக்கில் சிலம்பில் 'அன்' என்ற திரிபினை அமைந்து மருங்கொலி நிலை மாறி மூக்கொலியானதனைச் சுட்டுவர். இவர்களுக்குப் பிந்தையதான நிலையில் சோழர் காலத்தில் மாற்றங்களை திருநாவுக்கரசரின் வடமொழி ஒலிகளைக் கொண்ட தேவாரம், பரிபாடலில் காணப்படும் மாற்றங்கள் மூலம் உணரலாம். தொடர்ந்து 17ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றியதான பல வகையான சிற்றிலக்கியங்களில் சிந்து, பள்ளு, கும்மி, அம்மானை என்பதான 25 இலக்கியங்களின் மூலமாகவே நம் பாமரமக்களின் இனிய தமிழ்மொழி நடையின் இயல்பினைப் பதிவு செய்திடவும், பகர்ந்நிடவும் இயன்றது. அவ்வகையில் தோன்றிய மகாபுராண அம்மானை, ராமப் பையன் அம்மானை, நொண்டிச் சிந்து, கட்டபொம்மன் கும்மி, சிவகங்கை சரித்திரம், பொன்னுருவி மசக்கை, குடியானவனின் நாடக இலக்கியமாகிய முக்கூடற்பள்ளு போன்ற பல இலக்கியங்களின் அச்சு வருகையே பல் வகையான மொழி வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்தன. இதன் காரணமாக அடிப்படையில் நிகழ்ந்த மாற்றங்களினை,

| | |
|---|---|
| புக்கு | புக்கி |
| இருபத்து | இருபத்தி |

என்பதில் அமைந்த குற்றியலிகரம் மற்றும் குற்றியலுகர மாற்றங்களும்,

| | |
|---|---|
| அருமை | அரிமை |
| சிறுமொழி | சிறிமொழி |
| சிறு இலை | சிறிஇலை |

என்பதான பயன்பாட்டில் மொழி இடையில் அமைந்த உகர இகர மாற்றங்களைச் சுட்டுகின்றது. சில பேச்சு வழக்கு மொழிகளை,

அடைக்காய் - பாக்கு

குறிப்பு

வெள்ளிலை – வெற்றிலை

சம்பாரம் - சாக்கு

விதனம் - செய்தி (இன்றும் நாம் விஷயம் என்று வடமொழி இணைப்போரும், இலங்கைத் தமிழர் விடயம் என்றும் பேச்சு வழக்கில் பயன்படுத்துவதனையும் நாம் காண்கின்றோம்.

மன்னாப்பு – மன்னிப்பு

கலனை – ஜீனி

என்றும் சான்றுகளை இராமப் பய்யன் உள்ளிட்ட நூல்கள் வழி அறிய இயலுகின்றது.

வரிவடிவம், வரிவடிவம் அல்லாத பேச்சுமொழி வடிவம் என்பதான இரு நிலையிலும் நாம் கவணித்து ஆய்ந்தாலே நம்முடைய மொழி வரலாற்றினை சிறப்பாக அமைக்க ஏதுவாகும்.

## இலக்கணங்கள் (Grammars)

தனித்தமிழின் சிறப்பிற்கு மிக முக்கிய காரணியாக அமைவது இலக்கண நூல்களே. மொழியின் அமைப்பினை உணர்திய இலக்கணமும், அதற்கான உரைகளும் மிகுதரு நிலையினைக் காட்ட உதவுகின்றன. ஒலிப்பு முறைகளை அடிப்படையாகக் கொண்டு, ஒன்றோடொன்று இணைந்து சொல்லாக, பொருளாக, தொடராக மாறும் அனைத்து நிலைகளும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இங்கு இலக்கியத்தின் அமைப்பு முறையான ஒலியன்கள் மற்றும் உருபன்களின் பதிவினை இலக்கணம் ஒலியன், உருபன், சொல்லமைப்பு, பொருள் தரும் தொடர்நிலைகள் என்று பகுத்து விரித்துரைக்கின்றது.

குறிப்பு

இதன் காரணமாக இலக்கணத்தினை நாம் விளக்க மொழியியல் (DescrPltive Lingvisties) என்று சுட்டுகின்றோம். தொல்காப்பியம் அனைத்து எழுத்துக்களின் பிறப்பிடங்களையும் சுட்டுகின்றது. மேலும் மொழிக்கு முதலில் இடையில் கடையில் என்பதான ஒலிப்பு முறைகளினையும் இதன் மூலம் அக்காலத்தின் ஒலியனியல் அமைப்பினை (Phonemic Structure) அறிய இயலுகின்றது.

தொல்காப்பியத்தினைத் தொடர்ந்து வழிநூல்களாகவும், சார்பு நூல்களாகவும் நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், இலக்கணக் கொத்து, முத்து வீரியம் போன்ற நூல்கள் தோன்றின. அவ்வாறே அது, ஆது, ஆ என்பன வேற்றுமையிலும், இடைநிலையில் கிறு, கின்று, ஆநின்று என்பது நிகழ்கால இடைநிலையாக அடையாளம் காணப்பட்டதான சூழல்களும் சான்றோர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சான்றுகள் மூலம் இலக்கண நூல்கள் மொழி வரலாற்றிற்கு உதவுகின்றன.

**உரையாசிரியர்கள் (Commentators)**

செய்யுள் வடிவினையேத் தம்முடைய அடிப்படை அமைப்பாக நம்முடைய பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் கொண்டுள்ள காரணத்தினால் அவற்றிற்கு பல்வகையான உரைகள், இன்றுவரை எழுந்த வண்ணமே உள்ளன. மொழி வரலாற்றில் இதன் சிறப்பு என்னவென்றால் உரை கூறுபவர்கள் தம்முடைய கால வழக்கைப் பயன்படுத்தித் தெளிவு காணவும் காட்டவும் முயல்கின்றனர். அவ்வகையில் அமைந்த போக்கினை நாம் ‘உரையிற் கோடல்’ என்னும் உத்தியாகப் பயன்படுத்துகின்றனர். பல்வேறு காலச் சூழலில்களில் எழுதப்பட்டதான காரணத்தினால் அவர்கள் காலத்திலான வழக்காறுகளைத் தழுவி விளக்குகின்றதனால் பல காலச் சூழல் வழக்கு மொழிகளையும் அறிய இயலுகின்றது. தொல்காப்பியல் “கடிசொல் இல்லை காலத்துப் படினே” என்று சுட்டுவதனை ஒட்டியே பல்வேறு உரையாசிரியர்களின்

குறிப்பு

உரைகளுக்கு இடையில் காணப்படும் உரை வேறுபாடானது ஆய்வுடன் ஏற்கத்தக்கதே என்று தெளிவுபடுத்துகின்றனர். இதனை ஒட்டிய ஆய்வில் தொல்காப்பியரின் நூற்பா வியங்கோள் வினைமுற்றிற்கு ஈறு கூறாமல் இடம் கூறி விளக்குகின்றது.

உரையாசிரியர்கள் வியங்கோள் விகுதிகளாக அமைத்து,

இளம்பூரணர் -க

தெய்வச்சிலையார் - க

சேனாவரையர் க, யா, அல்

நச்சினார்க்கினியர் கல்லாடர் - க, யா, அல், ஆர், ஆல், உம், ஐ, மார்

என்பனவற்றைச் சுட்டுகின்றனர். ஏதாயினும் ஆய்வில் தெளிதல் அவசியமாகின்றது. வெளிநாட்டார் இயற்றிய இலக்கணங்கள் (Grammars by Foreigners) நம் தமிழகத்திலும் இந்தியத் திருநாட்டிலும் தோன்றி தமிழுக்குச் சேவை செய்தவர்களைப் போன்ற பல வெளிநாட்டவர்களும் தமிழ்மொழியின் மீது மிகுந்த காதல் கொண்டு பல்வேறு இலக்கியப் பங்களிப்புகளைச் செய்துள்ளனர்.

பல்வேறு சூழல்களின் காரணமாகத் தமிழகம் வந்த வெளிநாட்டவர்களில் மதபோதகத்திற்கும், சுற்றுப்பயணத்திற்கும், வணிகத்திற்கும் வேறுபல காரணங்களை முன்னிட்டும் வந்தவர்கள் மிகுதி. அவர்களுள் சிலர் தமிழ் மீது கொ்ணட காதலில் தமிழினைத் தெளிவாகப் பயின்றது மட்டுமின்றிப் பல்வேறு இலக்கிய இலக்கணப் பங்களிப்பினையும் செய்துள்ளனர். அவற்றுள் பிறமொழியிலே அதாவது அந்தந்த வெளிநாட்டவர்களின் தாய்மொழியில் அமைந்த நூல்களில் எடுத்துரைத்துள்ளனர். சிலர் தமிழிலும் இயற்றியுள்ளனர். அவற்றுள் போர்ச்சுக்கீசிய மொழியினில் இயற்றப்பட்ட ஒரு தமிழ் இலக்கண நூல் இருந்ததான செய்தி உள்ளது நூல் இல்லை. அவர்களுள் பலர் நம் பேச்சத் தமிழுக்கு இலக்கணம் கூறியுள்ளனர்.

குறிப்பு

அவ்வாறே 1672இல் பால்டீயஸ் (Baldacus) என்ற டச்சு நாட்டவர் இந்தியா தொடர்பான நூலில் தமிழ்மொழியின் சிறப்பினையும் ஒலிப்பு முறைப் பாகுபாடுகளையும், வினை விகற்ப வாய்பாடுகள் தொடர்பான பதிவுகளையும், வேற்றுமைகளில் நிலவும் வேறுபாடுகள் குறித்தும் பல செய்திகளைப் பதிவு செய்துள்ளார். மேலும் இயேசு பெருமான் மீதான வழிபாடு ஒன்றினையும் 'கர்த்தர் கற்பித்த செபத்தின்' (Lord's Prayer) என்பதாகத் தமிழில் அமைத்து இணைத்துள்ளதனையும் காணமுடிகின்றது. மேலும் இந்நூலினுள் தமிழ்ச்சொற்களை டச்சு நெடுங்கணக்கில் எழுதியுள்ளமையினையும் காண இயலுகின்றது. சமீப காலத்தில் தக்காணக் கல்லூரியின் ஆண்டு விழா மலரில் இந்நூல் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டதனை அறியமுடிகின்றது. 1980களில் இலத்தீன் மொழியில் கோஸ்டா பல்த்சரா (Costo Balthsara) என்பவர் தமிழ் இலக்கணத்தினை இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார். தொடர்ந்து 1685இல் புருனோ (Bruno) என்பவர் ஓர் இலக்கண நூலினை அளித்துள்ளார். இந்நூல் இந்நாள்வரையில் அச்சேரியதாக அறிய இயலவில்லை.

தொடர்ந்து பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மிகச் சரியாக 1786ஆம் ஆண்டில் சீகன்பால்கு (Ziegengleg) ஒரு தமிழ் இலக்கண நூலான (Grammatica Damulica) என்ற நூலினை அளித்தார். தொடர்ந்து பெஸ்கி என்ற வீரமாமுனிவர் பேச்சுத் தமிழ் இலக்கணம் நூல் ஒன்றினை Grammar of the Common Dialect of the Tamiliam என்று அமைத்துக் கொடுத்துள்ளார். பேச்சுத் தமிழ் இலக்கணம் என்பதனால் இதனைக் குறைத்து மதிப்பிட்டுவிட இயலாது. இவரைத் தொடர்ந்து 1836இல் ரேனியஸ் (Rhenious) என்பவர் 'தமிழ் மொழியின் இலக்கணம்' (Grammar of the Tamil Language) என்ற கருத்தமைந்த நூலினை வெளியிட்டார். இந்நூல் Prescriptive Grammar என்பதான இலக்கண வகையில் அமைந்திருந்தது. இவர்களைத் தொடர்ந்து பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் எல்லீஸ், போப், கிராலின், கால்டுவெல் போன்றோரின் இலக்கண நூல்கள் தமிழ்மொழியின் சிறப்பிற்கு மேலும் மெருகூட்டின என்றால் மிகையில்லை. இந்நூல்களோ பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளின் பேச்சுத் தமிழ்மொழியினை உணர்ந்திட பெரிதும் உதவுகின்றன. இந்நூல்களால் சில குறைகள் இருப்பினும் ஒலியியல் ஆய்வில் பெரிதும் துணை செய்கின்றன. ஆயினும் மரபுத் தமிழ் இலக்கணங்கள் (Traditional Tamil Grammars) மற்றும் மூவிடப்பெயர்கள் (Personal Pronouns) தனித்துப் பேசப்படவில்லை. ஆனால் அவற்றின் செய்தியினைப் பெயர்ச் சொல்லிலே சுட்டுகின்றனர். மேலும் அயல் நாட்டவர்கள் அளித்த தமிழ் பெயர்ச் சொல்லினுடைய உட்பிரிவாக(Sub Category) அமைந்துள்ளதனைக் காண்கிறோம். ஆகையினால், இன்றைய சூழலில் பேசப்படும் தற்காலத் தமிழ் இலக்கணங்களில் மூவிடப் பெயரின் உட்பிரிவாகவே மொழியியலாளர்களும் ஏற்கின்றனர்.

குறிப்பு

ஒலிக்குறியீடுகள் ஏதும் இந்நூல்களினுள் சுட்டப்படவில்லை என்பதனால் சில விளக்கங்கள் புரிவது கடினமாகவே உள்ளன. எனவே மற்றவர்களுடைய இலக்கண நூல்களைக் காட்டிலும் தமிழ்ப் பாவலரும் மிகச் சிறந்த தமிழறிஞரும், ஆர்வலருமான பெஸ்கியின் நூல்களில் உள்ள விளக்கங்கள் பெரிதும் பயன் காட்டுகின்றன. இதற்கான சான்றாக பெஸ்கி அவர்கள் எடுத்துரைப்பதனைப் போன்றதான முக்கியமான ஒலிக்குறிப்புகளான நெடில் போன்றவை பிற இலக்கண நூல்களில் குறிப்பிடப்படவில்லை. எனவே பெஸ்கியின் குறிப்பு சிறப்புடையதாக நோக்கப்படுவதற்கான காரணம் பெஸ்கி அவர்கள் பிற அயல்நாட்டுத் தமிழறிஞர்களைவிடவும் நீண்ட காலம் தமிழகத்தில் தங்கி வாழ்ந்தவர். அவர் நேரடியாக உணர்ந்த உணர்வின் வெளிப்பாட்டினை நாம் அவருடைய எழுத்துக்களிலும் காண இயலுகின்றது என்பதுவே இவர் நூலின் சிறப்பு.

தனித் தமிழில் எழுந்த பல இலக்கண நூல்களில் காண முடியாத சில மரபு இலக்கணங்கள் அயல் நாட்டவர்களின் நூல்களில் காண இயலுகின்றது. சான்றாக வினைச்சொல் பற்றி பேசுகின்றபோது எந்த வினைச்சொல் எந்தக் காலம் காட்டும், இடைநிலையினை ஏற்கும் என்பது போன்ற சில குறிப்புகள் விரிவாகக் காண இயலுகின்றது. வினையடிச் சொற்கள் கால இடைநிலைகளை ஏற்கும் தன்மையின் அடிப்படையில் டாக்டர் கிரால் அவர்கள் மெல்வினை, இடைவினை, வல்வினை எனப் பிரித்து,

1. மெல்வினை வகர எதிர்கால இடைநிலை பெறும்
2. இடைவினை பகர எதிர்கால இடைநிலை பெறும்
3. வல்வினை ப் ப் என்ற ஈரொற்றைப் பெறும்

என்றும், மேலும் இவை ஏழு வகையாக அமையும் என்றும் சுட்டுகின்றார். இதனை,

I. மெல்வினையின் நான்கு நிலைகள்

| | நிகழ்காலம் | இறந்த காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1 | கிற் அல்லது கின்ற் | த்(ட்ற்) | ப் |

III. வல்வினையின் இரு நிலைகள்

| | நிகழ்காலம் | இறந்த காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1 | க்கிற் அல்லது க்கின்ற் | த்த் | ப்ப் |
| 2 | க்கிற் அல்லது க்கின்ற் | ந் த் | ப்ப் |

இந்நிலைகள் நமக்கு மிகப்பெரும் பரிசாக அமைகின்றது.

## அகராதிகள்

நம் தமிழ்மொழியின் வரலாற்றுக்கான அடிப்படைச் சான்றுகளில் ஒன்றாக அகராதியும் அமைகின்றது. நம்முடைய பழமையான செய்யுள் நடையில் அமைந்த நிகண்டுகள் முழுமையாய் எளிதில் பயன்கொள்ள இயலாது. ஆயினும் ஒரு மொழியின் பயன்பாட்டிற்குரிய சொற்களை அகர வரிசையில் அமைத்து ஒரு சேர அமைத்துத் தொகுத்து தாய்மொழியோ அல்லது பிறமொழியிலோ சிலநேரம் இருமொழி இணைந்தோ உருவாக்குவதாக அகராதி அமைகின்றது. ஆனால் இதில் மிக பயனுடைய அமைப்பினை, 17ஆம் நூற்றாண்டுகளுக்குப்பின்னர் ஐரோப்பியர் வருகையில் நிகழ்ந்த போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் போன்றவர்கள் அளித்த அகராதிகள் பெரும் நன்மை செய்தன. அயல் நாட்டவர்களில் பாதிரிமார்கள் சிலர் அமைத்த அகராதிகள் மிகச் சிறப்புடன் அமைந்துள்ளன. அந்தம் தெ பிரென்ஸா (Antem de Proence) என்ற பாதிரியார் 1679இல் செய்த அகராதி ஒன்று கேரளத்தில் பதிப்பிக்கப் பெற்றது. வீரமாமுனிவர் சதுரகராதியினை

1732இல் தொகுத்தளித்தார். இவ்வகராதியினுள் பன்னிரெண்டாயிரம் சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு

இதனைத் தொடர்ந்து வீரமாமுனிவர்,

1. தமிழ் - இலத்தீன் அகராதி
2. இலத்தீன் - தமிழ் அகராதி
3. தமிழ் - பிரெஞ்சி அகராதி
4. தமிழ் - ஆங்கிலம் அகராதி
5. போர்ச்சுக்கீசியம் - இலத்தீன் - தமிழ் அகராதி
6. வட்டார வழக்குத் தமிழ் அகராதி

என்ற அகராதிகளையும் செய்து 7. சதுரகராதியுடன் ஏழு அகராதிகள் செய்யும் அரும்பெரும் பணியினைச் செய்துள்ளார். இவரைத் தொடர்ந்து தனிமனிதனாக அகராதி வரலாற்றில் இன்றைய காலச்சூழலில் ஈரோடு பன்மொழிப்புலவர் சதாசிவம் அவர்களே அகராதிப் பணியில் தலை சிறந்த முறையில் அகராதிகளை அமைத்துள்ளார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | அகப்பொருள் அகராதி | 24 | கன்னடம் தமிழ் அகராதி | 47 | மன அகராதி |
| 2 | அடுக்குச் சொல்லகராதி | 25 | காரணப்பெயர் அகராதி | 48 | மேற்கோள் அகராதி (ஆசிரியர் வரிசையில்) |
| 3 | அடுக்குமொழி அகராதி | 26 | சிற்றிலக்கிய அகராதி | 49 | மேற்கோள் அகராதி (பொருள் வரிசையில்) |
| 4 | அடைமொழி அகராதி | 27 | சுருக்கப்பெயர் அகராதி | 50 | யாப்பியல் அகராதி |
| 5 | அழகுத்தொடர் அகராதி | 28 | தமிழில் வழங்கும் பிறமொழிச் சொல் அகராதி | 51 | வசைமொழி அகராதி |
| 6 | இணைச் சொல்லகராதி | 29 | திராவிட மொழிகளின் ஒப்பகராதி | 52 | வட்டார வழக்கு அகராதி |
| 7 | இணைமேற்கோள் அகராதி (ஆங்கிலம்-தமிழ்) | 30 | திருக்குறள் ஆங்கில அகராதி | 53 | வடசொற்றமிழ் அகராதி |
| 8 | இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சொல் அகராதி | 31 | திறனாய்வுச் சொல்லகராதி | 54 | வரலாற்று அகராதி |
| 9 | இருபெயரொட்டுச் சொல்லகராதி | 32 | துணைவினைச் சொல்லகராதி | 55 | வழக்குத் தமிழ் ஆங்கில அகராதி |
| 10 | இலக்கண அகராதி | 33 | தெலுங்கு தமிழ் அகராதி | 56 | விகுதி அகராதி |
| 1 | இலக்கியச் | 34 | தொடர் அகராதி | | **முழுமையான** |

குறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | சொல்லகராதி | | (தமிழ்-ஆங்கிலம்) | | **ஆங்கில அகராதிகள்** |
| 12 | இலக்கியச் சொற்றொடர் அகராதி | 35 | நயமொழி அகராதி | 57 | Dictionary of Additerative and Rhythmic Phrases |
| 13 | இலக்கியப் பழமொழி அகராதி | 36 | பரத்தையர் அகராதி | 58 | Dictionary of Synonyms (English-Tamil) |
| 14 | இழிசொல் அகராதி | 37 | பல்பொருள் ஒரு சொல்லகராதி | 59 | Dictionary of Beautiful axpressions |
| 15 | உட்பொருளகராதி | 38 | பாவாணர் வடசொற்றமிழ் அகராதி | 60 | Dictionary of Phrases with 'of' |
| 16 | உயர்தரத் தமிழ் ஆங்கில அகராதி | 39 | பாவாணர் ஆங்கிலம் தமிழ் அகராதி | 61 | Dictionary of Sentence Introducers |
| 17 | உருவக அகராதி | 40 | பாவாணர் வேர்ச்சொல் அகராதி | 62 | Dictionary of Nominal Phrases |
| 18 | உருவகக் காட்சி அகராதி | 41 | புராண அகராதி | 63 | Dictionary of Verbarl Phrases |
| 19 | உவமை அகராதி | 42 | பெயர் முன்னிலை மரபுத் தொடர் அகராதி (ஆங்கிலம் -தமிழ்) | 64 | Dictionary of Hyphened Phrases |
| 20 | எதிர்ப்பத அகராதி | 43 | பேச்சு வழக்குச்சொல் அகராதி | 65 | Tamil-English Dictionary |
| 21 | எதிர்ப்பத அகராதி (தமிழ் - ஆங்கிலம் | 44 | மரபுத்தொடர் அகராதி (தமிழ்-ஆங்கிலம்) | 66 | English-Tamil Dictionary |
| 22 | எதுகை அகராதி | 45 | மரபுத்தொடர் அகராதி (ஆங்கிலம்-தமிழ்) | | |
| 23 | கலைச்சொல்லகராதி | 46 | மலையானம் தமிழ் அகராதி | | |

என்று நம் கற்பனையிலும் எட்ட இயலாத அளவில் அகராதிப் பணி செய்துள்ளார். இவற்றில் பல இப்போதே கிடைக்கப்பெறவில்லை என்பதுவே வேதனை. தமிழ் அகராதி வெளியீட்டில் இன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேரகராதி (Tamil Lexicon) மிகப்பெரும் பயனுடையதாகிறது. இதனுள் ஒரு இலட்சத்து நாலாயிரத்து நானூற்றி ஐந்து சொற்கள்(104405) உள்ளன. இதனுள் இலக்கியப்பேச்சு, கிளைமொழி வழக்குகள் என அமைக்கப்பட்டுளளது. பின்னர் பிற்சேர்க்கையும் வெளிவந்துள்ளது.

திராவிட மொழியியில் அறிஞர்களான பர்ரோவும் எமனோவும் (T.Burrow and M.B.Emeneau) இருவரும் சேர்ந்து தொகுத்தளித்த

குறிப்பு

'திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி' (Dravidian Etymological Dictionary, DED, DEDS) திராவிடமொழி உலகில் தனித்துப் பேசப்படுகின்றது. காரணம் ஒப்பிலக்கண ஆய்விற்கு இந்நூல் பெரிதும் துணை செய்கின்றது. மொழி ஆய்விற்கு உதவும் களங்களில் அகராதியும் தகுந்த இடம்பெறுகின்றது.

## கல்வெட்டுகள் (Inscriptions)

மொழி ஆராய்ச்சியில் குறிப்பாக நம் தமிழுக்கான களத்தில் தொடர்ந்து உதவிடக் கூடியவை கல்வெட்டுகளாகும். நம்முடைய நாட்டின் குறிப்பாகத் தமிழகத்தில் பல பகுதிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மிகவும் உதவுகின்றன. அவற்றுள் பிராமி வரிவடிவத்தில் அமைந்துள்ள கல்வெட்டுக்கள் தெற்கத்திய முறைகளில் அமைந்துள்ளன. எனவே இதனை ஆய்வாளர்கள் கிருத்துவுக்கு முன் இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டாக இருக்கலாம் எனத் துணிகின்றனர். இதனைத் தொடர்ந்து கிடைத்த சில கல்வெட்டுக்கள் கிடைக்கப்பெறவில்லை. பின்னர் மிகுதியாக வந்துள்ளன. உடன் செப்பேடுகளும், ஓலைச்சுவடிகளும் அரசினர் மற்றும் தனியார் பயன்படுத்திய ஆவணங்களும் கிடைத்துள்ளன.

கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் சில மட்டுமே இலக்கிய வடிவில் அமைக்கப்பெற்றுள்ளன. பல கல்வெட்டுக்கல் பேச்சமொழி வடிவிலேயே அமைந்துள்ளன. கல்வெட்டுக்கள் மூலம் பல பழந்தமிழ் வரலாறுகளை நாம் உணர முடிகின்றது. அவற்றுள் அமைந்த மொழி நடையான ஒலி மாற்றத்தை உணர உதவினாலும் ஆய்வின் அடிப்படையில் கால மாற்றத்தினையும் அறிய இயலுகின்றன. மேலும் பேச்சுமொழிக்கும் இலக்கிய மொழிக்கும் என்னென்ன மாறுபாடுகள் உள்ளன என்பதனை உணரவும் இவை மிகுதியும் பயன்படுகின்றன.

குறிப்பு

6ஆம் நூற்றாண்டு

ற்ற் > த்த எற்றம் > ஏத்தம் பல்லவன் கோவில் செப்புப் பட்டயம் 45

7ஆம் நூற்றாண்டு

அ > எ - அரசர் > அரசெர் S.I.III 72.14.

உ > இ - இவருடைய > இவரிடையே S.I.I. VIII 331, 43

ஐ > எ - இருபத்தைந்து > இருபத்தெய்ந்து S.I.I.I, 152, 71

8ஆம் நூற்றாண்டு

க > ய - திருப்பதிகம் > திருப்பதியம் S.I.I.III 43.33.

ஞ > ந - ஞான்று > நான்று P.S.I.I. 15,6.

ய > ச - குயக்காணம் > குசக்காணம் S.I.I.II. 73. 124

9ஆம் நூற்றாண்டு

இ > அ - ஞாயிறு > ஞாயறு S.I.I.V, 68, 42

ய > வாய்க்கால் > வாக்கால் S.I.I.VI, 294, 3

12ஆம் நூற்றாண்டு

ற > ர - நிறுத்த > நிருத்த S.I.I.VIII, 783, 15.

14ஆம் நூற்றாண்டு

க > வ - தகப்பனார் > தவப்பனார் S.I.I. VI, 464, 14

ள் > மக்கள் > மக்க S.I.I.V, 225, 21

ன் > கொள்வான் > கொள்வா S.I.I.61

ர > கோவை > கோர்வை S.I.I.VIII, 163, 5

கல்வெட்டுக்களில் உடம்படுமெய் இல்லாமல் உயிரெழுத்துக்கள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன.

கோஇலுக்கு

ஆஇரம்

கைஇல்

குறிப்பு

என்ற சான்றுகள் மூலம் நாம் பல சொல் ஆட்சி முறைகளைக் காண இயலுகின்றது.

மேலும் இவ்வாய்வுகளின் அடிப்படையில் திராவிட மொழிக்குடும்பத்தினர் ஆள், அழு என்ற இரு மொழியும் யாள், யழ என்றே பழந்தமிழில் வழங்கியிருக்க வேண்டும். மூலதிராவிட மொழியில் யகர ஒலி உள்ளது. ஆனால் இடைக்காலத்தில் அதன் வழக்குநிலை அருகிவிட்டது. ஒன்பதாம் நூற்றாண்டுகளில் அமைந்துள்ள கல்வெட்களில் யகரத்தின் பயன்பாட்டினைக் காண இயலுகின்றது. மேலும் ‘கொடுக்கக் கடவேனாகவும்’ என்பதானத் தொடர் மூலம் வியங்கோள் அமைந்த வழக்கினையும் காண இயலுகின்றது. மேலும் சுருங்கில், முட்டில், செய்யில் போன்ற நிபந்தனைப் பொருள் உணர்த்தும் வினை வடிவங்கள் தோன்றியுள்ளன. தன்வினை பிறவினைக்குரியதான பிரிவுகள் சரியாகவே அமைந்துள்ளன. எதிர்கால வடிவம் மற்றும் இறந்தகால வடிவம் இரண்டினையும் இணைப்பதன் மூலம் நிகழ்காலம் உணர இயலும் என்பதான போக்குகளையும் கல்வெட்டுக்களில் காண இயலுகின்றது. அவ்வாறு ‘ஒன்’ என்ற தன்மை ஒருமை ஈறும் ‘ஓம்’ என்ற தன்மைப் பன்மை ஈற்றினையும் கல்வெட்டுக்களில் காண இயலுகின்றது. அவ்வாறே விகுதிகளான அன், ஆன், ஆள், ஆர் போன்றனவற்றையும் காண முடிகின்றது. எனவே கல்வெட்டுக்களும் மொழி வரலாற்றுத் தொடர்பான ஆய்வில் முக்கிய இடம்பெறுகின்றன.

## பிறமொழிக் கல்வெட்டுக்கள் (Inscriptions in other Languages)

குறிப்பு

இதுவரையில் கல்வெட்டுக்களில் தமிழ்மொழி அல்லாத பிறமொழிக் கல்வெட்டுக்களையும் காண இயலுகின்றது. இதனையும் நாம் நம்முடைய மொழி வலாற்றினுக்குப் பயன் கொள்ள இயலுகின்றது. அவற்றின் தமிழ்ச் சொற்களையும், தமிழகத்தில் பெயர்களையும் கொண்டுள்ள இலங்கைச் சிங்கள மொழிக் கல்வெட்டு குறிப்பிடத்தக்கது. அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியில் சிதைந்துள்ள மண்பாண்டங்கள் சிலவற்றில் தென்மாவட்ட பிராமி எழுத்து வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளதனைக் காண இயலுகின்றது. அவ்வாறே நாணயங்களிலும் காண இயலுகின்றது. தமிழ்நாட்டில் பல பிறமொழிக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

தமிழில் பயன்படுத்தப்படும் ‘க’ என்ற ஒலியான பிறமொழிகளில் பல ஒலிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தடையொலிகள் பற்றிப் பேசுகையில் கால்டுவெல் மொழிக்கு முதலிலும் இடையிலும் இரட்டித்து வரும்போதும் ‘K’ போன்ற ஒலிப்பில்லா ஒலியாகவும், மொழிக்கிடையே உயிர் எழுத்துக்களின் நடுவே ஒற்றையாய் வரும்போதும் ‘G’ போன்ற ஒலிப்புடை ஒலியாக (Voiced) வெளிப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகளை உயிர்ப்பொலி ஒலிப்பொலி மாற்றுச் சட்டம் என்று சுட்டுகின்றனர் ஆய்வியலாளர்கள். இத்தகைய ஆய்விற்கு நமக்குப் பிறமொழிக் கல்வெட்டுக்கள் மிகுதியும் துணை செய்கின்றன. காரணம் கல்வெட்டுக்கள் பெரிதும் தமிழ்ச் சொற்கள் கிரந்தம், பிராகிருதம், தேநாகரி என்று பல பிறமொழிக் கலப்புகளிலேயே எழுதப்பட்டுள்ளன. கிரந்த எழுத்துக்களில் ஒலிப்புடைய ஒலிக்கும் ஒலிப்பில்லா ஒலிக்கும் வரிவேறுபாடு உள்ளதனைக் காண முடிகின்றது.

எனவே இதன் மூலம் தமிழ் மொழியின் ஒலிப்பு நிலைகளை ஆய்தல் எளிதாகின்றது. அரிக்கமேட்டில் உள்ள மட்கல ஓட்டில் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவையும் தமிழின் வரிவடிவ ஆய்விற்கு மிகவும் துணையாகின்றன. இவ்வாறு தமிழ் மொழியின் கல்வெட்டுக்கள்

மட்டுமின்றி, அயல்மொழியில் அமைந்துள்ளக் கல்வெட்டுக்களும் மிகவும் நம்முடைய மொழி வரலாற்று ஆய்விற்குப் பயன்படுகின்றன.

குறிப்பு

## அயல்நாட்டார் குறிப்புகள் (Foreigner's refereances)

அயல்நாட்டார்கள் நம்மிடையே பல சேதங்களைச் செய்தார்கள் என்பதாக நாம் வாழ்வியல் சூழலில் உணர்ந்தாலும், அவர்களாலும் பல நன்மைகள் இன்றளவிலும் நமக்குத் தொடர்கின்றன. அவற்றுள் மொழி வரலாற்றுக்கு உதவும் அயல் நாட்டார் குறிப்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

கி.மு.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பதஞ்சலியும் கி.மு.நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த வரருசியும் தென்னிந்தியா பற்றியும் தென்னிந்தியச் செய்திகள் பற்றியும் குறிப்பிடுகின்றனர். குமரிலப்பட்டர் அருளிய 'தந்திர வார்க்கம்'. சமஸ்கிருதம், தெலுங்கு, பிராகிருதம், பாலி, மலையாளம், கன்னடம் என பலமொழிகளிலும் தமிழ்மொழியின் வரலாற்றை அறியும் வகையிலானப் பல குறிப்புகள் உள்ளன.

காஞ்சி என்ற சொல்லை பதஞ்சலி எடுத்தாளுகின்றார். Damarica என்ற கிரேக்கம் சுட்டும் சொல்லாட்சியும் தமிழகம் சார்ந்தது. கி.பி. 5ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுந்த மகாவம்சம் நூலில் 'damila' என்ற சொல்லும் தமிழர் பற்றியதே. கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த லீலாதிலகம் என்ற நூலில் பாண்டி நாட்டு, சோழ நாட்டு வழக்காறுகள் தொடர்பான பதிவுகளைக் காண இயலுகின்றது. நம் நாட்டிற்கு பயணிகளாக, வியாபாரிகளாக, வேறு பல காரணங்களுக்காக தமிழகம் வந்து சென்ற பல அயல்நாட்டவர்கள் அனைவரும் நம் தமிழகத்தின் நகரங்கள், துறைமுகங்கள், ஏற்றுமதிப் பொருள்கள் போன்ற பல குறிப்புகளைப் பதிவிட்டுள்ளன. அவர்களுள் மெகஸ்தனீஸ், பிளினி, தாலமி போன்றவர்களின் எழுத்துக்களில் இக்குறிப்புகள் மிகுதியாகக் காணக் கிடைக்கின்றன. அவ்வாறே யுவான்சுவாங், மார்க்கோபோலோ போன்றவர்களின் குறிப்புகள் மிகவும் பயனுடையதாக அமைகின்றன.

அவ்வாறே கிருத்துவத் தொடர்புகளின் காரணமான அயலவர் வருகையின் போது இந்தியாவினின்றும் கிறித்துவச் சங்கத்தார் எழுதியுள்ள பல கடிதங்கள் 3ஆம் தமிழ் மொழி வரலாற்றுக்குப் பெரிதும் பயன் கூட்டுகின்றன.

மெகஸ்தனீஸ் Chandra புரிவய என்ற மன்னனின் பெயரினை Sandra Cotta என்று எழுதி குறிப்பிடுகின்றார். பிறமொழியாளர்கள் தம்முடைய வழக்கிற்கு ஏற்பவேத் தம்முடைய மொழி ஆளுமைக்கு ஏற்ப அவர்கள் அதனை உணர்ந்து சொல்லியிருப்பார்கள் என்பதுவே உண்மை என்பதனையும் உணர வேண்டும். கிரேக்கர்கள் மன்னர்களின் குடாவைக் ‘கொல்சிக் குடா’ என்றுச் சுட்டினர். தாலமி சென்னைத் துறைமுகத்தை ‘மல்லியர்பா’ என்று சுட்டுகின்றார். இது மயிலாப்பூர் என்பதன் குறிப்பாக உணர இயலுகின்றது. அவ்வாறே மார்க்கோபோலோ ‘பகவன்’ என்பதனை ககரலியில் சுட்டுகின்றார். ராபர்ட் டி நோபிலி ‘ச’ என்ற ஒலியினை ‘tch’ என்றும் சுட்டுகின்றார். 18ஆம் நூற்றாண்டின் வீரமாமுனிவர் ‘சவை’ ‘S’ என்றும் சுட்டுவதான பல குறிப்புகள் நம் மொழி வரலாற்றாராய்ச்சிக்கு உதவுகின்றன. அவ்வாறே சமஸ்கிருத சுலோகங்கள் அம்மொழியின் வரிவடிவத்திலேயே சுட்டப்பட்டுள்ளன. மேலும் அரசு பதிவேடுகளின் விதிமுறைகளிலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள தமிழ்ப் பெயர்களும், மேலைநாட்டு மொழிகளின் அகராதிகளில் உள்ள தமிழ்ச் சொற்களும் ஆய்விற்குட்பட்டன. இவ்வாறு பல நிலையில் சிற்சில இடங்களில் அயல்நாட்டவர் குறிப்புகள் கூட மிகவும் மொழி ஆய்விற்குத் துணை செய்கின்றன.

**ஒப்பலிக்கிய முறை**

வான்சி லேகல் என்ற ஜெர்மனிய அறிஞர்தான் முதன் முதல் ஒப்பிலக்கணம் என்ற சொல்லைத் தம்முடைய நூலி சுட்டுகின்றார். இவரைத் தொடர்ந்து கி.பி.1856இல் கால்டுவெல் தம்முடைய திராவிட மொழி ஒப்பிலக்கணம் என்னும் நூலினை வெளியிட்டார். அதே சூழலில் திராவிட மொழியியல் பேரறிஞர்களான பர்ரோவும் எமனோவும் இணைந்து ‘திராவிடச் சொற் பிறப்பியல் அகராதி’ (A Dravidian Etymological

குறிப்பு

Dictionary) என்ற பெயரில் வெயிட்ட அகராதி நூல் திராவிட மொழி உலகியல் ஒப்பற்ற ஒரு சாதனையாகக் கருதப்படுகின்றது. காரணம் இவ்வகராதி வந்த பின்னர், இதன் துணையுடன் பல ஆய்வுகள் பெருகின. தனிமொழி ஆய்வில் கிட்டாத பல கூறுகளை இத்தகைய ஒப்பாய்வில் அறிய இயலுகின்றது.

## தொல்திராவிடம்

திராவிட மொழிகள் அனைத்தும் ஒரு மூல மொழியினின்றும் பிறந்து வளர்ந்தவைகளே ஆகும். மொழிக் குடும்பம் என்பதால் மொழி (Proto) Language) என்ற ஒன்றினின்றும் பிரிந்து காலத்தாலும் இடத்தாலும் வெவ்வேறு மாறுதல்களை அடைந்து ஒன்றிலிருந்து பிரிந்த மொழியும் மற்றொரு குடும்பத்திலிருந்து பிரிந்து வந்த மொழியும் வேறுவேறு மொழிகள் என்றுக் கருதும் பல மொழிகளின் தொகுப்பே ஆகும்.

இம்மொழிகளை இன மொழிகள் (Cognate languages) என்று கூறுவர் இத்தகையதான அனைத்து மொழிகளையும் ஆராய்ந்து இவை அனைத்தும் தொல்மொழிழயான ஒன்றினின்றும் பல்வேறு மொழிகளாக காலப் போக்கில் கிளைத்திருக்க வேண்டும் என்று ஒப்பியல் ஆய்வு மொழியியலாளர்கள் கூறுகின்றனர். அனைத்துத் திராவிட மொழிகளுக்கும் மூலமாக இருந்த மொழியினை மூலத்திராவிட மொழி அல்லது தொல்விராவிட மொழி (Proto Dravidian Language) என்று அழைத்தனர். இவ்வகையிலான ஆய்வில் தொல் திராவிடம் என்பதும் ஒரு மொழியாகவே வழக்கில் இருந்திருக்கலாம் என்று சிந்திப்பதற்கு வாய்ப்புள்ளது. ஜெர்மணிய அறிஞர் வான்சி லேகஸ் என்பவர்தான் முதன் முதலாக ஒப்பிலக்கணம் என்னும் சொல்லினைத் தம்முடைய நூலில் பயன்படுத்தினார். இன்றைய ஆய்வு முறையில் உள்ள ஒப்பு மொழியியலினையும் வரலாற்று மொழியியலினையும் உருவாக்கிய பெருமை ரஸ்க் (Rask) பாப் (Bopp) கிரீம் (Grimm) என்பவர்களையேச் சாரும்

குறிப்பு

பென்பே என்பவர் பேசிய மீட்டுருவாக்கத்தின் (Reconstruction) அவசியத்தினை சிலேகல் காலத்தில்தான் நடைமுறைக்கு வந்ததைப் பின்னர்தான் அறிய முடிந்தது. இந்தோ-ஐரோப்பிய இலக்கணம் ஒன்றை பாப் எழுதினார். அடெலுங் (J. C. Adelung) பல்லாஸ் (Pallas) என்பவர்களும் கி.பி. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் தம்முடைய காலத்தில் பல்வேறு மொழிகளிலிருந்தும் சொல் அட்டவணைகளைத் தயாரித்து உள்ளனர். இந்த அட்டவணைகள் பின்வரும் நாளில் நம்முடைய ஒப்பிலக்கணம் இயற்றுவதற்கு துணை செய்தன. வில்லியம் ஜோன்ஸ் (Willam Jones) 1896இல் சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய அனைத்து மொழிகளும் ஒரே இனத்தினைச் சார்ந்தவை என்று எடுத்துரைத்தார். 1856இல் கால்டுவெல் ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்ற நூலினை வெளியிட்டார். இந்நூல் தான் திராவிட மொழிகள் என்ற பெயரில் வெளிவந்து உலகம் மொழிகளைப் பற்றிய தெளிந்த அறிவினைப் பெறுவதற்குத் துணை செய்கின்றது.

உலகமொழிகளை ஆராய்ந்திடக் கூடிய அறிஞர்கள் ஒப்பியல் நோக்கில் இதனை ஓரின மொழிகள் (Cognate Language) அல்லது குடும்ப மொழிகள் (Family of Language) என்று கூறுவர். இது அம்மொழிகளுக்கிடையிலான இனத்தொடர்கள் மற்றும் பொதுத் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு சுட்டப்படும் அமைப்ப முறையாகும். ஒரு குடும்பத்தினைச் சேர்ந்ததாகச் சுட்டப்படும் பல மொழிகளையும் ஒப்பிட்டு ஆய்ந்திடும் ஒப்பியல் முறையினை (Comparative Method) என்று கூறுகின்றனர். தொன்மையான வரி வடிவங்களையும் ஒலிப்பு முறைகளையும் மீட்டெடுக்க இத்தகையதான சில முறைகளின் வழிப்படும் ஆய்வுகள் பயன் படுகின்றன. இவ்வாய்வில் பெரும்பான்மையான ஒப்புமைக்குரிய வடிவங்களும் ஒலிகளும் தொல் வடிவமாகச் (Proto-Form) சட்டப்படுகின்றன. இந்த ஒப்பாய்வின் பயனாகத் திராவிடமொழிகளைத் திராவிடமொழிகள், நடுத்திராவிடமொழிகள், வடத்திராவிடமொழிகள் என்று பகுக்கின்றனர்.

குறிப்பு

**1961ஆம் ஆண்டு மக்கள் கணிப்பு (Census)**

திராவிட மொழிகள்

| தென் திராவிட மொழிகள் | நடுத் திராவிட மொழிகள் | வடதிராவிட மொழிகள் |
|---|---|---|
| தமிழ் (30,465,442) | தெலுங்கு (37,645,439) | குருக் (1,132,931) |
| மலையாளம் (16,994,442) | கோண்டி (1,384,321) | மால்தோ (88,64) |
| கன்னடம் (17,305,629) | கூயி (510,907) | பிராகூய் (275,000) |
| குடகு (17,172) | கூவி (168,027) | |
| துளு (934,845) | கோலாமி (46,065) | |
| தோடா (765) | பர்ஜி (84,607) | |
| கோத்தா (862) | கதபா (8401) | |
| கொண்டா (12,298) | | |
| நாயக்கி (1500) | | |
| பெங்கோ (1254) | | |
| மண்டா (1010) | | |

திராவிடமொழிகள் வழக்கில் உள்ள இடங்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து ஆய்கின்றபோது, திராவிமொழிகளிலேயே மிகவம் பழமையானதாக அடையாளம் காணப்பட்டுள்ளதான தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாகவே, தமிழகம் மட்டுமின்றி பர்மா, மலேசியா, இலங்கை, பீஜீத் தீவு, சிங்கப்பூர், மடகாஸ்கர், தென் ஆப்பிரிக்கா, திரினிடால், பிரிட்டிஷ், கயானா போன்ற பல நாடுகளில் வழக்கில் உள்ளது. அவ்வாறே மலையாளம் கேரள மாநிலம் மட்டுமின்றி இலட்சத்தீவுகளிலும் பேசப்படுகின்றது. கொடகு, கூர்க்கி, கோதகி என்ற சொல்லாட்சிகளை உடைய குடகு மொழி மங்களூர்ப் பகதியில் பேசப்படுகின்றது. குறைந்த அளவே வழக்கினையுடைய துளு மற்றும் கொடகு மொழியினையும் இலக்கிய வளம் குறைந்துள்ளதான மொழிக் குழுவினுள் (Mon-Literary Languages) இணைத்துப் பேசுகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் வாழும் தோடா என்ற பழங்குடி மக்களிடம் மட்டுமே வழக்கில் உள்ள மொழி 'தோடா' ஆகும். அவ்வாறே நீலகிரி மாவட்டத்தில் வாழும் 'கோத்தா' என்ற மொழி வழக்கில் உள்ளது. அவ்வாறே நீலகிரி மாவட்டத்தில் வாழும் பணியர் என்ற பழங்குடியினரிடம் 'பணிய மொழியும்', குறும்பர் என்ற பழங்குடி மக்களிடம் 'குறும்பா' மொழியும் வழக்கில் உள்ளன. எனினும் கோத்தா மற்றும் தோடா மொழிகளுக்கிடையில் சில ஒற்றுமைக் கூறுகள் உள்ளதனைக் காண இயலுகின்றது.

பணிய மொழியும் குறும்பா மொழியும் தனி மொழிகளாகச் (Distinct Languages) சுட்டப்படுகின்றன. அவ்வாறே இருளரின் மொழி கிளை மொழியின் தனி மொழியாகவும், முள்ளு குறும்பரின் பேச்சுமொழியானது மலையாள மொழியின் கிளை மொழியாகவும் கசவர் பழங்குடியினரின் மொழியானது கன்னட மொழியின் கிளைமொழியாகவும் தனிமொழியாகவும், காட்டு நாயக்கர் என்ற பழங்கடியினரின் பேச்சுமொழி கன்னட மொழியின் கிளை மொழியாகவும், திராவிட மொழியியல் வல்லுநர்கள் ஆய்ந்துரைக்கின்றனர். பல ஆய்வுகள் நடந்து வருகின்றன. நடுத்திராவிட மொழியான தெலுங்கு ஆந்திர மாநிலம் மற்றும் தென்னாப்பிரிக்கா போன்ற இடங்களில் வழக்கில் உள்ளது. மேலும் இந்தியாவில் இந்தி மொழிக்கு அடுத்த நிலையில் மிக அதிகமாகப் பேசப்படும் ஒரு மொழியாகவும் இலக்கிய வளம் உடைய மொழியாகவும் இது திகழ்கின்றது. மேலும் தெலுங்கு மொழி திராவிட மொழிகளில் தனக்கென ஒரு தனித்த இடத்தினை உடையதாகத் திகழ்கின்றது.

கோண்டி என்ற மொழி ஆந்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், ஒரிஸ்ஸா ஆகிய நான்கு மாநிலங்களில் வழக்கில் உள்ளது. கோண்டி மொழி திராவிடப் பழங்குடி மொழிகளுள் மிகுதியான மக்களால் பேசப்படும் மொழியாகவும் பல கிளைமொழிகளை உடையதாகவும் இது திகழ்கின்றது. மத்தியப் பிரதேசத்தில் உள்ள பஸ்தார் மாவட்டத்தில் வாழும் பர்ஜாஸ் என்ற பழங்குடியினர் 'பர்ஜி' என்ற மொழியினைப் பேசுகின்றனர். ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள விசாகப்பட்டினம் மற்றும் ஸ்ரீகாகுளம் ஆகிய மாவட்டங்களில் வாழும்

குறிப்பு

கொண்டதொரா என்ற பழங்குடியினர் ‘கொண்டா அல்லது கூபி’ என்ற மொழியினைப் பேசுகின்றனர். ஒரிஸ்ஸாவில் உள்ள கோரபுட் மாவட்டத்தில் உள்ள பழங்குடிகளிடையே மண்டா என்ற மொழி வழக்கில் உள்ளது. மகாராஷ்டிராவில் உள்ள பந்தா மற்றும் பெரார் பகுதிகளில் வாழும் பழங்குடிகள் ‘நாயக்கி’ என்ற மொழியினைப் பயன்படுத்துகின்றனர்.

வடதிராவிட மொழிகளுள் சுட்டப்படும் ‘குருக்’ மொழி பிஹார், மத்தியப்பிரதேசம், ஒரிசா ஆகிய பகுதிகளில் வசிக்கும் ஒரோவொன் என்ற பழங்குடியினரால் பேசப்படுகின்றது. மேற்கு வங்கத்தில் உள்ள இராஜ்மகால் குன்றுப் பகுதியிலும் பீஹார் உள்ள சந்தால் பர்ஹணா பகுதிகளிலும் வாழும் மாலர் என்ற பழங்குடியினரால் மால்தோ என்ற மொழி பேசப்படுகின்றது. இந்தியாவிற்கு வெளியில் உள்ள மேற்குப் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் என்ற பகுதிகளில் வடதிராவிட மொழிகளில் ஒன்றான பிராகூய் (Brahui) பேசப்படுவதுடன் பல நூற்றாண்டுகளாக இம்மொழியினை இவர்கள் காத்தும் வருகின்றனர்.

தொல்திராவிட ஒலியின் அமைப்பு முறைகளைத் திராவிட மொழியியல் பேரறிஞர் எமனோ (Emencav) அவர்கள் மீட்டுருவாக்க முறை மூலம் ஆய்ந்துள்ளார்.

**தொல்திராவிட உயிர் ஒலியன்கள்**

| | |
|---|---|
| இ ஈ | உ ஊ |
| எ ஏ | ஒ ஓ |

அ ஆ

தொல்திராவிட மொழியில் உள்ள ‘அ’ எல்லா மொழிகளிலும் ‘அ’ என்றே அழைக்கப்படுகின்றது. தோடா மொழியில் சில சொற்கள் ‘ஓ’

என்றும் சில இடங்களில் ‘அ’ என்றும் வழங்குகின்றன. பர்ஜி மொழியில் சில சொற்கள் ‘எ’ எனவும் சில சொற்களில் ‘அ’ எனவும் ஒலிக்கின்றன.

குறிப்பு

தொல்திராவிட மொழியான ‘ஆ’ எல்லா மொழிகளிலும் ‘ஆ’ என்றுதான் பெரும்பாலும் சுட்டப்படுகின்றன. தோடா மொழியில் மட்டும் ‘ஒ’ என்றும், பர்ஜி மொழியில் ‘ஏ’ என்றும் சில இடங்களில் வழங்குகின்றன. அவ்வாறே ‘இ’ என்ற எழுத்தும் எல்லா மொழிகளிலும் ‘இ’ என்றே வழங்குகின்றது. ‘தோ’ மொழியில் ‘i’ என்று சில இடங்களில் சுட்டுகின்றது.

‘ஈ’ என்ற எழுத்தும் தொல்திராவிடக் குடும்பத்தின் ‘ஈ’ என்றே எல்லா இடங்களிலும் ஒலிக்கின்றது. அவ்வாறே ‘உ’ என்ற எழுத்தும் எல்லா மொழிகளிலும் அதே ஒலிப்புடன் அமைந்தாலும் தோடா மொழியில் மட்டும் Wi, Wa ன்று காணப்படுகின்றது.

தொல்திராவிட மொழியில் உள்ள ‘ஊ’ எல்லா மொழிகளிலும் ‘ஊ’ என்றே ஒலிக்கின்றது. ‘எ’ என்ற எழுத்து பெரும்பான்மை மொழிகளில் ‘எ’ கரமாகவும், தோடா மொழியில் பெரும்பான்மை ‘o’ வாகவும், பர்ஜி மொழியில் சில் இடங்களில் ‘அ’ என்றும், பிராகூய் மொழியில் சில இடங்களில் ‘இ’ அல்லது ‘அ’ என்று ஒலிக்கின்றது. பிராய்கூய் மொழியில் ‘எ’ என்ற குறில் வடிவ ஒலிப்பு முறை வழக்கில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொல்திராவிட மொழியில் உள்ள ‘ஒ’ எல்லா மொழிகளிலும் ‘ஒ’ என்றே பெரும்பான்மையும் தோடா மொழியில் ‘o’ வாகவும், பர்ஜி மொழியில் ‘ஆ’ வாகவும் ஒலிக்கின்றன. அவ்வாறே ‘ஓ’ என்ற ஒலி எல்லா மொழியிலும் ‘x’ ஆகவும், தோடா மொழியில் ‘Wa, Wi, i“ என்றும், மண்ட மொழியில் U என்றும் காணப்படுகின்றன.

இவ்வாறே பல ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் உள்ளதனை திராவிட சொற்பிறப்பியல் அகராதி மூலம் அறிய இயலுகின்றது.

குறிப்பு

## தொல் திராவிட மெய்யொலியன்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | | -ச் | | | த்- |
| | -ப்- | | | | |
| -க்- | | -ச்- | -ட்- | -ற்- | -த்- |
| -க்க்- | | -ச்ச்- | -ட்ட்- | -ற்ற்- | -த்த் |
| | -ப்ப்- | | | | |
| -ங்க்- | | -ஞ்ச்- | -ண்ட்- | -ன்ற்- | -ந்த் |
| | -ம்ப்- | | | | |
| | | -ஞ்- | -ண்- | -ன் | |
| | -ம் | | | | |
| | | | -ண் | | |
| ய் | | | | | |
| | வ் | | | | |
| | | -ழ்ள் | | | -ர்- |
| | -வ்வ்- | | | | |
| | | -ள் | -ள் | -ல்- | |
| | | | | -ல்- | |
| | | -ள்ள்- | | -ல்ல்- | |

'க'கர மெய் திராவிட மொழிகளில் மொழிக்கு முதலிலும் இடையிலும் வரும். ஆனால் இம்முறை இன்றைய திராவிட மொழிகளில் மாற்றங்களை அடைந்துள்ளது. பழந்திராவிட மொழியில் 'க'கர மெய் எல்லா உயிர்களின் முன்னும் பயின்று வரும். ஆனால் முன்னுயிர்க்கு முன் ககரம் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சகரமாக ஒலிக்கின்றது. பொதுவாகத் திராவிட மொழிகள் அனைத்தினையும் ஆய்ந்தால் மொழிக்கு முதலில் வரும் சகரம் சில மாற்றங்களுடன் காணப்படுகின்றது.

குறிப்பு

தமிழ், மலையாள மொழிகளில் சகரம் 'C' என்று ஒலித்திடவும், பிறமொழிகளில் மாறி ஒலிப்பதனையும் காண இயலுகின்றது. கன்னடம், துளு போன்ற மொழிகளில் சில சொற்களில் சகரமாகவும் பல சொற்களில் ஸகரமாகவும் மாற்றம் பெறுகின்றது.

நடுத்திராவிட மொழிகளில் பெரும்பாலும் ஸகரத்தையே மொழி முதலாகக் கொண்டுள்ளன. 'உப்பு' என்னும் சொல் தொல்திராவிட மொழியில் 'சுப்பு' என்றே இருந்தது. பின்னாளில் சகர மெய் ஒழித்து உப்பாயிற்று என்பர். தென்திராவிட மொழிகளான கன்னடம், மலையாளம், துளு, தோடா, போன்ற மொழிகளிலும் தெலுங்கு மொழியிலும் மேற்சொன்னதானத் தன்மையுடைய பல சொற்களைக் காண இயலுகின்றது. பழந்தமிழ் மொழியில் மொழிக்கு முதலிலும் இடையிலும் நகரம் வருகின்றது. இதனை நாஞ்சில், ஞாண், நாண், ஞாண்டு, ஞெமுங்கு என்ற சொற்களின்படி அகரம், ஆகாரம், எகரம் இவற்றின் முன்னர் 'நகரம்' மொழி முதலானதனைக் காண்கிறோம். இவ்வாறான சொற்களைக் கன்னடம், தெலுங்கு மொழிகளில் காண இயலுகின்றது.

பிறமொழிகள் 'ந' கரத்தினைக் கொண்டு அமைந்துள்ளன. அவ்வாறே சங்ககாலத் தமிழில் 'ஞகரம்' மொழி முதலாக அமைந்திருந்தமையினையும், காலப்போக்கில் 'ஞ'கரம் 'ந'கரமாக ஒலிப்பதனையும் காண முடிகின்றது. இன்றைய திராவிட மொழிகளில் யகரம் மொழிக்கு முதலில் வந்தாலும் பேச்சுத் தமிழில் காண முடியாத நிலையினைக் காண முடிகின்றது. மேலும் திராவிட மொழிகளில் தமிழில் மட்டுமே யகரம் இத்தகைய மொழி முதல் பயன்பாட்டினை உடையதனைக் காண முடிகின்றது. கன்னடம், மலையாளம், துளு போன்ற தென்திராவிட மொழிகளிலும் தெலுங்கு, கோண்டி என்பதான நடுத்திராவிட மொழிகளிலும் குருக், மால்தோ, பிராகூய் ஆகிய வட திராவிட மொழிகளிலும் யகரம் மொழிக்கு முதலில் வராது. 'ழ'கரம் தொல்திராவிட மொமழியில் ஒலியனாக உள்ள போதும் இன்றைய பல திராவிடமொழிகளில் காண இயலவில்லை.

தமிழ் மலையாள மொழிகளில் தனி ஒலியனாகக் காணப்படுகின்றது. தெலுங்கு மொழியில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலும், கன்னட

மொழியில் கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரையிலும் வழக்கில் 'ழ'கரம் இருந்துள்ளதைக் காண முடிகின்றது.

## குறிப்பு


| | |
|---|---|
| *ழ் (ℓ) | |
| *(ℓ) | |
| > ℓ, ℓ | மலையாளம் |
| > ℓ, r, g, y | கோத்தா |
| > ℓ, r r, g, y, s s, d, w | தோடா |
| > ℓ, | கொடகு |
| > ℓ, r | துளு |
| > ℓ, > d, r | தெலுங்கு |
| > r, r | கோண்டி |
| > r | பெங்கோ, கொண்டா, கூயி, கூவி, பர்ஜி, கோலாமி |
| > r, d | கதபா |
| > y, ϕ | நாயக்கி |
| > r, ϕ | குருக், மால்தோ |
| > r, r, r r ϕ | பிராகூய் |

திராவிட மொழியின் சிறந்ததொரு ஒலியனாகக் கருதப்படும். இதனைக் குறித்துப் பர்த் (J.R.Firth), கால்டுவெல், தியாகராசு, இராமசாமி ஐயர், கிருஷ்ணமூர்த்தி போன்றோர் ஆராய்ந்துள்ளனர். 'ழ'கரம் திராவிட மொழிகளில் அடைந்த மாற்றத்தைக் காண்போம். பல திராவிட மொழிகளில் 'ழ'கரம் 'ச' என்ற எழுத்தாக மாற்றம் அடைந்துள்ளது. கோத்தா, குளு, தோடா என்ற தென்திராவிட மொழிகளிலும் பெஸ்கோ, கோண்டி, கூயி, கூவி, பர்ஜி, கொண்டா, கோலமி, கதபா என்ற நடுத்திராவிட மொழிகளிலும் இத்தகைய மாற்றத்தைக் காண முடிகின்றது. தோடா, கோண்டி, தெலுங்கு, பிராகூய் என்ற மொழிகளில் 'ழ'கரம் 'ர'கரமாய் ஒலிக்கின்றது.

ட், ற், ண், ல், ன், ழ், ர் என்ற எழுத்துக்கள் தவிர மற்ற அனைத்து எழுத்துக்களும் மொழியின் முதலில் அமைந்திடும். அவ்வாறே எல்லா

ஒலியன்களும் சொல்லின் இறுதியில் இடம்பெற்றன. வெடிப்பொலிகள் மொழி இறுதியில் 'உ'கரம் பெறுகின்றன. ஒரு மொழியானது தொன்மை நிலையிலிருந்து எவ்வாறு காலப்போக்கில் தனிமொழியாக மாறியது என்ற வரலாறே தொல் மொழி வரலாறு ஆகும். ஆய்விற்குட்பட்ட மொழியின் தொல் வடிவம் கிடைத்து பின்னர் காலப் போக்கிலான வளர்ச்சி நிலையுடன் ஒப்பிட்டு ஆராய்கின்ற போதுதான் தெளிவான தொல்தமிழ் வளர்ச்சி வரலாற்றினை அறிய இயலும்.

திராவிட மொழிகள், தென் திராவிடம், வடதிராவிடம்ம, நடுத்திராவிடம் என்ற முப்பெரும் பிரிவாக அமைக்கப்படதனையும், தொல்திராவிட உயிர்மெய் ஒலியன் பற்றியும் அறிந்ததுடன் தமிழ், கன்னடம், மலையாளம், தோடா, துளு, கோத்தா என்ற அனைத்து மொழிகளும் தென்திராவிடப் பிரிவினைச் சார்ந்துள்ளதையும் கண்டோம்.



குறிப்பு

தென்திராவிடமொழிகளான தமிழும் மலையாளமும் பிற்காலத்தில் பிரிந்தாலும் இவ்விரண்டினுள்ளும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றி எமனோ சுட்டுகின்றார். கொடகு மொழி கன்னட மொழியினைவிடவும் தமிழ் மலையாள மொழிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதனை எல்.வி. இராமசாமி அய்யர் சுட்டுகின்றார்.

டாக்டர் கிருஷ்ணமூர்த்தியின் கருத்துக்கு மாறாக துளு மொழி தென் திராவிடப் பிரிவினைச் சேர்ந்தது என்றும், இஃது தொல் தென் திராவிட மொழியிலிருந்து முதலில் பிரிந்த காரணத்தால் அது பிற தென்திராவிட மொழிகளிலின்றும் வேறுபடுகின்றது என்று கூறுகின்றார். தொல் தென்திராவிட மொழியிலிருந்து கன்னடமும், தொடர்ந்து கோத்தா தோடாவும் அதனோடு தொடர்ந்து கொடகும் தமிழும் மலையாளமும் பிரிந்து வளர்ந்தன. தொல் தென்திராவிடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழிலும் காண முடிகின்றது. தமிழும் மலையாளமும் கடைசியில் பிரிந்தால் பிற தென்திராவிட மொழிகளின் பண்பினைத் தமிழிலும் காணலாம்.

**கன்னடமும் தமிழும்**

தொல் திராவிடத்தில் மகர ஈற்று அஃறிணைச் சொற்களின் அத்துச் சாரியை ஆறாம் வேற்றுமைக்கு முன்னர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். துளு மொழியிலும் அவ்வாறே. கன்னட மொழியில் ஆறாம் வேற்றுமைக்கு முன்னால் மட்டுமல்லாது மூன்றாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் முன்னதாக அத்துச் சாரியைப் பயன்படுத்தப்படுகின்றது. தமிழிலும் பிறமொழிகளிலும் இவ்விரு வேற்றுமைகளின் முன்னும் சாரியை இணைத்துப் பயன்படுத்தப்படுவதனால் கன்னடம், தோடா, குடகு, கோத்தா, மலையாளம், தமிழ் முதலிய அனைத்து மொழிகளும் ஒன்றாக இருந்த காலத்தில் குறிப்பாக துளு பிரிந்த பின்னரும், கன்னடம் பிரிவதற்கு முன்னருமான இந்நிலை இருக்க வேண்டும் என்று உணரப்படுகின்றது.

குறிப்பு

| | கன்னடம் | தமிழ் |
|---|---|---|
| முதல் வேற்றுமை | மர | மரம் |
| ஆறாம் வேற்றுமை | மரத | மரத்து |
| ஏழாம் வேற்றுமை | மரதல்லி | மரத்தில் |
| மூன்றாம் வேற்றுமை | மரதிந்த | மரத்தின்/ மரத்தினால் |
| நான்காம் வேற்றுமை | மரக்கு | மரத்திற்கு |
| இரண்டாம் வேற்றுமை | மரலன்னு | மரத்தை |

அ∴றிணைப் பன்மை விகுதிகளாகக் கள், ள் என்ற இரு விகுதிகளும் இருந்திருக்க வேண்டும் என்பது ஒப்பிலக்கண அறிஞர்களின் முடிபாகும். ஆனால், துளு மொழியில் மட்டுமே இவ்விரு விகுதிகளும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. மற்ற தென் திராவிட மொழிகளின் ளகர விகுதி மறைந்தது. இது கன்னட மொழி உட்பட தென் திராவிட மொழிகளில் ஏற்பட்ட பொது மாற்றமாகும்.

கொடகும் தமிழும்

கொடகு ஒரு காலத்தில் கன்னடத்துடன் பயின்ற பின்னரே பிரிந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாக உள்ளது. காரணம் கொடகு மொழி கர்நாடக மாநிலத்திலேயே பேசப்படுகின்றது. எனவே கன்னடம் கொடகு இருமொழியும் தொடர்புடையது என கருதப்பட்டது. திராவிட மொழியில் அறிஞர் எமனோ, கொடகு மொழியினைப் பற்றி தத்தம் பதிவில் “தமிழ் மலையாளம் போன்ற மொழிகளோடு நெருங்கிய தொடர்புடையது என்றும் கன்னடம்த பிரிந்த பிறகு தமிழ், மலையாளம், கோத்தா, தோடா, கொடகு ஆகிய மொழிகள் சிறிது காலம் இருந்து பிரிந்திருக்க வேண்டும் என்றும் கன்னடமும் கொடகும் ஒன்றுக்கொன்று பக்கத்திலிருப்பதால் சில பொதுக் கூறுகள் இருக்கின்றன” என்று சுட்டுகின்றார்.

குறிப்பு

மகர ஈறு, அ.ஃறிணைச் சொற்கள் இரண்டாம் வேற்றுமைக்கு முன்னர் சாரியையினை ஏற்பதில்லை கன்னட மொழியில் என்று கூறினோம். கொடகிலும் பிறமொழிகளிலும் சாரியை பெறுவது இம்மொழிகள் (கொடகு, தோடா, மலையாளம், தமிழ், கோத்தா) ஒன்றாக இருந்த காலத்தில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். சில வினைச் சொற்களில் தன்வினை, பிறவினை வேறுபாடு, கால இடைநிலைகளாலும் உருபுகளாலும் அறிய முடியும். இத்தகைய மாற்றம் கன்னட மொழியில் காணப்படாததால் கொடகும் பிற திரராவிட மொழிகளும் ஒன்றாக இருந்த காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். எட்டு என்னும் எண்ணுப் பெயர் கன்னடத்தில் எண்டு என்றும், பிற திராவிட மொழிகளில் எட்டு என்றும் சுட்டப்படுகின்றன. தொல்மொழியின் வடிவம் 'எண்ட்டு' ஆகும். பின்னர் டகரம் கெட்டு எண்டு எனக் கன்னட மொழியில் வழக்காகியிருக்க வேண்டும்.

தமிழ், மலையாளம், தோடா, கொடகு, கோத்தா ஆகிய அனைத்து மொழிகளிலும் எட்டு என்ற வடிவமும் தோன்றியிருக்க வேண்டும்.

**தமிழும் தோடா, கோத்தா மொழிகளும் :**

தொல்திராவிடத்தில் நான்கு என்ற எண்ணைச் சுட்ட 'நால்கு' என்ற சொல் வழக்கில் உள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களான பெரும்பாணாற்றுப்படை(489), அகநானூறு(104) ஆகியவற்றில் நால்கு என்றே சுட்டப்பட்டுள்ளது. லகரம் னகரமாக மாறிய நிலையானது. இந்த நான்கு மொழிகளுறம் இணைந்திருந்த சூழலில் நிகழ்ந்த ஒன்றாக இருக்கும்.

அவ்வாறே குயவன், குயத்தி என்ற சொற்களால் பால்காட்டும் விகுதி உள்ளது. பிற தென்திராவிட மொழிகளில் காணப்படாது. தமிழ் மலையாளம், தோடா, கோத்தா மொழிகளில் மட்டும் காணப்படுவதனால் இதுவும் இம்மொழிக்குரிய மாற்றமாகும்.

குறிப்பு

பழந்தமிழில் ‘கு, வ’ என்ற எதிர்கால விகுதி அமைந்த உண்குவேன், செய்குவேன் என்பன கோத்தா மொழியிலும் உள்ளதனால் தமிழ், மலையாளம், கோத்தா மொழிகளில் உண்டான ஒரு புது மாற்றம் என்று எமனோ சுட்டுகின்றார். செய்யாதி என்ற வாய்ப்பாடு ஏவல் எதிர்மறையாகப் பயன்படுவதும் இந்த மும்மொழிகளுக்குரிய தனிச்சிறப்பாகும்.

தமிழும் மலையாளமும் மிக நெருங்கிய உறவுடையன என்பதனால் மலையாள மொழியினைப் பெரும்பாலும் தனியே ஆராய்வதில்லை. இந்த இரு மொழிகளிலும் சில பழமைக் கூறுகள் பாதுகாக்கப்படுகின்றன. அவ்வாறே இவ்விரண்டு மொழிகளிலும் ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள் தொல் தமிழ், மலையாளக் காலத்தில் (Proto – Tamil – Malayalam Period), சில வரலாற்றுக் காலத்திலும் உண்டாயின. தொல் தமிழ் - மலையாளக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் இங்கு ஆராய வேண்டும். தொல் திராவிடத்தில் ககர மெய் இ, ஈ, எ, ஏ ஆகிய நான்கு உயிர்களை அடுத்து வந்து அதற்குப் பின்னர் டண என்ற நாமடி ஒலிகள் (Retroblex) வரவில்லை என்றால் அந்தக் ககர மெய் சகர மெய்யாகத் தமிழிலும் மலையாளத்திலும் மாறி உள்ளது.

கெலி – செலி

கிரி – சிரி

டாக்டர் குமாரசாமி ராஜா அவர்கள் தொல் திராவிடத்தில் மூக்கொலிகளுக்குப் பிறகு இரண்டு வல்லொலிகள் இருந்திருக்க வேண்டும். அதில் ஒரு வல்லொலி கன்னடத்திலும் தெலுங்கிலும் மறைந்து விட்டது. தமிழிலும் மலையாளத்திலும் மூக்கொலி மறைந்துவிட்டது என்றும் கூறினார்.

மொழிக்கு நடுவில் இரண்டு உயிர்களுக்கிடையே சகரமெய் ஒரே வழி யகர மெய்யாக மாறும் மாற்றம் இவ்விரு மொழிகளில் மட்டுமே காணப்படினும் பிற மொழிகளில் காணப்படவில்லை. தொண்ணூறு,

*Self-Instructional Material*

தொள்ளாயிரம் என்ற எண்ணுப்பெயர் வடிவங்களும் தமிழிலும் மலையாளத்திலும் மட்டுமே உள்ளன.

குறிப்பு

**தென்திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் :**

தென்திராவிட மொழிகளில் அ.்.றிணை ஒன்றன் பாலிலிருந்து வேறுபட்ட உயர்திணைப் பெண்பால் ஒருமை விகதியைப் பெற்றிருப்பது தென்திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும். தெலுங்கு, கூவி, கூயி போன்ற மொழிகளில் நிகழ்வது போன்ற மெய் இடம்பெயரல் (Metathesis) தென் திராவிட மொழிகளில் இல்லை.

இகர எகர உகர ஒகர மாற்றங்கள் (Operation of i/e and u/o alternation) குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இவ்வொலி மாற்றங்கள் தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளிடையே மட்டுமின்றித் தமிழ் மொழியின் ரி வடிவத்திற்கும் பேச்சு வழக்கிற்குமிடையே நிகழ்வதைக் காணலாம். தமிழ், மலையாள மொழிகளில் வரும் ‘இ’ ‘உ’ முறையே தெலுங்கு, கன்னட மொழியில் ‘எ’ ‘ஒ’ வாக மாறுகிறது. தொல்திராவிடத்தில் எதிர்மறை விகுதியாக ‘ஆ’ இருந்தது. பின்னர் தென் திராவிடத்தில் தகரமும் இணைந்தது. தொல்திராவிட காலங்காட்டும் இழடடநிலைகளான த் , ந்த், த்த், இ பொன்றவை தென்திராவிட மொழிகளில் பயின்று வருவதைக் காணலாம். தென் திராவிட மொழிகளில் வியங்கோள் விகுதிக்கா உள்ளது. எச்ச வடிவங்களோடு வேண்டு- ‘உம்’ விகுதி சேர்த்து உடன்பாட்டுப பொருளையும் ‘ஆ’ விகுதி சேர்த்து எதிர்மறைப் பொருளையும் கூறுதல் தென்திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும். தென் திராவிட மொழிகளில் ணகரமும் ளகரமும் தனி ஒலியன்களாக உள்ளன. நடுத்திராவிட மொழிகளிலும் வட திராவிட மொழிளிலும் ணகரம் னகரத்துடனும் ளகரம் லகரத்துடனும் இணைந்து விட்டன.

னகரம் ஒருமையையும் மகரம் பன்மையையும் காட்டுகின்றது. மகரம் பன்மையைக் காட்டுவதால் ஒருமைக்குரிய னகரம் முன்னர்

இருந்திருக்க வேண்டும். 'நீன்' என்றிருந்து னகரத்தை இழந்து 'நீ' என்றாகியிருக்க வேண்டும்.

குறிப்பு

திராவிட மொழிகளில் இறந்த காலம், இறப்பில்லாக் காலம் என்ற பகுப்பே அடிப்படையான காலப் பாகுபாடாகும். நிகழ்காலமும் எதிர்காலமும் வேறு படுத்தப்பட்டாலும் அவற்றிடையே மயக்கம் மிகுதியாக உள்ளது. 'அவன் செய்து' என்பவற்றில் சூழ்நிலையைக் கொண்டு காலத்தைப் புரிந்து கொள்கிறேம். துகரம் இறந்த காலம் காட்டும் இடைநிலையாகக் கருதப்பட்டது. கு. பு இறப்பில்லாக் காலத்தைக் காட்டும் விகுதியாகக் கருதப்பட்டது. இறப்பில்லாக் காலத்தல் எதிர் காலத்தைக் காட்டப் பகரம் மிகுதியாக வருகிறது. ககரம் சொல்லாக்க அசையாக எல்லா வினைவேர்களுடன் எதிர்கால முற்றாக வரும்போது வரலாம் என்றும் எதிர் காலம் பகரத்தின் மாற்று வடிவமான வகரத்தால் காட்டப்பெறும் எனச் சேனாவரையர் சுட்டிக் காட்டுகிறார். உருபொலியன் விதிப்படித் தகரம் என்பது ன், ல் பிறகு வருகையில் நுனியண்ண வெடிப்பொலியாகிறது. ண், ள் பின்வரும்போது நாவளை வெடிப்பொலியாகிறது. உண், நின்று என்பவற்றில் உள்ளது தகரமே. இவ்விதிக்கு உட்படாத வடிவங்களைத் தகரம் பெற்றிருந்தாலும், இறப்பில்லாக் காலத்தையே காட்டும்.

பிற திராவிட மொழிகளோடு ஒப்பிட்டுக் காணும்போது வடமொழியின் தாக்கம் மிகவும் குறைந்து தமிழ் திகழ்கின்றது. வடமொழியை மேற்கொண்டாலும் அதனைத் தமிழ் ஒலியமைக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொண்டனர்.

நன்னூலும் இதற்கு விதி அமைத்து ஏற்கிறது. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலான மொழிகள் தற்காலத் தமிழுடன் ஒத்தமையாத நிலையிலும் பழங்காலத் தமிழுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. தொன்மையான வடிவங்களையும் இலக்கணக் கூறுகளையும் பேணிக் காப்பதால், தமிழ் மொழி திராவிட ஒப்பியல் ஆய்விற்குப் பெரிதும் பயன்படுகிறது. திராவிட மொழிச் சொற்களை மீட்டுருவாக்கம் செய்து, தொல் திராவிட வடிவைக் காண்கிறோம்.

அப்படிப்பட்ட தொல் திராவிட வடிவங்கள் (Proto Dravidian Forms) மிகுதியும் தமிழுடன் ஒத்தமைவதனைக் காண்கிறோம்.

குறிப்பு

காலட்டுவெல் அவர்களும் தமது திராவிட மொழி ஒப்பலக்கண நூலில் தமிழ் மொழிக்குச் சிறப்பான பங்கினை அளித்துள்ளார். தொல் தமிழ் மலையாள காலங்களுக்குப் பின்னர் தமிழில் சில மாற்றங்கள் உண்டாயின. மொழி முதல் ஞகர மெய் நகர மெய்யாக மாறும் நிலை தொல் தமிழிலேயே தோன்றியிருக்க வேண்டும். தொல் திராவிடத்தில் ஞகர முதன் முதலில் மொழிச் சொற்கள் தமிழில் நகர மெய்யாக உள்ளன. இதனை,

ஞரல் - நரல்
ஞால் - நால்
ஞாண் - நாண்
ஞெகிழ் - நெகிழ்

போன்ற ஞகர – நகர உறழ்ச்சி (Free Variation) காணப்படுகின்றது. தொல் திராவிடத்தில் ஆண்பால் விகுதியாக ‘கள்’ இருந்திருக்க வேண்டும். ‘முதுக்கள்’ என்ற சொல் மலையாள மொழியில் உள்ளது. பழந்தமிழில் ‘முதியன்’ என்று காணப்படுகின்றது. திருக்குறள் முதுவர் (715) என்ற பன்மை வடிவம் சுட்டுகின்றது. இதற்கு இணையாக முதுவன் என்ற சொல் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்று டாக்டர் செ. வை. சண்முகம் அவர்கள் எடுத்துரைக்கின்றார்.

‘கள்’ என்ற வடிவம் ‘வன்’ எனப் பழந்தமிழ் காலத்திற்கும் முன்னதாகவே மாறியிருக்க வேண்டும். முன்னிலைப் பன்மை இடப்பெயரின் வேற்றுமை ஏற்கும் வடிவம் ‘நிம்’ என்று தொல் திராவிடத்தில் இருந்திருக்க வேண்டும். மலையாளத்தில் தொல் திராவிட வடிவம் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். பழந்தமிழில் வழங்கும் நுநும் வடிவம் இங்கு இகர உயிர் உகர உயிராக மாறியது தமிழின் தனித்தன்மையாகும்.

குறிப்பு

திராவிடச்சொற் பிறப்பியல் அகராதியில் (A Dravidian Etymological Dictionary) தொல் திராவிட மொழிக்கும் மற்ற திராவிட மொழிகளுக்குமிடையேயுள்ள இன ஒலிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**தொல் திராவிட மொழிக்கும் தமிழுக்குமிடையேயுள்ள இன ஒலிகள் :**

| தொல்திராவிட மொழி | தமிழ் |
|---|---|
| அ | அ |
| ஆ | ஆ |
| இ | இ |
| ஈ | ஈ |
| உ | உ |
| ஊ | ஊ |
| எ | எ |
| ஏ | ஏ |
| ஒ | ஒ |
| ஓ | ஓ |
| க் | க்ச் |
| க் | க் |
| க்க் | க்க் |
| ங்க் | ங்க் |
| ச் | ச் |
| ச்ச் | ச்ச் |
| ஞ்ச் | ஞ்ச் |
| ட் | ட் |
| ட்ட் | ட்ட் |
| ண்ட் | ண்ட் |
| த் | த் |
| த் | த் |
| த்த் | த்த் |
| ந்த் | ந்த் |
| ப் | ப் |
| ம்ப் | ம்ப் |

குறிப்பு

| | |
|---|---|
| ற் | ற் |
| ற்ற | ற்ற |
| ன்ற் | ன்ற் |
| ம் | ம் |
| ன்ந் | ன்ன் |
| ண் | ண் |
| ஞ் | ஞ் |
| ய் | ய் |
| ர் | ர் |
| ல் | ல் |
| ல்ல் | ல்ல் |
| வ் | வ் |
| வ் | வ் |
| ழ் | ழ் |
| ள் | ள் |
| ள்ள் | ள்ள் |

## தமிழ் பிராமிக் கல்வெட்டுத் தமிழ்

**1. அரிட்டாபட்டி கல்வெட்டு**

கணிஇ ந தா ஸீரியகுவ
வெள் அறைய் நிகமது
காவி தி இய் காழி திக அந்தை அ
ஸதன் பிணாஊ கொடுபி தோன்.

இதே கல்வெட்டை மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் கீழ்க்ண்டவாறு பிரித்துப் பொருள் கொள்கிறார்.

கணி நந்தாஸிரியற்கு
வெள்ளறை நிகமத்து
காவிதி காழிதி ஆந்தைய
ஸுதன் பிணாவு கொடுபித்தான்

கணிநிதி ஆசிரியர் பெயராகும். வெள்ளறை என்பதுடன் யகர மெய் சேர்த்து எழுதுதல் அக்கால முறையாகும். நிகமம் என்பது நியமமாகும். நியமம் என்பது தெருவாகும்.

குறிப்பு

"கருங்கட் கோசர் நியம மாயினம்" அக. 9.12

கோயில் என்ற பொருளும் உண்டு. காவிதி என்பது அரசனால் அளிக்கப்படும் பட்டமாகும். காழிதி ஆந்தை என்பது பெயராகும். ஆந்தை என்பது கல்வெட்டுக்களில் அந்தை என உள்ளது. 'ஆந்தைய' என்பதில் 'அ' என்னும் வேற்றுமை உருபு உடைய என்னும் பொருளில் உள்ளது. ஸூதன் என்பது வடமொழிச் சொல்லாகும். பிணா அல்லது பிணவு என்பதற்குப் பின்னப்பட்டது, முடையப்பட்டது, சாமலைர, கற்படுகை, எனப் பல பொருள் கூறுகின்றனர். தெறிவு இல்லை. "வெள்ளறை அங்காடித் தெருவில் வசிக்கிற காழிதி ஆந்தனுடைய மகன் கணி நந்தாசிரியற்கு 'பிணாவு' கொடுப்பித்தான்" என்பது இதன் பொருளாகும்.

**2. அரிட்டாபட்டி கல்வெட்டு**

வெள் அடை
நிகமதோர்
கொடி ஓர்

வெள்ளடை ஊரின் பெயர் என்றும் நிகமதோர் கடைத்தெருவில் இருப்போர் என்றும் கொடி ஓர் என்பதைக் கொட்டியோர் என்றும் பொருள் கொள்கின்றனர்.

**3. மருகாந்தலைக் கல்வெட்டு**

வேண் காஸிபன்
குடுபித
கல் காஞ்சணம்

குறிப்பு

வேண் காஸிபன் என்பதைப் பெயராகக் கொள்ளலாம். சங்க இலக்கியங்களில் வெண்கொற்றனார், வெண்பூதனார், வெண்பூதியார் என்னும் பெயர்கள் வழங்கி வந்ததை அறிகிறோம். குடுபித என்பது குட்டுப்பித்த என்றாகும். கொட்டுவித்த என்ற சொல்லின் திரிபாகும். குடுபிதழூ குட்டுப்பித்த > கொட்டுப்பித்த > கொட்டுவித்த என்பது ஈரேவல் வினையின் பெயரெச்ச வடிவமாகும். காஞ்சணம் என்பது இருப்பிடம் என்ற பொருளைத் தரும் பிராகிருதச் சொல்லாகும். கல் என்பது அதற்கு அடையாகிறது. வேண் வகுப்பைச் சார்ந்த காஸிபன் என்பவனால் கொட்டுவிக்கப்பட்ட கல்லாகிய காஞ்சணம்.

**4. அரிக்கமேடு பிராமி எழுத்து**

அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த அகல் விளக்கு ஒன்றில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களையும் அதன் பொருளையும் காண்போம். பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன :

முதிகுழுரஅன் அகல்

முதுகுழூரன் என்பவருடைய அகல் என்பது இதன் பொருளாகும். முதுகுழூரான் என்பது ‘முதிகுழுரஅன்’ என எழுதப்பட்டுள்ளது. அகல் என்பது அகல் விளக்கு ஆகும்.

**5. திருப்பரங்குன்றக் கல்வெட்டு**

எரு கோ டூர் ஈழ குடும்பிகன் போலாலயன்
செய்தா ஆய்ச்யன்
நெடு சாத்தன்

இலங்கை (ஈழத்திலிருந்து) வந்து எரு கோட்டூரில் உள்ள குடும்பிகனான போலாலையன், உறங்குவதற்கும் ஆழ்ந்த தியானம் செய்வதற்கும் அமைத்தான் என்பது இதன் கருத்தாகும். குகையின் கற்படுகைகளைச் செய்து அமைத்தவன் ஆய்ச்சயன் நெடுசாத்தன் ஆகும். எருகோடூர் ஆக இருக்கலாம். சங்க இலக்கியங்களில் இவ்வூரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. நெடுசாத்தன் என்பதனை நெடுஞ்சாத்தன் எனக் கொள்ளலாம்.

செய்தா (செய்தான்) என்பதில் இறுதி மெய்கெட்டு முன்னுள்ள உயிர் மூக்கொலி பெற்று (Nasalisaion) வந்துள்ளது.

குறிப்பு

**6. கழுகுமலைக் கல்வெட்டு**

காணிய நாந்தா ஸிரி யகு அன் தமாம்
இதா நெடிஞ்சாழியான் ஸாலாகான்
இளாஞ் சாடிகான் தாந்தைய் சாடிகான்
செயிபாபாளிய்

இக்கல்வெட்டைக் கீழ்க்கண்டவாறு பிரித்துப் பொருள் கொள்கின்றனர்.

கணிய நந்த(ஆ) ஸிரிய்ச உவன் த(ம்)மம்
இத(உ)அ நெடிஞ்சழியன் ஸாலகன்
இளஞ்சடிகள் சந்தைய் சடிகன் செஇய பளிய்

அங்கு வாழும் கணியன் நந்தன் என்னும் துறவிக்குப் படைக்கப்பட்டது. நெடுங்செழியனின் மைத்துனனும் (ஸாலகன்) இளஞ்சடிகளின் தந்தையுமான சடிகனால் இந்தப் பள்ளி அமைக்கப்பட்டது. தமம் என்பது தம்மம் (அறம்) என்றாகும். நந்தஸிரிய்கு என்பது நந்தியாசிரியற்கு என்றிருத்தல் வேண்டும். ஈதா என்பது ஈந்தான் என்று பொருளாகும். சடிகன் என்பது இளஞ்சடிகனுடைய தந்தையின் பெயராகும். பளிய் என்பது பள்ளி என்பதன் திரிபாகும். ஸாலகன் என்னும் பிராகிருதச் சொல்லுக்கு மைத்துனன் என்பது பொருளாகும். இகர ஈற்றுச் சொற்களின் இறுதியிலும் ஐகார ஈற்றுச்சொற்களின் இறுதியிலும் யகர மெய் சேர்த்து எழுதுதல் அக்கால வழக்கமாகும். உதாரணம். பளி, ய், தந்தை, ய்.

**7. புகலூர்க் கல்வெட்டு** நள்ளிய ஊர் அ பிடந்தை மகள் கீரன் சொற்ற...

புகலூர்ப் பிராமி எழுத்துக் கல்வெட்டு, கல்வெட்டு இலாகாவின் 1928ஆம் ஆண்டுத் தொகுப்பில் வெளியாகியுள்ளது. இக்கல்வெட்டை ஐராவதம் மகாதேவன் அவர்கள் கீழ்க்கண்டவாறு பிரித்துப் பொருள் கொள்கிறார்.

குறிப்பு

இதே கல்வெட்டை மயிலைை சீனி.வேங்கடசாமி அவர்கள் கீழ்க்கண்டவாறு பிரித்துப் பொருள் கொள்கிறார்.

நற்றிவ் ஊர்ப் பிடந்தை மகன் கீரன் கொற்றன். பிடந்தை என்பது ஆளைக்குறிக்கும் பெயராகும். மகாதேவன் அவர்கள் மகள் என்பதற்கு மக்கள் எனப் பொருள் கொள்கிறார். கீரன் கொற்றன் என்பதை இரண்டு பெயராகக் கொள்கிறார். நள்ளியூரில் வாழ்ந்த பிடந்தை என்பவருடைய மகனான கீரன் கொற்றன் (கற்படுகையை அமைத்துக் கொடுத்தான்) என்பது இதன் பொருளாகும்.

**8. சித்தன்னவாசல் கல்வெட்டு**

பாகனூர் போதாதன்
பிடன் இதாதாவெ லேன்

பாகனூர் என்பது இராமநாதபுரத்திலுள்ள ஊராகும், பிடன் என்பது பிட்டன் எனச் சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றது. லேன் என்னும் பிராகிருதச் சொல்லுக்குக் குகை என்பது பொருளாகும். ‘இதாதாவெ’ என்பதைச் சிறப்புப் பெயராகக் கொள்வர் சிலர்.

**9. ஆண்டிப்பட்டி பிராமி எழுத்து**

வட ஆர்க்காடு மாவட்ட செய்யாறு தாலுக்காவிலுள்ள ஆண்டிப்பட்டியில் கிடைத்த நாணயங்களில் பிராமி எழுத்து காணப்படுகின்றது. இந்த நாணயங்கள் கடைச் சங்க காலத்தில் வெளியிடப் பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சேர்தன் ஆதி
எதிரான் சே
எதிரா
எதினன்

சேத்தன், எதிரான் என்ற சொற்கள் தெளிவாகத் தெரிகின்றன. எ.கா. எழுத்தில் நடுவில் புள்ளி உள்ளது. எகர ஒகர மெய் புள்ளி பெறும்

என்கிறது தொல்காப்பியம். புதழியூர் கல்வெட்டிலும் எகரத்தில் புள்ளி காணப்படுகின்றது.

குறிப்பு

**10. அதியமான் கல்வெட்டு**

தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர்க்கு அருகிலுள்ள ஜம்பை எனுமிடத்தில் இக்கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது.

ஸதியபுதோ அதியந் நெடுமாஞ் அஞ்சி ஈத்த பாளி

'அதியனை ஸதியபுதோ அதியந் நெடுமாஞ் அஞ்சி' என்ற வழங்குகிறது. அசோகரது கல்வெட்டுக்களில் சோழர், பாண்டியர், கேரளபுத்ரர், ஸ்தியபுத்ரர் ஆகியோரைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. 'ஸதியபுதோ' என்பவர் அதியமான்களாக இருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது. இக்கல்வெட்டு மூலம் அசோகர் கூறும் ஸத்ய புத்ரர்கள் அதிமான்கள் எனத் திட்டவட்டமாகத் தெரிகிறது. அதியனைப் பொய்யா எழினி (சத்யபுத்ரா) எனப் புறநானூறு கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டு கி.பி. முதல் நூற்றாண்டு என டாக்கடர் இரா. நாகசாமி அவர்கள் கூறுகின்றார்கள்.

**11. திருவாதவூர்**

பாங்காடு அரிஇதன் கொட்டுபிதோன்

**12. விக்கரமங்கலம்**

அந்தைய் பிகன்மகன் செய்அதான்

**13. அழகர் மலை**

13. 1 மதிரைய் பொன்கொலவன் ஆதன் அதான
13. 2. உபு வாணிகன் வியகன் அகன்
13. 3. பணித வாணிகன் நெடுமலன்
13. 4. கொழு வாணிகன் ஈளசாந்தன்

**14. ஆனை மலை**

இவ குன்றது உறையுள் பாதந்தான்

ஏரி அரிதன் அத்துவாயி அரிட்ட காயிபன்

குறிப்பு

## ஒலியனியல் (Phonology)

**உயிர் ஒலிகள்(Voels)**

| | **முன்** | **(Front)** | **இடை** | **(Central)** | **பின்** | **(Back)** |
|---|---|---|---|---|---|---|
| | குறில் | நெடில் | குறில் | நெடில் | குறில் | நெடில் |
| உயர் | இ | ஈ | | | உ | ஊ |
| நடு | எ | ஏ | | | ஒ | ஓ |
| கீழ் | | | அ | ஆ | | |
| மெய் ஒலிகள் | (Consonants) | | | | | |
| | க் | ச் | ட் | ற் | த் | ப் |
| | | (ஞ்) | ண் | ன் | ந் | ம் |
| | | ய் | | ர் | | வ் |
| | | ழ் | | ள் | | ல் |
| வரன்முறை | (Distribution) | | | | | |
| மொழி முதல் | க் | ச் | | | த் | ப் |
| மொழி இடை (தனித்து) | க் | ச் | ட் | ற் | த் | ப் |
| மொழி இடை (இரட்டித்து) | க்க் | ச்ச் | ட்ட் | ற்ற் | த்த் | ப்ப் |
| | | ஞ்ச் | ண்ட் | ன்ற் | ந்த் | ம்ப் |
| | | | | | ந் | ம் |
| | | | ண் | ன் | ந் | ம் |
| | | | | | | வ் |
| | ய் | | | | | |
| | ய் | | ழ் | | ர் | |
| | ய் | | | | ர் | |
| | | | ள் | ல் | | |
| | | | ள்ள் | ல்ல் | | |

தொல் திராவிட ஒலியன் அமைப்பே (Proto Dravidian Phonemic structure) குகைக் கல்வெட்டுக் காலத்திலும் விளங்கியது. அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து உயிர்களும் அவற்றின் நெடில் உயிர்களும்

குறிப்பு

காணப்படுகின்றன. ஐகாரம் பெரும்பாலும் சொல்லின் இறுதியில் வந்துள்ளது. ஆனால், ஐயன், ஐம்பது போன்ற சொற்களில் மொழி முதலில் வந்துள்ளது. ஐகார ஈறாக இலக்கியத்தில் வருபவை அகர ஈறாகக் கல்வெட்டுக்களில் வந்துள்ளன. ஔகாரம் கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. உயில் எழுத்துக்களில் குறில், நெடில் வேறுபாடு ஒலியன் இயல்புடையது. ஏகார ஓகார நெடில் உயிர்களுக்குத் தனியே வரி வடிவம் இல்லை. ஆனால், பொருள் வேறுபாடு உண்டு. எல்லா உயிர் எழுத்துக்களும் சொல்லின் முதலிலும் இடையிலும் வருகின்றன. ஆனால், ஈ,எ,ஒ என்ற மூன்றும் சொல்லின் இறுதியில் வாராது. பிறவெல்லாம் வருகின்றன. இக்கல்வெட்டுக்களில் மெய்ம் மயக்கங்களைக் காட்டிலும் உயிர் மயக்கங்களே அதிகம். ஆனால், யகர வகரமும் உடம்படு மெய்களாகக் காணப்படுகின்றன. பதினெட்டு மெய்யெழுத்துக்களும் ஒலியன்கள் அல்ல ஙகரம் கரம் என்ற இவ்விரண்டும் இவற்றின் இனமான தடையொலிகள் வரும்போது மகரத்தின் திரிபாகின்றன. நகரமும் னகரமும் வெவ்வேறு ஒலியன்களாகம். குகைக் கல்வெட்டில் ஆய்த எழுத்துக் காணப்படவில்லை. பின்னண்ண மூக்கொலியான ஙகரமும் வழங்கவில்லை. தமிழ் இலக்கியங்களில் மெய்ம்மயக்கம் அமைந்துள்ளது போலவே குகைக் கல்வெட்டுக்களிலும் மெய்ம் மயக்கங்கள் காணக்கிடக்கின்றன. க், ச், த், ந், ப், ம், வ், ய் என்ற எட்டும் சொல் முதலில் வருகின்றன. ண், ம், ய், ர், ல், ழ், ள், ன் என் எட்டும் சொல்லின் இறுதியில் வருகின்றன. யகரம் ஆகாரத்தோடு மொழி முதலாவது புகழூர்க் கல்வெட்டில் காணப்படும் ’யாற்றூர்’ என வருவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். சந்தன்,சழியன், சடிகன் என்ற சொற்களில் சகரம் மொழி முதலாவதைத் தெரிந்து கொள்கிறோம். வகரம் உ, ஊ, ஒ, ஓ ஆகிய நான்கினோடு வரவில்லை. மெய் இரட்டித்தல், இன மூக்கொலியோடு தடையொலி வருதல் ஆகிய இரண்டு வகையில்தான் மெய்ம்மயக்கம் காணப்படுகின்றது. ரகரமும் ழகரமும் இரட்டிக்காது. ஆறு தடையொலிகளும் சொல்லுக்கு இறுதியில் வாரா. ற, ட, ர, ல என்ற நான்கும் சொல் முதலாகவில்லை. வெடிப்பொலிகளை நிறுவுவதற்கு வேற்றுநிலை வழக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. தொல் திராவிட மொழியிலிருந்து இத்தமிழ்ப் பிராமிமக் கல்வெட்டுக்களின் மொழி நிலையை ஆராய்வதால் க், ச், ட், ற், த், ப் ஆகிய ஆறு

குறிப்பு

வெடிப்பொலிகளையும் ஒலியன்களாகக் கருதலாம். க், ச், த், ப் மொழி முதல் வருகின்றன. நாவளை வெடிப்பொலியும் நுனியண்ண வெடிப்பொலியும் மொழிக்கு இறுதியில் வருவதில்லை. கடையண்ண மூக்கொலி, இடையண்ண மூக்கொலி, நாவளை மூக்கொலி முதலிய மூக்கொலிகள் காணப்படுகின்றன. ஈரிதழ் மூக்கொலி மொழமியிடையில் இன வெடிப்பொலிகளுக்கு முன்னரும் மொழி முதலில் உயிருக்கு முன்னரும் வருகிறது. இடையண்ண மூக்கொலி மொழி முதலிலோ மொழி இறுதியிலோ வரவில்லை. மொழியிடையில் இடையண்ண சகரத்திற்கு முன்னர் வருகிறது. ரகரம் மொழி இடையிலும் இறுதியிலும் வருகிறது. ரகரம் மொழி இடையிலும் இறுதியிலும் வருகிறது. வகரமும் யகரமும் மொழி முதல் வருகின்றன. யகரத்துடன் தொடங்கம் பிறமொழிச் சொற்கள் இகரத்தைப் பெறுகிறது. உகரம் தொடர்ந்தாலும் யகரம் மொழி முதல் வருகின்றது (யுள்). ஆனால், தொல்காப்பிய இலக்கணப்படி மொழி முதல் யகரம் ஆகாரத்துடனே வரவேண்டும். உடம்படு மெய் இல்லாத பல சொற்கள் இருப்பதால் கல்வெட்டு வரிவடிவத்தில் உயிர் மயக்கங்களைக் காணலாம். மெய்ம் மயக்கங்கள் மொழி முதலிலோ அல்லது ஈற்றிலோ வருவதில்லை. இடையிலேதான் பெரும்பாலும் வருகின்றன.

மொழி இறுதியில் வரும் மூக்கொலிகள் ஒலிக்கப்படாமல் முன்னுள்ள உயிர்கள் மூக்கொலிச் சாயல் (Nasalisation) பொறுகின்றன.

| | | |
|---|---|---|
| செய்தான் | > | செய்தா |
| வந்தான் | > | வந்தா |

இக்காலப் பேச்சு வழக்கிலும் மூக்கொலி மறைதலைக் காணலாம். மூக்கொலியாதல் (lateral) பிற்காலத்திய மாற்றமாகும். கல்வெட்டுக்களில் மூக்கொலியே விளங்குகிறது. கல்வெட்டுக்களில் சிறப்பு ழகரம் டகரமாகி உள்ளது.

| | | |
|---|---|---|
| கழு | > | கடு |

அழகர்மலைக் கல்வெட்டில் ‘கழு’ என்றும் அப்பொருளிலேயே புகழூர்க் கல்வெட்டில் ‘கடு’ என்றும் வந்துள்ளது. மகன் என்ற சொல்லில் ககரம் மறைந்து மான் எனக் காணப்படுகின்றது. பழைய கல்வெட்டுக்களில் னா, ள என்ற ஒலியன்கள் பிராகிருதச் சொற்களில் உள்ளன. பிற்காலத்தில் ளு→ஊ→லு என்றும் மாறிற்று.

குறிப்பு

aasiriyka > aacirika

kaasapan > kaayapan

குகைக் கல்வெட்டுக்களில் பல சமஸ்கிருதச் சொற்கள் பிராகிருத வடிவில் எழுதப்பட்டுள்ளன என்பதை ஒலியனியல் அமைப்புத் தெளிவாகக் காட்டுகின்றன. ஒன்றன்பால் உணர்த்துவன மகர ஈற்றில் முடிகின்றன. ஆண்பால் காட்டுவன னகர ஈடற்றில் முடிகின்றன. பலர்பால் காட்டுவன ரகர ஈற்றில் முடிகின்றன. தம்மம், அதிட்டானம் போன்ற சொற்களில் ஒலிப்புடை ஒலியாகவும் மூச்சுடை ஒலியாகவும் விளங்குகின்றன. க்ஷ (ks) என்ற ஒலி ‘க்க்’ என்றாகிவிட்டது. இம்மாற்றம் பிராகிருதச் சொற்களிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். ‘sy’ என்ற மயக்கம் ‘c’ என்றாகிறது. இவ்வாறு பல சொற்கள் தமிழுக்கேற்ப அமைந்துள்ளன. பிற்கால வழக்கையொட்டிப் பவணந்தியார் வடமொழியாக்கம் படைத்தார். தனிக்குறிலின்பின் வந்த உகரம் குற்றியலுகரமாக ஒலிக்கப்பட்டிருக்கலாம். மொழி இறுதி இ, ஐ உயிர்கள் கூட்டொலிகளாக ஒலிக்கப்பட்டன. தந்தை-தந்தைய் பாழி-பாழிய் மொழி முதல் ஒகரம் உகரமாகிறது.

கொட்டுப்பித்த – குட்டுபித்த

இன்று வகரம் வழங்கும் இடங்களில் அன்று பகரம் வழங்கியது.

கொட்டுவித்த < குட்டுபித்த

குறிப்பு

ஒலிப்பிலா வெடிப்பொலிகள் கல்வெட்டில் காணப்படுகின்றன. நசரமழவரச→ஏருக்கொட்டூர். சிங்கள மொழித் தொடர்பால் இரட்டை மெய்கள் (Geminated consonants) ஒற்றை மெய்களாகவே எழுதப்பட்டன.

குடுபித → குட்டுப்பித்த

ஏருகோடூர் → ஏருக்கோட்டூர்

உயிரீற்றுப் பிறமொழிச் சொற்கள் மகர ஈற்றைப் பெற்றுத் தமிழாயின.

காஞ்சண > காஞ்சணம்

மொழி ஈற்று மகரம் வருமொழி சகரம் வரும்போது ஞகரமாகத் திரிகின்றது.

நெடும் சாரியன் < நெடுஞ்சாரியன்

இளம்சாரிகள் < இளஞ்சாரிகள்

மகரம் மறைதலும் உண்டு.

நெடுசாத்தன்.

சொற்கள் உயர்திணை, அஃறிணை என இரண்டாக உள்ள பகுப்பினைக் காண்கிறோம். ஒருமை, பன்மை என்ற வேறுபாடும் உயர்திணையில் ஆண்பால், பெண்பால் என்ற பாகுபாடும் காண்கிறோம். பெண்பால் விகுதி பற்றிய சான்றுகள் இக்கல்வெட்டில் கிடைக்கவில்லை. திராவிட மொழிகளில் திணை, எண், பால், இடம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இயைபு உள்ளது.

‘ஆரிதன் கொட்டுபித்தோன்’

‘நிகமத்தோர் கொட்டி ஓர்’

அன், ஆன் ஈறுகள் ஒருமை ஆண்பால் படர்க்கை விகுதிகளாகவும், ஓம் ஈறு பலர்பால் விகுதியாகவும் இக்கல்வெட்டுக்களில்

காணப்படுகின்றன. அ.்.றிணை ஒருமை, பன்மை வடிவமாக 'இத' 'இவ' காணப்படுகின்றன. உவன் என்ற சொல் மங்களம் கல்வெட்டில் காணப்படுகின்றது. நான்காம் வேற்றுமை உருபாகக் 'கு'வும் ஆறாம் வேற்றுமை உருபாக 'அ' வும் காணப்படுகின்றன. இரண்டாம் வேற்றுமை உருபாக 'அ' காணப்படுகின்றது. இடவேற்றுமை உருபாக 'இல்' காணப்படுகின்றது. இக்கல்வெட்டுகளில் அகர ஈற்று இறந்த காலப் பெயரெச்சங்களும் இகர ஈற்று இறந்த கால வினையெச்சங்களும் காணப்படுகின்றன. 'த்' இறந்த கால இடைநிலையைக் குறித்தது. (எ-டு) செய்தா(ன்). உடம்படுமெய் கட்டாயமில்லை. (எ-டு) செய்இய. குற்றுகரத்தை இறுதியாக உடைய சொற்கள் இறந்த காலம் ஆகும்போது ஈற்றொற்று இரட்டிக்கின்றன. தமிழில் ஈரேவல் வினைக்கும் ஈரேவல் அல்லா வினைக்கும் வேறுபாடு உண்டு. இக்கல்வெட்டுக்களில் ஈரேவல் வினை விகுதியாக 'பி' உள்ளது. கொட்டுபித்தோர் என்பது பிற்காலத்தில் கொட்டுவித்தோர் என மாறுகிறது. பகரம் வகரமாக மாறுகின்றது. தொல் திராவிட மொழியிலும் இம்மாற்றத்தைக் காணலாம். தமிழில் பகரம் வகரமாகி மீண்டும் வகரம் பகரமாகிறது. செய்து என்னும் வினையெச்சம் இறந்த கால இடைநிலையாக மாறிவிட்டது. அகர விகுதியை அதனுடன் சேர்த்தால் அது பெயரடையாகிறது. அடையாக இருந்தாலும் பெயரடை போலவும் வினையின் அடிப்படைச் செயற்பாடுகளைக் கொண்டதாக இருப்பதாலும் வேர் வினையே என்பதாலும் வினைக்கு அடையாக வரும் இயல்புடைய எழுவாய் செயப்படுபொருளை ஏற்கக் கூடுமாதலாலும் எச்சம் என்கிறோம். குகைக் கல்வெட்டுக்கள் சிறியவையாயிருப்பதால் உம்மைப் பொருளில் வரும் வினையெச்சம் வரவில்லை. இக்கல்வெட்டுக்களில் பெயரெச்ச வடிவங்கள் காணப்படுகின்றன. பெயரெச்ச வடிவங்களுடன் ஆண்பால் ஒருமை அன் அல்லது உயர்திணைப் பன்மை காட்டும் ஆர் அல்லது ஓர் முதலான பெயர்ப்பதிலி விகுதி சேர்க்கப்பட்டு வினைமுற்றுக்கள் ஆகின்றன. தகர இடைநிலை வினைமுற்றாக்கம், இகர நடைநிலை வினைமுற்றாக்கம் என இரண்டு வகை வினை முற்றுக்கள் உள்ளன.

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் குகைக் கல்வெட்டிலுள்ள வாக்கியங்கள் கருத்து, கருத்து விளக்கம் என்ற

குறிப்பு

*Self-Instructional Material*

குறிப்பு

அமைப்பிலுள்ள பெயர்த்தன்மை கொண்ட வாக்கியங்கள் எனக் குறிப்பிடுகின்றார். தமிழில் எழுவாயையும் பயனிலையையும் இணைக்கும் இணைப்பு இல்லை. சில நேரங்களில் பயனிலையே கருத்தாகவும் எழுவாய் கருத்து விளக்கமாகவும் அமைகின்றது.

தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் சொற்றொடர் அமைப்பும் தமிழ் முறைப்படி அமைந்துள்ளது.

'வேண்கோசிபன் கொட்டிவித்த கல்குகை'

தற்காலத் தமிழ் போலவே சிறப்பு பெயரும் இயற்பெயரும் இருபெயரொட்டுக்களாக அமைந்து அவ்வமைப்பினாலேயே அழைக்கும் தன்மை சுட்டப்படுகின்றது. காவிதி, ஆசான், அறிவன் முதலியன சாதி அல்லது தொழிலை அடிப்படையாகக் கொண்டு அமைந்த பெயர்களாகும். தொல்காப்பியப்படி சிறப்புப் பெயர் இயற்பெயருக்கு முன்னர் வரவேண்டும். தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் அவ்வாறு வந்துள்ளது.

வேண் கோசிபன்
கணியன் இயக்குவன்
உபாசன் போத்தன்

பெயர்கள் நாடு, ஊர்ப்பெயர் குறித்த பின்னர்க் கூறப்பட்டன :

ஏருக்கோட்டூர் ஈழக்குடும்பிகன் போலாலயன்

நெடும், இளம் என்ற பண்புகளுக்குப் பின் இயற்பெயர் வழங்கப்பட்டன :

நெடு சாத்தன்
இளஞ் சாரிகன்

இன்று வழக்கிழந்த பழந்தமிழ்ச் சொல்வடிவங்கள் காணப்படுகின்றன.

பாழி

வேன்

சாத்தன்

செய்யிய

ஜைன, புத்தமத வளர்ச்சியைக் காட்டுகிறது. குகை வாழுமிடங்களை ‘பள்ளி’ என்றும் பாறைப் படுக்கைகளை ‘அதிட்டானம்’ என்றும் கூறுவர். உப்பு வாணிகன், அறுவை வாணிகன், கொழு வாணிகன், பொன் வாணிகன் பொன்ற சொற்களை அழகர்மலைக் கல்வெட்டில் காண்கிறோம். தச்சன். பொன் கொல்லன், பாகன் போன்ற தொழில்கள் பற்றியும் காண்கிறோம்.

## 2. தொல்காப்பியத் தமிழ்

தொல்காப்பியர் பன்னிரு உயிர்களின் பிறப்புப் பற்றிப் பேசுகையில் ‘மிடற்றுப் பிறந்தவளி’ என்ற தொடரைப் பயன்படுத்துகிறார். ஒலி உறுப்புக்கள் ஏற்படுத்தும் ஒலி அதிர்வுகளே ‘மிடற்றுப் பிறந்த வளி’ என்ற சொல்லால் சட்டப்படுகின்றன. ‘இசைக்கும்’ என்பதால் இ∴து ஒலிப்புடை ஒலி என்று உணரலாம். ஒலிப்பு முறையை அடிப்படையாக வைத்து உயிர் எழுத்துக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

I. அ, ஆ

II. இ, ஈ, எ, ஏ, ஐ

III. உ, ஊ, ஒ, ஓ, ஔ

தொல்காப்பியர் பிறப்பியலில் எழுத்துக்களின் பொதுப் பிறப்பைக் கூறியபின், உயிர் எழுத்துக்களின் பிறப்புப் பற்றிக் கூறுகிறார். உயிர் எழுத்துக்களின் பொதுப் பிறப்புப் பற்றியும் உயிர் எழுத்துக்களின் சிறப்புப் பிறப்புப் பற்றியும் விளக்குகிறார்.

அவ்வழிப்

குறிப்பு

பனினீ ருயிரும் தம்நிலை திரியா
மிடற்றப் பிறந்த வளியின் இசைக்கும் - பிறப்.2
அவற்றுள்
அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும் - பிறப்.3

இ ஈ எஏ ஐஎன இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய - பிறப்.4

உ ஊ ஒ ஓ ஔஎன இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும் - பிறப்.5

அகரமும் ஆகாரமும் வாயைத் திறத்தலாலே பிறக்கின்றன. இவற்றைக் கீழ் நடு உயிர் (Low central vowels) என்பர். அ, அ, இவ்விரண்டும் அங்காப்புயிர் (பிறப்.3) என்றும், இ, ஈ, எ, ஏ, ஐ முன்னுயிர்கள் (front vowels) என்றும் (பிறப்.4) உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகியவை குவியுயிர் (பிறப்.5) என்றும் விளக்கப்பட்டுள்ளன. அ முதலியவற்றை அங்காப்புயிர் என்றமையால் மற்றவை மூடுயிர் (close vowel) என்பது பெறப்படுகின்றது. 'அ' இன உயிர்களை அங்காப்புயிர் என்று பிரித்தமையாலும் 'இ' இன உயிர்களை முன்னுயிர் (Front vowels) என்றமையாலும், 'உ' இன உயிர்கள் பின்னயிர் (back vowel) என்பதும் 'அ' இன உயிர்கள் நடுவுயிர் (central vowel) என்பதும் 'உ' இன உயிர்கள் குவியுயிர் (Rounded vowel) என்பதும், மற்றவை குவியா உயிர் (Unrounded vowel) என்பதும் பெறப்படுகின்றன. இப்பகுப்பு இக்கால ஒலியியலாளர் குறிப்பிடும் முன் (Front) பின் (back), அங்காப்பு (open), குவி (rounded) என்ற பகுப்புடன் ஒத்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. 'அ' 'ஆ' என்ற உயிர்கள் அங்காந்த நிலையிலும் நா முன்னும் பின்னும் தாழ்ந்து நடவில் உயர்ந்த நிலையிலும் இதழ் கவியாது பரந்த நிலையிலும் உள்ளபோது பிறக்கின்றன. 'இ' 'ஈ' 'எ' 'ஏ' வாய் அங்காவாது கீழ்த்தாடை மேல் தாடையுடன் நெருங்கி இருக்கும்பொது நாவினது முன் விளிம்பு கீழ் முன் பல்லின் ஈற்றைத் தொட்ட நிலையில் ('அண் பல்'

குறிப்பு

முதல் நா விளிம்பற) அமைந்தும் இதழ் விரிந்த நிலையில் இருக்கும்போது பிறக்கின்றன. ‘உ’ ‘ஊ’ ‘ஒ’ ‘ஓ’ ஆகிய நான்கும் வாய் பெரிதும் மூடிச் சிறிதே திறந்த நிலையில் அமைந்தும் நாவின் பின்பகுதி உயர்ந்தும் இதழ்குள் குவிந்தும் உள்ள நிலையில் பிறக்கின்றன. ‘தத்தம் திரிபே சிறிய’ என்றதனால் இவ்வுயிர்கள் பிறக்கும் பொது ஒவ்வொர் உயிருக்கும் ஏற்ப முதல்நா படிப்படியாகத் தாழ்ந்து கொண்டே வருகின்றது. ‘ஓ’ ‘ஔ’ ஆகிய ஈருயிர் முறையே இதழ் குவியாதும் இதழ் குவிந்தும் பிறக்கின்றன. எனவேதான் தொல்காப்பியர் ‘ஐ’ யையும் ‘ஔ’ வையும் முறையே முன்னுயிர். பின்னுயிர் ஆகிய வரிசைகளுடன் சேர்த்துள்ளார்.

**உயிரொலி :**

**நா இதழ் நிலை**

| இதழ் | குவிவின்மை (Unrounded) | | | | குவிவு (Rounded) | |
|---|---|---|---|---|---|---|
| நா | நுனி (முன்) | | இடை (இடை) | | முதல் (பின்) | |
| மாத்திரை | குறில் | நெடில் | குறில் | நெடில் | குறில் | நெடில் |
| அங்காப்பு இன்மை | இ<br>எ | ஈ<br>ஏ<br>ஐ | | | உ<br>ஒ | ஊ<br>ஓ<br>ஔ |
| அங்காப்பு | | | அ | ஆ | | |

**கடை நா (Back of the tongue) ஒலிப்பானாக அமைதல் :**

கடை நா கடையண்ண ஒலி (Dorso velar) : கடைந கடையண்ணத்துடன் பொருந்தும் போது கடையண்ண வெடிப்பொலியான ககர மெய்யும் அதற்கு இணையான மூக்கொலியான ஙகர மெய்யும் பிறக்கின்றன. இதனையே தொல்காப்பியர்,

"ககார ஙகாரம் முதல்நா அண்ணம்" - பிறப்.7

என்று கூறிச் செல்கிறார்.

குறிப்பு

**இடை நா (centre of the tongue) ஒலிப்பானாக அமைதல் :**

இடை நாவானது அண்ண உச்சிக்கு அருகிலுள்ள (dome) இடையண்ணத்தோடு பொருந்தவதால் இடையைண்ண ஒலிகள் பிறக்கின்றன. இடையண்ணத் தடையொலியான (Palata plosive) 'ச'வும் இடையண்ண மூக்கொலியான (Palatal nasal) 'ஞ'வும் பிறக்கின்றன. தொல்காப்பியம் சகர ஞகரப் பிறப்புப் பற்றிக் கூறுவதற்கும் இன்ற அவை ஒலிக்கும் முறைக்கும் சிறிது வேறுபாடு உண்டு.

"சகார ஞகாரம் இடைநா அண்ணம்" - பிறப்.8

எனக் கூறிச் செல்கிறார் தொல்காப்பியர்.

**நுனிநா ஒலிப்பானாக அமைதல் :**

'நுனிநா' என்று தொல்காப்பியர் கூறும் ஒலிப்பான் மிகுந்த ஆய்வுக்குரியது. நாவின் நுனி பலவாறு இயங்கம் வகையில் அமைந்துள்ளது. எனவே நாநுனி அண்ணத்தைத் தொடுவதால் பிறக்கும் ஒலிகள் பலவாகும். அண்ணத்தைத் தொடும் இடம் வெவ்வேறாதற்கு இணங்க வெவ்வேறு ஒலிகள் பிறக்கும். பல்லின் வேருக்கப்பால் மேலிடத்தில் ஈறு பிதுக்கமாய்ப் புறக் குவிவாக வரும் இடம் உண்டு. வல்லண்ணம் உட்குழிவாக இருப்பது நீங்கி இப்படிப் புறக்குவிவாக அமையும் இடத்தை நாநுனி தொடப் பிறக்கும் ஒலிகள் அண்பல் ஒலிகள் - நுனிநா - நுனியண்ண ஒலி (Alveolar) ஆகும். நுனிநா அண்ணத்திற்குத் தொல்காப்பியர் அண்பல் தடையொலி (alveolar plosive), உரசொலி (Fricative), மருங்கொலி (Lateral) என்ற மூன்றினைக் கூறியுள்ளார்.

*Self-Instructional Material*

குறிப்பு

**அண்பல் ஒலி (நுனிநா – நுனியண்ண ஒலி) :**

நாவானது அண்ணத்தைத் தொடுவதால் ஒலியன் இயல்பு மாறுபடுகிறது. தமிழில் டகரத்தின் தொடுமிடம் வல்லண்ணத்தின் உயரத்தே செல்கின்றது. நாவின் நுனியாகவும் மாறுகின்றது.

"டகார ணகாரம் நுனிநா அண்ணம்" - பிறப்.9

எனக் கூறிச் செல்கிறது தொல்காப்பியம். டகர ணகரங்கள் நுனிநா (apicals) ஒலிகளாகும். இவை வடமொழி மெல்லெழுத்தாம் மூர்த்தாட்சரங்களின் வழக்குத் தமிழில் பரவியதால் வேறுபட்டன. அதனால்தான் 'அணரி' என்ற சொல்லைத் தொல்காப்பியர் பயன்படுத்தவில்லை. ஆதலின் இவை நுனிநா ஒலிகள் அல்ல. இன்று இந்திய மொழிகள் அனைத்திலும் டகரம் வளைநா ஒலியாக (Retroflex) ஒலிக்கின்றது.

தொல்காப்பியர் டகரத்திற்கும் றகரத்திற்கும் ஒலிப்பு முறையில் சிறுவெறுபாட்டைச் சுட்டிக் காட்டுகிறார்.

"நுனிநா அணரி அண்ணம் ஒற்ற
ற.்.கான் ன.்.கான் ஆயிரண்டும் பிறக்கும்" - பிறப். 12

**உரசொலிகள் (Fricatives) :**

நுனிநா அண்ணத்தால் பிறக்கும் இரண்டாவது வகை ஒலிகள் அண்பல் உரசொலியும் (Alveolar, Fricative), நுனிநா உரசொலியும் (Apical fricative) ஆகும். அவை முறையே ரகரமும் ழகரமும் ஆகும்.

"நுனிநா அணரி அண்ணம் வருட

ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்" - பிறப். 13

குறிப்பு

என்கிறார் தொல்காப்பியர். நுனிநா அண்ணம் ஒற்ற றகர னகரம் பிறக்கும் என்றார். 'வருட' 'ஒற்ற' என்ற சொற்களைப் பயன்படுத்தித் தொல்காப்பியர் சில ஒலிப்பு முறைகளை விளக்குகின்றார். வருட என்ற சொல்லால் ரகர ஒலி அடியொலி (Flap) என்றும் உரசொலி என்றும் உணர்த்துகிறார். ரகர றகரம் பிறக்கும் இடத்திலேயே ழகரமும் பிறக்கும். றகரம் ஒற்றப் பிறக்க, ரகரம் வருடப் பிறந்த உரசொலி ஆகும். ரகரம் அண்ணத்தின் முன்னிட ஒலியாகவும் ழகரம் அண்ணத்தின் பின்னிட ஒலியாகவும் பிறக்கும்.

**மருங்கொலி (Lateral) :**

நுனிநா அண்ணத்தால் பிறக்கும் மூன்றாவது வகை ஒலிகள் லகரமும் ளகரமும் ஆகும்.

"நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகாரம் ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்" - பிறப். 14

லகரம் மேல் அண்ணத்தின் இடையில் பல்லையொட்டித் தடையெழுவதால் பிறக்கின்றது. இவ்வொலி பிறக்கும்போது நாக்கின் ஓரம் விரிந்து அருகேயுள்ள பற்களில் ஏறி வீங்கி ஒற்றி நிற்கும்.

**ஈரிதழ் ஒலி (Bilabial) :**

பகர மெய்யும் மகர மெய்யும் ஈரிதழ் ஒலிகளாகும்.

"இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்" - பிறப்.15

மேல் உதடும் கீழ் உதடும் தம்மில் பொருந்தப் பகரமும் மகரமும் பிறக்கும்.

**பல்லிதழொலி (Labio-dental) :**

குறிப்பு

மேற்பல்லும் கீழ் உதடும் கூட வகரம் பிறக்கும்.

"பல்இதழ் இயைய வகாரம் பிறக்கும்" - பிறப். 16

**த, ந :**

நுனிநாப் பல்லொலிகளான தகர மெய்யும் நகர மெய்யும் 'பல்லெயிற்றொலி' (Gingival)-களாகும். 'பல் முதல் மருங்கின்' 'நாநுனி பரந்து ஒற்ற' அவை பிறக்கும் என்கிறார் தொல்காப்பியர்.

"அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம் இனிது பிறக்கும் தகார நகாரம்" - பிறப்.17

இதனையே மிகச் சுருக்கமாக நன்னூலார்,

"அண்பல் அடிநா முடியுறத் தந வரும்" - நன். 80

என்கிறார்.

**யகரம் :**

"அண்ணம் சேர்ந்த மிடற்றெழ வளியிசை
கண்ணற் றடைய யகாரம் பிறக்கும்" - பிறப். 17

என்பது தொல்காப்பியம். 'மிடற்றெழ வளியிசை' என்பதால் ஒலிப்புடை ஒலியாகும். 'அண்ணம் சேர்ந்த' என்பதனால் இதனை இடையண்ண ஒலி எனலாம். எனினும் தொல்காப்பியர் யகரத்தைப் பற்றிக் கூறுவது விளக்கமுடையதாக இல்லை.

குறிப்பு

## தொல்காப்பியர் கூறும் மூன்று சிறப்பொலிகள்

**சார்பு எழுத்துக்கள் :**

தொல்காப்பியர் கூறும் குற்றியலுகரம், குற்றிலிகரம், ஆய்தம் என்ற சார்பெழுத்துக்கள் தத்தமக்கு உரிய சார்பாக மெய்கள் பிறப்பிடத்தில் பிறக்கும். இவை சார்ந்து வரும் மரபினை உடையன.

"அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன" - நூன்மரபு. 2

"சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்ப இலவெனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பில் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியில் தம்மியல்பு இயலும்" - பிறப். 19

எ.கா. :

பாக்கு + கடிது > பாக்குக்கடிது

முன்னிலையில் உருபேற்கும் கட்டு வடிவமான 'நிம்' என்பது தொல்காப்பியர் காலத்தில் 'நும்' என்றாயிற்று. பல்லின மூக்கொலியான நகரத்தைத் தொடர்ந்து மகரம் வருகின்றது. இந்நகரத்தில் உகரம் விடுநிலை ஒலியாகி நகரத்தோடு இணைந்தே உள்ளது. இதில் நகரம் விடுநிலை ஒலியாகியுள்ளது. 'நுந்தை' என்ற சொல்லின் உகரம் விடுநிலை ஒலி ஆகும். அது முற்றியலுகரமாகவும் ஒலிக்கும். ஆனால் பொருள் வேறுபாடில்லை.

மெய்யொலி ஒலியெழுப்பி

| | இயங்குறுப்பு | முதல் | நா இடை | நுனி | | கீழிதழ் | |
|---|---|---|---|---|---|---|---|
| | இயங்கா உறுப்பு | முதலண்ணம் | இடையண்ணம் | அண்ணம் | அண்ணம் நண்ணிய பல் | மேலிதழ் | |
| முயற்சி | வல்லெழுத்து | க் | ச் | ட் ற் | த் | | ப் |
| முயற்சி | மெல்லெழுத்து | ங் | ஞ் | ண்ன் | ந் | | ம் |
| இடையெழுத்து | அடையொலி | | ய் | | | வ. | |
| இடையெழுத்து | வருடொலி | | | ழ் | | | |
| | | | | ர் | | | |
| இடையெழுத்து | மருங்கொலி | | | ள் | | | |
| | | | | ல் | | | |

குறிப்பு

**குற்றியலிகரம் :**

இலக்கண நூலார் குற்றியலுகரத்தின் திபு குற்றியலிகரம் என்பர். குற்றியலிகரதிலுள்ள இகரம் ஒருவகை விடுநிலை (Release) ஒலியாகும். மொழியியலார் குற்றியலுகரத்தின் இடமாறுபாடு குற்றியலிகரம் என்பர். குற்றியலுகரத்தை ஈறாகவுடைய சொல்லை யகர மொழி முதல் சொல் தொடர்ந்தால் உகரம் இகரமாகும்.

பாக்கு + யாது < பாக்கியாது

குற்றியலிகரம் சொல்லிலும் காண்படுகிறது. ஒரு சொல்லில் மகரத்தைத் தொடர்ந்து ‘யா’வரின் மகரம் இகரத்தைப் பெறும்.

கேண்ம் + யா > கேண்மியா

சென்ம் + யா > சென்மியா

**ஆய்தம் :**

குறிப்பு

தொல்காப்பியர் கூறும் மூன்றாவது சார்பெழுத்தாகிய ஆய்தத்தினைக் காண்போம், உயிர் எழுத்துக்களின் வரிசைக்கும் மெய் எழுத்துக்களின் வரிசைக்குமிடையே உள்ளது ஆய்தம். சில இடத்து உயிர் போலவும் சில இடத்து மெய் போலவும் அலகு பெறுகின்றது. இதனைத் தொல்காப்பியர் தனி ஒலியனாகக் கருதவில்லை. வ், ல், ள் என்று முடியும் ஓரசைச் சொற்களுக்கு முன்னே தடையொலி வந்தால் அது இரட்டிக்கும்.

(I) அவ் + கடிய > அக்கடிய

(II) கல் + தீது > கற்றீது

(III) முள் + தீது > முட்டீது

இரண்டையும், மூன்றையும் ஒரே விதியாகவும் காட்டலாம்.

(C) V ல், ள் + த் > CV ற்ற, ட்ட

சுட்டு முதலாகிய அவ், இவ், உவ் ஆகியவற்றின் இறுதியில் உள்ள வகரம் வல்லொற்றின் முன்னர் ஆய்தமாகும். தனிக்குறிலை அடுத்து வரும் வகரமும் ளகரமும் ககரத்தின் முன் ஆய்தமாகும். இவ்விரட்டைத் தடையொலி முதல் குறுகிய திறப்பசைக்குப் பின்னே வரும். ஆனால். அவ்விரட்டைத் தடையொலிக்குப் பின்னே வரும். ஆனால், அவ்விரட்டைத் தடையொலிக்குப் பதிலாக வரும் ஒலியைப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் நெடில் உரசொலியாகக் கருதுகிறார். மேலே கூறிய இரட்டைத் தடையொலி இரு மெய்களில் கூட்டு என்பது தொல்காப்பியர் கருத்தாகும். எல்லா இரட்டைத் தடையொலிகளும் புணர்ச்சி காரணமாகத் தோன்றியவையே என்றும் ஒன்றோடொன்று இணைந்து ஒன்றாதலில் குறைவு ஏற்படுவதைத் தவிர்க்க இப்போக்கு என்று ப. கிருஷ்மூர்த்தி குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் 'த.˙.கு' என்ற சொல்லை மேற்காட்டியுள்ளார். அல்கு

*Self-Instructional Material*

என்றதன் பொருளே 'அ.ஃ.கு' என்பதாகும். அ.ஃ.கு, அக்கு இரண்டும் ஒன்றேயாகும்.

குறிப்பு

அல்கு > ல் (க் > ற்க) > அக்கு என இதனை விளக்கலாம்

முள் + தீது > முட்டீது

முட்டீது > மு.ஃ.டீது

இங்கே இரட்டைத் தடையொலியோடு நெடில் உரசொலி அதற்கு மாறாக வருகின்றது. இது பயனிலையால் முடியும் தொடர் அடைத்தத் தொடரில் இவ்வாறு இருவகையாக அமைதல் இல்லை.

**தொல்காப்பியத் தமிழின் ஒலியன் பட்டியல் : (Phonemic Chart)**

**உயிர் ஒலியன்கள் :**

இ ஈ உ ஊ

எ ஏ ஒ ஓ

அ ஆ

**மெய் ஒலியன்கள் :**

க் ச் ட் ற் த் ப்

ஞ் ண் ன் ந் ம்

ய் ர் ல் வ்

ழ் ன்

தொல்காப்பயிம் ஒலியன்களின் வருகையைச் (distribution of Phonemes) சிறப்பாக உரைக்கின்றது. மொழி முதல், இடை, இறுதி எழுத்துக்கள் இவை என்றும் எவற்றொடு மயங்கும் என்றும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இவற்றின் மூலம் தமிழின் ஒலியன் இயல்பை (Phonemic structure) நன்கு தெரிந்து கொள்ளலாம்.

**உயிர் ஒலியன்களுக்கான வேற்றுநிலை வழக்கு :**

**குறிப்பு**

| | |
|---|---|
| இரு | தொ.எ.75.1 |
| எரு | தொ.எ.261.1 |
| அரு | தொ.பொ.71.3 |
| ஒரு | தொ.எ.43.1 |
| பிரிந்து | தொ.எ.133.1 |
| பெரிது | தொ.சொ.337.1 |
| பரிதல் | தொ.பொ.266.2 |
| புரிந்த | தொ.பொ.307.2 |

கீழ்க்காணும் மெய்யொலியன்களில் மொழி முதலில் வேற்றுமைநிலை வழக்குகள் :

| | |
|---|---|
| பாய்தல் | தொ.சொ.355.1 |
| தாயர் | தொ.பொ.40.2 |
| சாயல் | தொ.பொ.145.11 |
| காய்தல் | தொ.பொ.145.40 |
| மாயம் | தொ.பொ.112.14 |
| நாய் | தொ.பொ.555.2 |
| ஞாயிறு | தொ.பொ.501.1 |
| வாயில் | தொ.பொ.109.10 |
| பால் | தொ.பொ.197.1 |
| சால் | தொ.பொ.63.12 |
| கால் | தொ.பொ.77.5 |
| பேர் | தொ.பொ.99.11 |
| தேர் | தொ.பொ.616.2 |
| சேர் | தொ.பொ.357.1 |
| தண் | தொ.பொ.314.3 |
| கண் | தொ.பொ.266.5 |
| வா | தொ.பொ.112.10 |

**உறழ்ச்சி (Free variation) :**

குறிப்பு

| | | |
|---|---|---|
| /உ ஊ/ | வரும் | தொ.எ.71.1 |
| | வரூம் | தொ.எ.482.8 |
| /ப வ/ | அளபு | தொ.எ.11.1 |
| | அளவு | தொ.எ.170.1 |
| | உருபு | தொ.எ.141.2 |
| | உருவு | தொ.எ.17.3 |
| /ம ன/ | இடம் | தொ.சொ.42.2 |
| | இடன் | தொ.எ.37.1 |
| | மரம் | தொ.எ.337.1 |
| | மரன் | தொ.பொ.572.1 |

**மொழி முதலாதல் :**

சில மெய்யெழுத்துக்கள் சில உயிர்களோடு மட்டும்தான் வரும் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. யகரம் ஆவோடு தான் மொழி முதலாகும். இடையண்ண ஒலிகளான ய, ஞ, ச என்பன அகரத்துடன் மொழி முதலாகாது. சில சூழ்நிலைகளில் அகர எகரங்கள் மயங்குகின்றன. வகர மெய் இதழ் ஒலிகள் உ, ஊ, ஒ ஓ என்னும் நான்குடன் சேர்ந்து மொழி முதலில் வாராது. ப, த, க, ச, ம, ந, ஞ, வ, ய முதலியவை மொழி முதலில் வரும்.

குறிப்பு

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| ங் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |
| ச் | * | * | * | * | * | * | * | * | * | | | |
| ஞ் | * | | | | | * | | * | | | | |
| ட் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |
| ண் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |
| த் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| ந் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| ப் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| ம் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| ய் | * | | | | | | | | | | | |
| ர் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |
| ல் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |
| வ் | * | * | * | * | * | * | * | | | | | |
| ழ் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |
| ள் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |
| ற் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |
| ன் | மொழி | முதலாகாது | | | | | | | | | | |

**மொழி இறுதியாதல் :**

ஔ நீங்களாக ஏனைய பதினொரு உயிர் எழுத்துக்களும் மொழிக்கு இறுதியாக வரும். ககர வகரங்களோடு இயைந்து ஔகாரமும் மொழிக்கு இறுதியில் வரும். எகரம் எந்த மெய்யுடனும் ஈறாகாது. நகரத்துடன் மட்டும் ஒகரம் ஈறாகும். ஏ, ஓ என்னும் உயிர்களுடன் ஞகரம் ஈறாவதில்லை. உகர ஊகாரங்கள் நகர வகரங்களுடன் ஈறாகாது. உச்சகாரம் இரு மொழியில்தான் வழங்கின. (எ.கா.) உசு, முசு, உப்பகாரம் ஒரு சொல்லின் வழங்கியது. (எ.கா.) தபு, வல்லொலிகளில் ங தவிர ஏனைய ஐந்தும் ஈறாகும் இடையெழுத்துக்கள் ஆறுமே ஈறாகும்.

குறிப்பு

மெய்யெழுத்துக்களில் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொன்று தான் ஈறாவன. நகரம் இரு சொற்களில் ஈறாகும். (எ.கா.) பொருந், வெரிந், ஙகரம் ‘உரிஞ்’ என்ற சொல்லில்தான் ஈறாகும். வகர மெய் நான்கு சொற்களில் ஈறாகும். (எ.கா.) அவ், இவ், உவ், தெவ், மகரவீற்றுச் சொற்களோடு மயங்காத னகர ஈற்றுச் சொற்கள் ஒன்பதாகும். எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் முதலியன. சார்பெழுத்துக்களில் குற்றியலுகரம் ஈறாகும். ஏனைய இரண்டும் மொழிக்கு இடையில்தான் தோன்றும் மொழி மரபில்,

“நெட்டெழுத் திம்பரும்தொடர் மொழி ஈற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே” -

தொல்.மொ.ம.3

என்பதால் அது ஈறாகும் என உரைக்கின்றார் தொல்காப்பியர்.

**உயிர் மயக்கம் (Vowel clusters) :**

இது தொல்காப்பியர் காலத்திற்குமுன் பெரு வழக்காக இருந்தது. அவர் காலத்தும் பின்னரும் குறையலாயிற்று. மொழியிடையில் மெய்கள் மயங்கி வருவதில் தொல்காப்பியர் காலத்துக்கும் நன்னூலார் காலத்திற்கும் அதிக வேறுபாடில்லை. உடனிலை மெய்ம் மயக்கம் (Geminated consonant cluster), வேற்றுநிலை மெய்ம் மயக்கம் (Non-identical consonant cluster) பற்றியும் தொல்காப்பியர் விரிவாக விளக்கியுள்ளார். மூன்றும் மெய்ம் மயக்கங்கள் (Three consoant cluster) $C_1$ $C_2$ ${}_2C$, $C_1$ $C_2$ $C_3$ என்ற அமைப்புடன் காணப்படுகின்றன. முதல் மெய் ய, ர, ழ வாக இருக்கும்.

**மெய்ம் மயக்கங்கள் (Consonant cluters) :**

குறிப்பு

இரண்டு மெய்ம் மயக்கங்கள் (Two consonant clusters)

இரட்டித்தல் (Geminated)

$C_1$ $C_1$ (ர, ழ தவிர)

| | | |
|---|---|---|
| ப்ப் | படுப்பின் | தொ.பொ.113.1 |
| த்த் | எருத்து | தொ.சொ.402.2 |
| ற்ற் | இயற்றல் | தொ.சொ.400.3 |
| ட்ட | ஊட்டல் | தொ.பொ.11.120 |
| ச்ச் | அச்சம் | தொ.சொ.75.5 |
| க்க் | ஆக்கல் | தொ.சொ.72.11 |

இரண்டு மெய்ம் மயக்கங்கள் (Two Consonant Clusters)

| | | |
|---|---|---|
| ம்க் | எம்கய்யர் | தொ.பொ.145.30 |
| ந்த் | எந்து | தொ.பொ.145.30 |
| ன்ப் | என்பு | தொ.பொ.112.27 |
| ன்ற் | என்றல் | தொ.பொ.242.1 |
| ன்ம் | என்மனார் | தொ.எ.6.2 |
| ண்ட் | கண்டு | தொ.எ.406.2 |
| ண்ம் | எண்மை | தொ.சொ.261.1 |
| ங்ச் | அஞ்ச | தொ.பொ.144.4 |
| வ்க் | அவ்கி | தொ.பொ.181.1 |
| ய்ப் | செய்பு | தொ.சொ.223.0 |
| ய்த் | செய்த | தொ.எ.211.5 |
| ய்ச் | வைசிகன் | தொ.பொ.112.57 |
| ய்க் | செய்கை | தொ.பொ.11.57 |
| ய்ம் | சேய்மை | தொ.சொ.149.3 |
| ய்வ் | காய்வு | தொ.சொ.149.8 |
| ர்ப் | உணர்ப | தொ.பொ.205.2 |
| ர்த் | உணர்தல் | தொ.பொ.125.2 |

குறிப்பு

| | | |
|---|---|---|
| ர்க் | அவர்கட்கு | தொ.பொ.678.2 |
| ர்ம் | கூர்மை | தொ.சொ.337.2 |
| ர்வ் | ஆர்வம் | தொ.பொ.144.10 |
| ழ்ப் | உறழ்பு | தொ.எ.152.3 |
| ழ்த் | சூழ்தல் | தொ.பொ.124.1 |
| ழ்வ் | கதழ்வு | தொ.பொ.309.1 |
| ல்ப் | இயல்பு | தொ.எ.101.1 |
| ல்க் | அல்குல் | தொ.பொ.259.1 |
| ல்வ் | கல்வி | தொ.பொ.186.1 |
| ள்ப் | கொள்ப | தொ.சொ.150.3 |
| ள்க் | கொள்கை | தொ.பொ.149.12 |
| ள்வ் | கொள்வது | தொ.சொ.64.1 |

**மூன்று மெய்ம் மயக்கங்கள் (Three Consonant Clusters) :**

$C_1$ $C_2$ $C_3$

$C_1$ $C_2$ $C_3$

முதல் மெய் ய, ர, ழ வாக இருக்கும்.

| | | |
|---|---|---|
| ய்ப்ப் | காய்ப்ப | தொ.பொ.282.8 |
| ய்த்த் | காய்த்த | தொ.பொ.287.1 |
| ய்ச்ச் | இறைச்சி | தொ.பொ.211.3 |
| ய்ம்ம் | செய்ம்மன | தொ.எ.168.3 |
| ய்ஞ்ஞ் | அய்ஞ்|று | தொ.பொ.406.2 |
| ய்ம்ப | அய்ம்பது | தொ.பொ.464.2 |
| ய்ந்த் | அய்ந்து | தொ.எ.3.2 |
| ர்ப்ப் | கூர்ப்பு | தொ.சொ.308.1 |
| ர்த்த | சார்த்தி | தொ.பொ.99.14 |
| ர்ச்ச் | உணர்ச்சி | தொ.சொ.387.1 |
| ர்க்க் | படர்க்கை | தொ.சொ.28.7 |
| ர்ந்த் | சார்ந்து | தொ.எ.1.3 |

*Self-Instructional Material*

குறிப்பு

| | | |
|---|---|---|
| ழ்த்த் | வாழ்த்தல் | தொ.பொ.113.7 |
| ழ்க்க் | வாழ்க்கை | தொ.சொ.364.1 |
| ழ்ச்சி | சூழ்ச்சி | தொ.சொ.222.2 |
| ழ்ந்த் | கலழ்ந்தோன் | தொ.பொ.42.6 |

தொல்காப்பியத் தமிழில் கீழ்க்கண்ட அசையமைப்புக்கள் (Syllabic pattern) காணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| V | - | அ/ஞர் | தொ.பொ.44.4 |
| VV | - | ஆ/கா | தொ.எ.49.2 |
| CV | - | அம்/க/தம் | தொ.பொ.429.1 |
| CV: | - | ஆ/கா | தொ.எ.4.99 |
| CVC | - | அ/ஞர் | தொ.பொ.43.4 |
| CV:C | - | பாட்/டு | தொ.பொ.343.1 |
| CCVC | - | அ/கய்ப்-பு | தொ.சொ.308.1 |
| VC | - | அம்/கதம் | தொ.பொ.429.1 |
| V:C | - | ஆக்/கம் | தொ.பொ.3.2 |
| V:CC | - | ஆய்ந்/த | தொ.பொ.144.46 |

சொல்லின்கண் காணப்படும் பல்வேறு சொற்கள் எவ்வெவ்வாறு இணைக்கப்படுகின்றன என்பது பற்றியும் அவற்றின் வரிசை முறை பற்றியும் விரிவாகப் பேசுவதே சொல்லியல் அல்லது உருபனியல் (Morphology) எனப்படும். சொற்களின் உள்ளமைப்பை ஆராய்வதே உருபனியலாகும். தமிழ் இலாக்கண நூலார் தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பகுத்தனர். இதனை தொல்காப்பியர்,

"சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே" - தொல்.சொ.பெ.இ.4

"இடைச் சொற் கிளவியம் உரிச்சொற் கிளவியும்

குறிப்பு

அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப" - தொல்.சொ.பெ.இ.5


என்கிறார். பெயர், வினை ஆகிய இருவகைச் சொற்களுக்கே சிறப்பிடம் தந்துள்ளார். அவற்றின் சிறப்பு நோக்கியே 'இரண்டென்ப' என எண் குறித்துச் சுட்டியுள்ளார். இடை, உரி ஆகிய சொற்களுக்கு இரண்டாம் நிலையினையே கொடுத்துள்ளார். நன்னூலாரும் 'பெயர் வினை என யிரண்டாகு மிடை யுரியடுத்து' (நன்.270) என்று கூறுவது இதனை வலியுறுத்துகின்றது. தொல்காப்பியர் பெயர் வினைகளுக்கு அமைப்பின் அடிப்படையிலேயே இலக்கணம் கூறியுள்ளார்.

"பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டு மொன்றலங் கடையே" - தொல்.சொ.70

என்று பெயரின் இலக்கணத்தையும்,

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்" - தொல்.சொ.168

என்று வினையின் இலக்கணத்தையும் கூறுகிறார்.



குறிப்பு

**மூவிடப்பெயர் (Personal Pronouns)**

| தன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|
| உருபேற்கத் | யான் (192) | யாம் (182, நாம் (188) |
| திரிந்த வடிவம் | என் (192) | எம், நம் (190) |
| **முன்னிலை** | | |
| | நீ (179) | நீயிர் (659), நீவிர் (628) |
| | நின் (179) | நும் (162) |
| **படர்க்கை** | | |
| | தான் (192) | தாம் (188) |
| | தன் (973) | தம் (1111) |

தம், நம், நும் சாரியையாகவும் பயன்படுத்தப்படுகின்றன(191). வலியுறுத்திக் கூறும்போது 'தான்' 'தாம்' பயன்படுத்தப்படுகின்றன.

**எண்ணுப் பெயர்கள் (Numerals) :**

இலக்கண நூலார் எண்ணப் பெயர்களைப் பெயர் வகைகளில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் எண்ணுப் பெயர்களைப் பெயர்களாகக் கொண்டு பெயரியலில் கூறியுள்ளார். எண்ணுப் பெயர்களுக்குப் பெயர் வடிவம், பெயரடை வடிவம் என இருவகை வடிவங்கள் உண்டு. பெயர் வடிவம் தனித்தியங்குவது (Free Forms) பெயரடை வடிவம் கட்டுருபனாக (bound morpheme) இயங்குவது.

**ஒன்று :** இதன் மாற்றுருபுகனாக (Allomorphs) ஓர், ஓர், ஒரு, ஒன்று ஆகிய வடிவங்கள் காணப்படுகின்றன.

'ஓர்' – உயிர் முதலான சொற்களின் முன் வருகின்றன.

ஓர் - அளவு – தொ.எ.3.3

ஓர் - எழுத்து – தொ.எ.5.1

ஓர் - இடத்து – தொ.பொ.861

ஓர் ஆயிரம் - தொ.எ.464

பதின் + ஓர் எழுத்து – தொ.சொ.10.2

'ஒரு' மெய்ம் முதல் சொற்களின் முன்னும், மெய்ம் முதலாகவுடைய விகுதிகளின் முன்னும் வருகின்றது.

ஒரு – பெயர் - தொ.எ.254.1

ஒரு – வினை – தொ.சொ.73.7

ஒரு – மொழி – தொ.எ.43.1

ஒரு – பான் - தொ.பொ.453.1

ஒரு – த்தி – தொ.சொ.177.2

ஒரு – மை – தொ.சொ.167.2

'ஒன்று' தனி வடிவமாகவும் வருகின்றது.

ஒன்று – தொ.பொ.75.1

பதின் - ஒன்று – தொ.எ.78.3

**இரண்டு** : இதன் மாற்றுருபுகள் இரு, இர், ஈர், இரண்டு.

'இரு' மெய்ம் முதல் சொற்களின் முன் வருகின்றன.

இரு – பெயர் - தொ.எ.272.1

இரு - மூன்று – தொ.எ.407.3

இரு – ப∴து – தொ.எ.104.2

'இர்' ஆயிரத்தின் முன் வருகின்றன.

இர் - ஆயிரம் - தொ.எ.464

குறிப்பு

'ஈர்' உயிர் முதற் சொற்களின் முன் வருகின்றன.

ஈர் - எண் - தொ.எ.439.1

'இரண்டு' தனி வடிவமாகவும் பிற இடத்திலும் வருகின்றன.

இரண்டு – தொ.எ.104.2

பன் - இரண்டு – பன்னிரண்டு – தொ.பொ.101.1

**மூன்று** : இதன் மாற்றுருபுகள் மு (அர), மூ, மூன்று.

'மு' மெய்ம் முதற் சொற்களின் முன் வருகின்றது.

மு – பது – முப்பது – தொ.எ.1

மு – பெயர் - முப்பெயர் - தொ.எ.192.2

'மூ' உயிர் முதல், அரையுயிர் வகர முதற் சொற்களுக்கு முன்னும் வருகின்றன.

மூ - எழுத்து - மூவெழுத்து – தொ.எ.23.2

மூ - உயிர் - மூவுயிர் - தொ.எ.64.2

'மூன்று' தனி வடிவமாகவும் பிற இடத்திலும் வருகின்றது.

மூன்று – தொ.சொ. 73.1

பதின் - மூன்று – தொ.பொ.65.13

**நான்கு** : இதன் மாற்றுருபுகள் நால், நான்கு

‘நால்’ பெயர்களுக்கு முன் வருகின்றது.

குறிப்பு

நால் - சொல் - நாற்சொல் - தொ.சொ.78.2

நால் - மொழி – நான்மொழி – தொ.எ.81.3

நால் - இரண்டு – தொ.பொ.78.2

‘நான்கு’ தனி வடிவமாகவும் பிற இடத்திலும் வருகின்றது.

நான்கு – தொ.172.3

அறு – நான்கு – தொ.எ.104.3

**ஐந்து** : இதன் மாற்றுருபுகள் ஐ, ஐந், ஐம், ஐந்து

‘ஐ’ உயிர் முதல் அரை உயிர் முதற்சொற்களுக்கு முன் வருகின்றது.

ஐ – வகை – தொ.பொ.357.1

‘ஐந்’ இன மெல்லின மெய் மற்றும் ஏனைய மெய்ம் முதல் சொற்களுக்கு முன்னும் வருகின்றது.

ஐந் - நூறு – தொ.எ.400

ஐந் - நாழி – தொ.எ.446

‘ஐம்’ மெய்ம் முதல் சொற்களுக்கு முன் வருகின்றது.

ஐம் - பது – தொ.பொ. 464.2

ஐம் - பால் - தொ.சொ.10.1

‘ஐந்து’ பிற இடங்களிலும் வருகின்றது.

ஐந்து – தொ.எ. 3.2

பதின் - ஐந்து – பதினைந்து – தொ.சொ.159.7

**ஆறு** : இதன் மாற்றுருபுகள் அறு, ஆறு

**குறிப்பு**

'அறு' மெய்ம் முதல் சொற்களுக்கு முன் வருகின்றது.

அறு - மூன்று – தொ.சொ.57.6

அறு – பொருள் - தொ.சொ.229.3

அறு – நாள் - தொ.185.1

அறு – ப.்.து – தொ.எ.437

'ஆறு' பிற இடங்களில் வருகின்றது.

ஆறு – தொ.சொ.22.1

**ஏழு** : இதன் மாற்றுருபுகள் எழு, ஏழ்

'எழு' மற்ற பெயர்களுக்குமுன் வருகின்றது.

எழு – பது – தொ. பொ. 35.7.3

எழு – நிலம் - தொ.பொ.466.1

'ஏழ்' தனியாகவும் மற்ற இடங்களிலும் வருகின்றது.

ஏழ் - தொ.எ.4.2

பதின் - ஏழ் - தொ.பொ.357.2

**எட்டு** : இதன் மாற்றுருபுகள் எண், எட்டு

எண் - சீர் - தொ.சொ.400.2

எண் - வகை – தொ.பொ.623.1

எட்டு – தொ.பொ.283.3

**ஒன்பது** : இதன் மாற்றுருபுகள் ஒன்பதின், ஒன்பதிற்று, ஒன்பான், தொண்டு, ஒன்பது, ஒன்ப.்.து

குறிப்பு

ஒன்பதின் - துறைத்து – தொ.பொ.75.24
ஒன்பதிற்று – எழுத்து – தொ.எ.171.1
ஒன்பான் - தொ.எ.450.470

'தொண்டு' தனியாக வருகின்றது.

தொண்டு – தொ.பொ.496.3

'ஒன்பது' 'ஒன்ப.்.து' உறழ்ச்சியாக வருகின்றன.

ஒன்பது – தொ.எ.37
ஒன்பது – தொ.எ.482

ஒன்பது என்பதைக் கூட்டுச் சொல்லாகக் கொண்டு பது என்பது பத்தின் மாற்றுருபாகும். 'ஒன்' என்பது குண்டர்ட், கால்டுவெல் கருத்துப்படி 'ஒன்று' என்றும் பொருள் உடையது. கால்டுவெல் 'ஒன் பது' என்பதற்று 'ஒன்று' முந்திய பத்து அல்லது பத்திலிருந்து ஒன்று (குறைந்தது) என்று விளக்கம் தருகின்றார். ஒன்பதைக் குறிக்கும் 'தொண்டு' (தொ.பொ.406) என்ற சொல்லும் காணப்படுகின்றது. கால்டுவெல் ஒன்பதின் ஒன், தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகியவற்றின் 'தொள்' தொண்டு என்பதன் மாற்றுருபாகக் கருதுகின்றார்.

**பத்து** : இதன் மாற்றுருபுகள் (பது, ப.்.து, பன், பதின், பான், பத்து

'பது', 'ப.்.து' உறழ்ச்சியாக வருகின்றன.

இரு – பது
இரு ப.்.து – தொ.எ.104.1
மு – பது - முப்பது

*Self-Instructional Material*

குறிப்பு

முப.்.து — முப்பது — தொ.எ.104.1

ஐம் - பது — தொ.பொ.464.2

அறு — பது — தொ.பொ.454

எழு — பது — தொ.பொ.352.3

பதின் - மூன்று — தொ.பொ.65.13

பன் - இரண்டு — பன்னிரண்டு — தொ.பொ.101.1

ஒரு — பான்

பத்து — தொ.சொ.216.6

**நூறு** : மாற்றுருபுகள் நூற்று, நூறு

அறு+நூற்று+இரு+பத்து+ஐந்து = அறுநூற்றிருபத்தைந்து — தொ.பொ.357.4

நூறு — தொ.எ.460.1

நூறு — ஆயிரம் - நூறாயிரம் - தொ.எ.471.1

'ஆம்பல்' (393) 'தாமரை' (3939), 'வெள்ளம்' (393) போன்றவைகள் தொல்காப்பியத்தில் பேரெண்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வேற்றுமை :**

"வேற்றுமை தாமே ஏழென மொழி" (தொ.சொ.62) என்று கூறுகிற தொல்காப்பியர் அடுத்த நூற்பாவிலேயே,

"விளி கொள் வதன்கண் விளியொ டெட்டே" (தொ.சொ.63)

என்று விளியுடன் வேற்றுமை எட்டு என்கிறார். வேற்றுமைகள் உருபாலும் வடிவத்தாலும் பெயர் பெற்றிருந்தன. எழுவாய், விளி வேற்றுமைகள் வடிவத்தால் பெயர் பெற்றவை. வேற்றுமைகள் எட்டு என வகுக்கப்பட்டது வடமொழியைப் பின்பற்றியது என கால்டுவெல் கருதுகிறார். முதல் வேற்றுமை, இரண்டாம் வெற்றுமை என வழங்குவதெல்லாம் வடமொழியைப் பின்பற்றியது எனக் கருதுகிறார்.

"அவைதாம்

பெயர் ஐ ஒடு கு

இன் அது கண் விளி யென்னும் ஈற்ற" - தொல்.சொ.64

என்று கூறியும்,

“கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப” -

தொ.பொ.69

குறிப்பு

என்ற நூற்பாவில் வெற்றுமையும் அதன் உருபும் பெயரின் ஈற்றின் கண்ணேதான் அமைகின்றன எனக் குறிப்பிடுகிறார்.

**முதல் வேற்றுமை :**

தொல்காப்பியர்,

“எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே” -

தொ.சொ.65

எனக் கூறுவதால் முதல் வேற்றுமைப் பெயர் என்றும் எழுவாய் என்றும் பெயரால் குறிப்பிட்டுள்ளார். எழுவாய் வேற்றுமை என்றதனால் முதல் வேற்றமை எழுவாயாகச் செயலாற்றுவது மட்டுமின்றி அவ்வேற்றுமை ஏற்கும் அறுவகைப் பனிலைகளையும் கூறியுள்ளது. (தொ.சொ.66)

**இரண்டாம் வேற்றுமை :**

இரண்டாம் வேற்றுமையின் உருபு ‘ஐ’ஆகும். இரண்டாம் வேற்றுமையின் பொதுத் தன்மையை ‘எவ்வழிவரினும் வினையே, வினைக்குறிப்பு அவ்விரு முதலில் தோன்றும்’ (55) என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உரையாசிரியர்கள் இவ்வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என்பர்.

**மூன்றாம் வேற்றுமை :**

மூன்றாம் வேற்றுமையின் உருபாக ‘ஒடு’ என்றும், அது வினை முதல், கருவி என்ற அடிப்படையில் தோன்றும் என்றும் கூறுகிறார். தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியலில் ‘ஆன்’ என்னும் உருபையும் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் ‘மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய

குறிப்பு

ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி (576) என்று வேற்றுமை மயங்கியலில் குறிப்பதாலும் மூன்றாம் வேற்றுமை ஏதுப் பொருளிலும் வரும் என்பதனை அறியமுடிகின்றது. மூன்றாம் வேற்றுமை உருபுகளாக நன்னூலார் ஆன், ஆல், ஒடு, ஓடு என்ற நான்கினையும் கூறுகிறார். இன்று 'ஒடு'வற்குப் பதில் 'உடன்' என்ற சொல்லுருபு வழங்கப்படுகிறது.

**நான்காம் வேற்றுமை :**

நான்காம் வேற்றமை உருபு 'கு' என்றும் அது எப்பொருளாயினும் கொள்ளும் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். 'க்கு' இவ்வேற்றுமைக்கு மாற்றுருபாகும். இவ்வேற்றுமை நோக்கு, கொடை, எல்லை, முறை ஆகிய பொருள்களில் வருகின்றன. இன்று 'ஆக' 'பொருட்டு' என்ற சொல்லுருபுகள் வழங்கப்படுகின்றன.

**ஐந்தாம் வேற்றுமை :**

ஐந்தாம் வேற்றுமையின் உருபு 'இன்'. 'இதனின் இற்று இது' (561) என்ற வாய்பாட்டில் வரும். ஆனால், தொல்காப்பியர் ஒப்புப் பொருள், நீங்கற் பொருள், அச்ச பொருள் ஆகியனவும் வரும் என்று கூறியுள்ளார். ஒப்புப் பொருளுக்கு இருபத்தி மூன்று சொற்களும் ஏனையவற்றிற்கு நான்கு சொற்களும் குறிப்பிட்டுள்ளார். இன்று 'இருந்து' 'நின்று என்ற சொல்லுருபுகளை 'இல்' உருபோடு வழங்குகின்றனர்.

**ஆறாம் வேற்றுமை :**

ஆறாம் வேற்றுமையின் உருபு 'அது'. அது 'தன்னிலும் பிறிதினும் இதனது இது' என்னும் கிழமையில் தோன்றும் என்று தொல்காப்பியர் கூறுகிறார். அது, ஆது, அ ஆகியவ்றை ஆறாம் வேற்றுமையின் உருபாக நன்னூலார் குறிப்பிடுகின்றார். 'அது' ஒரு, பன்மை வேறுபாடின்றி இரண்டிற்கும் வழங்கியது. தற்பொழுது 'உடைய' என்ற சொல்லுருபு மட்டும் வழங்கப்படுகிறது.

**ஏழாம் வேற்றுமை :**

குறிப்பு

தெல்காப்பியர் ஏழாம் வேற்றுமையின் உருபு ‘கண்’ என்றும் அது வினை செய்யிடம், நிலம், காலம் ஆகிய மூன்று பொருளில் வரும் என்றும் கூறுகிறார். மேலும் தனது நூற்பாவில் பத்தொன்பது பின்னிணைச் சொற்களைத் தொகுத்து ‘அதன்பால’ என்கிறார். இளம்பூரணர் இவற்றை வேற்றுமை உருபுகளாகக் கருதுகிறார். நன்னூலார் இவற்றை ‘இடப்பொருள் உருபே’ என்கிறார். நச்சினார்க்கினியர் வேற்றுமை உருபுகளாகக் கருத, தெய்வச்சிலையாரும் கல்லாடரும் பெயர்களாகவும் உருபகளாகவும் செயலாற்றுகிறன என்கின்றனர்.

**எட்டாம் வேற்றுமை :**

எட்டாம் வேற்றுமை ‘விளி’ வேற்றுமை. இதற்கு உருபு கிடையாது. பெயர்ச் சொல்லின் ஈடு கெட்டும் திரிந்தும் பிற ஒலிகள் ஈற்றில் இணைந்தும் விளிவேற்றுமை வடிவங்கள் அமைகின்றன. தொல்காப்பியர் விளி வேற்றுமைக்கு தனி இயலையே அமைத்துள்ளார்.

“காலந் தாமே மூன்றென மொழி” - தொ.சொ.199

என்று கூறி மூவகைக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இறப்பு, எதிர்வு என்ற காலங்களுக்குரிய வினைகள் தாம் தெளிவாக உள்ளன. வெளிப்படையாக காலம் காட்டும் தெரிநிலை வினை, சூழல் காரணமாகக் காலங்காட்டும் குறிப்பு வினை என இருவகைப்படும்.

**பெயரெச்சம் :**

செய்யும், செய்த என்னும் இருவகை வாய்பாட்டில் வரும் பெயரெச்ச கிளவிகள் (179), உயர்திணைப் பெயரோடும் அஃறிணைப் பெயரோடும் வரும் (797). பெயரெச்சக் கிளவிகள் யாவும் பெயர் கொண்டு முடிவன.

**வினையெச்சம் :**

*Self-Instructional Material*

தொல்காப்பியர் வினையெஞ்சு கிளவி (707, 713.721, 717, 940) எனக் குறிப்பதுடன் வினையெச்சம் (717, 723) என்றும் குறிப்பிடுகின்றார்.

குறிப்பு

"தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே" - நன்.வினை.23

என்று வினையெச்சத்தை நன்னூலார் வரையறைச் செய்கிறார்.

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி" - தொல்.713)

என வரும் இந்நூற்பாவிலுள்ள வாய்பபடுகளின் அமைப்பை உடைய எல்லாக் கிளவிகளும் வினையெஞ்சு கிளவிகளே என்பது தொல்காப்பியர் கோட்பாடு. மேலும் அவர் பின், மன், கால், கடை, வழி இடத்து ஆகிய சொற்களை சேர்ப்தபன் மூலம் உருவாக்கப் பெற்றுள்ளன. வான், பான், பாக்கு என்பவற்றை ஈறாகக் கொண்டு அமையும் வினை எச்சங்களைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்பன இறந்த காலத்தையும், செய என்பது நிகழ்காலத்தையும், செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்பன எதிர்காலத்தையும் உணர்த்தும் என நன்னூலார் வினையெச்ச்ங்களின் காலத்தினை காலத்தினை வரையறுத்துக் கூறியுள்ளார்.

**தொழிற்பெயர் :**

தொல்காப்பியர் பெயர், வினை ஆகியவற்றில் பெயரின் இலக்கணம் கூறும்போது,

"பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங்கடையே" - தொல்.சொ.70

*Self-Instructional Material*

எனக் கூறுகிறார். இதன் மூலம் பெயரில் காலந்தோறும் வகை உள்ளது எனக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். தொழில் பெயர்கள் தவிர ஏனைய பெயர்கள் காலம் காட்டாது.

குறிப்பு

**ஏவல் வினை :**

தொல்காப்பியர் ஏவல் வினையையும் முன்னிலை வினையையும் வேறுபடுத்தவில்லை(தொல்.சொ.223, 224). ஏவல் என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பினும் (தொ.எ.210, 224) ஏவல் வினைகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை. நன்னூலார் ஏவல் வினையை முன்னிலை வினையினின்றும் ஓரளவு வேறுபடுத்தி உள்ளார்(நன்.335, 337). ஏவல் முன்னிலையில் மட்டும் வழங்கும். ஏவலில் ஒருமை, பன்மை வேறுபாடும் உண்டு. பண்டைக்காலத்தில் செல், வா போன்ற சொற்களும் உண்ணுதி போன்ற சொற்களும் ஒருமையிலும் முன்னிலை அசையோடு உம், ம், விகுதி பெற்ற சொற்கள் பன்மையிலும் ஏவலாக வழங்கின.

**வியங்கோள் வினை :**

“வாழிய என்னும் செயவென் கிளவி
இறுதி அகரம் கெடுதலும் உரித்தே” - தொ.எ. 211)

தொல்காப்பியர் வியங்கோளினையும் ‘செய’ என்னும் சொல்லினையும் அகர இறுதியுடையதாகக் கூறினும் வியங்கோள் ககர இறுதியும் உடையது.

“முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
..........................................................................................
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய” - தொ.சொ.222

என்று கூறிய தொல்காப்பியர் பின்னர்,

“முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்

*Self-Instructional Material*

மன்னா தாகும் வியங்கோள் கிளவி" - தொ.சொ.226

குறிப்பு

வியங்கோள் கிளவி முன்னிலை, தன்மை ஆகிய இரு இடங்களிலும் 'மன்னாதாகும்' என்கிறார். திணை, பால், எண் காட்டும் வினைமுற்றுக்களினின்றும் வேறுபாடுடையது என்பதைக் குறிக்கத் தொல்காப்பியனார்,

"வியங்கோள் எண்ணுப் பெயர் திணைவிரவு வரையார்" - தொ.சொ.45

என்று கூறிச் செல்கிறார். மேலும்,

"ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவி" - தொ.210

என்று கூறுவதால், வியங்கோள் ஏவல் கண்ணிய வினையாகும். காலப்போக்கில் படர்க்கைக்கே உரிய வியங்கோள் வினை மூவிடங்களுக்கும் வழங்கியதை நன்னூலார் குறிப்பிடுகின்றார்.

"கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கு மென்ப" - நன்.338

தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய வாழிய, வாழி போன்ற வழக்குகள் காலப்போக்கில் வாழ்க என மாறி அமைந்திருக்கலாம். பழந்தமிழில் இய, இயர் விகுதிகளைப் பெற்ற வினை வடிவங்கள் வினையெச்சங்களாகவும் வியங்கோள் வினைமுற்றுக்களாகவும் பயன்படுத்தப்பட்டமை இதனை உறுதி செய்கிறது.

## பெயர்ப் பதிலி விகுதிகள் (Pronominal suffixes)

குறிப்பு

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை 1 : கு, டு, து, று | து, று, கும், அன், ஆன், என், ஏன், அல் | டும், தும், றும், அம், ஆம், எம், ஏம் |
| முன்னிலை 2 | இ, ஐ, ஆய் | இர், ஈர், மின் |
| படர்க்கை 3 | உயர்திணை | |
| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் |
| அன், ஆன் | அள், ஆள் | ப, மார் |

1. அவைதாம்

அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்
அந்நாற் கிளவியோடு ஆயெண் கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே” - தொல்.687

கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்கும் தன்மைச் சொல்லே” - தொ.688

2. அவற்றுள்

முன்னிலைக் கிளவி
இ ஐ ஆய் என வரூஉம்மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும் - தொ.708

“இர்ஈர் மின்என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்

சொல்லோ ரனைய என்மனார் புலவர்" - தொ.709

குறிப்பு

3. "அன், ஆன், அள், ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே" - தொ.690

| அஃறிணை | |
|---|---|
| ஒருமை | பன்மை |
| று, டு, து | அன, அ, ஆ, வ |

இக்கால மொழியியல் வல்லுநரும் வியக்கும் வண்ணம் பல இலக்கணக் கொள்கைகள் தொல்காப்பியத்தில் புதைந்து கிடக்கின்றன. தமிழ் மொழியின் வளர்ச்சி, மாற்றம் முதலியவை தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்படுகின்றன. எனவே, தமிழ் மொழி வரலாறு தொல்காப்பியத்திலிருந்தே தொடங்குகிறது.

## சங்ககாலத் தமிழ்

சங்க இலக்கியத்தில் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழி முதலில் வந்துள்ளன. மெய்யெழுத்துக்களுள் க, த, ந, ப, ம என்னும் ஐந்து மெய்யெழத்துக்களும் எல்லா உயிர் எழுத்துக்களோடும் இணைந்து மொழி முதலில் வரும் எனத் தொல்காப்பியர் கூறுகிறார். சங்க இலக்கியத்திலும் இவ்வைந்து மெய்யெழுத்துக்களோடு எல்லா உயிர்களும் இணைந்து மொழி முதல் வந்துள்ளன.

சகரம் அ, ஐ, ஔ என்னும் மூன்று நீங்கலாக ஒன்பது உயிர் எழுத்துக்களோடு இணைந்து மொழி முதலில் வரும் (தொ.எ.62). சங்க இலக்கியத்தில் ஒன்பது உயிர்களுடன் மட்டுமின்றி அகரத்தோடும் ஐகாரத்தோடும் இணைந்து மொழி முதலாகிறது.

வகரம் உ, ஊ, ஒ, ஓ என்னும் உயிர்கள் ஒழிந்த ஏனைய எட்டு உயிர்களோடு இணைந்து மொழி முதலில் வரும் என்று தொல்காப்பியம் கூறுவது போன்று, சங்க இலக்கியத்திலும் வருகின்றன.

குறிப்பு

வடுகர் - நற்.212

வாடை - நற்.5

விரல் - அக.34

வீரர் - அக.36

வெகுளி - பொருந.172

வேந்தன் - அக.24

வையை - மது.356

சங்க இலக்கியத்தில் ஞகரம் 'அ எ ஒ' வோடு இணைந்து மொழி முதலில் வருவதுடன் 'அ இ' யோடு இணைந்தும் மொழி முதலாகிறது.

ஞரல – பதிற்.30

ஞிமிறு – புறம்.93

யகரம் ஆவோடு மட்டுமல்லாது அகரத்தோடும் ஊகாரத்தோடும் இணைந்து மொழி முதலில் வந்துள்ளது.

யவனர் - அக.149

யூபம் - பதிற்.67

பிற உயிர்களுடன் இணைந்து மொழி முதல் வருவது வடமொழித் தொடர்பால் ஏற்பட்டிருக்கலாமெனப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கருதுகின்றார்.

பதினொரு உயிர் எழுத்துக்களும் சங்க இலக்கியத்தில் மொழி இறுதியில் வருகின்றன. 'ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு மெய்களுள் ஞகரம் தவிர ஏனைய பத்தும் சங்க

இலக்கியங்களில் மொழிக்கு இறுதியாக வந்துள்ளன. உரையாசிரியர்கள் ‘உரிஞ்’ என்னும் சொல்லை உதாரணம் காட்டுகின்றனர்.

குறிப்பு

தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ம் மயக்கங்கள் சிலவற்றைத் தவிர அனைத்து மெய்ம் மயக்கங்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. உடம்படுமெய்யான யகர வகரங்களின் வருகை சங்க காலத்தில் மிகுதியாகும். இதனால் உயிர் மயக்கங்கள் தவிர்க்கப்பட்டன.

“செய்யு ளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும்” - தொ.எ.51

‘போலும்’ என்ற சொல் ‘போன்ம்’ என்றாகும் என்பர். சங்க இலக்கியங்களில் வேறு சில சொற்களையும் காணலாம்.

சான்ம் - மலை.313., நற்.381
தின்ம் - புற. 150

சங்க இலக்கியங்களில் வேறு சில மெய்களும் ‘ண்ம்’ – ‘ய்ம்’ என்பனவும் சொல் இறுதியில் ஈரொற்றாய் அமைந்து வந்துள்ளன.

கொண்ம் - புற.152
தேய்ம் - நற்.68

நன்னூலாரும் ண்ம் ஈரொற்றாய் அமைந்து வருதலைக் குறிப்பிட்டுள்ளார்.

“லளமெய் திரிந்த ணனமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே” - நன்.120

கையெழுத்து ஏடுகளை ஆராய்ந்தால், ஆய்தம் தனி ஒலியாகக் கருதப்பட்டமை உணரலாம். சிலபோது ஆய்தம் குகரம் ஆகவும் எழுதப்பட்டுள்ளது. இது வரிவடிவத்தால் விளைந்த மாற்றமாகும்.

அஃதை – அக.76, 96, 113

அகுதை – குறு.298, அக.208

குறிப்பு

அஃதை என்ற சொல்லில் மெய் போல அலகு பெறவில்லை. ஆனால், அதன் மாற்றொலி அகுதை என்ற சொல்லில் உயிர் மெய் போல அலகு பெற்று வருகிறது. சங்க நூல்களைக் காலந்தோறம் பெயர்த்து எழுதியவர்கள் அவர்கள் கால மரபுக்கேற்ப மாற்றி எழுதியிருக்க வேண்டும். ஆய்தத்தின் ஒலி வடிவை வரி வடிவமாக எழுதியவர்கள் மூன்று புள்ளியிட்டு (∴) எழுதியதை நாளடைவில் மூன்றையும் இணைத்தெழுதிக் 'கு' போல எழுதிவிட்டனர்.

**எகரம் அகரமாதல் : எ > அ**

குறிலாகிய எகரம் மொழியிறுதியில் வாராது. சொல்லின் இடையில் வருவதுமில்லை. மேலும் அஃது அகரமாகிவிட்டது. தன்மையை உணர்த்தும்.

என் - அன் ஆயிற்று. அதற்குப் பன்மையான 'எம்' என்பதும் 'ஆம்' ஆகிவிட்டது. இம்மாற்றத்தைத் தொல்காப்பியர் காலத்திலேயே காணலாம். தொல்காப்பிய நூற்பாவில் எம், ஏம் என்பன அம், ஆம் என்று மாறியுள்ளமையைக் காணலாம்.

**தன்மைப் பன்மை :**

"செறிவம் சேணிகந் தன்றே யறிவே

ஆங்கட் செல்கம்" - குறு.219.4

என்பதில் 'கம்' வழங்குகிறது. செல்கும் > செல்கம். கும் என்பதின் திரிபு 'கம்' என்று தோன்றும் (உ > அ). ஆனால், இது அத்தகைய மாமற்றம் அன்று. 'எம்' என்பதே 'அம்' என மாறியிருக்க வேண்டும

குறிப்பு

. **ஊகாரம் ஆகாரமாதல்** :

'செய்யூ' என்ற வடிவம் இறந்த காலம் காட்டுவதாகும். 'ஊ'காரத்தைச் சொல்லிறுதியாகப்
பெற்ற அரிய சொல்லாகும். 'செய்யூ' என்பது 'செய்யா' என மாறியது.

"நிலங்கிளையா ….. நின்றோள்" - அக.16.115

செய்யூ என்பது செய்து என்பதன் மாற்று வடிவமாகும். செய்+ஊ என்பது செய்யூ என ஆகியிருக்கலாம். ஊ என்பது 'து' என்பதன் மாற்று வடிவமாகும். 'கண்டு' என்ற சொல் செய்து என்ற வாய்பாட்டில் அமைந்ததாகும். 'காணூஉ' என்பது 'செய்யூஉ' என்ற வாய்பாடாகும். நிறீஇசெய்யூஉ என்ற வடிவங்கள் இறந்த காலம் காட்டுகின்றன. இவ்வொப்புமையாக்கத்தால் 'ஆ அ' என்பது போல முடியும் உயிர் மயக்கங்களும் இறந்த காலத்தைக் காட்டும் கூறுபாடு ஆயின.

**மூக்கொலி மறைவு (Denasalisation)** :

மூக்கொலியை இறுதியாகயுடைய சொற்களில் மூக்கொலி மருங்கொலியாயிற்று,

**மூன்றாம் வெற்றுமை உருபு** :

ஆன் > ஆல் ஆயிற்று

**ஐந்தாம் வேற்றுமை உருபு** :

இன் எ இல் ஆயிற்று

**னகரம் ஞகரமாதல்** :

அன்னை > அஞ்ஞை

முன்னை > முஞ்ஞை

**'ஆ' காரம் 'ஓ'காரமாதல்** :

சென்றார் > சென்றோர்

வந்தார் > வந்தோர்

**விகுதி முதல் அகரம் ஓகாரமாதல் :**

கிழவன் > கிழவோன்

இளையர் > இளையோர்

**யகர ஒலி மறைதல் :**

ஆகாரத்திற்கு முன் வரும் யகர மெய் கெட்டுள்ளது ஓர் ஒலி மாற்றமாகும்.

யாடு > ஆடு – நற்.266.5

யாமை > ஆமை – புற. 387.1

யார் > ஆர் - நற்.119.4

யாற்று > ஆய்று – பதிற்.43.15, குறுந்.24.3

இம்மாற்றத்தை நேமிநாதம்,

"யா முதற் பேர் ஆ முதலாகும்" - நேமி.36

என்று கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**உறழ்ச்சி (Free variation) :**

பழந்தமிழில் உறழ்ச்சி சற்று மிகுதியாகவே உள்ளது.

அகல்பு – பதிற்.43

அகல்வு – நற்.388

அசைபு – அக.106

அசைவு – அக.29

ஊணம் - நற்.45

குறிப்பு

நிணம் - அக.9

**குறிப்பு**

தமிழ் மொழியில் காணப்படும் திணை, பால். எண். இடம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமைவது பதிலிடு பெயர்களாகும் (Pronouns). இதனைத்தான் தொல்காப்பியர்,


"தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப" - தொ.511

எனக் கூறிச் செல்கிறார்.

யான் யாம் நாம்
நீ நீர் நீயிர்
அவன் அவள் அவர்
அது அவை

பண்டைத் தமிழில் இருவிதமான பதிலிடு பெயர்கள் காணப்படுகின்றன. சுட்டுப் பெயர்களாக உள்ள அவன், அவள், அவர், அது, அவை போன்றவை ஒரு வகையாகும். சுட்டுப் பெயரல்லாத தான், தாம் போன்றவை மற்றொரு வகையாகும். தான், தாம் என்பவை பால் வேறுபாட்டைக் காட்டாமல் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை மட்டும் காட்டுகின்றன. பெயர்ச் சொற்களை உயர்திணை, அஃறிணை என இரண்டாகப் பிரிப்பர். இவற்றை ஆண்பால், பெண் பால், பலர்பால் என்றும் ஒன்றன் பால், பலவின்பால் என்றும் பிரித்து நிற்பர். பண்டைத் தமிழில் காணப்படும் பகுப்பைக் காணமுடிகின்றது.

பதிலிடு பெயர்கள்




குறிப்பு

'நீயிர்' 'நீர்' என மாறி வந்துள்ளது(புற.110.6., நற்.48.8). 'நும்' என்பது 'உம்' 'உமக்கு'என மாறியுள்ளது(நற்.368.3., புற.45.5). முன்னிலை ஒருமை வடிவமாக 'உன்' (அக.222.2) வந்துள்ளது. 'நின்' (புற.29., குறுந்.22.5) என்பது 'நுன்' என்று மாறிய பின் 'ந'கர மெய் கெட்டோ 'உம்' மிலிருந்து ஒப்புவமையாக்கத்தினாலோ வந்த வடிவமாகும். 'அன்' விகுதி தன்மை ஒருமை விகுதியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதும் ஒப்புவமை ஆக்கத்தினாலாகும். உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (Inclusive plural), உளப்படுத்தாத் தன்மைப் பன்மை (Exclusive plural) போன்றவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடு சங்க காலத்தில் தெளிவாக இல்லை. யாம் நாம் என்ற வடிவங்கள் சங்க இலக்கியங்களில்

*Self-Instructional Material*

காணப்படுகின்றன. முன்னிலைப் பன்மை நீயிர் (அக.26, மலைப்படு.53) காணப்படுகின்றது. தான், தாம் சில இடங்களில் அழுத்த அசைநிலையாகவும் தற்சுட்டுப் பெயராகவும் பயன்படுகின்றன.



"அளிதோ தானே தோழி" -நற்.114, புற.5
"அன்னை தான் அறிந்தன்று" - நற்.175

முன்னிலைப் பன்மை 'நீம்' பழந்தமிழில் இடம்பெறவில்லை. 'நீம்' சீவகசிந்தாமணியிலும் 'நீங்கள்' அப்பர் தேவாரத்திலும் வந்துள்ளன. எனவே நீமும் நீங்களும் இடைக் காலத்தில்தான் வந்துள்ளன எனக் கூறலாம். பலர்பால் விகுதியாகப் பெயரில் 'மார்' விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

தோழிமார் - அக.15.9
ஐயன்மார் - புற.342.15

வினா இடப் பெயர்களாக (Interrogative pronoun)

யாங்ஙனம் - நற்.184
யாண்டு – புற.86

போன்றவை சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

'ஆன்' வேற்றுமை உருபு நீங்கற் பொருள் வேற்றுமைப் பொருளையும் இடவேற்றுமைப் பொருளையும் தருகின்றது.

"என் நெஞ்சத்தானே ………… போதல் ஒல்லாள்" - நற்.201
"மன்னிய பெரும நில மிசையானே" - புற.6

'அ'கரம் ஆறாம் வேற்றமை உருபாகச் செயல்படுகின்றது.
மன்ற மராத்த - குறு.87
நின்ன கண்ணி – புற.45

‘இல்’ ‘இன்’ இடப் பொருள் வேற்றுமை உருபாகச் சங்க இலக்கியங்களில் பயின்ற வருகின்றன.

குறிப்பு

சிலம்பில் துஞ்சும் - நற்.7

இரவின் வந்து – நற்.55

வேற்றுமை உருபு ‘இன்’னிற்க முன் ‘இன்’ சாரியை பயன்படுத்தப்பட்டுள்ளமை ஒப்புவமையாக்கத்தினால் ஆகும்.

அளவினிற் றிரியாது – பத்து 1.177

‘நான்கு’ என்ற எண்ணைக் குறிக்கும் தொல்திராவிடச் சொல் ‘நால்கு’ அகநானூற்றிலும் (104.6), பத்துப்பாட்டிலும் (2.165, 4.489) வந்துள்ளது. லகரம் னகரமாக மாறும் மாற்றம் தமிழ், மலையாளம், கோத்தா, தோடா ஆகிய நான்கு மொழிகட்குமே உரிய பொது மாற்றமாகும். எண்ணுப் பெயர்கள் தொண்டு (ஒன்பது), கோடி சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. தொல்காப்பியர் ‘கோடி’ என்ற எண்ணுப் பெயரைக் குறிப்பிடவில்லை.

தொண்டு – மலை.21

கோடி – புற.18, 814, 202

எண்ணுப் பெயர் ‘அன்’ சாரியை இன்றி ஐந்து – ஐந்தான் (புற.400.2) என்று வந்துள்ளது.

தொல்காப்பியர் மூன்று காலத்தைப் பற்றிக் (தொ.சொ.199.200) குறிப்பிட்டாலும், கால இடைநிலைகளைப் பற்றித் தெறிவாகக் குறிப்பிடவில்லை. சங்ககாலத் தமிழில் இறந்த காலம், இறப்பில்லாக் காலம் என்ற வேறுபாடே காணப்படுகின்றது.

*Self-Instructional Material*

**இறந்த காலம் (Past) :**

குறிப்பு

த்  செய்தனம் - குறு.304

செய்து – அக.32

பிற்காலத்தில் ‘த’ கரகத்தை மட்டும் இறந்த கால விகுதியாக ஏற்கும் வினைகள் பழந்தமிழில் ‘த’கர விகுதியையும், ‘இ’கர விகுதியையும் பெற்று வந்துள்ளன.

முயலி – ஐங்.379

இயலி – புற.76.15

ந்த்

அறிந்தனென் - அக.172

நினைந்து – நற்.29.8

த்த்

கொடுத்த – நற்.110

கறுத்தோர் - பதிற்.69

ட்

கண்டனன் - குறு.

கொண்டு – புற.

அட்டு – நற்.

ந்

காணுநர் - நற்.216

எதிர்கால விகுதியாகக் ‘கு’கரமும் ‘வ’கரமும் சேர்துப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

செய்குவேன் - புற.304

காண்குவம் - ஐங்.112

பெருகுவிர் - பத்து.3.195

குறிப்பு

செய்யாய் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் உடன்பாட்டு ஏவல் வினையாகக் காணப்படும்.

செல்லாய் - பதி.40.21
வாராய் - அக.216.2
நினையாய் - குறு.298.4

செய்யாஅல் வாய்பாட்டு ஏவல் வினைமுற்றையும் சங்க இலக்கியங்களில் காணலாம்.

அழாஅல் - அக.233.2
விடாஅல் - அக.26.9
தொடாஅல் - குறு.191.7

'இசின்' ஈற்றுச்சொற்கள் ஏவல் ஒருமையில் வருகின்றன.

கண்டிசின் - நற்.202.8
கேட்டிசின் - பத்து.6.208
ஆன்றிசின் - அக.69.4

- 'சென்மதி' வாய்பாட்டுச்சொற்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.
- செய்மோ, செய்மே வாய்பாட்டு எவல் வினைகளும் சங்க இலக்கிய்ங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.
- ஈம், ஈமோ, ஈமே ஈற்று ஏவல் வினைகளும் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.
- 'செய' 'செயின்' என்ற இருவகை வினையெச்சத்திலும் 'ப'கரம் பெற்று வருதலைப் பழந்தமிழின் பொதுப் பண்பாகக் கூறலாம்.

கேட்ப – புற.44.8
ஆர்ப்ப – குறு.15.1

எடுப்ப — புற.254.2

குறிப்பு

என செயவென் எச்சம் 'ப'கரம் பெற்று வந்தள்ளது. சங்க இலக்கியங்களில் சிறுபான்மை 'க'கரம் பெற்றும் வந்துள்ளது.

இருக்க — புற.351.5

நடக்க — நற்.383.8

இவ்வாறே 'செயின்' வினையெச்சத்திலும் காண்கின்றது.

கேட்பின் - புற.8.98, குறு.94.4

பசப்பின் - நற்.16.11

என்பன பெரும்பான்மை வழக்குக்கு மாறாக,

கேட்கின் - ஐங்.81

கரங்கின் - புற.1.8

கழிக்கின் - ஐங்.415

முதலியன 'க'கரம் பெற்று வந்துள்ளன. சங்கம் மருவிய இலக்கியங்களில் சகர மெய்யே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

'செயின்' என்னும் வினையெச்ச வாய்பாடு பின்னர் 'செயில்' என்றாகியது. 'செய்து' 'ஆல்' விகுதி பெற்று நிபந்தனை வினையெச்சமாக வருகிறது. செய்யும் என்பது ஆயின் அல்லது ஏல் என்பதுடன் சேர்ந்து நிபந்தனையைக் காட்டுகிறது.. எதிர்காலத்தைக் குறிக்கும் எச்சமாகிய 'செய்பு' மெல்ல மறைந்து, செய்பான் - செய்வான், செய்பாக்கு போன்றவை நோக்கத்தைக் காட்ட வருகின்றன. 'செய்யிய' என்பது நோக்கத்தைக் காட்டும் பழைய வினையெச்ச வாய்பாடாகும். இது மறைந்து 'செய' எனும் வினையெச்சம் புறநானூற்றில் வருகிறது. 'செய்யா' என்ற வாய்பாட்டோடு 'செய்யாத' என்னும் வாய்பாடும்

பயன்படுத்தப்பட்டிருப்பது, உடன்பாட்டில் 'செய்யாத' என்ற வாய்பாடு வருவது பற்றிய ஒப்புவமையாக்கத்தினால் ஆகும்.

குறிப்பு

கெடாத துப்பு – புற.2.7.17

நியமப் பொருளைக் குறிக்க (conditional) வினைமுற்றிற்குப் பின்னர் 'ஆயின்' சேர்ப்பது பெரும்பான்மை வழக்காகும்.

இறக்குவை ஆயின் - ஐங்.30.1.3
அகன்றனர் ஆயின் - அக.69.12

நியதிப் பொருளுக்குரிய வினையெச்ச வாய்பாடு 'செயின்' என்பதே பழந்தமிழில் பெரும்பான்மையாக வந்துள்ளது. 'செய்தாய்' என்ற வாய்பாடு அருகிக் காணப்படுகிறது.

கண்டால் - புற.390.25

எதிர்மறை வினையெச்ச வாய்பாடாகப் பழந்தமிழில் பெரும்பான்மையாக வருவது 'செய்யாது' எனும் வாய்பாடாகும்.

வராது – 65.4
காணாது – நற்.43.10
செய்யாது – பத்து.6.490

செய்யூ வாய்பாட்டு வினையெச்சம் பழந் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன.

படுஉ – ஐங்.246.2
தேடூஉ – நற்.242.10
தழூஉ – புற.359.4
தின்னூஉ – பத்து.6.62

பழந்தமிழ் நூல்களில் செய்யா வாய்பாட்டுப் பெயரெச்சமும் சங்க மருவிய நூல்களில் செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சமும்

காணப்படுகின்றன. எதிர்மறை வினையடி 'அல்' 'இல்' முதலியவற்றிலிருந்து தோன்றிய பெயரெச்ச வடிவங்களைச் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

அல்லேன் - குறு.99, அக.226
அல்லன் - நற்.115, குறு.52
அல்லோள் - அக.212
இல்லேன் - நற்.340

தொழிற்பெயர் 'அல்' 'தல்' 'பு' 'வு' இயர், ச்சி, அம், அய், கு போன்ற விகுதிகளைப் பெற்றுச் சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

எழல் - குறு.325.1
கடிதல் – அக.28., புற.181
காண்பு – நற்.264
உயர்வு – அக.187
உறீயியர் - நற்.56
உணீயியர் - குறு.27
சூழ்ச்சி – குறு.27
தொடை – அக.49, புற.239
மயக்கு – புற.239

சில வினைகளைத் துணை வினையாகப் பயன்படுத்தும் போது முதல் வினை தொழிற்பெயராக அமைந்துள்ளது. அது பிற்காலத்தில் பெரும்பான்மையும் 'செய'வென் எச்ச வாய்பாடொடு இருக்கின்றது.

மன்னுதல் பெறும் - குறு.199.8
மறத்தல் கூடும் - அக.301.29
பெறல் கூடும் - புற.17.20
நிறுத்தல் வேண்டும் - நற்.388.8

பெயர்ச் சொல்லிற்குப் பிறகு அகர விகுதி பெயரடை போன்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பு

காட்டக் கலை – அக.97

கண்ணஞெண்டு – நற்.267

நாற்றத்த பைந்தடி – புற.14

'கிழக்கு' 'மேற்கு' என்ற இரு சொற்களும் முறையே கீழ், மேல் என்ற இடப் பொருளில் வந்துள்ளனவே தவிர திசைப் பொருளில் வரவில்லை. அவ்விரு திசைகளும் முறையே,

குணக்கு – பதிற.50.5, நற்.158.7, புற.6.3

குடக்கு – புற.64, நற்.153.1, குறு.89.5, பதிற்.51.3

'உண்டு' என்னும் குறிப்பு வினைமுற்று சங்கத் தமிழ் நூல்களில் அஃறிணை ஒருமையிலும் பன்மையிலும் வருகின்றது.

"நனந்தலை யுலகஞ் செய்தநன் றுண்டெனின்" - பதி.63.18

"கனவாண்டு மருட்டலும் உண்டே" - அக.158.11

'நான் செயவேண்டும்' என்பதில் இரு எழுவாய்கள் இருக்கலாம். ஒன்று 'செய' என்பதற்கும் மற்றொன்று 'வேண்டும்' என்பதற்கும் ஆகும். வேண்டும் என்பது தகுதிப் பொருளை உணர்த்தத் தொடங்குகிறது. 'படு' என்பது செயப்பாட்டு வினை விகுதியாக வளர்ச்சியுற்றது. 'படு'செயப்பாட்டு வினை விகுதியாகிறது. பிற்காலத்தில் 'படு' என்பதற்குப் பதிலாகப் 'பெறு' செயப்பாட்டு வினை மிகுதியாக வருகிறது. செயப்பாட்டுத் தன்மை போன்றவற்றில் துணை வினைகள் வளர்ச்சியுற்றன. தற்காலத் தமிழில் நுணுக்கமான பொருள் வேறுபாட்டைத் துணை வினைகள் காட்டுகின்றன.

குறிப்பு

துணை வினைகள் சங்கத் தமிழில் காணப்படினும் வேண்டும், வேண்டா போன்ற துணை வினைகள் 'செயல்' வாய்பாட்டுத் தொழிற்பெயருடனும் பிறவற்றுடனும் வருவது இயற்கையாகும்.

செலீஇயர் வேண்டும் - நற்.396.6
உள்ளல் வேண்டும் - குறு.81.4
வளர வேண்டும் - புற.339.11
நினைக்க வேண்டா – புற.7.19
வருந்த வேண்டா – புற.101.10

சில வினை அடிச் சொல்லின்பின் 'தா' 'வா' போன்ற வினைகள் பொருளின்றி வழங்கப்பட்டுள்ளன.

அழிதரும் - நற்.177.10
இழிதரும் - புற.42.20
துயல்வரும் - நற்.383.7, புற.277.5

'செய்யும்' வினை வடிவங்களில் சில பெயர்ப்பதிலி விகுதிகளைப் பெறுவதுமுண்டு.

கொய்யுமோன் - புற.255
காணுமோர் - பதிற்.83

'உந்து' என்ற இடைச்சொல் புறநானூற்றில் காணப்படுகின்றது. குறிப்பு வினைக்குப் பின் 'மன்ற' என்ற இடைச்சொல் வருதல் தொல்காப்பியர் வழக்காகும். ஆனால், சங்க காலத்தில் பெயர், வினைகளுக்குப் பின் 'மன்ற' என்ற இடைச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

"ஓர்யான் மன்ற துஞ்சா தோனே" – குறு.6
"மாலை வந்தன்று மன்ற" – அக.16

‘போலும்’ என்ற இடைச்சொல் முற்றுவினைக்குப் பின் பயன்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பு

“வந்தன்று பொலும் தோழி நொந்து” - நற்177

தொல்காப்பியர் கூறாத சில அசை நிலைகளும் இடைச்சொற்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

பொலிக அத்தை – புற.6

செல்வல் அத்தை யானே – புற.211

உற்றனள் ஓரும் - அக.310

உகப்பு, உவப்பு, இசைப்பு, கூர்ப்பு, கழிவு, துனைவு, வார்தல், கெடவரல், நம்பு, ஓய்தல், முரஞ்சல், பேண், தெவு, விறப்பு, உறப்பு, கழுமு, செழுமை, துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல், ஞெமிர்தல், துயவு, கறுப்பு, நுழைவு, அமர்தல், பரவு, பழிச்சு, முனைவு போன்ற தொல்காப்பியர் குறிப்பிடும் உரிச்சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை.

தன்மை, முன்னிலை, படர்க்கை வினை விகுதிகளைப் பற்றிப் பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் சங்கத் தமிழ் என்னும் நூலின்கண் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அவரது ஆய்வின் அடிப்படையில் விகுதிகளைப் பற்றி (Pronominal suffixes) விரிவாகக் காண்போம்.

**தன்மை ஒருமை :**

பழந்தமிழில் தன்மை ஒருமை விகுதிகளாக ஏன், என், அன், அல், கு(இசின்) காணப்படுகின்றன.

ஏன் :

வந்தேன் - பத்து.4.461

குறிப்பு

உரைப்பேன் - பதி.73.17

உணரேன் - அக.48.4

வாழலேன் -நற்.11.79

உடையேன் - குறு.230.4

என் :

பழந்தமிழில் பெரும்பாலும் அன் சாரியைக்குப் பின்னரே வருகிறது.

வந்தனென் - பதி.76.9

எய்தினென் - அக.268.14

மறக்குவென் - புற.159.23

ஆகுவென் - நற்.152.9

கொள்ளலென் - அக.376.1

உடையென் - அக.376.1

அல் :

பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்விகுதி இறப்பில் கால இடைநிலைக்குப் பின்னர் மட்டுமே வருகின்றது.

அஞ்சுவல் - அக.300.12

காண்குவேல் - பதி.73.16

வருவல் - புற.23.17

அறிவல் - பத்து.1.291

கு : பொதுவாக வினையடிகளுக்குப் பின்னர் வருகிறது.

செய்கு – அக.50.14, குறு.25.2

காண்கு – புற.17.33

வருகு – நற்.204.2

இசின் :

தன்மை ஒருமை காட்டும் சொற்களாகப் பல இசின் ஈற்றுச் சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் நுவன்றிசின் போன்ற சொற்கள் உள்ளன.



வந்திசின் - பதி.15.15
அறிந்திசின் - நற்.278.6
கேட்டிசின் - புற.150.24

இத்தகைய இசின் ஈற்றுச் சொற்கள் சங்க மருவிய கால இலக்கியங்களில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து மொழியியல் அறிஞரிடையே கருத்து வேறுபாடு உண்டு.

தன்மை ஒருமை விகுதிகளில் ஏன் விகுதியே சங்க இலக்கியங்களில் மட்டும் வந்து, சங்க மருவிய கால இலக்கியங்களில் முற்றிலும் மறைந்துவிட்டது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**தன்மைப் பன்மை :**

தன்மைப் பன்மை விகுதிகளாக ஏம், எம், கும். இகும், றும், ஓம் போன்றவை சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

ஏம் :

விட்டேம் - நற்.15.10
அல்கியேம் - அக.319.12
செல்வேம் - அக.319.15
பாருவேம் - பத்து.9.289

எம் :

கண்டனெம் - ஐங்.390.4
நின்றனெம் - அக.48.16
உற்றனெம் - குறி.61.3

கும், இகும் :

உண்கும் - புற.135.4

கண்டிகும் - பதி.24.17

பெற்றிகும் - புற.378.22

குறிப்பு

றும் :

என்றும் - ஐங்.11.03

சேறும் - குறு.80.3

ஓம் : தீர்க்குவோம் - புற.481.16

**முன்னிலை ஒருமை :**

'ஐ' 'ஆய்' ஆகிய விகுதிகள் முன்னிலை ஒருமையைக் காட்டுவனவாகும். ஐ விகுதி அதிகமாகவும், ஆய் விகுதி குறைவாகவும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

இதற்கு மாறாகச் சங்க மருவிய கால இலக்கியங்களில் ஆய் விகுதி அதிகமாகவும், ஐ விகுதி குறைவாகவும் வருகின்றன. காலப்போக்கில் ஐ விகுதி வழக்கற்றுப் போவதையும் காண்கிறோம்.

ஐ : இழைத்தனை – ஐங்.445.5

பெற்றனை – பதி.74.21

ஒழிந்தனை – நற்.147.12

கேட்டனை – குறு.75.1

ஆய் : பிழைத்தாய் - புற.43.17

போலாய் - புற.300.2

வாராய் - அக.285.15

**முன்னிலைப் பன்மை :**

முன்னிலைப் பன்மை விகுதியாக இர், ஈர் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இர் விகுதி சங்க இலக்கியங்களில் அதிகம் பயின்று வர, ஈர் விகுதி சங்க மருவிய கால இலக்கியங்களில் அதிகம் பயின்று வருகிறது.

குறிப்பு

இர் : என்றனிர் - பதி.77.2
கண்டனிர் - அக.130.1
அறிந்தனிர் - நற்.376.12
ஆடினிர் - புற.109.17
கருதுவிர் - நற்.234.6

ஈர் : காணீர் - அக.236.16
சொல்லீர் - நற்.213.7
உளீர் - குறு.118.4
உடையீர் - நற்.184.5
வருவீர் - குறு.118.4
புணர்ந்தீர் - நற்.224.4

**படர்க்கை :**

ஆண்பால் : சங்க இலக்கியங்களையும் சங்க மருவிய கால இலக்கியங்களையும் ஆராய்ந்து நோக்கும்போது அன், ஆன், ஓன் ஆகிய விகுதிகளில், சங்க இலக்கியங்களில் அன் விகதியும் சங்க மருவிய கால இலக்கியங்களில் ஆன் விகுதியும் அதிகம் பயின்று வரக் காண்கிறோம். ஆன் விகுதி சங்க காலத் தமிழில் எதிர்மறையில் வர, சங்க மருவிய காலத் தமிழில் கால இடைநிலைக்குப் பின்னர் வருவது குறிப்பிடத்தக்கது.

அன் :
என்றனன் - நற்.50.7
அமைந்தனன் - புற.328.5
வருந்தினன் - நற்.32.4

குறுகினன் - அக.248.7

அறியலன் - பதி.20.6

**குறிப்பு**

ஆன் :

கொண்டான் - பதிற்.16, குறு.223.17, புற.399.12

மலைந்தான் - ஐங்.20.1.2

அஞ்சான் - நற்.287.8

அறியான் - குறு.230.6

ஓன் :

வந்தோன் - நற்.114.6, பத்து.1.285

ஈத்தோன் - புற.386.16

படைத்தோன் - நற்.240.1

ф போன்ம் - அக.66.17

தெறூஉம் - குறு.87.2

வரூஉம் - நற்.285.11

**பெண்பால் :**

சங்க இலக்கியங்களில் அள், ஆள், ஓள், இ விகுதிகள் பெண்பாலைக் காட்டுவனவாகும். ‘அள்’ ‘ஆள்’ ‘இ’ வினைமுற்றுக்களிலும் வினையாலணையும் பெயர்களிலும் வர, ‘இ’ விகுதிகளும் இதே சூழலில் மட்டுமே வருகின்றன.

அள் :

வந்தனள் - நற்.352.12

வினவினள் - அக.358.10

புகுவள் - புற.293.5

ஆழதனள் - நற்.81.7

குறிப்பு

ஆள் :

செல்வாள் - நற்.20.9

செல்வாள் - ஐங்.234.4

கொடியாள் - நற்.97.5

ஒள் :

கிடந்தோள் - நற்.370.4

கடியாதோள் - குறு.361.3

இ :

உறுவி – குறு.192.2, புற.161.1

ɸ : சென்ம் - அக.176.26

நோம் - அக.287.3, 339.11

**பலர்பால் :**

பலர்பால் காட்டும் அர், ஆர் போன்ற விகுதிகளில், ஆர் விகுதியைக் காட்டிலும் ஓர் விகுதியே அதிகம் சங்கத் தமிழில் காணப்படுகின்றது. பகர விகுதியும் மார் விகுதியும் காணப்படுகின்றன.

அர் :

அலர்ந்தனர் - பதிற்.71.8

இருந்தனர் - குறு.146.2

வாரலர் - நற்.215.12

ஆர் :

கொண்டார் - புற.112.5

என்மனார் - குறு.234.3

அறிவார் - நற்.269.9

ஓர் :

சென்றோர் - அக.387.20

செல்வோர் - பத்து.4.39

ப :

பெறுப – ஐங்.137.3

சூடுப – குறு.17.2

மார் :

“…தமியார் சென்மார்

நெஞ்சுண மொழிப” – அக.157.9.

காண்மார் - பத்து.6.44.3

**ஒன்றன் பால் :**

பழந்தமிழ் இலக்கியங்களில் அது, து, த்து, று, டு, ம் ஆகிய விகுதிகள் ஒன்றன்பாலைக் காட்டுவனவாக உள்ளன.

அது :

சென்றது – புற.153.6

சிதைந்தது – பதிற்.27.1

ஆகின்றது – அக.96.18

து :

உதவாது – புற.18.26

நலியாது – ஐங்.325.3

ϕ :

போன்ம் - அக.248.9

நோம் - ஐங்.59.9

று :

வந்தன்று – ஐங்.10.13

அறிந்தன்று – புற.47.7

த்து :

உடைத்து – அப.99.14

யாணர்த்து – நற்.38.3

உ :

அற்று – பதிற்.71.19

அலர்ந்து – ஐங்.346.2

டு :

உண்டு – பதி.63.18

காந்தட்டு – குறு.1.4

குறிப்பு

**பலவின்பால் :**

பழந்தமிழ் நூற்களில் அ, ஐ, ф பலவின்பால் காட்டுவனவாக உள்ளன.

அ :

இருந்தன – ஐங்.82.4

அழுதன – குறு.241.2

ஆயின – குறு.316.8

ф :

அறிப – நற்.209.6

அறியா – பதிற்.79.5

உயரா – புற.102.1

ஐ :

பொழிந்தவை – பதிற்.42.15

சிதறியவை – அக.108.3

வியங்கோள் வடிவங்களான 'வாழிய' 'வாழி' என்ற வழக்காறுகட்குப் பதிலாக 'வாழ்க' என்பது வழக்குப் பெறுகின்றது.

"வருந்த வேண்டா வாழ்க அவன் தாளே" - புறம்.101.10

குறிப்பு

சங்க காலத்திலும் திருக்குறளிலும் வியங்கோளுக்கு 'அல்' விகுதி வருகிறது. பிற்காலத்தில் இது காணப்படவில்லை.

## சங்க மருவிய காலத் தமிழ் :

யகர மெய் கெடல்

மொழி முதல் யகர மெய் கெடல் பரிபாடலிலும் சிலம்பிலும் மணிமேகலையிலும் காண்கிறோம்.

ஆறு – பரி.11.50, 15.22

"ஆரிக்கொடுமை செய்தாரென்று அன்னை அறியின்" - சிலம்பு.7.38.4

"ஆற்றுவழிப் பட்டோர் ஆரென வினவ" - சிலம்பு.10.224

"அரசிளங்குமரன் ஆருமில் ஒரு சிறை" - மணி.4.95

"ஆனைத் தீநோய் அரும்பசி களைய" - மணி.20.35

யார், யாண்டு யானை ஆகிய சொற்கள் பின் பழந்தமிழில் யகர மெய் கெட்டு வரத் துவங்கின எனக் கூறிய, சோ.ந. கந்தசாமி அவர்கள் கீழ்க்கண்டவற்றை மணிமேகலையிலிருந்து எடுத்துக்காட்டுகிறார்….

ஆர் - மணி. 4.95, 5.56, 6.146, 17.18, 21.136, 24.33

ஆண்டு – மணி. 14.55, 17.38, 20.25, 24.100, 25.101

ஆனை – மணி. 20.35

**நகர மெய் கெடல் :**

குறிப்பு

முன் பழந்தமிழில் நின், நும் காணப்படுகின்றன. மணிமேகலையில் 'உன்' முப்பது இடங்களிலும் 'உம்' ஓர் இடத்திலும் வருவதாகச் சோ.ந.கந்தசாமி குறிப்பிடுகிறார்.

உன் - 2.17, 4.96, 16.35, 15.37, 18.171, 10.46, 4, 9, 63, 64, 21.18, 108

ஒம் - 26.39

'யாங்கு' என்னும் சங்ககாலச் சொல் சங்கமருவிய காலத் தமிழில் 'எங்கு' என மாறி வருவதாகக் கூறுவார்.

யாங்கு > எங்கு – மணி. 6.18, 191, 27.110, 187, 226, 231, 28.17, 29.233, 251

**குறில் நெடிலாதல் :**

சங்கத் தமிழில் காணப்படும் குறில் வடிவங்களையுடைய வினை விகுதிகள், சங்க மருவிய காலத் தமிழில் நெடில் வடிவங்களையுடைய வினை விகுதியாக மாறுகின்றன.

| சங்கத் தமிழ் | | சங்க மருவிய காலத் தமிழ் |
|---|---|---|
| என் | > | ஏன் |
| எம் | > | ஏம் |
| அன் | > | ஆன் |
| அள் | > | ஆள் |
| அர் | > | ஆர் |

**நெடில் குறிலாதல் :**

ஆங்கு, ஈங்கு முதலிய சங்க காலச் சொற்கள் மணிமேகலையில் அங்கு, இங்கு என வருவதாகக் கூறுகிறார்.

*Self-Instructional Material*

குறிப்பு

ஆங்கு > அங்கு - மனி.19.9, 28.116, 6.26, 14.82, 18.83

ஈங்கு > இங்கு – மணி.4.104, 20.123, 21.107, 23.128, 25.10, 27.221

**தனிக்குறில் 'ர'கர 'ழ'கரம் :**

'ர'கரமும் 'ழ'கரமும் குறில் கீழ் ஒற்றாக வாராது(தொ.49) என்ற விதி சங்க மருவிய காலத்துக்குப் பொருந்தும். 'வர்த்தனை' என்ற சிலம்பில் காணப்படும் சொல்லாட்சியைப் பேராசிரியர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் எடுத்துக்காட்ட மணிமேகலையில் காணப்படும் வர்த்தித்தல் (29.256), தெற்கு (45.2) போன்றவற்றைச் சோ.ந.கந்தசாமி அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்.

**சகர முதன் மொழிச் சொற்கள் :**

தொல்காப்பியப்படி சகரம் மொழி முதல் வாராது. ஆனால், சங்க இலக்கியங்களிலும் சங்கம் மருவிய நூல்களிலும் சகர முதன் மொழிச் சொற்கள் நிறைய வந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் சகடு, சண்பகம், சதுக்கம், சந்தனம், சந்தி, சதங்கை, சக்கரம், சகடம், சங்கமன் போன்ற சொற்களும் மணிமேகலையில் சம்பாபதி, சரவணம், சனமித்திரன், சரண், சலம், சபக்கம், சண்பகம் போன்ற சொற்களும் காணப்படுவதாகப் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் அவர்களும் சோ.ந.கந்தசாமி அவர்களும் எடுத்துக்காட்டுகின்றனர். மணிமேகலையில் 'சை'கார முதற் சொற்களையும் காணலாம். சைமினி (27.82), சைவவாதி (27.87), சைதனியவான் (29.176). சங்கம் மருவிய நூலான பரிபாடலிலும் 'சையம்' (பரி.11.14) என்ற சொல் வந்தள்ளது.

**ரகரத்தின் முன் இகரம் வரல் :**

குறிப்பு

ரகரச் சொற்களின் முன் 'இ'கரம் இணைந்து வருதலைக் காண்கிறோம்.

இராமன் - 27.53
இராவணன் - 24.58

**யகர ஒற்று :**

'ய'கரம் ஓவுடன் இணைந்து வருதலை மணிமேகலையில் காண்கிறோம்.

யோகம் - 3.100
யோசனை – 6.211

**லகரம் மொழி முதலாதல் :**

லகரம் மணிமேகலையில் மொழி முதலில் வந்துள்ளது.

லோகம் - 12.73

**ழகர நகரப் புணர்ச்சி :**

"தாதையைக் கேட்கில் தன்குல வாணர்" - சிலம்பு.75.1265

"மண்ணாள் வேந்தே நின் வாணாட்கள்" - சிலம்பு.28.12

ஆகியவற்றைப் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் எடுத்துக்காட்டுக்களாகத் தந்து செல்வார். ழகரமும் நகரமும் புணர்ந்து

ணகரமாகிறது. வீரசோழியம் இப்புணர்ச்சி குறித்துக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

குறிப்பு

**பால் விகுதி (Gender – mumber suffix) :**

'ஆளன்' ஆண்பால் விகுதியாகவும் 'ஆட்டி' பெண்பால் விகுதியாகவும் 'ஆளர்' பலர்பால் விகுதியாகவும் மணிமேகலையில் காணப்படுவதாகச் சோ.ந.கந்தசாமி குறிப்பிட்டுச் செல்கிறார்.

ஆளன் :

உருவிலாளன் - மணி.5.5
உரைமூதாளன் - மணி.6.4
பேரறிவாளன் - மணி.12.78

ஆட்டி :

விலையாட்டி – மணிமேக.5.87
வடமொழியாட்டி – மணி.8.73
திருமுகவாட்டி – மணி.5.118
மாமறையாட்டி – மணி.12.77

ஆளர் :

காப்பாளர் - மணி.7.69
காவலாளர் - மணி.7.3, 27.29

இதைத் தவிர சமஸ்கிருத விகதி 'கார்' தமிழ் விகுதியான 'அர்' உடன் இணைந்து சிலம்பிலும் மணிமேகலையிலும் காணப்படுகின்றது.

கஞ்சக்காரர் - சிலம்பு.5.28
மாலைக்காரர் - மணி.28.40

குறிப்பு

**கள் பன்மை விகுதி**

**அ.ஃறிணைப் பன்மை :**

பழந்தமிழில் 'கள்' விகுதி பெரும்பாலும் அ.ஃறிணை காட்டும் சொற்களிலேயே வருகிறது. இது சங்க மருவிய காலத்திலும் தொடர்கிறது.

நிரைகள் - பதிற்.27.10
அரண்கள் - பதிற்.44.13
மயில்கள் - ஐங்.291.1
யாண்டுகள் - புற.357.4
பொருள்கள் - பத்து.1.27
கண்கள் - பரி.7.52
சொற்கள் - குறள்.1100
உயிர்கள் - சிலம்பு.1.175
இடங்கள் - மனி.6.199

**இரட்டைப் பன்மை :**

காலப்போக்கில் உயர்திணைப் பன்மைப் பெயர்களிலும் உயர்திணைப் பெயர்களிலும் பரவ ஆரம்பித்தது. உயர்வு ஒருமையிலிருந்து பிரித்தறியவே இவை பன்மைப் பெயர்களில் வந்தன. எனவே இவற்றை இரட்டைப் பன்மை என வழங்குகிறோம்.

அரசர்கள் - கலி.25.3
ஐவர்கள் - கலி.26.6
கேளிர்கள் - கலி.149
பூரியர்கள் - குறள்.916
எயினர்கள் - சிலம்பு.12.20.2

புத்தர்கள் - மணி.30.15.15

சமணர்கள் - மணி.5.52

குறிப்பு

**உயர்வு ஒருமைப் பெயர்கள் :**

பெயர்ச்சொற்கள் ஆர் சிறப்பு விகுதி பெற்று வருவதைச் சங்க மருவிய கால நூல்களில் காணலாம்.

சாமனார் - கலி.94.34

நாரதனார் - சிலம்பு.17.26.4, 17.7.4

மகனார் - சிலம்பு.16.17

**பெயர்ப் பதிலி** (Pronoun's)

**தன்மை ஒருமை :**

தன்மை ஒருமை இடப்பெயர் வடிவமான 'யான்' 'நான்' எனச் சங்க மருவிய நூல்களில் வந்துள்ளது. 'நான்' என்ற சொல்லாடல் முதன் முதலில் பரிபாடலில்தான் வந்துள்ளது.

நான் - பரி.6.87, சிலம்பு.29.24, மணி.17.45, 23.945, 27.278, 28.92

இது 'நாம்' என்ற பன்மைச் சொல்லிற்கேற்ப ஒப்புமையாக்கத்தினால் உண்டாக்கப்பட்ட வடிவமாகும்.

'நீர்' என்ற சொல்லும் 'உமக்கு' என் சொல்லும் பரிபாடலில் வருகின்றன.

நீர் - பரி.8.73

உமக்கு - பரி.20.85

**சுட்டுப் பெயரடைகள் (Demonstrative adjectives) :**

குறிப்பு

'இந்த' 'அந்த' என்பன சிலம்பிலும் மணிமேகலையிலும் காணப்படுகின்றன. 'இ'கர 'அ'கர சுட்டே சங்க கால வழக்கமாகும். 'இந்த' 'அந்த' என்பது சங்க மருவிய கால வழக்காகும். சிலம்பில் 'அந்த' சுட்டு வரவில்லை.

இந்த ஈமப்புறங்காடு – மணி.5.165
இந்தக் காரிகை – மணி.23.155
இந்த ஞாலத்து – மணி.27.285
அந்த வாணுதல் - மணி.22.61
அந்த உதவிக்கு – மணி.29.30

பிராமிக் கல்வெட்டில் 'இத' 'அத' என்ற வடிவங்கள் காணப்படுகின்றன.

முன்னிலை இடப்பெயரின் வேற்றுமை ஏற்கும் வடிவத்தில் மொழி முதல் 'ந'கர மெய் கெட்டுவிட்டது. 'நும்' ஏ்னபது 'உம்' என்றும் 'உமக்கு' (கலி.5) என்றும் மாறியுள்ளது. முன்னிலை ஒருமை வடிவமான 'உன்' என்பது (சிலம்பு.15.34 10, 18.14.35) வந்தள்ளது. 'நின்' என்பது 'நுன்' என மாறிய பின், 'ந'கர மெய் கெட்டோ 'உம்' என்பதன் ஒப்புவமையாக்கத்தாலே வந்திருக்கலாம். சிலம்பில் 'நின்' வழக்கும் காணப்படுகின்றது.

"அஞ்சல் உன்தன் அருந்துயர் களைகேன்" - சிலம்பு.15.68
"உன் திருவருளால் என் பிறப்பு உணர்ந்தேன்" - மணி.10.18
"உம் பிறப்பு ஈங்கி∴து" - மணி.11.141

மணிமேகலையில் 'உன்' முப்பது இடங்களிலும், 'உம்' ஓர் இடத்திலும் வருகின்றன.

**தான், தாம், தன், தம் என்ற சொல்லாட்சிகள் :**

குறிப்பு

சங்க காலத்தில் 'தான்' 'தாம்' படர்க்கைப் பெயர்களாக இருந்தன.

'தான்' 'தாம்' என்ற அசைகளும் அவற்றின் வேற்றுமை வடிவான 'தன்' 'தம்' என்ற குறுக்கங்களும் பெயருக்கும் வேற்றுமை உருபுக்குமிடையே வருகின்றன. ஒருமைப் பெயரை அடுத்துத் 'தான்' என்ற சொல்லும் பன்மைப் பெயரை அடுத்துத் 'தாம்' என்ற சொல்லும் வருவதைக் காணலாம்.

"கோவலன் தான் போன பின்னர்" - சிலம்பு.7.52
"மதுரையார் எல்லாம் தாம் மயங்கி" - சிலம்பு.19.16

'ஐ' முதலிய உருபுகள் பெயரோடு நேரே சேராமல் தன்னை தன்னோடு, தம்டை, தம்மொடு, தனக்கு, தமக்கு என்றாங்கு பெயரை அடுத்து வரும் 'தன்' 'தம்' என்ற அசைநிலை வடிவங்களோடு இயைவதைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம்.

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட" - சிலம்பு.20.74
"சாவகன் தானும் சாவுற் றானென" - மணி.16.21

**பதிலிடு பெயர்களில் இரட்டைப் பன்மை :**

இரட்டைப் பன்மை விகுதியாக வந்த 'கள்' பின்னர்ப் பதிலிடு பெயர்களிலும் ஆண், பெண்பால், பெயர்களிலும் வரத்தொடங்கின.

எங்கள் - கலி.22.22, மணி.25.53
யாங்கள் - சிலம்பு.25.60, மணி.16.84
நுங்கள் - சிலம்பு, பதிகம்.45
தங்கள் - சிலம்பு, பதிகம். 52, 23.175, மணி.28.64

**வேற்றுமை (Case) :**

குறிப்பு

கருவிப்பொருள் வேற்றுமை உருபான (Instrumental case suffix) 'ஆன்' 'ஆல்' ஆக மணிமேகலையில் காணப்படுகிறது.

மயனால் - 6.201
அருளால் - 21.155., 22.144
அருளால் - 28.196
வாளால் - 23.58
செவியால் - 27.15

'கொண்டு' என்ற சொல்லுருபும் (Post Positions) பயன்படுத்தப்படுகின்றது.

"கைக்கொண்டு எடுத்த கடவுட் கடிஞையோடு" - மணி.15.17

'உடன்' என்பது உடனிகழ்ச்சி வேற்றுமைப் பொருளில் (Sociative case) வருகின்றது.

"போந்தருள் நீயென அவருடன் போகி" - மணி.16.65

நீங்கற் பொருள் வேற்றுமை (Ablative) உருபான 'இன்' 'இல்' ஆக மாறியுள்ளது (மணி.29.79)

ஆறாம் வேற்றுமையின் உருபாக 'ஆது' மணிமேகலையில் காணப்படுகின்றது.

"பான்மையில் தனாது பாண்டு கம்பளம்
தானடுக் குற்ற தன்மை நோக்கி" - மணி.29.20.22

'உடைய' என்பது ஆறாம் வேற்றுமையின் வேற்றுமைச் சொல் பின்னொட்டாகக் காணப்படுகின்றது.

'இரண்டனுடைய வுண்மையைக் காட்டுதல்" - மணி.29.367

குறிப்பு

நான்காம் வேற்றுமையின் வேற்றுமைச் சொல் பின்னொட்டாக மணிமேகலையில் 'பொருட்டு' 'பொருட்டால்' என்று காணப்படுகின்றது.

தம்பொருட்டு – 21.63
காரிகை பொருட்டு – 22.156
அவன் பொருட்டால் - 16.53
காரிகைபொருட்டால் - 12.186
நின்பொருட்டால் - 29.36

நீங்கற்பொருள் வேற்றுமையின் (Ablative case) வேற்றுமைச்சொல் பின்னொட்டாகத் 'தொட்டு' வருகின்றது.

அந்நாள்தொட்டு – மணி.16.2, 20.70, 177

இடப்பொருள் வேற்றுமையின் (locative case) வேற்றுமைச் சொல் பின்னொட்டாகப் 'பிற்பாடு' காணப்படுகின்றது..

அதன் பிற்பாடு – மணி.21.78

**'உடன்' என்ற சொல் :**

சிலப்பதிகாரத்தில் மிகவும் பயின்று வரும் சொல் 'உடன்' என்பதாகும். பல இடங்களில் 'ஒடு' உருபிற்கு நிகராக வேற்றுமைப் பொருளில் வருகின்றது.

"பொலியக் கோத்த புலமை யோனுடன்" - சிலம்பு.39.4

"உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்" - சிலம்பு.25.107, 108

‘உடன்’ வேற்றுமைப் பொருளில் மட்டுமின்றி வினையோடு சார்ந்தும் வரக் காண்கிறோம்.

குறிப்பு

“புரிந்துடன் வகுத்தென”

“சுமந்துடன் வந்த”

ஒடுவிற்கு நிகராகப் பெயர் இறுதியிலும் அகநகர், புறநகர் என்பது போல பெயர்க்கு முன்னும் வினையெச்சத்திற்குப் பின்னும் ‘உடன்’ வருகின்றது.

“பாம்போடுடனுறைத்தற்று” – குறள்.890

‘ஓடு’ உருபுக்குப் பின் ‘உடன்’ என்ற சொல் வருவது குறிப்பிடத்தக்கது.

**எண்ணுப் பெயர்** (Numerals) :

தொல்காப்பியர் குறிப்பிடும் ‘நூறு ஆயிரம்’ என்ற சொல் மணிமேகலையில் காணப்படுகிறது. ஆனால், ஒன்ப.ஃ.து தொண்ணூறு, தொள்ளாயிரம் போன்ற எண்ணுப்பெயர்கள் மணிமேகலையில் காணப்படவில்லை. பின்ன எண்ணுப் பெயர்கள் (Fractional numeral) மணிமேகலையில் காணப்படுகின்றன.

முக்கால் - மணி.27.140

அரை – மணி.27.140

கால் - மணி.27.140

கோடி, கணிகம். கற்பம் போன்ற எண்ணுப் பெயர்களும் மணிமேகலையில் காணப்படுகின்றன.

‘ஆம்’ கொண்டு முடியும் எண்ணுப் பெயரைப் (ordinal mumbers) மணிமேகலையில் காண்கிறோம். ஆனால், சங்கத் தமிழில் காண முடியாது.

இரண்டாம் கண்டம் - மணி.30.137

மூன்றாம் கண்டம் - மணி.30.141

இரண்டாம் சந்தி – மணி.30.152

குறிப்பு

**போழ்து, போது :**

முன் பழந்தமிழ் வடிவமான பொழுது, போழ்து, போது என மணிமேகலையில் வருகின்றது.

**அல்லால் என்ற சொல்லாட்சி :**

'அல்லால்' என்ற சொல்லாட்சி முதன் முதலில் கலித்தொகையில் தான் காணப்படுகின்றது.

பகையல்லால் - கலி.67.4

பெறின் அல்லால் - கலி.88.8

புகழல்லால் - குறள்.233

**எழுந்தாற்போல் என்ற தொடர் :**

'எழுந்தன்ன' போன்ற ஆட்சி சங்க நூல்களில் காணப்படுகின்றது. 'எழுந்தாற்போல்' என்ற தொடர் (கலி.118.3) காணப்படுகின்றது.

'ஆனால்' என்பது கலித்தொகை (108.9), திருக்குறள் (539) ஆகியவற்றில் மட்டும் வந்துள்ளது.

**காலம் : நிகழ்காலம் :**

தொல்காப்பியர் இறந்த காலம், இறப்பில்லாக் காலம் பற்றிக் குறிப்பிட்டார். ஆனால், கிறு, கின்று, போன்ற கால இடைநிலைகளைக் குறிப்பிடவில்லை. 'கின்று' கால இடைநிலை பரிபாடலில் வந்துள்ளது. மணிமேகலையில் 'கின்று' கிறு ஆகிய இரண்டு கால இடைநிலைகளும் காணப்படுகின்றன. 'கிறு' இடைநிலை சிலப்பதிகாரத்தில் வரவில்லை.

சேர்க்கின்ற – பரி.22.35

ஒசனிக்கின்ற – சிலம்பு.14.125

ஊர்கின்ற – சிலம்பு.7.35.2

'கிறு' நிகழ்கால இடைநிலை மணிமேகலையில்தான் முதன் முதலில் காணப்படுகின்றது.

**எதிர்காலம் :** 'க'கரம் எதிர்கால இடைநிலையாகும்.

படர்க்கேன் - சிலம்பு.27.104

பெறுகேன் - சிலம்பு.9.43

உண்கேன் - மணி.10.93

உணர்கேன் - மணி.18.156

உரைக்னே் - மணி.12.36,, 117, 16.113

செய்கேன் - மணி.16.36, 25.233

**இறந்தகால இடைநிலை :**

சங்கத் தமிழில் இறந்த கால இடை நிலையாக 'இன்'வர, மணிமேகலையில் 'இ'கரம் கெட்டு 'ன'கரம் மட்டும் பேணிப்பாதுகாக்கப்பட்டது.

போனது – மணி.5089, 30.41

போனார் - மணி.16.100

போன – மணி.30.2

ஆன – மணி.29.56, 422, 423, 262

ஆனது – மணி.27.209, 210, 17.37

**ஏவல் வினை :**

செய்வாய், வாய்பாட்டு வினைமுற்றுக்கள் சங்க மருவிய நூல்களிலும் மட்டுமே ஏவல் வினைகளாக வருகின்றன.

குறிப்பு

உழுவாய் - கலி.64.18
அறிவிப்பாய் - சிலம்பு.20.29
உணர்வாய் - மணி.12.34

செய்யாதி வாய்பாட்டு ஏவல் வினையும் சங்க மருவிய காலத்தமிழின் கூறாகும்.

அழியாதி – கலி.53.2
உரையாதி – கலி.28.2

சங்கத்தமிழில் 'இசின்' ஈற்றுச் சொற்கள் ஏவல் ஒருமையில் வருதலைக் காணலாம்.

'செய்ம்' வாய்பாட்டு ஏவல் வினைகள் சங்கத் தமிழில் காண, செய்யும் வாய்பாட்டு ஏவல் வினை சங்க மருவிய காலத் தமிழில் மட்டுமே வரக்காண்கிறோம்.

வாரும் - பரி.14.1
காட்டும் - சிலம்பு.16.20
கொடும் - மணி.16.77

ஈம், ஈமோ, ஈமே, ஈற்று ஏவல் வினை சங்கத் தமிழில் காண்கிறோம். சங்க மருவிய நூல்களில் கலித்தொகையில் மட்டும் காண்கிறோம்.

செப்பீம் - கலி.93.10
காட்டீமோ – கலி.144.42

**எதிர்மறை :**

குறிப்பு

எதிர்மறைப் பொருளைக் காட்டும் 'இல்' இடைநிலையை இறந்த கால வினையெச்சத்தின் பின்னர் இணைத்து எதிர்மறை காட்டும் நிலை சங்கத் தமிழில் ஓரிரு இடங்களில் காணப்பட்டாலும் மணிமேகலை காலத்திலும் தேவார – திவ்வியப்பிரபந்தத்திலும் இத்தகைய சொற்களை அதிகமாகக் காண்கிறோம்.

அறிந்திலேன் - பரி.8.60

இழந்திலேன் - கலி.146.19

கண்டிலேன் - சிலம்பு.16.209

சங்கத் தமிழில் 'ஆ' எதிர்மறையாக வர, சங்க மருவிய தமிழில் 'ஆத்' எதிர்மறையாக வருவது குறிப்பிடத்தக்கது.

| | ஆ | ஆத் |
|---|---|---|
| பதி. | 93 | - |
| ஐங். | 27 | - |
| அக. | 168 | - |
| நற். | 142 | - |
| குறுந். | 59 | - |
| புற. | 26.5 | 2 |
| பத்து. | 150 | - |
| கலி. | 168 | 7 |
| குறள் | 125 | 14 |
| சிலம்பு | 110 | 10 |

**வினையெச்சம்**

செய்யூஉ வாய்பாட்டு வினையெச்சம் சங்கத் தமிழில் காணப்படுகின்றது. சங்க மருவிய காலத்தில் இவ்வினையெச்சத்துடன் 'செய்யாமல்' வாய்பாட்டு விகுதியும் காணப்படுகிறது.

குறிப்பு

கொளுத்தாமல் - பரி.11.126
காணாமல் - கலி.39.41
செய்யாமல் - குறள்.101
பிரியாமல் - சிலம்பு.1.61
அறியாமல் - மணி.26.21

'செய்யாயேல்' வாய்பாட்டு நிபந்தனை எச்சம் சங்க மருவிய தமிழிலேயே காணப்படுகிறது.

துறப்பாயேல் - கலி.3.10
செய்வானேல் - குறள்.655
வருமேல் - சிலம்பு.17.19.2
என்றியேல் - மணி.3.73

**அல்லது என்னும் வினையெச்சம் :**

'அல்லது' என்ற சொல் குறிப்பு வினைப் பெயராக வருவதுண்டு. 'அல்லது கிளப்பினும்' (322), அல்லதன் மருங்கு (326), அல்லது இல் (518) எனத் தொல்காப்பியத்திலும் அல்லது செய்தல் (518) எனப் புறநானூற்றிலும் வருகின்றது. மணிமேகலையிலோ, 'அன்றி' என்ற குறிப்பு வினையெச்சப் பொருளில் வருகிறது.

வணங்குத ல்லது வாழ்த்தல் - மணி.11.71

**பெயரெச்சம் :**

'செய்யாத' வாய்பாட்டுப் பெயரெச்சம் சங்கமருவிய காலத் தமிழில் காணப்படுகின்றது. புறநானூற்றில் இரு இடங்களில் வந்திருப்பினும் சங்க மருவிய கால நூல்களில்தான் அதிக அளவு வருகின்றது. சங்கத் தமிழில் செய்யா வாய்பாட்டுப் பெயரெச்சம் வர,

சங்க மருவிய காலத் தமிழில் செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சம் வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு

தாவாத – கலி.86.29

அகலாத – குறள்.1226

வளையாத – சிலம்பு.19.13

இல்லாத – மணி.27.70

நிகழ்காலப் பெயரெச்சம் சங்க மருவிய காலத் தமிழில் காணப்படுகின்றது.

சேர்கின்ற – பரி.22.35

இறவா நின்ற – குறள்.1157

உருள்கின்ற – சிலம்பு.29.1.11

சாதிக்கிற – மணி.29.298

**'ஆக' எனும் பெயரெச்சம் :**

'ஆக' எனும் பெயரெச்சம் மணிமேகலையில் 'ஆ' வாக வந்துள்ளது.

முழுவா – மணி.4.12

மெழுகா – மணி.19.115

அழித்தா – மணி.29.9

எதிர்கால எச்சமாகிய 'செய்பு' மெல்ல மறைந்து செய்பான், செய்வான், செய்பாக்கு போன்றவை நோக்கத்தைக் காட்ட வருகின்றது.

"நெஞ்சத்தார் காத லவாக வெய்துஉண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து" - குறள்.1128

'செயின், எனும் வினையெச்ச வடிவம் மணிமேகலையில் புது வடிவத்தில் காணப்படுவதாகச் சோ.ந. கந்தசாமி குறிப்பிட்டுச் செல்கிறார்.

குறிப்பு

கண்டால் - 3.24, 101
போனால் - 6.158, 221.84
புக்கால் - 6.24
என்றால் - 29.177, 236

**செயின், செயில், வடிவம் :**

அருயில் - மணி.6.154
எனில் - மணி.15.94
காட்டில் - மணி.29.445

பெயரெச்சம் + பின்னர் என்ற சொல்லாட்சி

பெயரெச்சம் + என்ற சொல்லாட்சியைச் சங்க மருவிய காலத் தமிழில் காணலாம்.

அடங்கிய பின்னர் - சிலம்பு.3.147
பொறுத்த பின்னர் - மணி.25.60

கொடுத்த பின்னர் என்ற சொல்லாட்சி பத்துப்பாட்டில் (8.174)ஓரிடத்தில் வருவது குறிப்பிடத்தக்கது.

கண்டதன் பின்னர், போனதன் பின்னர் போன்ற 'அன்' சாரியை சேர்ந்த வழக்கு, சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே காணப்படுகின்றது.

நடந்ததன் பின்னர் - சிலம்பு.30.85

**‘உண்டு’ எனும் குறிப்பு வினைமுற்ற :**

குறிப்பு

‘உண்டு’ எனும் குறிப்பு வினைமுற்று உயர்திணைப் பெயருடன் வருவதைச் சங்கமருவிய காலத் தமிழின் கூறாகக் கொள்ளலாம்.

“சான்றோரும் உண்டுகொல்” – சிலம்பு.19.54

வந்தாங்கு, செய்தாங்கு, வந்தன்ன என்பவை சங்கத் தமிழின் கூறு ஆகின், வந்தாற்போல, எழுந்தாற்போல (கலி.118.3) என்பவை சங்க மருவிய காலத் தமிழின் கூறாகக் கருதலாம்.

**வினையாலணையும் பொயர் :**

சங்கத் தமிழில் ஆத் - எதிர்மறை – ஓன்-ஓள்-ஓர் விகுதிகளுடன் வர, சங்க மருவிய காலத் தமிழில் இவ்வெதிர்மறை ஆன், ஆள், ஆர் விகுதிகளுடன் பெருகி வருதல் காணலாம்.

உதவாதான் - கலி.13.40
வாழாதான் - குறள்.479
நல்காதான் - சிலம்பு.24.3.2

வினையாலணையும் பெயர் விகுதியாக அன், கொண்ட உயர்திணைச் சொற்கள் சங்கத் தமிழில் சில இடங்களில் வர, சங்கமருவிய காலத் தமிழில் பல்கிப் பெருகி வருகின்றது.

வந்தவன் - புற.217.8
காணாதவன் - நற்.307.9
நட்டவன் - பரி.4.17
அளித்தவன் - கலி.146.4
அளித்தவன் - கலி.146.4
இழந்தவன் - குறள்.78

பெற்றவன் - சிலம்பு.30.122

ஈத்தவன் - மணி.24.19

குறிப்பு

**தொழிற்பெயர் :**

செய்தது, செய்வது, செய்யாதது வாய்பாட்டுத் தொழிற்பெயர்கள் சங்க மருவிய காலத்தமிழில் அதிகம் வரக்காண்கிறோம்.

மாறு கொள்வது போலும் - பரி.19.7

வறியார்க்கொன் றீவதே ஈகை – குறள்.221

சாவதுதான் வாழ்வென்று தானம் பல செய்து – சிலம்பு.29.6

காவாதது – கலி.143.55

ஆகாதது – குறள்.1291

ஆதது – மணி.28.88

**துணை வினை :**

‘இடு’ என்னும் வினை துணை வினையாகவும் வருகின்றது.

‘வேலொடு நின்றான் இடு’ என்று திருக்குறளில் (552) வருகிறது.

செய்திடும் - மணி.1.22

ஓம்பிடும் - மணி.6.155

நின்றிடின் மணி.3.25

இயம்பிடுதல் - மணி.27.36

ஆயிடின் - மணி.18.157

துணை வினை, ‘மாட்டு’ எதிர்மறையைக் காட்டுகிறது.

அடைந்திடாமாட்டா – மணி.27.145

'தன்' என்ற இடைச்சொல் தன்மையிலும் முன்னிலையிலும் வருவதைச் சிலம்பில் காணலாம்.

என்றன் மேல் - சிலம்பு.9.48

**விகுதிகள் :**

தன்மை ஒருமை விகுதிகளில் என், ஏன் என்பவற்றில் சங்க மருவிய காலத் தமிழில் 'ஏன்' விகுதிதான் அதிகமாக வந்தள்ளது. சிலப்பதிகாரத்தில் ஏன் விகுதி ககரத்துடன் வருதல் குறிப்பிடத்தக்கது.

ஆற்றுகேன் - கலி.140.14
களைகேன் - சிலம்பு.15.68
படர்கேன் - சிலம்பு.27.104
உண்கேன் - மணி.10.39
செய்கேன் - மணி.16.36

தன்மை ஒருமைக்கு 'அன்' ஈறு வந்துள்ளது. சங்க இலக்கியத்தில் 'அன்' ஈறு உயர்திணை ஆண்பாற் படர்க்கைக்கு வரும்.

அறிகுவன் யான் - விலம்பு.11.195
போக்குவன் யான் - சிலம்பு.16.129
கண்டனன் - மணி.3.22
கூறுவன் - மணி.6.34
தருகுவன் - மணி.6.34
தருகுவன் - மணி.6.174

தன்மைப் பன்மையில் எம் விகுதி பரிபாடலில் தவிர மற்ற நூல்களில் காணப்படவில்லை. ஓம் விகுதி மணிமேகலையில் காணப்படுகின்றது.

ஆருமிலோம் - மணி.5.56

முன்னிலைப் பன்மை விகுதியாக இர், ஈர், தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றது.

குறிப்பு

மணிமேகலையில் 'ம்' பயன்படுத்தப்பட்டுள்ளது.

கொண்ம் - மணி.3.101

உண்ம் - மணி.3.103

கொடும் - மணி.16.77

உரைம் - மணி.22.164.5

சிலப்பதிகாரத்தில் இருந்தவ முதல்வி, கொள்கை அறவி, குடமலையாட்டி, மூதறிவாட்டி போன்ற சொற்களைக் காணலாம். மணிமேகலையிலும் கீழ்க்கண்ட புதுச்சொல்லாக்கத்தைக் காணலாம் எனச் சோ.ந.கந்தசாமி குறிப்பிட்டுச் சொல்கிறார்.

கலம் - புற.256.1

கடம் - மணி.29.150

மொழி – குறு.111.7

பாடை – மணி.28221

பெயர் - அக.131.10

நாமம் - மணி.7.35

யானை – புற.214.4

தந்தி – மணி.18.44

இன்பம் - குறு.120.1

சுகம் - மணி.29.183

சங்கத் தமிழ் சங்க மருவிய காலத் தமிழின்ன்று ஓரளவு மாறுபட்டுச் செல்வதைக் கண்டோம். சங்கத் தமிழில் தோன்றிய கூறுகள், சங்கமருவிய காலத்தமிழில் அதிக அளவில் வருவது குறிப்பிடத்தக்கது. காலப்போக்கில் சங்கத் தமிழ்க் கூறுகளில் சில, சங்கமருவிய காலத் தமிழில் மறைந்து விட்டதும் உண்டு. போராசிரியர் ச. அகத்தியரிங்கம் அவர்கள், 'தோற்றம், வரவு, எண்ணிக்கை, மறைவு ஆகியவற்றின்

அடிப்படையில் நோக்கி, முன் பழந்தமிழ்க் கூறு, பின்பழந்தமிழ்க்கூறு எனப் பகுத்துக் காண்பது சாலச் சிறந்தது' என்கிறார். அதன் அடிப்படையில்தான் சங்கமருவிய காலத் தமிழ் இங்கு ஆராயப் பெற்றுள்ளது.

குறிப்பு

## பல்லவர் காலத் தமிழ்:

சங்க காலத்தைப் போலவும் சங்க மருவிய காலத்தைப் போலவும் பல்லவர் காலத்திலும் இ எ உ ஒ அ என்ற ஐந்து உயிர்களும் அவற்றிற்கினமான நெடில்களும் ஒலியன்களாக இருந்தமையை அறிகிறோம். எகரமும் ஒகரமும் தவிர ஏனைய உயிர்கள் சொல்லின் எல்லா இடங்களிலும் வரும். எகர ஒகரங்கள் சொல்லின் இறதியில் வராது.

மெய் ஒலியன்கள்

க் ச் ட் ற் த் ப்

ஞ் ண் ன் ம்

ய் ழ் ர் ல் வ்

ள்

என்பன மெய்யெழுத்துக்களில் ஒலியன்களாக விளங்கின. னகரத்திற்கு நகரமும் மகரத்திற்கு ஙகரமும் மாற்றொலியன்களாகும்(allophones). மொழியின் இடையிலும் கடையிலும் வருவதனை னகரம் என்றும் மொழி முதல் வருவதனை நகரம் என்றும் வேறுபடுத்தியிருப்பர்.

நெடில் மெய்களுக்கு அல்லது மெய்ம் மயக்கங்களுக்கு முன்னர் நெடில் குறிலாக மாறுவது பல்லவர் காலத்திலும் பின்னரும் பெருவழக்காயிற்று.

நீக்கி > நிக்கி

ஆழாக்கு > ஆழக்கு

தீந்தமிழ் > திந்தமிழ்

வீற்றிருந்தருளி > விற்றிருந்தருளி

மூன்று > முன்று

பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைக் காண்கிறோம்.

மங்கலம் > மங்கிலம்

மேலன > மேலின

கடா > கிடா

ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த கூரம் செப்பேட்டில் ஐந்தே என்பது அயிந்தே எனக் காணக்கிடக்கிறது.

ஐகாரம் அகரமாவதுடன் எகரமாகவும் மாறுகின்றது.

அரசர் > அரைசர் > அரெசர்

தலை > தலெ

சினை > சினெ

எல்லை > எல்லெ

அரைசர் > அரெசர் என்று சொன்னாலும், சொல்லின் இடையிலுள்ள எகரம் அகரமாகவே எழுதப்பெறும். ஆனால், சொல்லின் இடையில் எகரம் அகரமாக ஒலிக்கப்படவில்லை. அரெசர் என்ற வடிவத்திலுள்ள அகரம் கீழ்நடு உயிர் (Low cenral). ஆனால், சொல்லினிடையில் அகரம் முன் தாழ் இடை (Front Low mid) உயிராக மாறுகின்றது.

யகரம் கெடுதல் சங்கத் தமிழ், சங்கமருவிய காலத் தமிழ் மாற்றம் பல்லவர் காலத்திலும் தொடர்கின்றது.

யாராலும் > ஆராலும் - திருவா.8.2

யானை > ஆனை – திருவா.621

யாக்கை > ஆக்கை – திருவா.6.10

குறிப்பு

க்த் > த்த் : இது பல்லவர் காலத்திலும் மாறுகின்றது.

பக்தி > பத்தி – திருவா.11.12

முக்தி > முத்தி – திருவா.11.12

ற்ற > த்த் : பற்றேதும் > பத்தேதும் - திருவா.10.5

கி.பி. எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களிலேயே இம்மாற்றங்களைக் காணலாம்.

ஆற்றுக் கால் > ஆத்துக்கால்

சேற்று நிலம் > சேத்து நிலம்

இருபதாம் நூற்றாண்டுப் பேச்சுத் தமிழிலும் ற்ற் > த்த் மாற்றங்களைக் காணலாம். பல்லவர் கால மாற்றம் இன்று நிலைத்துவிட்டதைக் காண்கிறோம்.

பற்றேதும் > பத்தேதும் - திருவா.10.5

பற்று வரவு > பத்து வரவு

கொற்றவன்குடி > கொத்தவன்குடி > கொத்தகுடி

மெய்யொலிகள் : ட, ற :

டகரம் நுனிநா அண்ணம் சேரப் பிறப்பதாகும். றகரம் நுனிநா அணரி அண்ணத்தைத் தொடுவதால் பிறப்பதாகும். எனவே மேற்புற நுனிநா ஒலியே டகரமாகும். வளைநா ஒலியே றகரமாகும். ஆனால், இப்பொழுது வளைநா ஒலியான டகரம் தொல்காப்பியர் காலத்து வளைநா ஒலியாக (Retroflex) இல்லை. தமிழ் வடமொழியோடு மிகமிகப் பழகிய காலத்து வடமொழியிலுள்ள மூர்த்தாட்சரம் என வளர்ந்த

குறிப்பு

டகரத்தின் வளைநா ஒலியே தமிழிலும் வந்துவிட்டது. தமிழ் டகரத்தைச் சமஸ்கிருதத்தில் எழுத்துப் பெயர்ப்புச் (Transliteration) செய்வதால் உணரலாம். நுனியண்ண ஒலியான (alveolar) றகரம் சமஸ்கிருதத்தில் டகரமாக எழுதப்பட்டது. இதனால் நுனியண்ண ஒலியான (alveolar) றகரத்தின் உச்சரிப்பு மாறிற்று. இரட்டை றகரம் (பல்லின ஒலியாகி) இரட்டைத் தகரமாகியது.

முற்ற > முத்து

மெய்யொலி இடையண்ணமாதல் (Palatalisation of consonants) :

கைந்நின்ற > கைஞ்ஞின்ற

மெய்ந்நின்ற > மெய்ஞ்ஞின்ற

செய்ந்நின்ற > செய்ஞ்ஞின்ற

கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தேவாரத்தில் 'ந' 'ஞ'கரமாக மாறியுள்ளது. இடையண்ண ஒலியோ முன்னுயிரோ முன்னால் வந்தால் இம்மாற்றம் ஏற்படும். இதனை வரையறுத்த சூழல் எனலாம். இவ்வாறு வரையறுத்த சூழலால் அமையாத இடங்களிலும் 'ந'கரம் 'ஞ'கரமாதலைக் காணலாம்.

இடையண்ணமாதலைத் திருவாசகத்திலும் காண்கிறோம்.

த்த் > ச்ச்

வித்தை – விச்சை – திருவா. 6.21

பித்தேற்றி > பிச்சசேற்றி – திருவா.8.5

பித்தன் > பிச்சன் - திருவா.6.9

**இதழ்ச்சாயல் பெயல் (Labialization) :**

உங்கள் > உங்கொள் > உம்கொள் (அப்பர் தேவாரம்)

தடையொலிகளின் ஒலிப்புடைமை (Voicing of the Plosive) :

*Self-Instructional Material*

குறிப்பு

தடையொலிகள் ஒலிப்புடையனவாக விளங்கியதைப் பல்லவர் காலக் கல்வெட்டுக்களில் அறியலாம். தமிழ் இடப்பெயர்களும் சிறப்புப் பெயர்களும் கல்வெட்டுக்களில் சமஸ்கிருதத்தில் வெட்டப்பட்டுள்ளமையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. சில தமிழ்க் கல்வெட்டுக்கள் சமஸ்கிருத, கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. சமஸ்கிருத ஒலிப்புடை ஒலி சில இடங்களில் ஒலிப்பில் ஒலியாக வெட்டப்பட்டுள்ளன. ஆனால், அவையே வேறு இடங்களில் ஒலிப்புடை ஒலியாக எழுதப்பட்டுள்ளன. தடையெலிகளின் ஒலிப்புடைமையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

i. உயிரிடைத் தடையொலி (Plosives occurring intervocally)

ii. இன மூக்கொலி முன் தடையொலி (Plosives occurring after the homorganoc nasals)

தடையொலிகள் உயிர் ஒலிகளுக்கிடையில் வருகின்ன. கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த நெடுஞ்சடையன் பராந்தகனின் (169-190) வேள்விக்குடிச் செப்பேட்டில்,

Paragan > Parakan

என்று சமஸ்கிருதப் பெயர் ஒன்று காணப்படுகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த மூன்றாம் நந்திவர்மனுடைய பாகூர்ச் செப்பேடுகளில்,

நிலைதாங்கி (g)

என்றும் வருகின்றது. சமஸ்கிருதச் சொற்களில்லாத தமிழ்ச் சொற்களில் வரும் உயிரிடைத் தடையொலிகள் 11ஆம் நூற்றாண்டு வரை ஒலிப்பில் ஒலியாக விளங்கின. ஒலிப்பில் தடையொலிகள் தன் இன மூக்கொலிக்கு முன் தோன்றும். ஒன்பதாம் நூற்றாண்டுச் சின்னமனூர்ச் செப்பேடுகளில்,

வேம்ப (P) நாடு

செங்கு (K) டி

குறிப்பு

என்றும் மூன்றாம் நந்திவர்மனுடைய ஆவணங்களில்

தந்தி (f) வர்மன்

நிலைதாங்கி (g)

விளங்கா (g) டு

நந்தா (d) விளக்கு

போன்றவற்றில் தந்திவர்மன் தவிர மற்றவற்றில் ஒலிப்புடை ஒலியாக ஒலிக்கின்றன.

உயிரிடைத் தடையொலிகள் ஒன்பதாம் நூற்றாண்டில் தான் ஒலிப்புடை ஒலிகளாக விளங்கின. அதற்கு முன் ஒலிப்பில் ஒலியாகத்தான் விளங்கின.

**ஒருங்கிணைவு (Coalesonce)**

**'ந'கர 'ன'கரங்கள் ஒன்றாதல் :**

பல்லின மூக்கொலியான நகரம் அண்பல் மூக்கொலியான 'ன'கரத்துடன் ஒன்றாதல் என்பர். பல்லினவேருக்கும் ஈற்றும் சிறிது மேலாக ஒலிக்கும் னகர ஒலியே நகரத்தின் ஒலியாக மாறியது. பண்டைத் தமிழில் 'ந'கரம் உயிர்களுக்கிடையேயும் சொல்லீற்றிலும் வரும். ஆனால், இரட்டித்த பல்லின ஒலியான நகரம் இரட்டை அண்பல் ஒலி எனத் தவறாக எழுதப்படவில்லை. தடையெலிகளை அடுத்து வரும்போது (பந்து போன்ற சொற்களில்) மயங்குவதில்லை. ஆனால், இவை நெடிலாக வந்து தடையொலிகளால் தொடரப்பெறும்போது மயங்கலாயின. ஆனால். னவுக்குப் பதிலாக 'ந' சொல்லின் இடையிலும் சொல்லின் இறுதியிலும் சொல்லின் முதலிலும் எழுதப்பெற்றது. இம்மூன்று இடங்களிலும் மாற்றம் ஏற்பட்ட பின்னரே இரட்டை நகரமாக எழுதப்பற்றது.

குறிப்பு

. பல்லவர் காலத்தில் 'ந'வுக்குப் பதிலாக 'க'கரம் பத்து விழுக்காடு எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், னவுக்குப் பதிலாக 'ந'கரம் இரண்டு விழுக்காட்டுக்கும் குறைவாகவே எழுப்பட்டிருக்கிறது.

ந் > ன் - பத்து விழுக்காடு

ன் > ந் - இரண்டு விழுக்காடு

'ன'கரம் 'ந'கரத்தின் இடத்தைப் பிடித்துக்கொண்டது. இதனால் இம்மாற்றம் பல்லவர் காலத்தில் நன்கு நிலைபெறவில்லை எனலாம். பல்லவர் காலத்திற்குள் 'ந'கரம் மொழிக்கு ஈற்றில் வருவது மறைந்தது. தொகையிலன்றி நகரம் இடையில் வருலவதும் இல்லை. நகர மாற்றம் இதனை மாற வைத்தது. இதனால் மொழிக்கு முதலில் வந்தால் 'ந' என்றும் பிறவிடத்திலும் 'ன' என எழுதுவதும் மரபாகி விட்டது. பல்லின மூக்கொலி மொழி முதல் எழுதும் மரபு பல்லவர் காலத்தில் துவங்கியிருக்கலாம்.

**றகர ரகர மயக்கம்**

ஒலியனியலில் மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றம் றகர ரகர மயக்கம் ஆகும். இம்மயக்கம் முதற்கண் மெய்ம் மயக்கத்தில் ஏற்பட்டிருக்கக் கூடும். இ∴து ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பத்தாம் நூற்றாண்டிலும் தோன்றியது. பதினோராம் நூற்றாண்டில் உயிரிடையே இம்மயக்கம் காணத் தொடங்கியது.

**னகர ழுகரங்கள் ஒன்றாதல்**

இவ்விரண்டு ஒலிகளை ஒலிக்கும்போது அணர்தல் இல்லாமை முக்கிய வேறுபாடாகும். 'நாடடாழ்ச்சி' என்ற சொல்லில் 'ஆள்' என்பது 'ஆழ்' என்றே ஏழாம் நூற்றாண்டிலேயே எழுதப் பெற்றிருக்கிறது.

ஆள் > ஆழ்

குறிப்பு

'ஆள்' என்ற அடிச்சொல் தொடர்ந்து 'ஆழ்' என்பதைத் தனக்கு மாற்று வடிவமாகக் கொண்டது. வைணவ அடியாரைக் குறிக்கும் 'ஆழ்வார்' என்ற சொல் 'ஆள்வார்' என்றே இருந்திருக்க வேண்டும். கல்வெட்டுக்கள் அரசர்களை 'ஆள்வார்' என்று கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**'ழ'கரம் 'ள'கரமாக மாறல்**

சிறப்பு 'ழ'கரம் 'ள'கரமான மாற்றம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கி.பி.எட்டாம் நூற்றாண்டிலேயே இம்மாற்றத்தைக் காணலாம்.

கிழமை > கிளமை

கிழக்கு > கிளக்கு

புகழ் > புகள்

**'ப'கரம் 'வ'கரமாதல்**

உயிரிடையே பகரம் வகரமாகிறது. சில இடங்களில் பகரம் மகரமாக மாறிய மாற்றம் பல்லவர் காலத்துக்கு முன்பே ஏற்பட்டிருக்க வேண்டும்.

நிபந்தம் > நிமந்தம்

மொழி முதல் மகரம் வகரமாவதும் உண்டு.

மிருக > விருக

**உகர முடிபாதல்**

பழங்காலத்தில் தடையொலிகள் சொல் இறுதியில் தோன்றாது. அகரத்தால் தொடரப்பெற்றிருக்கும். பல்லவர் காலத்தில் வேறு மெய்களும் சில உயிர்களும் உகரத்தில் முடிந்தன. ஆனால்,

*Self-Instructional Material*

இம்மாற்றம் தொல்காப்பியர் காலத்திலேயே தொடங்கி விட்டது எனலாம் (புள்ளி மயங்கியல் 1.78).

குறிப்பு

சொல்லின் இறுதியில் அமையாத போதும் குற்றியலுகரம் முழுமையாக ஒலிக்கத் தொடங்கியது. செய்யுளில் குற்றியலுகரம் அசைக்கு உறுப்பாகாமை போல, பல்லவர் காலத்தில் சொல்லின் இடையிலும் மறைந்து இது குற்றியலுகரமாயிற்று என்பர்.

**ஆய்தம் :**

சங்க காலத்திற்குப் பிற்பட்ட இலக்கண நூல்களில் ஆய்தம் அசைக்கு உறுப்பாகும் எழுத்து என்று கூறப்பட்டுள்ளது. ஆய்தம் அசைக்கு உறுப்பாகின்றது எனின், அ்.்து அளபெடை என்பர்.

ஒலிப்புடை எழுத்துத்தான் அளபெடுக்கும். அ்.்து என்ற சொல்லோடு மெய்ம் முதல் சொல் தொடருமானால் (தொல்.423, 424) ஆய்தம் மறையும். உயிரால் தொடரும்போது மாற்றம் அடையாது. இதனால் ஆய்தம் ஒரு புணர்வு வடிவம் என்றோ நிறுத்திசை என்றோ அறியலாம். ஆனால், பிற்காலத்தில் ஆய்தம் தனி ஒலி என்றும் அது தடையொலியினின்றும் வேறுபட்டது என்றும் கருதினர். திருக்குறள் காலத்தில் ஆய்தம் தனி ஒலியாகக் கருதப்பட்டது. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த தேவாரத்தில் ஆய்தம் ஒலிக்கூறாக இணைந்துள்ளது. பெருங்கதையில் ஆய்தம் தனி ஒலியாக யகர மெய்யுடன் எதுகையில் வருகிறது. நம்மாழ்வாருடைய திருவாய்மொழியிலும் (4.11) எதுகை வருவதைக் காணலாம். இக்காலத்தே,

ஆய்தமும் யவ்வு மவ்வோடு வரினே
ஐயென் னெழுத்தொடு மெய்பெறத் தோன்றும்.

என்ற நூற்பா ஆய்தம் யகரத்தை ஒத்தது என்று உரைக்கின்றது. பல்லவர் காலத்திய வேள்ளிக்குடி செப்பேட்டில் ஈது, இ்.்து, இது என்ற மூன்று வடிவங்கள் ஒரே பொருளில் காணப்படுகின்றன.

குறிப்பு

இதனாலும் ஆய்தம் யகர ஒலி பெற்றமை விளங்கும். கி.பி.1177-ல் 'திருவெ.:.கா' என்ற இடப்பெயரில் ஆய்தம் காணப்படுகின்றது. பின்னர் இலக்கிய வழக்கைத் தவிர பிறறவற்றில் வழக்கிழந்து விட்டது. தொல்காப்பியர் கூறிய சார்ந்து வரும் வல்லெழுத்தின் பிறப்பிடம் இருந்த நிலை மறைந்து பல்லவர் காலத்தில் ஆய்தம் ஒலிப்புடைய எழுத்தாகி அளபெடுத்தது. மெல்லண்ண உரசொலியாக வருவதை ஆய்தக் குறுக்கம் என்றனர். இம்மாற்றம் பிற்காலச் சோழப் பேரரசின் தொடக்கத்தில் ஏற்பட்டது.

கி.பி.5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் தோன்றிய அவிநயம், சொல்லின் எல்லா இடங்களிலும் ஔகாரம் வரும் என்கிறது. இக்கால கட்டத்தில் தமிழில் நிறைய வடமொழிச் சொற்கள் வழங்கினமையே காரணமாகும். அவிநயனார்,

கசதப ஙவ்வே யாதியும் இடையும்
டறவிடை ணனரழ வளஇடை கடையே
ஞநமய வவ்வே மூன்றிடம் என்ப

என்று ஒலிகள் வருமுறையை விளக்குகிறார். ஙகரம் மொழி முதல் வருவதையம் சுட்டிக்காட்டுகிறார். சொல்லியல் மாற்றங்களாலும் ஒலியியலிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. தொல்காப்பியர் காலத்தில் 'அன்' சாரியை பெரு வழக்காகவும் 'இன்' சாரியை சிறுவழக்காகவும் இருந்தன. பிற்காலத்தில் 'அன்' சாரியைக்குப் பதிலாக 'இன்' சாரியை பயன்படுத்தப்பட்டது.

மூக்கொலியுடன் வரும் வினை வடிவங்கள் தன் வினைகளாகும். வெடிப்பொலிகளுடன் வரும் வடிவங்கள் பிறவினைகளாகும். ஆனால், கல்வெட்டுக்களில் மூக்கொலியுடன் வரும் சில வடிவங்கள் பிறவினைகளாக வருகின்றன.

குறிப்பு

'அழுத்து' என்பதற்குப் பதில் 'அழுந்து' என்றும் 'தவித்தன' என்பதற்குப் பதிலாக 'தவிந்தன' என்றும் வருகின்றது. தொடக்கத்தில் தன்வினை, பிறவினை பாகுபாடு இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

பெயர்ச்சொற்களில் இரட்டைப் பன்மைச் சொற்கள் இடைக்காலத் தமிழில் வருவது போன்று, இரட்டைப் பன்மை விகுதிகள் வினைச்சொற்களிலும் காணப்படுகின்றன.

கழிக்கின்றீர்கள் - அப்பர் தேவா.412.1
கரப்பர்கள் - அப்பர் தேவா. 983.1.
அறிந்தார்கள் - அப்பர் தேவா.1867.4
உணர்ந்தோர்கள் - அப்பர் தேவா.1463.4

குறுந்தொகையில் பெயரெச்சத்தில் நூற்றிரண்டு இடங்களில் 'இ'கரம் வர, ஒரே ஒரு இடத்தில் மட்டும் 'இன்' (நீடின குறுந்309.3) வருகிறது. அப்பர் தேவாரத்தில் நானூற்று முப்பத்தியாறு இடங்களில் 'இ' வர, இருபத்து நான்கு இடங்களில் 'இன்' வருகிறது. இன்றைய தமிழில் 'ன்' முழு ஆட்சி பெற்று விட்டதைக் காண்கிறோம்.

வாராமல், போகாமல் என்பவற்றிலுள்ள் ஆமல் > ஆம எனத் திருவாசகத்தில் வழங்குகிறது.

பிறவாமல் > பிறவாமே – திருவா.8.12

'ஆக' என்னும் வினையடை உருபு 'ஆ' என மாறலைத் திருவாசகத்தில் காண்கிறோம்.

கோவணமாக > கோவணமா – திருவா.12.2

குறிப்பு

'ஆறு' என்ற உருப 'ஆ' என மாறலும் திருவாசகத்தில் காணப்படுகின்றது.

வியப்புமாறு > வியப்புறுமா – திருவா.12.2

கொண்டவாறு நயந்து > கொண்டவா நயந்து – திருவா.11.10

நஞ்சுண்டவாறு > நஞ்சுண்டவா – திருவா.11.20

அப்பர் தேவாரத்தில் அருள், இரு, ஒழி, பெறு, இடு, போ, தா, செய், புரி, வை, விடு, உண், கொள், படு, கில் போன்றவைகள் துணை வினைகளாகப் பயன்படுகின்றன.

சிறு வினா :

1. ஒரு மொழியின் வளர்ச்சி நிலையை அறிய உதவும் சான்றாதாரங்கள் யாவை?
2. ஒரு மொழியினை அறிய இலக்கண நூல்கள் எவ்வாறு பயன்படுகின்றன?
3. கல்வெட்டுக்களில் உடம்படுமெய் இல்லாமல் எவ்வாறு எழுதப்பட்டுள்ளன?
4. தொல்காப்பியர் கூறும் மூன்று சிறப்பொலிகள் யாவை?
5. பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைச் சான்றுடன் எழுதுக.

பெரு வினா :

6. தொல்காப்பியர் வழி தனி மெய்யெழுத்து வடிவத்தினைக் கூறுக.
7. தொல்திராவிடத்தில் உயிர் ஒலியன்கள் பற்றி விளக்கி கூறுக.
8. மொழியின் தோற்றத்தினை உரையாசிர்களின் வழிநின்று விளக்கி உரைக.
9. கல்வெட்டுக்கள் வழிநின்று தமிழ்மொழியின் வளர்ச்சியை விளக்கி உரைக.

கட்டுரை வினா :

10. கல்வெட்டுகள் தமிழ்மொழியின் வரலாற்றினை அறிய எவ்வாறு பயன்படுகின்றன என்பதனை நும் பாடவழி விரித்துரைக.
11. தொல்காப்பியர் கூறும் வேற்றுமை உருபுகளை நும் பாடவழி நின்று விரித்துரைக.
12. தொல்காப்பியர் கூறும் சிறப்பொலிகள் பற்றி கட்டுரை வடிவில் தருக.

குறிப்பு

## 5. சோழர் காலத் தமிழ்

பல்லவர் காலத்திய ஒலியன்களான உயிர் எழுத்துக்கள் சோழர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின.

இ ஈ உ ஊ

அ ஆ

பல்லவர் கால மெய்யொலியன்கள் சோழர் காலத்திலும் தொடர்ந்தன.

க் ச் ட் ற் த் ப்

ண் ன் ம்

ய் ழ் ர் ல் வ்

ள்

மொழி முதல், இறுதி எழுத்துக்களைப் பற்றிச் சோழர் காலத்தில் தோன்றிய வீரசோழியமும் நன்னூலும் கூறுகின்றன. இவ்விலக்கணங்கள் கூறுவதைத் தொல்காப்பியத்துடன் ஒப்பிட்டு நோக்கின், மொழி வளர்ச்சி, மாற்றம் நன்கு புலனாகும்.

குறிப்பு

## வருமுறை (Distrivution of Phonemes)

### மொழி முதல் எழுத்துக்கள்

| வ.எண். | தொல்காப்பியம் | நன்னூல் | வீரசோழியம் |
|---|---|---|---|
| 1 | எல்லா உயிர்களும் வரும் | எல்லா உயிர்களும் வரும் | எல்லா உயிர்களும் வரும் |
| 2 | க், த், ந், ப், ம் ஆகியன எல்லா உயிர்களுடன் வரும் சகரம் அ, ஐ, ஔ தவிர எனையவற்றுடன் வரும் | க், ச், த், ந், ப், ம் ஆகியன எல்லா உயிர்களுடன் வரும் | க், ச், த், ந், ப், ம் ஆகியன எல்லா உயிர்களுடன் வரும் |
| 3 | ஞகரம் ஆ, எ, ஒ ஆகியவற்றுடன் வரும் | ஞகரம் அ, ஆ, எ, ஒ ஆகியவற்றடன் வரும˙ | ஞகரம் அ, ஆ, எ, ஒ ஆகியவற்றுடன் வரும் |
| 4 | யகரம் ஆகாரத்துடன் மட்டும் வரும் | யகரம் அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ உயிர்களுடன் வரும் | யகரம் அ, ஆ. உ, ஊ, ஒ, ஔ உயிர்களுடன் வரும் |
| 5 | வகரம் பின்னுயிர்களான உ, ஊ, ஒ, ஓ என்பவற்றைத் தவிர பிறவற்றுடன் வரும் | வகரம் பின்னுயிர்களான உ, ஊ, ஒ, ஓ என்பவற்றைத் தவிர பிறவற்றுடன் வரும் | வகரம் பின்னுயிர்களான உ, ஊ, ஒ, ஓ என்பவற்றைத் தவிர பிறவற்றுடன் வரும் |

### மொழி இறுதி எழுத்துக்கள்

| | தொல்காப்பியம் | நன்னூல் | வீரசோழியம் |
|---|---|---|---|
| 1 | எல்லா உயிரும் | எல்லா உயிரும் | எ, ஒ என்ற உயிர்களைத் தவிர எல்லா உயிர்களும் |
| 2 | ம், ஞ், ண், ன், ந், ய், ர், ல், வ், ள். ழ் | ம், ஞ், ண், ன், ந், ய், ர், ல், வ், ள், ழ் | ம். ண், ய், ர், ல், ன், ழ், ன் ஆகியன |

குறிப்பு

எல்லா உயிர் எழுத்துக்களும் மொழி முதலில் வரும் என்பது தொல்பாக்கியம், வீரசோழியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களில் காணப்படுகின்றன. அதே போன்று க், ச், த், ந், ப், ம் ஆகியன எல்லா உயிர்களுடன் வரும் என்பது தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல் ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. ஞகரம் ஆ, எ, ஒ ஆகியவற்றுடன் வரும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால, வீரசோழியம் நன்னூல் அக்கால வழக்கையொட்டி மேற்கண்டவற்றைத் தவிர அகரத்துடனும் வரும் எனக் கூறுகின்றன. யகரம் 'ஆ'காரத்துடன் மட்டும் வரும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால் யகரம் சோழர் காலத்தில் ஆகாரத்துடன் மட்டுமின்றி அ, உ, ஊ, ஒ, ஔ வற்றுடனும் வரும் என வீரசோழியமும் நன்னூலும் கூறுகின்றன. வகரம் பின்னுயிர்களான உ, ஊ, ஒ, ஓ என்பவற்றைத் தவிரப் பிறவற்றுடன் வரும் எனத் தொல்காப்பியம் கூறுவது சோழர் காலத்திற்கும் பொருந்துவதாகும். எல்லா உயிரும் மொழியிறுதி எழுத்துக்களாக வரும் எனத் தொல்காப்பியமமு் நன்னூலும் கூறுகின்றன. ஆனால், வீரசோழியம் எ, ஒ என்ற உயிர்களைத் தவிர எல்லா உயிர்களும் மொழிழயிறுதியில் வரும் எனக் கூறுகிறது. பல்லவர் காலக் கல்வட்டுக்களிலும் இதே நிலை காணப்படுகின்றது. ம், ஞ், ண், ன், ந், ய், ர், ல், வ், ழ் ஆகிய மெய்யெழுத்துக்கள் மொழியிறுதியில் வரும் எனத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்றன. ஆனால், வீரசோழியம் மேற்கண்ட மெய்களுள் ஞ், ந், வ் மொழியிறுதியில் வாராது எனக் கூறுகிறது. வருமுறையில் (Distribution of phonemes) மொழி வளர்ந்த வளர்ச்சியைக் காண்கிறோம். தொல்காப்பியம் ஆய்தத்தைச் சார்பெழுத்து என்கிறது. ஆனால், வீரசோழியம் ஆய்தத்தை தனி ஒலியாகக் கருதுகிறது. நேமிநாதம் ஒன்பது உயிர்களே (ஏகாரம், ஓகாரம். ஔகாரம் நீங்கலாக) மொழிக்கு இறுதியில் வரும் எனக் கூறுகிறது (நேமிநாதம் நூற்பா.8). மொழிக்கு முதலில் யாகார உயிர்மெய் ஆகாரமாக (யகர மெய் கெடுதல்) வருதலை 'யா முதற் பேர் ஆ முதலாம்' (நேமிநாதம் நுஸற்பா.36) என்று நேமிநாதம் கூறுகின்றது. இம்மாற்றம் பழந்தமிழுக்கு முன்னரே (Pre Tamil Period) அழு, ஆள் என்ற இரண்டு சொற்களில் ஏற்பட்டிருக்க வேண்டும் எனத் திராவிட மொழியியல் அறிஞரொருவர் கருதுகிறார். ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த நான்கு கல்வெட்டுக்களில்

'யான்' என்ற வடிவம் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இடைக்கால இலக்கியமாகிய அப்பர் தேவாரத்திலும் யார் என்பது ஆர் என மாறியுள்ளது(அப்பர் தேவா.5.45.1) சகர ஞகர யகர மெய்களின் முன்னர் மொழி முதலிலும் இடையியலும் அகரம் ஐகாரம் என்ற கருத்தை,

…. சஞயமுன்
அஜயாம் ஆதியிடை - நேமி.எழு.9

என்று நேமிநாதர் கூறியுள்ளார். அதாவது அகரம் ஐகாரமாகவும் ஐகாரம் அகரமாகவும் மாறியுள்ளன. ஐகாரம் யகர மெய்க்கு முன்னால் மொழி முதலில் அகரமாக மாறியதற்குப் பழந்தமிழிலும் சான்று உள்ளது. (மையல்>மயல்-பதிற்.62.7, குறு.156.7), சகர ஞகர மெய்க்கு முன்னால் ஐகாரம் அகரமாக மாறியதற்கு அப்பர் தேவாரத்தில் சான்று உள்ளது.

ஐந்து > ஐஞ்சு → அஞ்சு – அப்பர் தேவாரம் 4.18.5
வைத்து > வைச்சு → வச்சு - அப்பர் தேவாரம் 5.41

சோழர் கால ஒலி மாற்றங்களை இலக்கிய, இலக்கணக் கல்வெட்டுக்களைக்கொண்டு ஆராய்வோம். பல்லவர் கால மாற்றங்கள் பெரும்பாலும் சோழர் காலத்திலும் தொர்கின்றன எனலாம்.

**'அ'கரம் 'இ'கரமாதல் :**

அ > இ

அதனுக்கு > அதினுக்கு
சுலபம் > சுலிபம்
மேலன > மேலின

**'அ'கரம் 'உ'கரமாதல் :**

குறிப்பு

அ > இ

கொண்டது > கொண்டுது

புகுந்தது > புகுந்துது

**'உ'கரம் 'இ'கரமாதல் :**

அமுது > அமிது

அருளின > அரிளின

செலுத்தி > செலித்தி

அமுதசாகரர் > அமிதசாகரர்

**'எ'கரம் 'இ'கரமாதல் :**

பெயரால் > பியரால்

செலவு > சிலவு

எனக்கு > இனக்கு

எடுத்து > இடுத்து

**உயர் உயிர் மாற்றங்கள் :**

இ > எ

உ > ஒ

மாற்றம் சமஸ்கிருதச் சொற்களைப் பொறுத்தவரை காணப்படுகின்றது.

நிதி > நெதி

புத்தகம் > பொத்தகம்

உலகம் > ஒலகம்



தமிழ்ச் சொற்கள் சிலவற்றில் இகரம் எகரமாகின்றது

பிறவும் > பெறவும்

**'உ'கரம் 'ஒ'கரமாதல் :**

உ > ஒ

கி.பி. 11ஆம் நூற்றாண்டு முதல் தமிழ்ச் சொற்களில் உள்ள 'உ'கரம் 'ஒ'கரமாகிறது.

குலைதர > கொலைதர

குந்தள அரசர் > கொந்தள அரசர்

குலோத்துங்க > கொலோத்துங்க

உபாதி > ஒபாதி

**'இ'கரம் 'அ'கரமாதல் :**

அதியமான் > அதயமான்

ஞாயிறு > ஞாயறு

வயிறு > வயறு

**இடையண்ணச் சாயல் (Palatalisation) :**

சொல்லின் இறுதியிலுள்ள உகரம் இடையண்ணத் தடையொலியான சகரத்திற்குப் பின் வந்தால் இகரம் ஆகும்.

கழஞ்சு > விளைஞ்ச

**குறிப்பு**

இ, ய, ஐ மூன்றுக்குப் பின்னர் வரும் மூக்கொலியும் (ந) அதற்கினமான பல்லொலியும் (த) இடையண்ணச் சாயல் பெறும்

ஐந்து > அஞ்சு

விளைந்த > விளைஞ்ச

சகர ஞகர மெய்க்கு முன்னால் ஐகாரம் அகரமாக மாறியதற்குப் பல்லவர் கால அப்பர் தேவாரத்தில் சான்று உள்ளது.

ஐந்து > அஞ்சு – அப்பர் தேவா. 4.18.5)

அகரம் ஐகாரமாதலும் உண்டு. இம்மாற்றம் பழந்தமிழில் சகர யகர மெய்களுக்கு முன்னர் காணப்படுகிறது.

அரசர் > அரைசர்

அரசு > அரைசு – பதிற்.37.141, புற.26.6

முரசு > முரைசு – 62.9, கலி.132.9

இம்மாற்றம் கி.பி.11, 12ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி இலக்கிய மொழிகளிலும் காணப்படுகின்றது.

சமயம் > சமையம்

தச்சன் > தைச்சன்

முன்னோ பின்னோ இடையண்ண ஒலி தொடராத போதும் அகரம் ஐகாரமாகும்.

அத்தை > ஐத்தை

அத்தான் > ஐத்தான்

குறிப்பு

இம்மாற்றத்தை இக்கால சமூகக் கிளைமொழிகளிலும் காணலாம்.

**ந்ந் > ஞ்ஞ் :**

இரட்டித்த நுனிநா பல் மூக்கொலிகள் கூட இடையண்ண ஒலிகளை அடுத்து டையண்ண மூக்கொலிகளாகின்றன.

ஐந்நூறு > ஐஞ்|று

இந்நிலம் > இஞ்ஞிலம்

**'ஐ'காரம் 'எ'கரமாதல் :**

அரசர் > அரைசர் > அரெசர்

சினை > சினெ

தலை > தலெ

எல்லை > எல்லெ

**எகர முடிபு :**

எகரம் மொழிக்கு முதலில் பெரும்பாலும் வரும். இறுதியில் அளபெடையில் மட்டுமே வரும். ஆனால், எகார ஐகாரங்களின் திரிபாக எகரம் வருதலால் எகரம் சொல்லின் இறுதியில் வருகிறது.

ஏ > எ

ஐ > எ

இது புற மாற்றமாகும்.

அரைசன் > அரெசன் என்று சொன்னாலும், சொல்லின் இடையிலுள்ள எகரம் அகரமாகவே எழுதப்பெறும். ஆனால், சொல்லின் இடையில் எகரம் அகரமாக ஒலிக்கப்படவில்லை. அரெசன் என்ற வடிவத்திலுள்ள அகரம் கீழ்நடு உயிர். ஆனால், சொல்லினிடையில் அவ்வகரம் முன்தாழ் இடை உயிராக மாறுகின்றது.

**மொழி முதல் இகரத்துடன் யகரம் :**

பல்லவர் காலத்தில் முன்னுயிர்கள் அரையுயிரான யகரத்துடன் இணைந்து ஈரொலியுயிராக மாறிக் கி.பி.11, 12, 13ஆம் நூற்றாண்டுகளில் முன்னுயிர்கள் வழுக்கொலியான யகரத்தைச் சொல்லின் முதலில் பெற்றன.

இக்கோயில் > யிக்கோயில்

இரண்டு > யிரண்டு

இறை > யிறை

இது > யிது

இவன் > யிவன்

யகரம் இகரத்திற்கொத்த இடையெழுத்து உரசுதல் உள்ளபோது இகரம் யகரமாகும். அலகு பெறும் உயிரொலி ஈற்றில் அடுத்துச் சொல்லப் பெறும்போது இகரம் யகரமாகும்.

போஇ > போய்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இகரத்தை யிகரமாக ஒலிப்பதைக் கால்டுவெல் சுட்டிக்காட்டியுள்ளார். இத்தகு மாற்றத்தால் சொல் முதலில் இல்லாத யிகரம் இகரமாகின்றது.

ஆயிரம் > ஆஇரம்

குறிப்பு

இவ்வாறு திரியும் 'ஆஇரம்' என்ற சொல் தொல்காப்பியர் கால 'ஆஇரம்' என்ற சொல்லிலிருந்து வேறுபட்டது. முன்ப கூறியது யிகரத்தின் திரிபாகும். பின்னர் கூறியது தொல்காப்பிய காலத்தது ஆகும். தொல்காப்பிய காலத்து உயிர்கள் ஒன்றோடொன்று மயங்கி வரும். உடம்படுமெய் வராது.

**இதழினமாதல் (Labialisation) :**

இதழொலிக்குப் பின் வந்தாலும் முன் வந்தாலும் அகரம் ஒகரமாகிவிடும்.

வாணகப்பாடி > வாணகொப்பாடி

அனுபவித்து > அனுபொவித்து

புறவரி > புறொவரி

செப்பருந்திறந்து > செப்பொருந்திறத்து

அதே சூழ்நிலையில் வேறு சில இடங்களில் அகரம் நடுப்பின்னுயிராகவோ (Mid back vowel) குற்றியலுகரமாகவே ஒலிக்கம். இக்கால உச்சரிப்பிலும் இதழொலியாதலைக் காணலாம்.

கம்பம் > கம்பொம் > கம்போ

முன்னிலைப் பன்மைப் பின்னொட்டுடைய

உங்கள் > உங்கொள்

என மாறுகிறது. வைணவச் சார்புடைய மணிப்பிரவாள நடையில்,

கள் > கொள்

என்று மாற்றமடைந்திருப்பதைக் காணலாம்.

குறிப்பு

கேட்டீர்கள் > கேட்டீர் கொள்

காடுகள் > காடு கொள்

என மாறியுள்ளது.

**இகரம் உகரமாதல் :**

களிறு > களுறு

தமிழ் > தமுழ்

தம்பிரான் > தம்புரான்

முசிறி > முசுறி

மதில் > மதுல்

இதழொலி (labial), வளைநா ஒலி (retroflex), நுனியண்ண ஒலி (alveolar) எகரத்துக்கு முன்னோ பின்னோ வந்தால் அந்த எகர ஒலி இதழ் ஒலியாகும்.

எப்பேர்ப்பட்ட > எப்போர்ப்பட்ட

தென்றிசை > தொன்றிசை

செம்பாதி > சொம்பாதி

நெளிற்று > நொளிற்று

செவிடு > சொவிடு

'சொவிடு' என்ற வடிவம் பிற்காலத்துச் 'சோடு' என்றாயிற்று. செந்தாமரை > சொந்தாமரை என்று மாறிற்று. இம்மாற்றம் செம் > சொம் என மாறும் ஒப்புவமையாக்கத்தால் ஏற்பட்டதாகும். இவற்றில் எகரம் நடு உயிராகவும் குவியுயிராகவும் ஒலிக்கின்றது.

**மெய்யொலி இடையண்ணமாதல் (Palatalisation of consonants) :**

குறிப்பு

'த்த்' என்ற ஒலியின் முன் இடையண்ண ஒலியோ முன்னுயிரோ வந்தால் அது இரட்டை இடையண்ண ஒலியாகும்.

வைத்த > வைச்ச

சிலப்பதிகாரத்தில் அஞ்ஞை, மஞ்ஞை என்ற சொற்களில் இரட்டித்த இடையண்ண மூக்கொலியைக் (long palatalnasal) காணலாம். முன்னிலை ஒருமைச் சொல்லான 'ஞாய்' என்பதில் 'ஞ'கரம் மொழி முதலில் வந்தள்ளது. இடையண்ண மூக்கொலி (Palatal nasal) மலையாளத்திலும் தமிழ்க் கிளைமொழிகளில் சிலவற்றிலும் இருக்க ஏனைய திராவிட மொழிகளில் மறைந்து விட்டது. இகரத்துக்கு முன்னோ யகரத்திற்கு முன்னோ இடையண்ண ஒலிவரல் பல்லவர் கால இலக்கியங்களில் உண்டு.

செய்ந்நின்ற > செய்ஞ்ஞின்ற

போக்கு மறைந்து, சோழர் காலத்து மீண்டும் பழைய பல்லின மூக்கொலியே (Dental nasal) வரலாயிற்று. மலையாளத்திலோ பழைய இடையண்ண மூக்கொலியே (Palatal nasal) தொடர்ந்தது. இடையண்ணமாதல் சிறுபான்மை என்றும ˙எல்லார்க்கம் ஒப்ப முடிந்ததன்று என்றும் சிவஞான முனிவர் குறிப்பிடுவார். ஆனால்,பேச்சுவழக்கில் இடையண்ணமாதல் இன்றும் உண்டு.

வைத்து > வைச்ச > வச்சி

இடையண்ணமாதலுக்குக் காரணமான இ அல்லது ய் பிற்காலத்தில் மறைந்து விட்டது.

**இடையண்ண ஒலி பல்லின ஒலியாதல் :**

குறிப்பு

ஞாயிறு > நாயிறு

சண்டெஸ்வர > தண்டேஸ்வர

செருமுனை > திருமுனை

**'ழ'கர 'ன'கர மாற்றம் :**

நாழி > நாளி

வாழை > வாளை

**'ள'கர 'ழ'கர மாற்றம் :**

விளக்கு > விழக்கு

பளிங்கு > பழிங்கு

இளமை > இழமை

மேலும் ளகரத்திற்குரிய சந்தி விதிகளை ழகரத்திற்கும் கூறுவதால் இம்மாற்றத்தை உறுதிப்படுத்தலாம்.

ழகர ளகர ஒற்றீற்று முன் வருமொழி முதல் தகரம் வந்து புணர்ந்தால் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் திரிந்து தனித் தனியாக இரண்டும டகரமாகும்.

ள் [த் > ட்ட் ழ்] ]த் > ட்ட்

ள் [த் > ட்ட் > ட் - ழ்] ]த் > ட்ட் > ட்

ள் + த் ட்[ட்] ழ் + த் > ட்ட்

ளகர நிலைமொழி முன் வருமொழியில் வல்லினம் வரின் டகரமாகும். மகரம் வரின் ணகரமாகும். நகரம் வரின் ணகரமாகும். ழகர நிலைமொழி முன் வல்லினம் வரின் டகரமாகும். நகரமும் மகரமும் வரின் ணகரமாகும.

குறிப்பு

ள் [த் > ண் ழ்[ந் > ண்

ள் [ம் > ண் ழ்[ந் > ண்

ள் [P > ண் ழ்[P > ட்

**ற்ற் > த்த் மாற்றம் :**

rr > tt/v-v

ஆற்றுக்கால் > ஆத்துக்கால்

சேற்று நிலம் > சேத்து நிலம்

இம்மாற்றம் 6ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டிலே காணப்படுகின்றது. வீரசோழியமும் குறிப்பிடுகின்றது.

**ரகர மறைவு :**

r > PP

பார்க்க > பாக்க

கி.பி. எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டிலிருந்தே இம்மாற்றத்தைக் காணலாம்.

**‘ழ’கரம் ‘ய’கரமாதல் :**

l > y/v-v

வாழை > வாயை

கோழி > கோயி

இம்மாற்றம் பற்றி வீரசோழியம் குறிப்பிடுகின்றது. போப் அவர்கள் 18ஆம் நூற்றாண்டில் சென்னை வழக்கில் இவ்வாறு ஒலித்ததாகக் கூறுகிறார். இன்றைய சென்னை வழக்கிலும் காண்கிறோம்.

குறிப்பு

**யகரம் 'ச'கரமாதல் :**

y - c/v-v

உயிர் > உசிர்

மயிர் > மசிர்

உசிர், மசிர் போன்ற வடிவங்கள் பழை வடிவங்களாகும். யகரம் சகரதினின்றும் வந்ததாகும். சில கிளை மொழிகளில் இவ்வடிவம் பாதுகாக்கப்பட்டுள்ளது. உசிர், மசிர் போன்ற வடிவங்கள் கி.பி.எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டிலே காணப்படுகின்றன.

**ற்ற் > ச்ச மாற்றம் :**

இம்மாற்றம் குறித்து வீரசோழியம் குறிப்பிடுகின்றது.

வெற்றிலை > வெச்சிலை

முற்றம் > முச்சம்

கற்றை > கச்சை

**ச்ச் > ற்ற் மாற்றம் :**

உச்சியம்போது > உற்றியம்போது

பிச்சை > பிற்றை

இம்மாற்றம் குறித்து வீரசோழியம் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பு

**அடிச்சொல்லின் இறுதி யகரம் கெடல் :**

கி.பி.11. 12ஆம் நூற்றாண்டுகளில் அடிச்சொல்லின் இறுதி யகரம் மறைகிறது.

வாய்க்கால் > வாக்கால்

செய்த > சேத

மேய்ந்த > மேந்த

**‘ர’கர மறைவு :**

கி.பி.11, 12, 13ஆம் நூற்றாண்டுகளில் ன், வ், ம் என்பனவற்றின் முன்னும் இரட்டைத் தடையொலிகளுக்கு முன்னும் ‘ந்த்’ என்ற ஒலிக்கு முன்னும் பேச்சிடை நிறுத்தம் அமையும் போதும் (Pause) ரகரம் மறைகின்றது.

கீர்த்தியை > கீத்தியை

கார்த்திகை > காத்திகை

தளர்ந்து > தளந்து

பெண்டிர் > பெண்டி

வார்த்து > வாத்து

**உயிரிடைத் தடையொலி மறைவு (Loss of intervocall plsive) :**

ககரமும் சகரமும் உயிரிடையே வரும்போது மறைவதைக் காணலாம்.

வைகாசி > வையாசி

உயிரிடைத் தடையொலி மறைந்தமையும் உடம்படு மெய்யான யகரம் சேர்ந்தமையும் காணலாம். ஆனால், வகரம் உடம்படுமெய் வரவேண்டிய இடத்தில் ஒப்புவமையாக்கத்தால் (analogy) யகரம் வருகின்றது.



இகல் > இயல்

இடையண்ணத் தடையொலியான சகரம் இலக்கிய வழக்கில் யகரமாகவும் பேச்சு வழக்கில் ஏனைய திராவிட மொழிகளிலும் சகரமாகவும் வழங்குகின்றது.

உயர்ந்த - இலக்கிய மொழி
உசத்த – பேச்சு மொழி
குயவர் - இலக்கிய மொழி
குசவர் - பேச்சு மொழி
பெயர் - தமிழ்
ஹெசரு – கன்னடம்

**சமஸ்கிருதச் சொற்கள் :**

பல சமஸ்கிருதச் சொற்கள் ஒலிப்புடைய மெய்யொலி (voiced consonant)யுடன் துவங்குகின்றன. இவற்றின் முதலசையில் அகரம் உண்டு. அச்சொற்கள் தமிழுக்கு வரும்போது அகரம் எகரமாக மாறும்.

கங்கா > கங்கை > கெங்கை
தண்ட > தண்டம் > தெண்டம்

இரண்டாம் நூற்றாண்டிலேயே சமஸ்கிருதமல்லாத சொற்களிலும் இம்மாற்றம் ஏற்பட்டதைக் காணலாம்.

கல் > கெல்
களிறு > கெளிறு

**தடையொலிகளின் ஒலிப்புடைமை (Voicing of the plosive) :**

**கல்வெட்டுச் சான்றுகள் :**

குறிப்பு

தடையொலிகள் ஒலிப்புடையனவாக விளங்கியதைப் பல்லவர் காலக் கல்வெட்டுக்களில் அறிகிறோம். சோழப் பேரரசின் காலத்திற்குள்ளாகவே உயிர்களுக்கிடையேயும் மெல்லெழுத்தின் பின்னேயும் வரும் வல்லெழுத்து ஒலிப்புடை ஒலியாக மாறியது எனலாம் எனப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பத்தாம் நூற்றாண்டுச் சுந்தரசோழனுடைய அன்பில் செப்பேடுகளில்,

க(K) ரிகா(K)லன்

என வருகிறது. கி.பி. 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராசேந்திரனுடைய ஆவணங்களில்,

இராசகே (g) சரி

என்பதைக் காண்கிறோம்.

துணையாக (K)வும்

க(K)டியது

போன்ற சமஸ்கிருதம் அல்லாத தமிழ்ச் சொற்களில் உயிரிடை வரும். தடையெலிகள் பதினோராம் நூற்றாண்டு வரை ஒலிப்பில் ஒலியாக விளங்கின.

பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த சுந்தரசோழனுடைய ஆவணங்களில்,

கோச்செங்க(K)ணன்

அரிஞ்ச(C)கன்

அருந்தூ(t)ர்

என்றும் பத்தும், பதினோராம் நூற்றாண்டுகளைச் சார்ந்த இராசராசனுடைய ஆவணங்களில்,

குறிப்பு

காந்த(t)ளூர்

நுளம்ப(p)பாடி

திண்தி(t)றல்

சந்தி(t)ராதித்தவல்

என்றும் பதினோராம் நூற்றாண்டில் ஆண்ட இராசேந்திரனுடைய ஆவங்களில்,

தஞ்சா(c)புரி

கடிந்து(t)

எழுந்த(t)ருளி

இறந்த(t)

எறிந்த(t)

வீற்றிருந்த(t)ருளிய

என்றும், வருவனவற்றில் எல்லாம் தடையெலிகள் ஒலிப்பில் ஒலியாக விளங்குகின்றன. ஆனால், சமஸ்கிருதச் சிறப்புப் பெயரான சங்க(g)மன் என்பதில் இன மூக்கொலிமுன் வரும் தடையொலி ஒலிப்புடை ஒலியாகவே உள்ளது. சில சமஸ்கிருதப் பெயர்களில் தவிரப் பிறவற்றில் எல்லாம் இனமூக்கொலிமுன் வரும் தடையொலி ஒலிப்பில் ஒலியாகவே உள்ளது.

**ஒருங்கிணைவு (Coalescense) :**

**'ந'கர 'ன'கரங்கள் ஒன்றாதல் :**

பல்லின மூக்கொலியான நகரம் அண்பல் மூக்கொலியான னகரத்துடன் ஒன்றாகிவிட்டது பல்லவர் காலத்தில் தொடங்கின இம்மாமற்றம். பிற்காலச் சோழர் ஆட்சியில் முழுதும் மயங்கி ஒன்றாகிவிட்டது. அதன் ஒலி பழைய னகர ஒலியே அன்றிப் பழைய

*Self-Instructional Material*

நகர ஒலியன்று. பிறவிடங்களில் முதலிலும் கூடப் பழைய நகர ஒலியேயாம். தொல்திராவிடத்தில் னகர நகர வேறுபாடில்லை.

குறிப்பு

**‘ற’கர ‘ர’கர மயக்கம் :**

இம்மயக்கம் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பத்தாம் நூற்றாண்டிலும் தோன்றியது. பதினோராம் நூற்றாண்டில் உயிரிடையே இம்மயக்கம் காணத்தொடங்கியது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I | ற்க் | > | ர்க்க | மேற்கு | மேர்க்கு |
| | ற்ப் | > | ர்ப்ப | ஏவற்படி | ஏவர்ப்படி |
| II | ர்க்க | > | ற்க் | கார்க்களிறு | காற்களிறு |
| III | ர்க்க | > | ற்க் | ஊர்க்கால் | ஊற்க்கால் |
| IV | ர் | > | ற் | தரை | தறை |
| | ற் | > | ர் | நிறுத்து | நிருத்து |

**‘ள’கர ‘ழ’கரங்கள் ஒன்றாதல் :**

பல்லவர் காலத்தில் தொடங்கிய இம்மாற்றம் சோழர் காலத்திலும் தொடர்ந்தது. இன்றும் ளகரத்தை ழகரமாக ஒலிக்கும் மாற்றம் நாஞ்சில் நாடு, இலங்கை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. பதினோராம் நூற்றாண்டில் ‘கேள்’ என்ற அடிச்சொல்’கேழ்’ என எழுதப்பட்டமையைக் ‘கேழ்வி’ என்ற சொல்லால் அறியலாம். வேறு சில சொற்களையம் காணலாம். (களம் > கழம், வளம் > வழம்) ஆழ்வார் என்ற சொல் ஆள்வார் என்றே இருந்திருக்க வேண்டும்.

சில வடிவ மாற்றம் குறித்துக் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய நேமிநாதம் கூறுகிறது. பெயர் என்ற சொல் பேர் என்று மாறுவதையும்(சொல்.நூற்.36), பெயர்த்து என்ற வினையெச்ச வடிவம் பேர்த்து என்றும், பொழுது என்ற சொல் போது என்றும் மாறி வந்துள்ளன என்பதை நேமிநாதர் எடுத்துக்கூறியுள்ளார்.

**பால் காட்டும் விகுதி (Gender number suffix) :**

குறிப்பு

சோழர் காலத்தில் தோன்றிய வீரசோழிய இலக்கணம் (கி.பி.11ஆம் நூற்றாண்டு) ‘கண்’ ‘மன்’ எனும் இரண்டு புதிய விகுதிகளை ஆண்பாலுக்குரிய விகுதியாகக் கூறுகிறது. (சிறுக்கன், கருமன்) (நூற்.55) பெண்பாலுக்குரிய விகுதியாக மி, சி, ஆட்சி, ஆத்தி போன்றவற்றைக் குறிப்பிடுகிறது (சிறுமி, ஆய்ச்சி, வெள்ளாட்டி, வண்ணாத்தி) (நூற்.56). சங்க இலக்கியங்களை நோக்கக் ‘கண்’ புதிய விகதியாகத் தோன்றுகிறது. ஆனால், அவ்விகதி மற்ற திராவிட மொழிகளில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மி. சி போன்ற பெண்பால் விகுதிகள் சிலம்பிலும் கலித்தொகையிலும் காணப்படுகின்றன. ஆட்டி, ஆத்தி போன்றவைகள் உண்மையிலேயே புதிய விகுதிகளாகும். பலர்பால் விகுதியாக அர்கள், ஆர்கள், கள், மார் (நூற்.30) முதலியவற்றை வீரசோழியம் குறிப்பிடுகின்றது. ஆனால், இவ்விகுதிகள் சங்க இலக்கியங்களிலேயே குறைந்த எண்ணிக்கையில் வந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ‘கள்’ என்ற விகுதி நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் இருபத்தைந்து இடங்களில் வந்தள்ளது.

**காலம் :**

சோழர் காலத்தில் தோன்றிய 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நன்னூல் த், ட், ற், இன் ஆகியவற்றை இறந்த காலக் குறியீடாகவும் கிறு, கின்று, ஆநின்று ஆகியவற்றை நிகழ்காலக் குறியீடாகவும் (நன்.143, 144) கூறுகின்றது. நிகழ்கால இடைநிலைகளாக மேற்கண்ட மூன்றை வீரசோழியம்தான் முதலில் குறிப்பிட்டது. ‘கின்று’ பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றில் வரும் என்றும் ‘கிறு’ மற்ற இடத்தில் வரும் என்றும் (வீரசோ.74, 77) வீரசோழியனார் குறிப்பிடுகிறார்.

இறந்த கால இடைநிலை 'ன' கம்பராமாயணத்திலும், பெரியபுராணத்திலும் அதிக அளவில் வருகின்றது.

குறிப்பு

போன – பெரியபுராணம் 4074.3

ஆன – பெரியபுராணம் 18.3

போனான் - நா.தி.பி.2270.4

நிகழ்கால இடைநிலை 'கின்று' சோழர் கால வழக்கில் அதிகமாகப் பயின்று வருகின்றது.

பிணங்குகின்ற – பெரியபுராணம் 192.3

போகின்ற – பெரியபுராணம் 2.1348.4

'கிறு' கம்பராமாயணத்தில் வந்துள்ளது.

பார்க்கிறேன் - கம்பராமாயணம் 1.1185.4

உதிக்கிறான் - கம்பராமாயணம் 6.2152.4

'த்' எதிர்கால இடைநிலையாக நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலும், கம்பராமாயணத்திலும், பெரியபுராணத்திலும் காணப்படுகின்றது.

புகுதிர் - நா.தி.பி.1917.3

அஞ்சுதும் - பெரியபுராணம் 3849.4

அறிதும் - கம்பராமாயணம் 1.2.35.4

எதிர்கால இடைநிலை 'க'கரம் பழந்தமிழில் 'அ'ம்முடன் இணைந்து வரும் (வருகம்). இப்படிப்பட்ட வடிவம் பெரியபுராணத்தில் காணப்படவில்லை. ஆனால், ககரம் 'ஏன்' விகுதியுடன் காணப்படுகின்றது.

உரைக்கேன் - பெரியபுராணம் 120.53

'இல்' என்ற இடைச்சொல் சோழர்காலத் தமிழில் முழுவடிவ வினைசொல் தகுதியைப் பெற்றுள்ளது.

குறிப்பு

**ஏவல் வினை :**

இடைக்காலத் தமிழில் எதிர்கால இடைநிலைகளுடன் ஆய் விகுதியை இணைத்து ஏவல்வினை உருவாகியிருப்பதைக் காணலாம்.

வருவாய் - பெரியபுராணம் 3740.1
வாராய் - பெரிபுராணம் 3740.3

இடைக்காலத் தமிழில் ஈர் எதிர்கால இடைநிலைகளுடன் இணைந்து ஏவல்வினையாக வருவதைக் காணமுடியும்.

பேசுதீர் - பெரியபுராணம் 2655.1
பேசீர் - நா.தி.பி. 1868.3
இருப்பீர் - பெரியபுராணம் 39.6.4

ஈர்கள் என்ற இரட்டைப் பன்மை விகுதியும் வரக் காண்கிறோம்.

உரையீர்கள் - நா.தி.பி. 3039.1

மின்கள் என்ற இரட்டைப் பன்மை விகுதியும் அதிகமாகக் காணப்படுகின்றன.

கேண்மின்கள் - நா.தி.பி. 1795.2
தொகுமின்கள் - பெரியபுராணம் 2082.4

'செய்யாதே' வாய்பாட்டு ஏவல் வினைகளும் காணப்படுகின்றன.

தகர்த்தாதே – நா.தி.பி. 554.3
செய்யாதே – நா.தி.பி. 1852.2

# நாயக்கர் காலத் தமிழ

குறிப்பு

இடைக்காலத் தமிழிலெயே பல்லவர், சோழர் காலத் தமிழுக்கும் நாயக்கர் காலத் தமிழுக்கும் சிறிது வேறுபாடுண்டு. பக்தி இலக்கியங்கள் என்று கருதப்படும் தேவாரத் திருவாசகங்களும் நாலாயிரத் திவ்யப் பிரப்ந்தமும்ம, சிந்தாமணி, கம்பராமாயணம் பொன்ற காப்பிய நூல்களும் நேமிநாதம், சீரசோழியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களும் தோன்றி, அவை தமிழ்மொழியின் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்பட்டன. ஆனால், நாயக்கர் காலத்தில் வளமான இலக்கியங்கள் தோன்றவில்லை. கி.பி.14ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் தென்னகத்தின் மீது படையெடுத்தான். இதனால் தமிழர் தம் உரிமை இழந்தனர். மதுரையில் தோன்றிய இசுலாமியர் ஆட்சி, விசயநகரப் பேரரசின் தலையீட்டால் மறைய மதுரையில் நாயக்கர் ஆட்சி வேரூன்றியது. நாயக்கர்கள் இருநூற்றேழு ஆண்டுகள் (1529-1736) மதுரையைத் தலைநகராக் கொண்டு ஆண்டனர். இக்காலக்கட்டத்தில் வில்லிபாரதம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மாகபுராண அம்மானை, இராமப்பய்யன் அம்மானை போன்ற நூல்கள் தோன்றின. பெஸ்கி என்னும் வீரமாமுனிவரின் A Grammar of the common dialect of the Tamil Language என்ற இலக்கண நூலும் இக்காலக் கட்டத்திலேதான் எழுந்தது. இது பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கண நூலாகும.

பல்லவர், சோழர் கால் ஒலியகன்களான உயிர், மெய் எழுத்துக்கள் நாயக்கர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின.

**உயிர் :**

இ ஈ உ ஊ

எ ஏ ஒ ஓ

அ ஆ

குறிப்பு

மெய் :

க் ச் ட் ந் த் ப்
ஞ் ண் ன் ம்
ய் ழ் ர் ல் வ்
ள்

பண்டைத் தமிழில் நகரமும் னகரமும் வெவ்வேறு ஒலியன்களாக இருந்தன. ஆனால், இடைக்காலத் தமிழில் இவ்விரண்டு ஒலியன்களும் இணைந்துவிட்ட நிலையைக் காண்கிறோம். தொல்காப்பியர் சகரம் மொழி முதல் வாராது என்கிறார். சங்க கால இலக்கியங்களிலேயே சகர மொழி முதல் சொற்களைக் காண்கிறோம். சங்கமருவிய காலத் தமிழில் சைகார முதற் சொற்கள் வருகின்றன. நாயக்கர் கால் வில்லிபாரத்தில் சௌகாரச் சொற்கள் வருகின்றன.

சௌபால – வில்லிபாரதம் 2.2:258-2, 9
சௌபாலர் - வில்லிபாரதம் 1.3: 5-1, 7.14: 19-33
சௌபாலன் வில்லிபாரதம் 4.3:50-1, 5.4.178-4, 9.18:19-2, 9.18.10-4

'ற'கரம் பேச்சுத் தமிழிலழ் ஒலியனாகக் காணப்படவில்லை என்று வீரமாமுனிவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இன்றைய கிளைமொழிகள் சிலவற்றிலும் 'ற'கரம் ஒலியனாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வில்லிபாரத மொழிநடை தமிழும் வடமொழியும் கலந்த ஒன்றாகும். தமிழும் வடமொழியும் கலந்த கலப்பினால், கீழ்க்கண்ட மெய்ம் மயக்கங்கள் (clusters) வில்லிபாரதத்தில் காணப்படுகின்றன.

ம்ச், ல்ச், த்ண், த்வ், க்வ், த்ய், ப்ர், த்ர், ச்ர்

சமஸ்கிருத ஒலியன்களான S S S, தமிழில் புகுத்தியமையால் கீழ்க்கண்ட மெய்ம் மயக்கங்கள் காணப்படுவதாகப் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.

குறிப்பு

St, Sn, Sm, Sp, Sk, st, tr, Ks என்ற மெய்ம் மயக்கம் tc என எழுதப்பட்டுள்ளது. 'ந'கர 'ன'கர ஒன்றால், 'ர'கர, 'ற'கர ஒன்றாதல் போன்ற பல்லவர், சோழர் கால மாற்றங்கள் நாயக்கர் காலத் தமிழிலும் தொடர்ந்தன.

உயிர்களின் மாத்திரையும் தன்மையும் மாறுபட்டதே இக்காலத்திற்குரிய சிறப்புக்கூறு எனப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுகிறார். இவர் குறிப்பிடும் உயிரொலி, மெய்யொலி மாற்றங்கள் சிலவற்றைக் காண்போம்.

இரட்டை மெய்க்குப் பின்னோ மெய் மயக்கத்திற்குப் பின்னோ வரும் நெடில் உயிர் குறிலாகும்.

வணங்குவார்க்கு > வணங்குவர்க்கு

**'இ'கரம் 'உ'கரமாதல் :**

வளைநா ஒலி அல்லது இதழ் ஒலி மெய்கள் வரும் சூழலில் உகரம் தோன்றுகின்றது $(C_1)$ $V_1$ $C_2$ $V_2$ $V_3$ என்ற வாய்பாட்டில் அமைந்த சொற்கள் உள்ளன. அவற்றில் $V_2$ இகரமாகி $C_2$ உள்கது 'ழ்' அல்லது 'ள்' அல்லது 'ர்' என்றோ இருந்தால் இகரம் உகரமாகும்.

சிலிர்க்கு > சிலுருக்கு

தமிழ் > தமுழு

மதில் > மதுலு

**'அ'கரம் 'இ'கரமாதல் :**

அதனால் > அதினால்

வஞ்சனை > வஞ்சினை

**'அகரம் 'உ'கரமென்றும் 'உ'கரம் 'இ'கரமென்றும் மாறல் :**

வந்தது > வந்துது

இருபது > இருபதி

**‘இ’கரம் ‘யி’கரமாக மாறல் :**

குறிப்பு

இது பல்லவர் காலத்திலேயே காணப்படுகின்றது.

இரண்டு > யிரண்டு

**ஐ > அய் > அ என மாறல் :**

தலை > தல

யானை > யான

ஐகாரம் ‘அய்’ என எழுதப்பட்டு ‘அ’ ஒன்றே ஒலிக்கப்பட்டது.

**‘எ’கரம் ‘அ’கரமாதல் :**

எல்லாம் > அல்லாம்

வேண்டாம் > வாண்டாம்

**ஐ > ஆ :**

இக்காலப் பேச்சு வழக்கிலும் இதனைக் காணலாம்.

**‘ய’கரம் ‘எ’கரமாதல் :**

யமன் > எமன்

மொழி முதல் யகரம் சங்க, பல்லவர் காலத்திலேயே மறைந்தது.

யார் > ஆர்

யாண்டு > ஆண்டு

நாயக்கர் காலத்திலும் இப்போக்குத் தொடர்ந்தது.

யமுனை > அமுனை

**மெய் ஒலிகள் :**

சமஸ்கிருதச் சொற்களைத் தமிழில் எழுக் கிரந்த வரி வடிவங்களைப் புகுத்தியது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும். பெஸ்கி அவர்களும் தமது இலக்கண நூலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

**சமஸ்கிருதச் சொற்கள் தமிழாகும் வகை :**

குறிப்பு

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தமது நூலில் சமஸ்கிருத ஒலிகள் தமிழாக்கப்படலைக் குறித்து விளக்கமாகக் கூறியுள்ளதை இங்குத் தொகுத்துக் காண்போம்.

அ. இக்காலத்தில் சமஸ்கிருத நாமடி ஒலி (retroflex plosive) இடையண்ணத் தடையொலியாக மாறிற்று.

ரிஷி > ரிசி

தோஷா > தோசம்

ஆ. 'க்ஷ' என்ற ஒலி 'ச' என மாறல் :

க்ஷணம் > சணம்

இ. ஷ்ட் > ஸ்தி என மாறல் :

கஷ்டம் > கஸ்தி

ஈ. 'அம்' என்பது 'ஐ' என்றும் 'அல்' என்றும் மாறல் :

மாதம் > மாத்தை

கார்த்திகை, காத்திகை, காத்தியை, காத்தியல்

உ. ால > மெ என மாறல் :

அஸஹ்ய > அசக்கியம் > அசிங்கியம் > அசிங்கம்

ஊ. ர் > ழ் :

அம்ர்தம் > அமிர்தம் > அமிழ்தம்

எ. 'ஆ' சொல்லிறுதியாதல் :

ஏகாதசி > ஏகாதேசி

ஒவ்வொருவரும் சொற்களைப் பயன்படுத்தும்போது அதன் பொருளை ஒருவாறு தத்தம் மனத்திற்கு எட்டும் வகையில் விளக்கிக் கொள்வர். இதற்கேற்பச்சொல்லின் வடிவமும் மாறும். இதனையே

குறிப்பு

நாட்டுப்புற மொழியில் (FolK linguistics) என்பர். (Any change in the written form or pronounciation of words in order to make them or sound more similar to more familiar words eith little or no regard to similarity in meaning or derivation – Mario Pei)

சித்ரகுப்தன் என்ற சொல்லைச் சித்ரக்கூத்தன் என மாற்றிக் கொண்டனர். கூத்தன் கூற்றம் என்பதன் மரூஉ வாகி எமனினம் வேறான ஒருவனைக் காட்டும்.

சித்ரகுப்த > சித்திரகூத்தன்

சட்ரசா > சட்டரசம் (சட்டம் - தகுதி)

இவ்வாறு கூறுவது நாட்டுப்புற மொழியியலின் போக்காகும்.

**பெயர் பதிலிகள் (Pronouns) :**

முன்னிலை உருபேற்கத் திரிந்த வடிவமாகிய ‘நுன்’ ‘நும்’ என்பதிலிருந்து ஒப்புவமையாக்கமாக வந்துள்ளது. ‘நும்’ ‘நுன்’ என்பன வழக்கு மிகுதியான ‘உம்’ ‘உன்’ என்ற வடிவங்களைத் தந்தன. முன்னிலைப் பன்மை ‘நீர்’ ‘நீயிர்’ ஆகியவற்றிற்குப் பதிலாக ‘நீர்’ என்ற வடிவம் வளர்ச்சி பெற்றது. பாலை வேறுபடுத்தாத ‘தான்’ ‘தாம்’ என்பதற்குப் பதிலாகச் சார்பு நிலைப் பெயர்ப் பதிலிகளான ‘அவன்’ ‘அவள்’ என்பன வழக்குப் பெறுகின்றன. ‘தான்’ ‘தாம்’ ‘தன்’ ‘தம்’ ஆகியன தற்சுட்டுப் பெயராகவோ சாரியைகளாகவோ அசைநிலைகளாகவே (emphatic expletives) மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. பின்னர் காலப்போக்கில் வெறும் இடைச்சொற்களாகவே, வேற்றுமை உருபுகளாகவோ ஆகின்றன.

வினா பதிலிடு பெயர்களாக (Interrogative pronouns) ‘யாவன்’ ‘யார்’ ‘யாவது’ ‘யானை’ ‘எவன்’ ‘எவர்’ ‘எது’ போன்றவை வில்லிபாரதத்தில் காணப்படுகின்றன.

குறிப்பு

**வேற்றுமை (Case)**

நாயக்கர் காலத் தமிழில் கருவிப்பொருள் வெற்றுமைக்கு ‘ஆல்’ என்பதும் உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமைக்கு ‘ஒடு’ ‘ஓடு’ உடன் என்பவையும் வேற்றுமை உருபுகளாயின.

தூது – ஆல் > தூதால் - வில்லிபாரதம் 1.1:13-2

மகிழ்வு – ஆல் > மகிழ்வால் - வில்லிபாரதம் 1.1: 6-3

அன்பு – ஆல் > அன்பால் - வில்லிபாரதம் 1.1: 12-4

உரிமை – ஒடு > உரிமையோடு – வில்லிபாரதம் 1.1: 58.4

இசை – உடன் > இசையுடன் - வில்லிபாரம் 1.1: 1-2

கருவிப்பொருள் வேற்றுமை நீங்கற் பொருள் வேற்றுமையுடன் ஒன்றாகும் போக்கு உள்ளது. பழைய வேற்றுமை உருபுகளின்வழக்கு காலப் போக்கில் மறையத் தொடங்கின. வயின், மிசை, உழி முதலிய உருபுகள் வழக்காற்றிலிருந்து மறையத் தொடங்கின மூன்றாம் வேற்றுமை உருபான ‘ஆன்’ ‘ஆல்’ ஆகவும் ஐந்தாம் வேற்றமை உருபுகளுக்குப் பதில் சில சொற்களே வேற்றுமை உருபுகளாக வருகின்றன. ‘கொண்டு’ என்னும் சொல் கருவிப்பொருள் வேற்றுமையை உணர்த்துகிறது.

வாள் கொண்டு

‘பொருட்டு’ ‘ஆக’ என்னும் சொற்கள் நான்காம் வேற்றுமையை உணர்த்துகின்றன. ‘ஆக’ என்னும் சொல்லுருபு பழைய குகர விகுதியுடன் வருகின்றது.

அவன் பொருட்டு

அவனுக்காக

ஐந்தாம் வேற்றுமை ‘இருந்து’ ‘நின்று’ முதலிய சொல்லுருபுகளைப் பெறுகிறது.

வீட்டில் இருந்து

வீட்டில் நின்று

ஆறாம் வேற்றுமை ‘உடைய’ என்பதைப் பெறுகிறது.

அவனுடைய

இடப்பொருளை உணர்த்தும் எச்சொல்லையும் ஏழாம் வேற்றமை உருபாக் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். பழைய இடம்பொருள் வேற்றுமையை

உணர்த்த ‘வைத்து’ என்பது வருகின்றது. இடப்பொருள் வேற்றமையை உணர்த்த இல், இன், உள், கடை, பால், கண், வாய், தலை, இடை, வழி போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

குறிப்பு

மலை - இல் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 28.11

கா-இன் > காவின் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 99.5

பத்மத்து-உள் > பத்மத்துள் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 12.24

வழி-கடை > விழிக்கடை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்67.6

அடவி-பால் - மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 5.3

நிழற்-கண் - மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 23.3

மடை-வாய் - மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 99.4

எழுநாத்-தலை - மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 95.15

கடல்-இடை > கடலிடை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 29.6

மரபு-இன்வழி > மரபின்வழி மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் 63.5

**எச்சங்கள் :**

தொல்காப்பியர் செய்யூஉ, செய்பு (713) என்ற இரு வினையெச்ச வாய்பாடுகளைக் குறித்துச் செல்கிறார். இவை பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. வில்லிபாரதம் போன்ற நூல்களில் செய்யூஉ, வாய்பாட்டு வினையெச்சம் ஓரிரு இடங்களில் மட்டுமே வந்தள்ளது. மல் விகுதி கொண்ட எதிர்மறை வினையெச்சம் சங்க மருவிய காலத் தமிழிழல் அருகிக் காணப்பட, இடைக்காலத் தமிழில் அதிகமாக் காணப்படுகின்றது.

ஆடாமல் - வில்லிபாரதம் 1.8: 6.-1

‘செய்யாத’ என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் சங்கத் தமிழில் அருகிக் காணப்பட, சங்க மருவிய காலத் தமிழில் பெருகி, இடைக்காலத்

தமிழில் நிலைத்து விட்டது. இந்நிலையில் எதிர்மறை உருபாகிய 'ஆ' குறைந்து 'ஆத்' பெருகி வரக் காண்கிறோம்.

குறிப்பு

உணராத – வில்லிபாரதம் 3.5:6-3

**நிபந்தனை எச்சம் :**

'செய்தால்' என்ற வடிவத்திற்குப் பதிலாக 'செய்கின்றால்' என்ற வடிவம் வளர்ச்சி பெற்றுள்ளது. நிகழ்கால இடைநிலை 'கின்று' உள்ளது. 'செய்து' என்னும் இறந்த கால வடிவத்திலிருந்து 'செய்தல்' வருவது போல, 'நடப்பு' என்னும் இறப்பில்லா வடிவத்திலிருந்து 'நடப்பின்' வருவது போல, 'செய்கின்று' என்னும் வடிவத்திலிருந்து 'செய்கின்றால்' என்பது வருகிறது. செய்தால் + உம் என்பது 'செய்யப்பட்டிருந்தாலும் கூட' என்னும் பொருளில் வினையெச்சமாக வளர்ச்சியுறுகிறது.

**எதிர்மறை**

'செய' என்னும் எச்சத்துடன் அகரவுருபைச் சேர்க்கப் பழைய எதிர்மறை வடிவம் 'செயா' என்பது கிடைக்கின்றது. பால் விகுதியைச் சேர்ப்பின் 'செயான்' என்ற வடிவம் கிடைக்கிறது. 'செய்து' 'செய்த' என்பவற்றின் ஒப்புவமையாக்கமாக எதிர்மறை வடிவங்களும் 'செய்யாது' 'செய்யாத' என்றாகின்றன. 'செய' எனும் வடிவம் எதிர்மறை வடிவான இல்லை என்பதுடன் எல்லா இடங்களுக்கும் எண்களுக்கும் வருகிறது. செய + இல்லை என்ற இரு சொற்களும் பேச்சு வழக்கில் 'செய்லே' என்றாகின்றது. 'லே' எதிர்மறை இடைநிலையாகிறது.

எதிர்மறை விகுதி – 'அப்பாய்' இக்காலத் தமிழில் காணப்படுகின்றது.

பெஸ்கி அவர்களும் கீழ்க்கண்ட சான்றுகளை எடுத்துக்காட்டுகிறார் :

குறிப்பு

அவன் செய்யவில்லை
அவன் செய்கிறது இல்லை
அவன் செய்தது இல்லை
அவன் செய்வது இல்லை

'மாட்டேன்' 'வேண்டாம்' என்பன எதிர்மறை வினையாக வழக்கிலுள்ளன. 'வேண்டும்' என்பது எல்லாத் திணைப் பாலுக்கும் வரும் என நன்னூலார் குறிப்பிடுகிறார்.

'அல்' 'இல்' என்ற எதிர்மறை வினையடிகளை (அல்லது, இல்லது) காண்கிறோம். 'அல்' 'இல்' என்ற இரண்டிற்கும் சிறிது வேறுபாடுண்டு.

**புதிய விகுதிகள் :**

சமஸ்கிருத மொழியோடு ஒப்புவமையாக்கமாகப் பல புதிய விகுதிகள் வருகின்றன எனப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் கூறுகிறார்.

காரன் - வீட்டுக்காரன்
சாலி – புத்திசாலி
அரவு – தோற்றரவு

ஆனால், காரர் என்ற விகுதி சங்க மருவிய கால நூலான சிலம்பிலும் மணிமேகலையிலும் காணப்படுகின்றது.

கஞ்சகாரர் - சிலம்பு.5-28, மணி.28.35
மாலைக்காரர் - மணி.28.40

இவ்விகுதி சங்க மருவிய காலத்தில் தோன்றி நாயக்கர் காலத் தமிழில் பெரு வழக்காகித் தற்காலத் தமிழில் நிலைத்துவிட்டது. 'காரன்' என்ற விகுதி இன்றைய தமிழில் பெருவழக்காகி நிலைத்து விட்டது.

18ஆம் நூற்றாண்டில் துணைவினைகள் மக்கிய நினைகளுடன் இணைந்து, ஒரே அலகாகச் (Single Unit) செயல்படுவதைப் பெஸ்கி அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுச் செல்கிறார்.

இரு :

உன்னை அடித்திருக்கிறேன்
உன்னை அடித்திருப்பேன்

போடு :

எழுதிப் போட்டேன்

கொள் :

எழுதிக் கொண்டேன்

அருள் :

அரசர் எழுந்தருளினார்

**வினைமுற்று விகுதி :**

தன்மை ஒருமமை விகுதியாகிய ‘என்’ சங்க நூல்களில் அதிகமாக வர, வில்லிபாரதத்தில் ஓரிரு இடங்களில் மட்டும் வந்துள்ளது.

வந்தனென் - வில்லிபாரதம் 4.1:12-4
தணிந்தென – வில்லிபாரதம் 3.598-3

‘அன்’ விகுதி சங்கத் தமிழில் இறப்பில் காலத்தில் குறைவாக வர, இடைக்காலத் தமிழில் பெருகிவரக் காண்கிறோம்.

அரற்றுவன் - அப்பர் தேவாரம் 1986.1
இசைவிப்பன் - பெரியபுராணம் 12.97.3
ஆள்வன் - கம்பராமாயணம் 6.2733.2

அகற்றுவன் - வில்லிபாரம் 7.14:216.4

தன்மை ஒருமை காட்டும் 'அல்' விகுதி இடைக்காலத் தமிழில் காணப்படுகிறது.

கவர்ந்திடுவல் - வில்லிபாரதம் 7.13:238.1

காப்பல் - வில்லிபாரதம் 7.13:252.4

தன்மை ஒருமை விகுதியான 'என்' பண்டைத் தமிழில் அதிகமாக வர, நாயக்கர் காலத் தமிழில் அருகியே காணப்படுகின்றது.

வந்தனென் - வில்லிபாரதம் 4.1:12.4

தணிந்தென் - வில்லிபாரதம் 3.598.4

பண்டைத் தமிழில் 'ஓம் அருகிக் காணப்பட இடைக்காலத் தமிழில் பெருவரவிற்றாகி இன்று நிலைத்துவிட்டது.

இழந்தோம் - வில்லிபாரதம் 8.17:262.2

பெண்பால் ஒருமை காட்டும 'ஆள்' விகுதி சங்கத் தமிழ் நூல்களில் எதிர்மறையில் அதிகம் வர, பிற்கால நூல்களில் எல்லா இடங்களிலும் வருகிறது.

ஒவ்வாள் - வில்லிபாரதம் 1.5:77.1

உயர்திணைப் பன்மை காட்டும் 'ஆர்' விகுதி இடைக்காலத் தமிழில் எல்லா இடங்களிலும் வருகிறது.

நிற்கின்றார் - வில்லிபாரதம் 9.18:16.2

அ.்.றிணை ஒருமை விகுதி 'து' அது, ஆக மாற்றம் பெறுகின்றது.

உரைத்து – உரைத்தது

படித்து – படித்தது

குறிப்பு

'ஓய்' 'ஓன்' விகுதிகளைப் போன்றே 'ஓள் விகுதியம் ஓர் விகுதியும் சங்க காலத்தமிழில் வினை முற்றாகவும் வினையலணையும் பெயராகவும் காணப்பட, அப்பர் தேவாரம், பெரியபுராணம், கம்பராமாயணம். வில்லிபாரதம் ஆகிய நூல்களில் காணப்படவில்லை.

கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குற்றாலக் குறவஞ்சியில் படர்க்கை நிகழ்காலப் பலவின்பால் வினை முற்றாகப் 'போகின்னும்' என்பது வருகிறது. இதன் வாய்பாடு 'வேர் + இன் + உம் என்பதாகும். பன்மையைக் குறிக்கும் 'உம்'மகர மெய்யில் உள்ளது. 'இன்' விகுதி இறந்த காலம் காட்டாமல் 'செய்யும்' என்னும் பழைய வாய்பாட்டை நினைவூட்டுகிறது. சகர விகதி ஒருமையைக் காட்டும் வழக்கு வழக்கிழந்து தெலுங்கிலுள்ள 'சேயுனு' வாய்பாடு மகர மெய்யுடன் வருவதாக் கருத இடமளிக்கிறது. ஈற்றிலுள்ள உகர மெய் னகர மெய்யால் மூக்கொலிச் சாயல் பெறுவதன் விளைவாகலாம்.

சங்க மருவிய கால, பல்லவர் கால, சோழர் காலக் கூறுகளில் சில நிலைத்துவிட்டன. சில புதிய கூறுகள் உருவாகியுள்ளன. பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் யாக்கப்பட்டுள்ளது. இவை யாவற்றையும் நாயக்கர் காலத் தமிழில் காண்கிறோம்.

# மராட்டியர் காலத் தமிழ்

குறிப்பு

நாயக்கரது ஆட்சிக்குப்பின் தஞ்சையைத் தலைநகராக் கொண்டு கி.பி. 1676 முதல் கி.பி. 1799 வரை ஆட்சி புரிந்தும் பிறகு கி.பி. 1855 வரை தஞ்சையிலேயே தங்கி செல்வாக்கும் பெற்றும் விளங்கினர். கி.பி. 1676இல் ஏகோஜி தஞ்சையைக் கைப்பறித் தஞ்சையைத் தலைநகராக் கொண்டு ஆட்சி புரிந்தார். இக்காலக்கட்டத்தில் தமிழ், தெலுங்கு, மராட்டி, வடமொழி ஆகிய மொழிகளில் பல்வேறு வகையான இலக்கியங்கள் தோன்றின. சரபோஜி மன்னர் உலகப் புகழ்பெற்ற சரசுவதி மகாலை உருவாக்கி வேதாந்தம், காவியம், இலக்கியம், இசை, நடனம், மருத்துவம், வான இயல் தொடர்பான சுவடிகளைச் சேகரித்தார். நாணயங்கள், ஓவியங்கள், அரிய நூல்களையும் சேகரித்தார். மராட்டியர் ஆட்சி காலத்தில் தூது, உலா, நாடகம், கோவை, சதகம், அம்மானை, புராணம் சம்பந்தமாக அறுபத்தியெட்டு இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன. உணவு சம்பந்தப்பட்ட மராட்டிய சொற்கள் நிறைய தமிழில் கலந்துள்ளன. மராத்தி மொழிக் கல்வெட்டுக்கள் நாகரி எழுத்துக்களிலும் அரசு ஆவணங்கள் மோடி எழுத்தக்களிலும் எழுதப் பெற்றன.

நாயக்கர் கால ஒலியன்களான உயிர், மெய் மராட்டியர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின.

**உயிர் :**

இ ஈ      உ ஊ

எ ஏ      ஒ ஓ

அ ஆ

**மெய் :**

க் ச் ட் ற் த் ப்

ஞ் ண் ன் ம்

ய் ழ் ர் ல் வ்

ள்

மராட்டியர் கால ஒலி மாற்றங்களை இலக்கிய, கல்வெட்டு, செப்பேடுகளைக் கொண்டு ஆராய்வோம். சோழ, நாயக்கர் கால மாற்றங்கள் பெரும்பாலும் மராட்டியர் காலத்திலும் தொடர்ந்தன.

குறிப்பு

**இலக்கியங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| i | ர | > | ற |
| | தெரிய | > | தெறிய |
| | மாரன் | > | மாறன் |
| | நெருக்கு | > | நெறுக்கு |
| ii | ற | > | ர |
| | அறியாத | > | அரியாத |
| | குறை | > | குரை |
| | பதற | > | பதர |
| | பொறுக்க | > | பொருக்க |
| | மறக்க | > | மரக்க |
| | உறவாடி | > | உரவாடி |
| | நூறு | > | நூரு |
| iii | ற | > | ட |
| | உற்சாகம் | > | உட்சாகம் |
| iv | ழ | > | ள |
| | பழம்பஞ்சாரம் | > | பளம்பஞ்சாரம் |
| v | ள | > | ழ |
| | வளமை | > | வழமை |
| vi | ற்ற | > | த்த |
| | கற்ற | > | கத்த |

*Self-Instructional Material*

கிணற்றில் > கிணத்தில்

வற்றாத > வத்தாத

நேற்று > நேத்து

பிதற்றி > பிதத்தி

கற்றவர் > கத்தவர்

குறிப்பு

**கல்வெட்டுக்கள் :**

மராட்டியர் கால கல்வெட்டுக்களின் துணை கொண்டு ஒலிமாற்றங்களைக் காணலாம்.

i அ > இ

கஜம் > கிஜம்

பரிபாலனம் > பரிபாலினம்

ii அ > எ

கங்கை > கெங்கை

கருடன் > கெருடன்

தசமி > தெசமி

லட்சமணன் > லெட்சமணன்

ரகுநாதன் > ரெகுநாதன்

யஸ்வத்தம்பா > யெஸ்வத்தம்பா

iii அ > ஐ

மற்றுமுள்ள > மைத்துமுள்ள

iv இ > அ

மதின் > மதன்

v இ > எ

நிலம் > நெலம்

| | | | |
|---|---|---|---|
| vi | உ | > | இ, எ |
| | புஞ்சை > | பிஞ்சை | |
| | புறம் | > | பிறம் |
| | சுவர் | > | செவர் |
| | | | |
| vii | இ ஈ எ> | யி யீ யெ | |
| | இதின்மேல் | > | யிதின்மேல் |
| | இதுக்கு | > | யிதுக்கு |
| | இந்த | > | யிந்த |
| | இவர்கள் | > | யிவர்கள் |
| | இலாகா> | யிலாகா | |
| | இறை | > | யிறை |
| | ஈசன் | > | யீசன் |
| | ஈழம் | > | யீழம் |
| | எங்களூர் | > | யெங்களூர் |
| | எல்லை> | யெல்லை | |
| | எழுதி | > | யெழுதி |
| | | | |
| viii | ஐ | > | அய் |
| | கைஎழுத்து | > | கய் எழுத்து |
| | ஐநெஸ்> | அய்நெஸ் | |
| | ஐவேஜி> | அயிவேஜி | |
| | | | |
| ix | ச | > | த |
| | சண்டேசுவரர் | > | தண்டேசுவரர் |
| | சாசனம் | > | சாதனம் |
| | | | |
| x | ப | > | வ |
| | பாவாசி > | வாவாசி | |

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| xi | வ | > | ப |
| | அசுவமேதம் | > | அசுபமேதம் |
| | ரேவதி | > | ரேபதி |
| xii | ந | > | ன |
| | நம் | > | னம் |
| | நாங்கள் | > | னாங்கள் |
| | நாடு | > | னாடு |
| | நாழிகை | > | னாழிகை |
| | நாளையில் | > | னாளையில் |
| | நாலாசாதி | > | னாலாசாதி |
| xiii | ர | > | ற |
| | ராத்திரி | > | றாத்திரி |
| | ராணி | > | றாணி |
| | ராஜா | > | றாஜா |
| | அரண்மனை | > | அறண்மனை |
| | பெரிய | > | பெறிய |
| | வரிசை | > | வறிசை |
| | நகரம் | > | நகறம் |
| | அவர்கள் | > | அவற்கள் |
| | தர்மம் | > | தறமம் |
| | பண்ணினார் | > | பண்ணினாற் |
| | செய்தார் | > | செய்தாற் |
| xiv | ற | > | ர |
| | ஆறு | > | ஆரு |

குறிப்பு

xv ற > க, ன, ண, ச

தெற்கு > தெக்கு

மணிகுன்றம் > மணிகுன்னம்

கொன்ற > கொண்ண

நாற்சாரி > நாச்சாரி

xvi ழ > ள

கீழத்தெரு > கீளத்தெரு

சோழ > சோள

பழைய > பளைய

xv ஷ > ழ

பாஷை > பாழை

தோஷம் > தோழம்

வருஷம் > வருழம்

ரிஷப > ரிழப

இம்மாற்றம் செப்பேடுகளில் அதிகமாகவும் கல்வெட்டுக்களில் குறைவாகவும் உள்ளது.

xvi த்த் > ச்ச்

அவித்த > அவிச்ச

நடப்பித்த > நடப்பிச்ச

பிறப்பித்தோம் > பிறப்பிச்சோம்

xvii ற்ற் > த்த்

ஆற்றில் > ஆத்தில்

சிற்றம்பலம் > சித்தம்பலம்

கூற்றம் > கூத்தம்

வெற்றி > வெத்தி

குறிப்பு

xviii அன், அர் > ஆள்

புத்திரன் > புத்திராள்

பவுத்திரன் > பவுத்திராள்

அவர் > அவாள்

இவர் > இவாள்

காரியஸ்தர் > காரியஸ்தாள்

பாண்டவர் > பாண்டவாள்

வடசொற்களும் வடமொழித் தொடர்களும் கல்வெட்டில் காணப்படுகின்றன.

வங்சம், உத்ஸவம். யதாஸ்து, போஜனம், பாரியை, பௌத்ரன் முதலிய கிரந்த எழுத்துக்களை நீக்கி வடசொற்களைத் தமிழ் வரி வடிவத்தில் எழுதும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாஸ்திரி > சாத்திரி

பக்ஷம் > பட்சம்

பாஷை > பாசை

ரிஷபம் > இடபம்

ஸ்வரூபம் > சுரூபம்

ஸ்வஸ்தி > சுவத்தி

கல்வெட்:டுக்களில் ஆங்கில மொழிச்சொற்கள் பயின்று வந்தள்ளன. ஆங்கிலச் சொற்கள் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

அக்கவுண்டாண்டு > Accountant

இங்கிலீசு > English

இரெசிடென்ற் > Resident

அயினெஸ் > His Highness

*Self-Instructional Material*

| | | |
|---|---|---|
| ஏஜண்டு | > | Agent |
| ஏஜண்டாபீசு | > | Agent office |
| கம்மிட்டி | > | committee |
| கர்ணல் | > | Xolonel |
| கலேக்ட்டர் | > | Collector |
| சற்வே | > | Survey |
| சீனியர் | > | Senior |
| சூப்பிறண்டாண்டு | > | Superintendedt |
| செண்டு | > | Cent |
| டிரஸ்டி | > | Trustee |
| டெபுடி | > | Deputy |
| நெம்பர் | > | Number |
| பங்களா | > | Bungalow |
| பண்டு | > | Fund |
| மானேஜர் | > | Manager |
| றீபோற் | > | Repair |
| லெப்டினான்று | > | Lientenant |
| லேட் | > | Late |
| ஹர் ஹைநீஸ் | > | Her Highness |

கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் குறியீடுகளும் சுருக்க எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ´ | - | வருடம் |
| µ | - | மாதம் |
| உ, தீ | - | தேதி |
| நீ | - | நெம்பர் |
| 3 | - | மேற்படி |
| ப | - | பணம் |
| | - | நெல் |

ள் - கலம்

- பொன்

**சுருக்க எழுத்துக்கள்**

சா - சாலிவாகனசகம்

ரா - ராசராச

வ - வளூராத்து மரபு

சௌ - சௌபாக்கியவதி

ரூ - ரூபாய்

- மாகாணம்

**செப்பேடுகள் :**

i இ, ஈ > யி, யீ

இந்தியக்கரை > யிந்தியக்கரை

இந்த > யிந்த

ஈழம் > யீழம்

ii எ, ஏ > யெ, யே

எருது > யெருது

எப்பேர்ப்பட்ட > யெப்பேர்ப்பட்ட

ஏழு > யேழு

ஏகோசி > யேகோசி

iii ஐ > அய்

ஐயங்கார் > அய்யங்கார்

கையிலே > கய்யிலே

வைக்கிறது > வய்க்கிறது

தையலம்மை > தய்யலம்மை

iv த >ச

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| | சம்மதித்து | > | சம்மதிச்சு |
| | நசித்து | > | நசிச்சு |
| | நியமித்த | > | நியமிச்ச |
| v | ந | > | ன |
| | நாயக்கர் | > | னாயக்கர் |
| | நாச்சியார் | > | னாச்சியார் |
| | நாடு | > | னாடு |
| | நாம் | > | னாம் |
| | நாட்டாமை | > | னாட்டாமை |
| vi | ர | > | ற |
| | ராமலிங்கம் | > | றாமலிங்கம் |
| | கிராமம் | > | கிறாமம் |
| | தர்மம் | > | தற்மம் |
| | நயினார் | > | நயினாற் |
| vii | ற | > | த |
| | மற்றும் | > | மத்தும் |
| | இற்றை | > | இத்தை |
| | பெற்ற | > | பெத்த |
| | ஆற்றக்கு | > | ஆத்துக்கு |
| | முற்றிலும் | > | முத்திலும் |
| viii | ன, ற | > | ண, ட |
| | செல்லா நின்ற | > | செல்லா நிண்ட |
| | வென்றோன் | > | வெண்டோன் |

குறிப்பு

இருக்கின்ற > இருக்கிண்ட

ix ழ > ஷ

சோழமண்டலம் > சோஷமண்டலம்

x ஷ > ழ

அபிஷேகம் > அபிழேகம்

பாஷை > பாழை

பிரதோஷம் > பிரதோழம்

வங்கிஷம் > வங்கிழம்

தோஷம் > தோழம்

புருஷோத்தமன் > புருழோத்தமன்

கிஷ்ணதேவராயர் > கிழ்ணதேவராயர்

மராட்டியர் செப்பேட்டில் பிறமொழிச் சொற்கள் பல தமிழ் ஒலிக்கேற்ப வரிவடிவமும் மொழிபெயர்ப்பும் பெற்றுள்ளன.

அமரால் - Admiral

உலாந்தர் - Holland

கற்பித்தற் - Captain

கிட்டங்கு - Godown

கொந்திறாத்து - contract

கோவர்ணதோர - Guoverneur

சாயிபு பாத்தசா - Sahib badhusha

சின்ன சென்றைல் - Junior General

பெத்திரி வீடு - Factory

**உருபனியல் :**

மராட்டியர் காலத் தமிழில் தற்காலத் தமிழில் காணப்படுவதைப் போன்றே பால்காட்டும் விகுதிகள், குறையெச்சங்கள் எதிர்மறை

குறிப்பு

விகுதிகள், பெயரெச்சங்கள், வினையெச்சங்கள், நிபந்தனை எச்சங்கள் காணப்படுகின்றன. மராட்டியர் கால 'கோடீச்சுரக் கோவை' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு மராட்டியர் காலத் தமிழின் உருபனியல் ஆராயப்பெற்றுள்ளது.

**பதிலிடு பெயர்கள் (Pronouns) :**

நான், யான் ஆகிய இரு தன்மை ஒருமைப் பதிலிடு பெயர்களும், நாம், நாங்கள் ஆகிய இரு தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்களும் நீ, நீர், ஆகிய முன்னிலைப் பதிலிடு பெயர்களும் இவன், இவர், இவள், அவன், அவர், அது, அவை, தன், தம் ஆகிய படர்க்கைப் பதிலிடு பெயர்களும் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| நான் | கோ.கோ.55.3 |
| யான் | கோ.கோ.12.3 |
| நாம் | கோ.கோ.51.4 |
| நாங்கள் | கோ.கோ.161.4 |
| இவன் | கோ.கோ.88.2 |
| இவள் | கோ.கோ.88.2 |
| அவர் | கோ.கோ.160.3 |
| அது | கோ.கோ.46.4 |

**வேற்றுமை (Case) :**

ஐ, கு, ஒடு, ஆல், இல், இன் ஆகிய வேற்றுமை உருபுகள் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| உங்களை | கோ.கோ.9.2 |
| பெற்றார்க்கு | கோ.கோ.10.4 |
| சிலைதன்னொடு | கோ.கோ.61.2 |
| அங்குசத்தால் | கோ.கோ.46.4 |
| காலடியில் | கோ.கோ.69.1 |
| தேமொழியின் | கோ.கோ.69.2 |

**காலம் (Tense) :**

குறிப்பு

கால இடைநிலைகள் :

**இறந்தகால இடைநிலைகள் :**

ந்த், த்த், இன் ஆகிய இறந்த கால இடைநிலைகளை மராட்டியர் காலத் தமிழிழல் காண்கிறோம்.

| | |
|---|---|
| சார்ந்தனன் | கோ.கோ.12.3 |
| முடித்தேன் | கோ.கோ.25.4 |
| எழுதினன் | கோ.கோ.25.3 |

**எதிர்கால இடைநிலைகள் :**

வ, ப்ப ஆகிய எதிர்கால இடைநிலைகள் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| நீங்குவர் | கோ.கோ.28.2 |
| இருப்போம் | கோ.கோ.34.4 |

**நிகழ்கால இடைநிலை :**

நிகழ்கால இடைநிலையாக கின்று இக்காலத்தமிழில் காணக்கிடக்கின்றது.

| | |
|---|---|
| நிற்கின்றது | கோ.கோ.40.4 |
| நிற்கின்றனன் | கோ.கோ.63.4 |

**ஏவல் :**

**ஏவல் ஒருமை :**

சூனிய உருபே ஏவல் ஒருமையைக் காட்டுகிறது.

| | |
|---|---|
| போ | கோ.கோ.29.2 |
| பார் | கோ.கோ.32.4 |

குறிப்பு

**ஏவல் பன்மை :**

ஏவல் பன்மை விகுதியாக ‘உம்’ ‘மின்’ பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சூழும் | கோ.கோ.8.3 |
| இருமின் | கோ.கோ.161.2 |

**குறையெச்சங்கள் :**

‘அ’ விகுதி குறையெச்ச விகுதியாக வருவதைக்காண்கிறோம்.

| | |
|---|---|
| உற | கோ.கோ.21.4 |
| மகிழ்ந்திட | கோ.கோ.27.2 |

**எதிர்மறை :**

‘அல்’ ‘ஆத்’ ‘இல்’ ஆகிய இடைநிலைகள் எதிர்மறையைக் குறித்து வந்துள்ளன.

| | |
|---|---|
| அடையோம் | கோ.கோ.10.2 |
| இரேன் | கோ.கோ.29.3 |

அல் :

| | |
|---|---|
| மொழியல் | கோ.கோ.48.4 |

ஆத் :

| | |
|---|---|
| உறாது | கோ.கோ.26.1 |
| அறியாதவன் | கோ.கோ.28.4 |

**பெயரெச்சங்கள் :**

குறிப்பு

'அ' 'உம்' ஆகிய இரு பெயரெச்ச விகுதிகள் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| சிதைத்திட்ட | கோ.கோ.46.2 |
| இருக்கும் | கோ.கோ.23.3 |

**வினையெச்சங்கள் :**

'இ' 'உ' விகுதிகள் வினையெச்ச விகுதிகளாக வந்துள்ளன.

| | |
|---|---|
| தேடி | கோ.கோ.16.3 |
| உற்று | கோ.கோ.21.3 |
| எண்ணாது | கோ.கோ.58.3 |

**நிபந்தனை எச்சங்கள் :**

'இன்' 'ஆல்' விகுதிகள் நிபந்தனை எச்ச விகுதிகளாக மராட்டியர் காலத் தமிழில் வந்துள்ளன.

| | |
|---|---|
| குறித்திடின் | கோ.கோ.34.4 |
| ஒழிந்தால் | கோ.கோ.42.3 |

**பால்காட்டும் விகுதிகள் :**

**தன்மை ஒருமை :**

'அன்' 'ஏன்' ஆகிய தன்மை ஒருமை விகுதிகள் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

'அன்' :

| | |
|---|---|
| சார்ந்தனன் | கோ.கோ.12.3 |
| வருவன் | கோ.கோ.55.3 |

குறிப்பு

'ஏன்' :

| | |
|---|---|
| அறிவேன் | கோ.கோ.9.3 |
| முடித்தேன் | கோ.கோ.25.4 |

**தன்மைப் பன்மை**

'அம்' 'ஓம்' 'தும்' ஆகிய விகுதிகள் தன்மைப் பன்மை விகுதிகளாக மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

'அம்' :

| | |
|---|---|
| கொண்டனம் | கோ.கோ.21.4 |
| பழித்தனம் | கோ.கோ.58.4 |

'ஓம்' :

| | |
|---|---|
| அடையோம் | கோ.கோ.10.2 |
| பெற்றோம் | கோ.கோ.21.4 |

'தும்' :

| | |
|---|---|
| கூறுதும் | கோ.கோ.4.4 |

**முன்னிலை ஒருமை :**

'ஐ' 'ஆய்' முன்னிலை ஒருமையைச் சுட்டுகின்றன.

'ஐ' :

| | |
|---|---|
| ஒன்றினை | கோ.கோ.45.2 |
| மொழியலை | கோ.கோ.48.4 |

'ஆய்'

| | |
|---|---|
| செய்தாய் | கோ.கோ.43.3 |
| கண்டாய் | கோ.கோ.22.3 |

குறிப்பு

**படர்க்கை**

**ஆண்பால் :**

'அன்' விகுதி ஆண்பால் ஒருமை விகுதியாக இக்காலத் தமிழில் காணப்படுகின்றது.

| | |
|---|---|
| என்றனன் | கோ.கோ.77.2 |
| நிற்பன் | கோ.கோ.59.3 |

**பெண்பால் :**

'அள்' 'ஆள்' ஆகிய விகுதிகள் பெண்பாலைச் சுட்டுகின்றன.

| | |
|---|---|
| நிற்கின்றனள் | கோ.கோ.63.4 |
| ஏகினள் | கோ.கோ.73.3 |

**பலர்பால் :**

'அர்' 'ஆர்' விகுதிகள் பலர்பால் விகதிகளாக வளர்ந்துள்ளன.

'அர்' :

| | |
|---|---|
| நீங்குவர் | கோ.கோ.28.2 |
| சாற்றுவர் | கோ.கோ.30.4 |

'ஆர்' :

| | |
|---|---|
| தந்தார் | கோ.கோ.37.4 |
| வருவார் | கோ.கோ.31.4 |

**ஒன்றன்பால் :**

'அது' என்ற விகுதி ஒன்றன்பாலைச்சுட்டுகிறது.

| | |
|---|---|
| வளர்த்தது | கோ.கோ.36.2 |
| நிற்கின்றது | கோ.கோ.40.4 |

**தமிழில் மராட்டி சொற்கள் :**

தமிழ் மொழியில் மராட்டி சொற்கள் கலந்தள்ளன.

சேமியா, கிச்சடி, கசாயம். பட்டாணி, கோசும்பரி, வாங்கி, ஸொஜ்ஜி உணவு பற்றிய சொற்கள் தமிழில் கலந்தள்ளன.

கங்காலம், கிண்டி, ஜாடி, சாலிகை, குண்டான் போன்ற பாத்திரங்கள் தொடர்பான சொற்கள் தமிழில் கலந்துள்ளன.

கண்டி. சாகி, லாவணி, அபங்கம், டோக்ரா முதலிய இசைத்தொடர்பான சொற்கள் தமிழில் கலந்தன.

குறிப்பு

காமட்டி, கைலாகு, வில்லங்கம், சாவடி, கோலி, அபாண்டம், கில்லாடி, இண்டிகா, கலிங்கம், கொட்டு. சந்து, சலவை, ஜாஸ்தி, சுங்கு, சொண்டி, தடைவ, தரகரி, திமிசு, நீச்சு, பீருடை போன்ற சொற்களும் தமிழ் மொழியில் கலந்தன.

**மராத்தியர் காலத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பேச்சு வழக்குச் சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| அஞ்சு | கரிசனம் | முந்தாநாத்து | விளக்குமாத்துக்கட்டை |
| நாலு | வயணம் | வைபோகம் | செய்குவேன் |
| உசிதம் | இன்னம் | உல்லாசன் | சல்லிக்காசு |
| உபகாரம் | நேமித்து | இன்னைக்கு | தெண்டனிட்டு |
| மெச்ச | சிலவு | பந்துக்கள் | சுழிசுத்தங்கள் |
| ஒண்டி | தம்பிதம் | கவுத்தாலே | இப்படிக்கொத்த |
| நிதம் | கைவசம் | சல்லாபம் | யேசுவாளே |
| பரவசம் | பேசுடி | சாமான்யம் | தாராட்டாலும் |
| சோலி | தாமசம் | தெண்டம் | சுத்தக்கிரயம் |
| இச்சகம் | ஆவலாதி | ஏடாகோடம் | வெகுமானம் |
| கிட்டே | இளப்பம் | அனுதினம் | கச்சிதமாய் |
| வாயாடி | மோடி | பலவந்தம் | மலைவல்லடி |
| சகாயம் | அபசாரம் | நண்ணாக | ஸபலம் |
| சரீரம் | மோகம் | அவகாசம் | கமுக்கம் |
| சும்மா | முக்காடு | வில்லங்கம் | தயவு |
| வாரான் | கைலாகு | சௌரியம் | வன்மம் |
| நித்தம் | வல்லை | சாடை | லோலன் |
| அதனால் | கடுதாசி | | |

*Self-Instructional Material*

**மராட்டிய செப்பேட்டில் காணப்படும் சொற்கள் :**

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| முதித்து | · முடித்து | தாம்பிரசாசனம் | செப்பேடு |
| சமற்பகம் | · சமாதானம் | கனக தண்டிகை | பொற்பல்லக்கு |
| கவில் | · ஒப்பந்தம் | விருது | பாராட்டுப் பரிசில் |
| ஆசிச்சால் | · விரும்பினால் | பூருவம் | கிழக்கு |
| கவ்வை | · உரிமை | பச்சிமம் | மேற்கு |
| சேனவாசி | · படைகள் | வெள்ளைமனுசர் | ஆங்கிலேயர் |
| கரைதுறை | · துறைமுகம் | சங்காமல் | சேர்வு வராமல் |
| வின்னாசம் | · அழிவு | அனவரதம் | நாள்தோறும் |
| அகிதம் | · தீங்கு | கம்பட்டம் | நாணயச்சாலை |
| லவணக்கடை | · உப்புக்கடை | அதிதிபூசனம் | விருந்தோம்பல் |
| வயிசியாள் | · வணிகர் | ஸ்திரவாரம் | சனிக்கிழமை |
| அதிதி | · இரவலர் | செறுவாடு | சிறுசேமிப்பு |
| கண்டுமுதல் | · விளைவு | சம்பு | சிவபெருமான் |
| பிசானம் | · பசானம் | கேசவேட்டை | யானைவேட்டை |
| பறுவம் | · பௌர்ணமி | விருத்தி | நிலக்கொடை |
| பிறதாபம் | · புகழ் | கரபாத்திரம் | பிச்சை பாத்திரம் |
| யோசனை | · தூரம் | விடை | காளை வாகனம் |
| அசுபம் | · இறப்பு | பணிவிடைகாறர் | வேலைக்காரன் |
| ஒன்னலார் | · பகைவர் | பருதிநாள் | ஞாயிற்றுக்கிழமை |
| அசம் | · ஆடு | முகாசு | முதன்மை அலுவலர் |
| ஆழ்மை | · ஆள்மை | கண்டி | நெல் அளவு வகை |
| துரந்தரர் | · வல்லவர் | ஆஜ்ஞை | ஆக்ஞை, கட்டளை |
| தவக்கம் | · குறைவு | செருவத்தினள் | அனைவருக்கும் |
| துவஜம் | · கொடி | ஹேஜண்ட் | ஏஜண்டு, முகவர் |
| பிறதிமா | · உருவம் | உலுப்பை | உணவு பண்டங்கள் |
| பங்கி | · அபின் | கதிர்வாரம் | ஞாயிற்றுக்கிழமை |
| புயமாசம் | - தை மாதம் | ஹஸ்த விகிதம் | · கையெழுத்து |

பேச்சுமொழிச் சொற்களும் பட்டயத்தில் காணப்படுகின்றன.

குறிப்பு

அஞ்சாவுது, ஆதாயம். ஆனை, ஆழ்ச்சி, இத்தைவரை, இப்போ, ஒருத்தர், ஊரு, ஒன்பது, காற்பாத்தி, குடுக்கிறது, கைய்வசம், சதிரம், சமற்பகம், சிலவு. சினேகம், சேந்த, ஞாயம், தீருவை, துடங்கின, நடக்குது, நண்ணீ, நாலாவுது, நூத்துஅன்பது, புதுப்பிச்சு, மனுசர், மாத்து, முன்னாலே, முந்தி, மூணரை, மேலபுறம், ரொக்கம், வத்தகர், வருஷாந்தம், வார்த்தைப்பாடு, விக்கிர, விக்கினம் முதலியன

மராட்டியர் காலத்தமிழ் இலக்கியங்களில் நிறைய வடமொழச் சொற்கள் காணப்படுகின்றன. பிறமொழிச் சொற்களும் காணப்படுகின்றன.

இக்காலத்தமிழின் கூறுகள் மராட்டியர் காலத்துத் தமிழிலே தொடங்கிவிட்டது எனக் கூறலாம். சோழர், நாயக்கர் காலத் தமிழிக் கூறுகளில் சில நிலைத்துவிட்டன. பிறமொழிகளின் ஆதிக்கம் காரணமாகப் பிறமொழிச் சொற்களும் தமிழில் கலந்துவிட்டன.

# இக்காலத் தமிழ் - உரைநடையியல்

குறிப்பு

19ஆம் நூற்றாண்டில் தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது அச்சியந்திரங்களாகும். இந்நூற்றாண்டில்தான் தென்னிந்தியக் கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டன. அதன்பிறகே தமிழின் தொன்மையும் அருமையும் வெளியுலகிற்கு தெரியவரலாயிற்று. மேலை நாட்டினரின் வருகையால் சிறுகதை, புதினம், பத்திரிகைகள், உரைநடை போன்ற பல்வேறு துறைகளிலும் தமிழ்மொழி நவீன மொழியாக உருமாறியது. பெஸ்கி, ரேனியஸ், கிரால், போப், ஆர்டன், கால்டுவெல் ஆகிய மேலை நாட்டு அறிஞர்களால் தமிழ்மொழி நன்கு ஆராயப்பட்டது. குறிப்பாக பேச்சுத் தமிழை நன்கு ஆராய்ந்தனர். இவர்களுள் கால்டுவெல் என்பவரை 'திராவிடமொழியியலின் தந்தை' என்றழைக்கின்றனர். மேலும் இவ்வறிஞர்களால் தமிழ் மொழியில் உரைநடை வளர்ச்சிப் பெற்றது. கலையியல், அறிவியல் போன்ற துறைகளள் வளர வளரத் தமிழும் பல்வேறு மாற்றங்களைக் கண்டது. புதிய புதிய கலைச்சொற்கள் புதிய இலக்கணக் கூறுகள், புதிய வாக்கிய அமைப்புகள் போன்ற பல நிலைகளில் தமிழில் மாற்றங்கள் ஏற்பட்டன. உரைநடைத் தமிழிலும் புதிய புதிய சொல்லாக்கம், துணைவினை போன்றவற்றிலும் பல்வேறு மாற்றங்களும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழை மேலைநாட்டறிஞர்களும், இருபதாம் நூற்றாண்டுத் தமிழை வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீ, ச. அகத்தியலிங்கம், செ.வை.சண்முகம், பொன்.கோதண்டராமன், மு. சண்முகம் பிள்ளை, கு. பரமசிவம், ஆந்திரனோவ், கமில் சுவலபில் ஆகியோரும் ஆராய்ந்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழழியியல் உயராய்வு மையம் நிறுவப்பட்டதன் விளைவாக, இன்றைய தமிழின் பல்வேறு கூறுகள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளாக வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் ச. அகத்தியலிங்கம் போன்றோர் தமிழை 'வளரும் தமிழ்' எனக் கூறியுள்ளனர். அதுபோலவே தமிழ்மொழி நாளுக்கு நாள் பல்வேறு துறைகளில் வளர்ந்து கொண்டே வருகின்றது.

*Self-Instructional Material*

குறிப்பு

**உரைநடைத் தமிழின் ஒலியன்கள் :**

**உயிர் :**

| | | |
|---|---|---|
| இ ஈ | | உ ஊ |
| எ ஏ | | ஒ ஓ |
| | அ ஆ | |

**மெய் :**

| | | |
|---|---|---|
| ப் த் | | ட் ச் க் |
| ம் ந் | ன் | ண் ஞ் ங் |
| | | ழ் |
| | ல் | |
| | ர் | |
| | ற் | |
| ன் | | ய் |

**வரன்முறை (Distrivution) :**

எல்லா உயிரும் சொல்லுக்கு முதலிலும், இடையிலும் வரும். ஈற்றில் ஏ காரமும், ஓகாரமும் வருதல் இல்லை. ஈகாரம், ஊகாரம் ஆகிய இரண்டும் தீ, பூ என்னும் ஓரசைச் சொற்களில் ஈற்றில் வருகின்றன. க், ச், த், ப், ம், ந், ஞ், வ், ய் ஆகியவை சொல்லுக்கு முதலில் வரும். பிறமொழிச் சொற்களில் ட், ர், ல் மொழி முதல் (டப்பா, ரகசியம், லட்டு) வருகின்றன. பதினெட்டு மெய்களும் மொழியிடையில் தனித்து வருகின்றன. ம், ன், ண், ழ், ல், ள், ர், ய் ஆகியவை சொல்லுக்கு இறுதியில் வரும். பழந்தமிழில் இவற்றோடு ஞ், ந், வ் ஆகிய மூன்றும் சொல்லின் இறுதியில் வரலாம் (உரிஞ், பொருந், தெவ்). உயிர்களிடையே ப், த், ச், ட், க், ம், ன், ஞ், ண், ல், ள், வ், ய் இவை தனித்தும் இரட்டித்தும் வரும். இவற்றில் மூக்கொலி, மருங்கொலி, அரையுயிர் குற்றெழுத்தை அடுத்தே வரும். ங், ந் இவ்விரண்டும் உயிர்களிடையே தனித்து வரும் -ற்ற்- சொல்லின் இடையிலும் உயிர்களின் இடையிலும் வரும்.

இன்றைய எழுத்துத் தமிழ் என்று கூறும்போது நாளிதழ்கள், மாத இதழ்கள், கதை, நாவல், சிறுகதை போன்றவற்றில் பயன்படுத்தப்படும் தமிழையும் ஆராய வேண்டும். பத்திரிகைத் தமிழில் க், ச், ட், த், ந், ம்,

ய், ர், ல், வ், ஸ், ஜ், க்ஷ், ஹ் முதலியன சொல்லுக்கு முதலில் வருகின்றன.

குறிப்பு

ட – டவல், டானிக், டெலிகிராம்

d – டப்பா, டாக்டர், டீசல், டெட்டால், டைனமோ

ல – லட்சம், லாகிரி, லீலை, லினன்,

ஷ - ஷர்பத், ஷாப்

ஜ - ஜம்பம், ஜாக்கிரதை, ஜூன், ஜேப்பு, ஜோடி

ஹ - ஹால், ஹோட்டல்

க்ஷ – க்ஷத்திரியர், க்ஷவரம், க்ஷயரோகம், க்ஷேமம்

உயிர் எழுத்துகளில் எ, ஒ, ஔ ஆகியவை இறுதியில் வருவனவல்ல. மெய்யெழுத்துகளில் க், ச், ட், ப், ம், ன், ண், ய், ர், ல், வ், ழ், ள், ஜ், ஸ் ஆகியவை மொழி இறுதியில் வருகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த சுவாமிநாதம் என்ற நூலுக்கு எழுதப்பட்ட எழுத்ததிகார விருத்தி உரையில் ர, ல என்ற இரண்டு மெய்யும் எல்லா உயிர்களோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும் என்றும், டகரம் அ, ஆ, இ, ஈ, ஏ ஆகிய உயிர் எழுத்துகளோடு சேர்ந்து சொல்லின் முதலில் வரும் என்றும் கூறியது இக்காலத் தமிழின் சிறப்பியல்புகளாகும்.

**மெய்ம் மயக்கங்கள் :**

பழந்தமிழில் சொல்லின் இறுதியில் இரண்டு மெய்கள் (தீர்ம், போன்ம்) மயங்கி வந்தன. ஆனால், இக்காலத் தமிழில் ஒரு சொல்லின் முதலிலோ இறுதியிலோ இரண்டு மூன்று மெய்கள் மயங்கி வருகின்றன. அதனை பத்திரிகைத் தமிழில் காணமுடிகின்றது.

ட் - சட்னி

ட்ல் - இட்லி

ட்ஜ் - பேட்ஜ்

ன்ய் - சூன்யம்

ஸ்ட் - போஸ்டர்

ஸ்த் - ஆஸ்தி

ஸ்ப் - பரஸ்பரம்

ர்ண் - வர்ணம்

ர்ர் - குர்ரான்

ர்ன் - கவர்னர்

குறிப்பு

**இன்றைய பேச்சுத் தமிழில் ஒலி மாற்றங்கள் :**

பேச்சுத் தமிழில் நிகழும் ஒலி மாற்றங்கள் குறித்து டாக்டர் கு. பரமசிவம் என்னும் மொழியியலாளர் 'இக்காலத் தமிழ் மரபு' எனும் நூலில் 'உரையாடலில் ஒலி மாற்றங்கள்' என்ற தலைப்பில் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்.

I. இகர எகர, உகர ஒகர மாற்றம் :

இலை > எலை

இடம் > எடம்

உரல் > ஒரல்

குடை > கொடை

முதல் > மொதல்

II. இகர எகரங்கள் ஒகரமாதல் :

பிறப்பு > பொறப்பு

பிணம் > பொணம்

பெட்டி > பொட்டி

பெண் > பொண்ணு

III. இகரம் உகரமாதல் :

பிட்டு >புட்டு

பிள்ளை > புள்ளை

IV. உகரம் இகரமாதல் :

புல்லு > பில்லு

புறா > பிறா

V. ஔகாரத் திரிபு :

ஔகாரம் அவ் என்றே உச்சரிக்கப்படுவதோடு எழுதவும் படுகிறது.

ஔவை > அவ்வை

VI. ஓரினமாதல் (Assimilation) :

குறிப்பு

ஒரு சொல்லின் முன்னால் வருகின்ற ஒலியனுக்கேற்ப பின்னால் வரும் வேறொர் ஒலியன் வேறுபடுமாயின் அதனை முன்வழி ஓரினமாக்கம் (Progressive Assimilation) எனபடும்.

வேள்விக்கு > வேள்விக்கி

கத்திக்கு > கத்திக்கி

ஒரு சொல்லில் பின்னால் வருகின்ற ஒலியனுக்கேற்ப முன்னால் வரும் ஒலியனின் உச்சரிப்பு மாறுபடுமாயின் அம்மாற்றம் பின்வழி ஓரினமாக்கம் (Regressive Assimilation) எனப்படும்.

செண்பகம் > செம்பகம்

வன்சினம் > வஞ்சினம்

எண்பது > எம்பது

சொற்களில் அடுத்தடுத்துக் காணப்படுகின்ற ஒலியன்களில் ஓரினமாக்க மாற்றம் ஏற்படுமாயின் அதனைத் தொடர்வழி ஓரினமாக்கம் (Continuous Assimilation) எனப்படும்.

நன்செய் > நஞ்செய்

புன்செய் > புஞ்செய்

VII. அண்ணமாதல் (Palatalization) :

அண்ணத்தையொட்டிப் பிறக்கின்ற ஒலி சகர ஒலியாகும்.

அடித்தான் > அடிச்சான்

கலைத்தான் > கலைச்சான்

எரிந்தது > எரிஞ்சது

உடைந்தது > உடைஞ்சது

VIII. பல்லொலியாதல் :

நுனிநா நுனியண்ண அடைப்பொலி (ற்) இரட்டித்து வரும்போது, பேச்சுத் தமிழில் இரட்டைத் தகரமாக மாறுகின்றது.

குற்றம் > குத்தம்

விற்றான் > வித்தான்

பற்று வரவு > பத்து வரவு

IX. 'ழ'கர மெய் மறைதல் :

பேச்சு வழக்கில் 'ழ'கர மெய் மறைந்து வருகின்றது.

வாழ்வரசி > வாவரசி

தாழ்வாரம் > தாவாரம்

X. நா வளைப்படுதல் :

ன்ற் - ண்ண என மாறுதல்

குறிப்பு

கன்று > கண்ணு

ஒன்று > ஒண்ணு

**சந்தி :**

உரைநடைத் தமிழில் புதிய சந்திகளும் தோன்றியுள்ளன. அந்தந்த – அந்த + அந்த, நாலா பக்கமும் - நாலு + பக்கம், பத்திரிகாசிரியர் - பத்திரிகை + ஆசிரியர் போன்று எத்தனையோ சொற்களில் மாற்று வடிவங்கள் வந்து புதிய புணர்ச்சி விதியை அமைக்கும்படி செய்துள்ளன. காலப்போக்கில் மொழி மாறுகின்றது. வளருகின்றது. முன்பின் ஒப்பிட்டு ஆராய்ந்தால்தான் அக்கால மொழி வளர்ச்சியை நன்கு புரிந்து கொள்ள முடியும். ஒரு காலத்தில் அம்மொழியில் கண்ட அத்தனை சொற்களையும் அடுத்த காலத்தில் காணமுடிவதில்லை. இன்றையத் தமிழில் காணப்படும் சொற்கள் அனைத்துமே தமிழ்மொழியின் ஆரம்ப கால முதலே இருந்தன எனக் கூற முடியாது. தமிழ் மொழியின் இரண்டாயிர ஆண்டுகால வளர்ச்சியில் எத்தனையோ சொற்கள் உருவாவதும் எத்தனையோ சொற்கள் வழக்கற்றுப் போவதும் இயற்கையாக இருக்கின்றது.

தற்காலத் தமிழில் நிகழ்கால விகுதியாக கிறு, கின்று மிகுதியாக வருகின்றன. சங்க இலக்கியத்தில் வல்வினைகள் பகர மெய் ஏற்ற வருவது பெரும்பான்மை வழக்காகும். இடைக்காலத்தில் ககர மெய் ஏற்பதே பெரும்பான்மை வழக்காகும். அதுவே இன்றையத் தமிழிலும் நிலைத்துவிட்டது. இடைக்காலத்தில் காணப்படாத எத்தனையோ வினைச் சொற்கள் (கண்டுபிடி, கைதுசெய், காட்டிக் கொடு) இன்றையத் தமிழில் காணப்படுகின்றன.

தமிழில் பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் திணை. பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்துகின்றன. தமிழ் இலக்கண அறிஞர்கள் பெயர்ச் சொற்களை உயர்திணை அஃறிணை என்றும் உயர்திணையை ஆண்பால், பெண்பால், பலர்பால் என்றும் அஃறிணையை ஒன்றன்பால், பலவின்பால் என்றும் பிரிப்பர்.

குறிப்பு

**ஆண்பால் விகுதி அன், ஆன், வன், காரன்**

அன் : திருடன், செவிடன், அரசன்

ஆன் : மச்சான், அத்தான்

வன் : குயவன்

காரன் : வேலைக்காரன், வீட்டுக்காரன்

**பெண்பால் விகுதி அள், த்தி, ஆத்தி, ச்சி, காரி, வி**

அள் : மகள்

த்தி : குறத்தி, பள்ளத்தி

ஆத்தி : பாப்பாத்தி, வண்ணாத்தி

ச்சி : பள்ளச்சி, செட்டிச்சி

காரி : வேலைக்காரி, வீட்டுக்காரி

வி : புதல்வி, தலைவி

**பலர்பால் விகுதி அர், அர்கள், வர், வர்கள், மார், மார்கள், கள்**

அர் : அரசர், திருடர்

அர்கள் : அரசர்களள், திருடர்கள், தமிழர்கள்

வர் : புதல்வர், செல்வர்

வர்கள் : புதல்வர்கள், செல்வர்கள்

மார் : அண்ணன்மார், தம்பிமார், அரசிமார்

மார்கள்: அண்ணன்மார்கள், தம்பிமார்கள், அரசிமார்கள்

கள் : ஆண்கள், பெண்கள், தம்பிகள்

ஒன்றன்பால் விகுதி : ஒன்றன்பால் காட்டும் ஒட்டுக்கழளத் தமிழ்ப் பெயர்ச் சொற்களில் காணமுடிவதில்லை.

பலவின்பால் விகுதி : ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிக்கும் அ.்.றிணைப் பெயர்களே பலவின் பால் பெயர்களாகும்.

க்கள், கள் ஆகியவை பலவின் பால் காட்டும் ஒட்டுக்களாகக் காணப்படுகின்றன.

க்கள் : பூக்கள், ஈக்கள்

கள் : ஆடுகள், மாடுகள், கற்கள்

குறிப்பு

**உயர்வு ஒருமைப் பெயர்கள் (Honorific Singular) :**

ஆர், அவர்கள் என்னும் விகுதிகள் முக்கியமானவர்களைக் குறிக்கும் விகுதிகளாக வழங்கப்படுகிறது.

ஆர் : அண்ணனார், அண்ணியார், வரதராசனார், அகத்தியலிங்கனார்

அர்கள் : துணைவேந்தர் அவர்கள், அமைச்சர் அவர்கள்

அடிகள், அம்மையார் போன்ற சொற்கள் உயர்வு ஒருமையைக் குறிக்கின்றன.

காந்தி அடிகள், இராமலிங்க அடிகள்

இந்திராகாந்தி அம்மையார்

**வினை வகைப்பாடு :**

தமிழ் வினைச்சொற்களில் காணப்படும் காலங்காட்டும் இடைநிலையின் அடிப்படையில் வினைச்சொற்களைப் பாகுபடுத்துவர். எந்த எந்த வினைச் சொற்கள் எந்தெந்தக் கால இடைநிலைகளைப் பெறும் என்ற அடிப்படையில் தமிழ் வினைச்சொற்களைப் பன்னிரண்டு வகைகளாகப் பகுத்தார் கிரால் (புசயரட) அவர்கள். இவருக்குப் பின்னர்தான் ரேனியஸ் (சுாநௌைள), போப் (ீழிந), ஆர்டன் (யுசனநெ) போன்றவர்கள் வினைப் பாகுபாடு செய்துள்ளனர். கிரால் தம்முடைய நூலில் (1855) கால இடைநிலையை அடிப்படையாக வைத்து மூன்று பெரும்பிரிவாகப் பிரிக்கின்றார்.

| | | |
|---|---|---|
| I | | |
| செய்தான் | செய்கிறான் | செய்வான் |
| விழுந்தான் | விழுகிறான் | விழுவான் |
| II | | |
| கண்டான் | காண்கிறான் | காண்பான் |
| என்றான் | என்கிறான் | என்பான் |
| III | | |
| கொடுத்தான் | கொடுக்கிறான் | கொடுப்பான் |
| நடந்தான் | நடக்கிறான் | நடப்பான் |

குறிப்பு

இம்மூன்று வகை வினைகளையும் இறந்தகால மாற்றுருபுகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் ஏழுவகைகளாகப் பிரித்தார் கிரால்.

I. மெல்வினை

| | | | | |
|---|---|---|---|---|
| I | செய்வேன் | செய்கிறேன் | செய்தேன் | த் |
| | ஆளுவேன் | ஆளுகிறேன் | ஆண்டேன் | ண்ட் |
| | கொல்லுவேன் | கொல்லுகிறேன் | கொன்றேன் | ன்ற் |
| II | அறிவேன் | அறிகிறேன் | அறிந்தேன் | ந்த் |
| III | வாங்குவேன் | வாங்குகிறேன் | வாங்கினேன் | இன் |
| IV | விடுவேன் | விடுகிறேன் | விட்டேன் | ட் |

II. இடை வினை

| | | | | |
|---|---|---|---|---|
| V | உண்பேன் | உண்கிறேன் | உண்டேன் | ட் |
| | என்பேன் | என்கிறேன் | என்றேன் | ற் |

III. வல்வினை

| | | | | |
|---|---|---|---|---|
| VI | படிப்பேன் | படிக்கிறேன் | படித்தேன் | த்த் |
| VII | நடப்பேன் | நடக்கிறேன் | நடந்தேன் | ந்த் |

**ஏவல் வினை : 3**

உடன்பாட்டு ஒருமை ஏவல் : போ, செய், நட

உடன்பாட்டுப் பன்மை ஏவல் : போங்கள். செய்யுங்களள், நடங்கள்

எதிர்மறை ஒருமை ஏவல் : செய்யாதே, நடக்காதே

எதிர்மறைப் பன்மை ஏவல் : செய்யாதீர்கள், நடக்காதீர்கள்

உயர்வு ஒருமை ஏவல் : செய்யும், ஆடும்

சிறப்பு உடன்பாட்டு ஒருமை ஏவல் : செய்யுங்கள், ஆடுங்கள், பாடுங்கள்

வேண்டல் ஏவல் : செய்யேன், செய்யுமேன், செய்யுங்களேன்

**துணை வினை :**

வினைகளுக்குப் புதிய பொருள்களை உண்டாக்குவதற்குத் துணை வினைகள் அடிப்படையாக விளங்குகின்றன. முழு வினைகள் சொற்பொருளையும் துணை வினைகள் இலக்கணப் பொருளையும் தருகின்றன.

ஓட – செய், பண்ணு, வை

'போ' என்னும் துணைவினை நிகழவிருப்பதைக் குறிக்கிறது.

குறிப்பு

'கொண்டிரு' என்னும் துணைவினை செயல் தொடர்பைக் குறிக்கிறது.

செய்து கொண்டிருந்தான்

'விடு' வரைநிலை அடைமொழிகளாக (Definitive) வருகின்றன.

வந்து விடுவான்

வந்து விட்டான்

தொலை, தள்ளு, அழு ஆகிய துணைவினைகள் விரும்பாத தன்மையைக் குறிக்கின்றன.

**உறுதிப்பொருள்கள் :**

வினையெச்சத்தோடு விடு என்னும் துணைவினையைச் சேர்ப்பின் உறுதிப்பொருளைக் காட்டும் கூட்டுவினை பிறக்கின்றன.

அவன் நேற்றைக்கே சொல்லிவிட்டான்

அவன் நேற்று படித்துவிட்டான்

**முடிவுப் பொருள் :**

வினையெச்சத்தோடு 'ஆயிற்று' எனும் துணைவினை சேர்ப்பின் முடிவுப் பொருளைக் குறிக்கும் கூட்டுவினை பிறக்கும்.

அவனிடம் பணம் கேட்டாயிற்று

விளக்கு அணைந்து போயிற்று

**தொலை, தள்ளு, வை, அழு :**

எங்கே போய்த் தொலைந்தான்?

சிகரெட்டை ஊதித் தள்ளுகிறான்.

சொத்தை மருமகனுக்கு எழுதி வைத்தார்

அவனுக்குப் பத்துரூபாய் கொடுத்தழுதேன்.

இவ்வாறு இக்காலத் தமிழில் உரைநடைப் போக்கில் எழுத்திலும் பேச்சுலும் நிரம்ப மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மேலும் நிகழ்ந்து வருகின்றன. அவற்றை நாம் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம்.

## அறிவியல் தமிழ்

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்நத மகாகவி பாரதி பல கனவுகளைக் கண்டார். அவற்றில் ஒன்று கல்வி பற்றிய மகத்தான கனவைக் கண்டார் .

பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

என்று விரும்பினார். அவர் விரும்பிய அந்தப் பல கல்வி தருவதற்கான சொல் வளத்தை, குறியீட்டுத் தொகுப்பை நடை அமைப்பை, சுருக்கமாகக் கூறப்போனால் அதற்கான நூல்களைக் கொண்ட தமிழைத்தான் ‘அறிவியல் தமிழ்’ என்கிறோம்.

குறிப்பு

உலகம் சுருங்கி மானிடத்தின் உணர்வு விண்ணிலும் வெளியிலிலும் விரியும் இந்நாளில், பல துறைகள் நம்மிடையே வளராத ஒரு நிலையைக் காண்கிறோம். அறிவுத் துறைகள் அனைத்திலும் தமிழ் அறிவியல் மொழியாக வளரவேண்டும். நமது தாய்மொழி உயர் தனிச் செம்மெரிழயாக மட்டுமின்றி வாழும் ஒரு மொழியாக இருத்தல் வேண்டும். சுதந்திரம் பெற்ற நாடுகள் அனைத்திலும் பெரும்பாலும் தாய்மொழியே யிற்று மொழியாக உள்ளது. தாய்மொழியைப் பயிற்று மொழியாக்கும் போது பல இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. அவற்றுள் கலைச் சொற்கள் (Technical tems) இன்மையும் பாடநூற்கள் இல்லாமையும் முக்கியக் காரணங்களாகும். நமது மொழியில் கலைச் சொற்களும் பாடநூற்களும் உருவாதல் இன்றியமையாததாகும். புதிய துறை பற்றிய கருத்துக்களை முதன் முதலாக ஆராய்ந்து அம்முடிவுகளைத் தாய்மொழியில் கூறுவது ஒரு வகை. பிறமொழியில் கூறப்பட்ட கருத்துக்களைத் தாய்மொழியில் கூ;றுவது மற்றொரு வகை. இவ்வாறு செய்யும் போது மொழிபெயர்ப்புப் போல் தோற்றமளிக்கும். தாய்மொழியின் அமைப்பிற்கேற்ப மூல மொழியில் கூறியவற்றைத் தழுவி எழுத வேண்டும். இதுவரை தமிழில் வந்த அறிவியல் நூல்களை நோக்கும்போது, நிறை குறை தெளிவாக விளங்குகிறது. மூலமொழிச் சொற்களைத் தாய்மொழியில் இடத்திற்கேற்ப மாற்றிக் கொள்ள வேண்டும். மூலமொழியில் சொல்லியுள்ளவாறே தாய்மொழியில் கூறினால் கருத்துத ் தெளிவு உண்டாகாது. சில சமயங்களில் கருத்துத் தெளிவு உண்டாக, மூலமொழியில் இல்லாத சில தொடர்களையும் சேர்க்கலாம். சில சமயங்களில் கருத்துத் தெளிவு உண்டாக, மூலமொழியில் இல்லாத சில தொடர்களையும் சேர்க்கலாம்.

சில கருத்துக்களை அழுத்தமாகக் கூற, தேர்ந்தெடுத்த வினைமுற்றைப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு

பிறமொழி அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பது கி.பி. 1832இல் தொடங்கியது. தமிழின் முதல் அறிவியல் நூலான பூமி சாஸ்திரம் இரேனியஸ் பாதிரியாரால் 1832ஆம் ஆண்டு பாளையங்கோட்டை சர்ச் மிஷன் அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டு வெளியானது. இந்நூலில் புவியியல் தொடர்பான ஐம்பத்தொரு கலைச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. பின்னர் பூமி சாஸ்திரச் சுருக்கம். பூமிச் சாஸ்திர பொலிப்பு, பூமி சாஸ்திரப் பாடங்கள் ஆகிய நூல்கள் 1846ஆம் ஆண்டு வெளிவந்தன. இந்நூல்கள் ஆங்கில மொழியில் வெளியான நூல்களைத் தழுவி தமிழில் எழுதப்பட்டனவாகும். 1848ஆம் ஆண்டு இலங்கைக்கு மருத்துவத் துறையில் பணியாற்ற வந்த டாக்டர் யஷ் கீரின் அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்வதில் சிறந்து விளங்கினர். டாக்டர் கட்டர், ஆங்கிலத்தில் எழுதிய Anatomy, Physiology and Hygiene என்ற மருத்துவ நூலினை ‘அங்காதிபாத சுகரண வாத உற்பாவண நூல்’ என்ற பெயரில் 1852இல் யிஷ் கிரீன் மொழிபெயர்த்தார்.

மொழியினைப் புதிய துறைகளில் பயன்படுத்துபோது கருத்துப் பரிமாற்றத் தேவைகளுக்கேற்பவும் பயன்படும் துறைகளின் வளர்ச்சிக்கேற்பவும் புதிய கலைச் சொற்களும் வாக்கிய அமைப்புக்களும் இன்றைய தமிழில் உருவாவது இன்றியமையாததாகும். அறிவியல் தமிழில் கலைச் சொற்கள் படைத்தல் இன்றியமையாத ஒன்றாகும். அதனைப் பலவகையில் படைக்கின்றனர். மொழி வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் கலைச்சொற்கள் உதவுகின்றன.

1. சொல்லாக்கம் (Transcreation)
2. ஒலிபெயர்ப்பு (Transliteration)
3. மொழிபெயர்ப்பு (Translation)
4. அகநிலையாக்கம்
5. தெளிவுபடக் கூறல் (Explicity)
6. இருமொழி இணைச் சொற்கள் (Blending)

7. ஒட்டுச் சொல்லாக்கம் (affixation)
8. புதுச்சொல் படைத்தல் (Creation of new word)

குறிப்பு

புதுச்சொல் படைக்கும்போது எளிமை (Simplicity), வழக்கு முதன்மை (currency), ஆக்கத்திறன் (Productivity), சொல் தெளிவு (Transparancy) முதலியவற்றை மனதில் கொள்ள வெண்டும் .

கலைச் சொல்லாக்கத்தில் ஒலி பெயர்ப்பு (Translitertaion) இன்றியமையாததாகும். ஒலி பெயர்ப்பில் மேற்கொண்ட முறை பற்றியும் மேற்கொள்ள வேண்டிய முறை பற்றியும் மொழியியல் பேரறிஞர்கள் அகத்தியலிங்கம் அவர்களும் சண்முகம் அவர்களும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். தொல்காப்பியர் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துவது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இடைக்காலத்தில் வடமொழிச் செல்வாக்கு மிகுந்தது. வடசொற்களை எழுதக் கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. தமிழ் நெடுங்கணக்கொடு ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ என்னும் கிரந்த எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஸ என்ற கிரந்த எழுத்து Z என்ற ஒலியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| Zigmandi | ஸிக்மாண்டி |
| Boltzman | போல்ட்ஸ்மன் |

nd என்ற ஒலியைக் குறிக்க ண்ட், ன்ட் என்ற இரு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘ன்ட்’ ஏற்றுக்கொள்ளத் தக்கது.

| | |
|---|---|
| Banderwalls | வான்டர்வால்ஸ் |
| Andrews | ஆண்ட்ரூஸ் |

மொழி இடையில் ஒலிப்பிலா வல்லொலிகளைக் குறிக்க இரட்டை வல்லெழுத்துக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளவை.

| | |
|---|---|
| Dalton | டால்ட்டடன் |

Opera ஆப்பரா

குறிப்பு

மொழி முதலில் வரும் ஒலிப்புடை வல்லொலிக்கும் ஒலிப்பிலா வல்லொலிக்கும் ஒலி பெயர்ப்பில் வேறுபாடு காட்டப்படவில்லை.

Proust ப்ரௌஸ்ட்

Brounstead ப்ரான்ஸ்ட்டெட்

இரட்டை ஒலிப்புடைய வல்லொலிகள் ஒரு வல்லெழுத்தாலும் இரு வல்லெழுத்தாலும் குறிக்கப்பட்டுள்ளன.

Abbe ஆப்ப

Wagge வாகெ

மேலே காட்டியவற்றுள் ஒலி பெயர்ப்பு முறை செம்மையாக அமையவில்லை. தமிழ்மொழி இன்னும் ஒலி பெயர்ப்பில் நிலைபேறு (Standardization) அடையவில்லை என்பதைக் காட்டுகிறது.. சீரிய நெறியை வகுத்து, அதைச் செம்மையாகக் கடைப்பிடித்து, அறிவியல் தமிழை வளம் பெறச் செய்ய வேண்டும்.

அறிவியல் கலைச் சொற்கள் கூடுமானவரை தனிச் சொற்களாயிருத்தல் நன்று என்றும் அவை பொருள் விரிவாக்கம் பெறும் வகையிலும் அமைய வேண்டும் என்பதாகும்.

i. அறிவியல் தமிழில் செயப்பாட்டு வினை ஆட்சி அதிகம்

ii. பெயராக்க நடை (Nomonalized style) அதிகம் கையாளப்படுகின்றது.

iii. முக்காலத்துக்கும் பொதுவான தொடர்கள் பெருவழக்காக உள்ளன.

iv. பண்புப் பெயர் வழக்கு (abstract nouns) அறிவியல் தமிழில் அதிகம்

v. தெளிவும் செறிவும் வற்புறுத்தப்படுகின்றன.

**அறிவியல் கலைச்சொற்கள் :**

குறிப்பு

1. Telescope – தொலைநோக்கி : tele என்றால் தொலை எனப் பொருள். Scope – நோக்கம். எனவே தொலை தூரத்திலுள்ள பொருள்களை நோக்கப் பயன்படும் கருவியைத் தொலைநோக்கி எனல் பொருத்தமானது.
2. Microscope – நுண்ணோக்கி : மனிதனின் கண்பார்வைக்கும் புலப்படாப் பொருள்களைக் காண்பதற்காகப் பயன்படுத்தப்படும் கருவியே ஆகும். நுண்ணோக்காடி என்றும் கூறப்படுகின்றது.
3. Physics - இயற்பியல் : இயற்கையைப் பற்றிய அறிவியல். ஆதலால் இதனை இயற்பியல் எனத் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.
4. Thermometer – வெப்பநிலை மானி : இதனைக்கொண்டு வெப்பநிலைகளை நாம் அளவிடுகிறோம். ஆகவே இதனை வெப்பநிலை அளவி (அ) வெப்பநிலை மானி எனத் தமிழிழல் கூறலாம்
5. Capaciter – மின்தேக்கி : மின்னூட்டத்தினை (Charge) இது தேக்கி வைப்பதால் இதனை மின்நோக்கி எனத் தமிழாக்கம் செய்திருப்பது சரியானது.
6. Ozone Layer – ஓசோன் மெல்லேடு : Ozone என்பது ஒரு வாயுவின் பெயர். ஆதலால், அதனை ‘ஓசோன்’ என அதே பெயரில் மொழிபெயர்க்கின்றனர். டுயலநச என்பதனை ‘அடுக்கு’ ‘மெல்லேடு’ ‘மெல்லிய ஏடு’ என்று கூறப்படுகின்றது.
7. Nuclear Fusion – அணுக்கருவிப் பிளவை : இச்செயலின் போது அணு இரண்டாகப் பிளந்து ஆற்றலை வெளியிடுவதால், ‘அணுக்கருப்பிளவை’ என மொழிபெயர்க்கின்றனர்.
8. Anaesthesia – உணர்வகற்றி : நமது உடலில் ஏற்படுகின்ற கட்டி முதலியவற்றை அகற்ற அறுவை சிகிச்சை செய்யப்படுகின்றது. அந்நெரத்தில் நமது உணர்வை அகற்றி எந்த இடத்தில் அறுவையோ அந்த இடத்தை மரத்துவிடச் செய்து வலி தெரியாமலிருக்கச் செய்வர். அதற்காக உடலில்

*Self-Instructional Material*

குறிப்பு

செலுத்தப்படும் மருந்து Anesthesia எனப்படுகிறது. இதைத் தமிழில் உணர்வகற்றி என்பது பொருத்தானதாக இருக்கின்றது.

Mechanical Engineering - இயந்திரப் பொறியியல் : Mechanical என்பது 'எந்திரவியல்' ஆகும். Engineering என்பதைப் பொறிவியல் என மொழிபெயர்த்துள்ளனர்.

9. இரண்டையும் சேர்த்து 'எந்திரப் பொறியியல்' என்பது சரியானதாக இருக்கின்றது.

10. Centre of Gravity – புவி ஈர்ப்பு மையம் : Centre என்றால் நடு அல்லது மைப் புள்ளி. Gravity என்பது புவியின் ஈர்ப்புச் சக்தியைக் குறிப்பதால் இதனை 'புவிஈர்ப்பு மையம்' என மொழிபெயர்ப்பது சரியானதாகும்.
11. Centre of Curvature – வளைவு மையம் : Curvature என்றால் வளைவு எனப்படும். அந்த வளைவின் மையத்தைக் குறிப்பிடும். Centre of Curvature என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'வளைவு மையம்' எனத் தமிழாக்கம் செய்திருப்பது பொருத்தமே.
12. Anti Maller – எதிர்ப்பருப் பொருள் : Matter என்பது பருப்பொருள். எனவே எதிர்ப்பருபொருள் என எழுதுவதற்குப் பதிலாக 'எதிர்ப்பருப்பொருள்' என எழுதுவதே சரியானதாக இருக்கின்றது.
13. Disperasion – நிறப்பிரிகை : ஒரு முப்பட்டகத்தின் (Prison) வழியே வெள்ளொளி புகுந்து, வெளிப்படும் போது ஏழு நிறங்களாகப் பிரிகின்ற காரணத்தால், 'நிறப்பிரிகை' எனக்கூறுகின்றோம்.
14. Data Bank – குறிப்பு வங்கி : Data என்பது குறிப்பு அல்லது செய்தி எனப்பொருள்படுகிறது. Bank என்பதனை வங்கி எனக் கூறி வருகிறோம். எனவே Data Bank என்ற சொல்லுக்குச் செய்தி வங்கி அல்லது குறிப்பு வங்கி எனத தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.
15. Monitor – கணிப்பான் திரை : இது நம் தொலைக்காட்சியில் உள்ள திரையைப் போல உள்ளது. ஆகவே, கணிப்பான் திரை

என தமிழாக்கம் செய்திருக்கின்றனர். Bio – Conversion – உயிர்ம் மாற்றம் : Bio என்றால் உயிர்மங்களள் அல்லது உயிர் உள்ள பொருள் சம்பந்தப்பட்டது. Conversion என்பதற்கு மாற்றம் எனப் பொருள் எனக் கூறுவது பொருத்தும

16. Plant Morphology – தாவரப்புற அமைப்பியல் : இப்பிரிவில் தாவரங்களின் உருவம் அமைப்பு, தோற்றம் முதலிய புற அமைப்பைப் பற்றிப் பயில்வதால் இதனைத் 'தாவரப் புற அமைப்பியல்' எனக் கூறலாம்.
17. Mortal Wound – நிறப்புண் எனத் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இது தவறு புண்ணுக்கு நிறம் ஏது? ஆகையால் இதனை 'மரணக்காயம்' அல்லது 'சாவுப்புண்' எனத் தமிழாக்கம் செய்யலாம் என்பர். மேலும்
18. adsorbtion – பரப்பு கவிர்ச்சி
19. Amphoetric - ஈரியல்புள்ள
20. Boiler கொதிகலன்
21. Coagulation – திரிதல்
22. Conjugation – புணர்விளைவி
23. Contrary – மாறான
24. Dimer - இருபடி
25. Effervescence – பொங்குதல்
26. Exothermic (Reacion) – வெப்ப உமிழ்
27. Flint – நீக்கல்
28. Filtrate – வடி நீர்மம்
29. Froth – நுரை
30. Galvanised – துத்தநாகம் பூசிய
31. Globule – உருண்டை தூள்
32. Igneous rock- அனற்பாறை
33. Inert gas – மந்த வளிமம்
34. Involute – உள் சுருள்வரை
35. Nascent – பிறவி நிலை

குறிப்பு

36. Pippette – உரிச்சு குழல்
37. Porous – நுண்துளை
38. Resonance – உடனிசைவு
39. Transistor – திரிதடையம்
40. Weak Electrolyte – மென் மின்
41. Separating Funnel – பிரிபுனல்
42. Zero group – தொடக்க தொகுதி
43. Larch – ஊசியிலை மரம்
44. Lard oil – பன்றி கொழுப்பு எண்ணெய்
45. Larry – கலவைக் கருவி
46. Lastic – வேதி குழுமம்
47. Alien – அயலினம்
48. Appendege – ஒட்டுப்பாகம்
49. Corolladub – அல்லிவட்டக்குழல்
50. Compoundleap - கூட்டு இலை
51. Circumnutatiol - சூழல் இயக்கம்
52. Eldwwall – நுனி அறை
53. Food Web – உணவு வலை, (ஆகார வலை)
54. Stiltroot – ஊன்று வேர், ஆணி வேர்
55. Root cap – வேர் மூடி
56. Root Hair – வேர் தூவி
57. Setlf Pollination – தன் மகரந்தச் சேர்கைக
58. Mushroom – நாய்க்குடைக் காளான், காளான்
59. Multiple Fruit – பல பூதிரள், கூட்டுக்கனீ
60. Fibraous Root – சிம்பு வேர்
61. EverGreen – பசுமை மாறாதது
62. Annualrings – ஆண்டு வளையம்
63. Breathing root - மூச்சு வேர்
64. Water Hole – சுனை, குட்டை
65. Rain Shadow – மழை மறைவு
66. Mouth of river – முகத்துவாரம், ஆற்றுவாய்

67. High Pressure – பேரமுத்தம்

68. Acid Arocks – அமிலப் பாறைகள்

69. Marked price – குறித்த விலை

குறிப்பு

## . மொழிபெயர்ப்பு

ஒரு மொழியில் உள்ள கருத்து, இலக்கியம், அறிவியல் கண்டுபிடிப்புகள் எனப் பல துறைகளிலுள்ளவற்றை மற்றொரு மொழியில் மாற்றுவது மொழிபெயர்ப்பு ஆகும். தகவல் தொர்புச்சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், இணையம் என்ற அனைத்து ஊடகங்களும் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. சாதாரணமாக ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஒரே மொழியை பேசுபவராக வாழ்கின்றனர். குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் வாழ்கின்றனர். மக்கள் அனைவரும் தங்களுக்கிடையே ஏதோ ஒரு வகையில் தொடர்ப கொள்ளும்போது இருவரும் வேறு வேறு மொழிகளில் தொடர்பு கொண்டால் அப்போது இருவருக்கிடையில் மொழிபெயர்ப்பு அவசியமாகிறது.

பதிப்பு ஊடகங்களான இதழ்கள், நூல்கள் முதலியன மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வெளியிடப்படுவதால் அவற்றிற்கும் இன்றைய சூழலில் அவசியம் ஏற்படுகிறது. மொழிபெயர்ப்பின் நோக்கம் கருத்துப் பரவல் என்பதால் அது இல்லாத துறையே இல்லை என்ற அளவிற்கு அதன் அவசியம் தற்காலத்தில் உணரப்பட்டு, பெருமளவு மொழிபெயர்ப்புப் பணிகள் நடக்கின்றன.

**மொழிபெயர்ப்புக்கான வரையறை :**

Translation என்ற வார்த்தை ‘Translatio’ என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து வந்தது. இதற்கு ‘கொண்டு செல்லுதல்’ என்று பொருள். ‘ஒரு மூல மொழிப் பிரதியின் அர்தத்தை அப்பிரதிக்கு இணையான இலக்கு மொழிப் பிரதியின் வழியாக வெளிப்படுத்துதலே மொழிபெயர்ப்பு’. இந்த வரையறையை மொழிபெயர்ப்பு பற்றிய மிக அடிப்படையானவொரு வரையறையாகக் கொள்ளலாம். இதில்

குறிப்பு

'அப்பிரதிக்கு இணையான' என்ற சொல்லாடலைக் கூர்ந்து நோக்கினால், மெரிபெயர்ப்பு எனும் போது இலக்கிய மொழிபெயர்ப்பையே பெரிதும் நாம் சுட்டுவதாக இருக்கின்றது. தழுவல், சுருக்கம், மொழியாக்கம், நேர்மொழிபெயர்ப்பு என்பவற்றை மொழிபெயர்ப்பின் வகைளாகக் கொண்டால் நேர்மொழிபெயர்ப்பே இலக்கிய மொழிபெயர்ப்பாக அமைய முடியும். ஏனென்றால் அதுவே 'பிரதிக்கு இணையான' எனும் அடிப்படையைக் கொண்டது. தழுவல் மூலப் படைப்பின் கருவை மட்டும் எடுத்துக்கொண்டு அதனை இலக்குமொழிச் சார்ந்த பண்பாட்டு கலாச்சார கூறுகளுக்கு எற்ப மீளாக்கம் செய்வது ஆகும். உலக இலக்கியத்தில் தழுவல் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு முறையாகக் கொள்ளப்படுவதில்லை. அது மூல ஆசிரியருக்கு இழைக்கப்படும் துரோகமாகக் கருதப்படுகிறது. சுருக்கம் என்பது தேவை சார்ந்த எளிய மொழிபெயர்ப்பு முறை. அதிகமும் ஒரு படைப்பை அறிமுகம் செய்யும் வகையில் சுருக்கம் அமைகிறது.

**மொழிப்பெயர்ப்புக்கான கோட்பாடு :**

டோலட் என்பவர் பிரெஞ்சு மொழியில் கி.பி. 1540இல் பின்வரும் மொழிபெயர்ப்புக்கான கோட்பாடுகளை வெளியிட்டார். அவையாவன :

1. மொழிபெயர்ப்பவர் மூலத்தின் உணர்வுகளையும் பொருளையும் சுதந்திரமாகத் தெளிவுப்படுத்துதல்.
2. மூலமொழி, பெறமொழி இரண்டிலும் புலமை பெற்றிருத்தல்.
3. வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்தலைத் தவிர்த்தல்
4. பொதுவான மொழி வடிவத்தைக் கடைப்பிடித்தல்
5. மூலநூலின் சொல் வரிசையில் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துப் பொருத்தமுற மொழிபெயர்த்தல்

போன்றவைகள் பண்புகளாகக் குறிப்பிடுகின்றார்.

**மொழி :**

மொழிபெயர்ப்பில் பங்குபெறும் மொழிகளைத் தருமொழி, பெறுமொழி, வழிமொழி என அழைக்கின்றனர்.

குறிப்பு

**தருமொழி :**

மொழிபெயர்ப்பின் போது, ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குக் கருத்துகளை மொழிபெயர்க்கிறோம். அப்போது அந்த முதல்மொழியை மூலமொழி அல்லது தருமொழி என்கிறோம். சான்றாக தமிழிலிருந்து இந்திமொழிக்கு மொழிபெயர்ப்பு செய்தால் அப்போது தமிழ்மொழி தருமொழி ஆகிறது. ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டால் அப்போது ஆங்கிலம் தருமொழி ஆகிறது.

ஆகவே, எந்த மொழியின் கருத்துகளை வேறுமொழிக்கு பெயர்க்கிறோமோ அந்த மொழி தருமொழி என்கிறோம்.

**பெறுமொழி :**

மொழிபெயர்ப்புப் பணியில் தருமொழியிலிருந்து மற்றொரு மொழிக்குப் பெயர்க்கும் போது அந்த மற்றொரு மொழி பெறுமொழி ஆகிறது. இதனை இரண்டாம் மொழி என்றும் அழைக்கிறோம். சான்றாக. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு ஒரு நூலை மொழிபெயர்க்கிறோம் என்றால் அப்போது தமிழ் தருமொழியாகவும் ஆங்கிலம் பெறுமொழியாகவும் உள்ளன. அவ்வாறே ஆங்கிலத்திலிருந்து இந்தி மொழிக்கு மொழிபெயர்க்கப்படும் போது ஆங்கிலமொழி தருமொழியாக அதாவது முதல் மொழியாகவும், இந்தி மொழி பெறுமொழியாகவும் அதாவது இரண்டாம் மொழியாகவும் உள்ளன.

**வழி மொழி :**

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்க்கப்படும் போது அதில் முதல் மொழியான தருமொழியும் இரண்டாம் மொழியான பெறுமொழியும் இருப்பது இயல்பு. அதே மூலமொழி சீனமாகவும் இரண்டாம் மொழி ஆங்கிலமாகவும் மூன்றாம் மொழி தமிழாகவும் இருந்தால் அப்போது இரண்டாம் மொழியாகிய ஆங்கில மொழியை வழிமொழிழ என்கிறோம். சான்றாக, இந்திமொழியில் உள்ள பிரேம்சந்த் அவர்களின் சிறுகதையோ, புதினமோ முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பிறகு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டால் அப்போது

ஆங்கில மொழி வழிமொழி ஆகிறது. இதில் மொழிபெயர்ப்பாளர் மேலும் ஒரு திறமையான மூலமொழியின் சமூகப் பண்பாட்டுப் பின்னணியை அறிந்தவராக இருக்க வேண்டும் என்பது விரும்பத்தக்கதாகும்.

குறிப்பு

**மொழிபெயர்ப்பாளர் :**

மொழிபெயர்ப்பு என்பது தனிக்கலை. அதனை யார் வேண்டுமானாலும் செய்துவிட முடியாது. மொழிபெயர்ப்பாளர் என்பவர் எந்த மொழியுடனும் தனிப்பற்றுக் கொள்ளாமல், நடுநிலையில் நின்று மொழிபெயர்க்க வேண்டும். குறிப்பாக அவருக்கு இரண்டு மொழிகளிலும் அதாவது தருமொழி பெறுமொழி ஆகிய இரண்டிலும் புலமை இருத்தல் வேண்டும். இரு மொழிகளின் சமூக, பண்பாட்டுச் சூழ்நிலைகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்பு என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்ததொரு தொழிலாகவே இருக்கின்றது. மொழிபெயர்ப்பாளர் என்பவர் நிச்சயமாக தேடலை மேற்கொள்ளுபவராகவும் இருத்தல் வேண்டும். அதுவே அவரை சிறந்த மொழிபெயர்ப்பாளராகவே சமூகத்திற்கு அடையாளங்காட்டும். பல்வேறு துறைகள் பற்றிய அறிவு மற்றும் தெளிவுத் தன்மையானது ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏனைய சாதாரண மக்களிடமிருந்து வேறுபடுத்துகின்றது. நல்லதொரு சிறந்த மொழிபெயர்ப்பை வெளியிடுவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் பல்வேறு கருத்துத் தேடல்களில் சிந்தனையைச் செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.

**மொழிபெயர்ப்பாளரின் பண்புகள் :**

1. கிரகித்தல் மற்றும் எளிதாக புரிந்து கொள்ளல் - மொழிபெயர்ப்பின் மிகவும் முக்கியமானதொரு தேவையாகவே இது உற்றுநோக்கப்படுகின்றது. அதாவது மூல மொழியின் உள்ளடக்கத்தை இலகுவாக விளக்கிக் கொள்ளும் போதுதான் மொழிபெயர்ப்பை எளிமையாகவும், விரைவாகவும், சிறந்ததாகவும் மேற்கொள்ள முடியும்.
2. நேர முகாமைத்துவம் - மொழிபெயர்ப்பாளர் கொண்டிருக்க வேண்டிய மிகவும் தேவையானப் பண்பகளில் ஒன்று. குறறிப்பிட்ட

குறிப்பு

நேரத்திற்குள் குறிப்பிட்ட மொழிபெயர்ப்பை பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாட்டை மொழிபெயர்ப்பாளர் ஒருவர் கொண்டிருப்பது அவசியமாகும். அதுவே அவரின் வெற்றிக்கும் மூலமாகும்.

3. தேடல் மற்றும் அடையாளங்காணல் - நிச்சயமாக மொழிபெயர்ப்பாளர் ஒருவர் மூல மற்றும் இலக்கு மொழிகளில் மிதமிஞ்சிய புலமைப் பெற்றொருவராக இருக்க மாட்டார். ஆனால், பல்வேறு விதமான நிகழ்வுகளின் சான்றுகளின் மீதான தேடல்களினால் தன்மை மென்மேலும் மெருகூட்டிக்கொள்ள முடியும். இணையப் புரட்சியினால் தேடல்களை மேற்கொள்ளலானது இன்றைய சூழலில் மிகவும் எளிமைப்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றது.

**மொழிபெயர்க்கக்கூடியவை :**

ஒரு மொழியில் உள்ள சிறந்த கருத்துகள். இலக்கியங்கள். அறிவியல் நூல்கள் என அனைத்தையும் மொழிபெயர்க்கலாம். இரண்டாமம் மொழியாகிய பெறுமொழிக்குத் தேவையான எல்லாவற்றையும் பல்வேறு மொழிகளிலிருந்து தமிழில் அறிவியல் நூல்கள் பல மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கில இலக்கியங்கள். ஆங்கிலம் வழியாக இலத்தீன், சீன, ரஷ்ய ஜப்பானிய இலக்கியங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. சிறந்த உலக அரசியல்வாதிகளின் பேருரைகள், கடிதங்கள், பேட்டிகள் (நேர்காணல்கள்) எனப் பல தமிழிலும் ஏனைய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆகவே, பெறுமொழிக்குத் தேவையான அனைத்தையும் மூலமொழிகளிலிருந்து மொழிபெயர்துக் கொள்ளலாம். இப்படிப் பெயர்க்கப்படும் அனைத்தும் பெறுமொழி பேசும் மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயன்படுவதாக இருக்கும். ஆகவே, மொழிபெயர்ப்புப் பணியைப் பலர் முன்வந்து செய்ய வேண்டும்.

**நேரடி மொழிபெயர்ப்பு :**

மொழிபெயர்ப்பு என்பது அறிவியல் துறையும் இலக்கியத்துறையும் கலந்த ஒன்றாகும். அறிவியல் கருத்துகளை, விதிகளை, வாய்பாடுகளை

குறிப்பு

அப்படியே சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கலாம். இலக்கியங்களை மொழிபெயர்க்கும் போது பொருளை மட்டும் மொழிபெயர்த்தால் போதும். இந்த இரண்டு வழிமுறைகளிலும் நேரடி மொழிபெயர்ப்புகள் அமைகின்றன. நேரடி மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியின் கருத்துகளை மிகுதிப்படாமலும் குறைக்காமலும் உள்ளது உள்ளவாறு மொழிபெயர்க்கப்படுவதாகும். அப்படி மிகுந்துவிட்டாலோ குறைந்து போனாலோ மூலநூல் சொல்ல வந்த கருத்தை இரண்டாம் மொழி வாசகன் புரிந்துகொள்ளக் கடினமாக இருக்கும். அத்துடன் புதிய நூலாகவே காட்சி அளிக்குமாறு அமைந்து விடவும் வாய்ப்பு உள்ளது. அதனால் உள்ளது உள்ளபடி மொழிபெயர்க்கும் போது, சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல், பொருளை மொழிபெயர்த்தல் ஆகிய இரண்டு வழிமுறைகளையும் பின்பற்றலாம்.

சான்றாக :

LIGHT ENERGY :The energy we get from the sun is called light energy. It helps the plants to prepare starch.

ஒளி ஆற்றல் : சூரியனிடமிருந்து நாம் பெறும் ஆற்றல் ஒளி ஆற்றல் எனப்படும். இது தாவரங்கள் தங்கள் உணவைத் (ஸ்டார்ச்) தயாரித்துக் கொள்ளப் பயன்படுகிறது.

இச்சான்றில், Starch என்பதற்கு இணையாக உணவு என்ற தமிழ்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அல்லது (ஸ்டார்ச்) என்று அச்சொல்லை ஒலிபெயர்த்தும் அமைத்துக்கொள்ளலாம்.

**தழுவல் மொழிபெயர்ப்பு :**

தருமொழியில் எழுந்த இலக்கியத்தைக் கற்று, அதே கதையமைப்பினைப் பெறுமொழியில் அதன் தன்மைக்கேற்ப அப்பெயர்களையும் இடங்களையும் மாற்றிக் கட்டமைப்பது தழுவல் மொழிபெயர்ப்பு ஆகும். வெளிப்படையாகத் தழுவல் என்பது புலப்படாத நிலையினதாக இருக்கும். தமிழ்மொழியுடன் நெடுங்காலம் தொடர்பு கொண்ட சமஸ்கிருத மொழியாகிய வடமொழியிலிருந்து தமிழுக்குத தழுவலாக வந்த நூல்கள் பல உள்ளன. தமிழிலிருந்து

பிறமெரிகளுக்குத் தழுவல்களாகச் சென்றிருக்கலாம். ஆனால், தழுவல் என்பதே தெரியாத நிலையில், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற பழைய நூல்கள் வடமொழியிலிருந்து தழுவியவை என்பதை அறியலாம். சீவக சிந்தாமணி வடமொழியில் உள்ள க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஸ்ரீபுராணம் முதலிய நூல்களில் உள்ள கதையைத் தழுவி இயற்றப்பட்டதாகும். கம்பராமாயணம் வடமொழியில் வான்மீகியின் ராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டது.

குறிப்பு

புது நூலா தழுவல் நூலா என்பது எளிதில் புலப்படாத நிலையில் தழுவல் நூல்கள் அமைந்திருக்கும். பலமொழி இலக்கியங்களைக் கற்றுணர்ந்தவர்கள் அதனை எளிதில் அறிந்துகொள்வர்.

**மொழிப்பெயர்ப்பின் தன்மை :**

மொழிப்பெயர்ப்பின் உள்ளடக்கம் கலைத்துறை சார்ந்ததாக இருக்கின்றது. அறிவியல் துறை சார்ந்ததாகவும் இருக்கின்றது. அப்படியே அதன் செயல்முறையும் கலைத் தன்மை உடையதாகவும், அறிவியல் பண்பு உடையதாகவும் விளங்குகிறது. கலைத் தன்மை சம்பந்தப்படாத அறிவியல் தொடர்புகளோ, அறிவியல் நெறி சம்பந்தப்படாத கலைத்துறையோ இல்லை. அறிவியல் தொடர்பான பொருள்களையும், வரையறைகளையும் விதிகளையும் கருத்துப் படிவங்களையும் செயல்முறைகளையும் வெளியிடுவதில் மொழியின் கலைத்தன்மையைப் பற்பல இடங்களில் காணமுடியும். உருவகங்களும், சந்தங்களும் அறிவியல் மொழிக்கு முற்றிலும் அப்பாற்பட்டவை அல்ல.

**மொழியாக்கம் :**

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாற்றுவது, மொழிபெயர்ப்பு (Translation) என்பதற்கும், மொழியாக்கம் (transcreation) என்பதற்கும்

குறிப்பு

திட்டவட்டமான வேறுபாடுகள் உண்டு. இதில் முதலாவது கலையல்ல.

இரண்டாவது கலையாகும். ஏனென்றால் எல்லாக் கலைகளுக்கும் அடிப்படையாக அமைந்த ஆக்கத்தன்மை இதில் உள்ளது. அதனால் தான் இதனைத் தமிழில் மொழி ஆக்கம் என்கிறோம். இதில் மூலத்தின் சாரத்தை உணர்ந்து தன்வயப்படுத்திக் கொள்ளும் போக்கிற்கு இடம் உண்டு. மொழிபெயர்ப்பின் தன்மையை ஆழ்ந்து பார்த்தால் எல்லா மொழிபெயர்ப்புகளும் ஒரு வகையில் மொழியாக்கங்களே. ஆக்கம் என்பது அளவிலும் தன்மையிலும் வேறுபடுகிறதே தவிர ஆக்கம் என்பதே இல்லாத மொழிபெயர்ப்பு இல்லை என்று சொல்லலாம். அறிவியல் மொழிபெயர்ப்பும் இதற்கு விதிவிலக்கல்ல. மொழியாக்கம் நேர்மொழிபெயர்ப்பில் கடும் சிக்கலையுண்ணடாக்கும் படைப்புகளை பிரதியுடனான பொருத்தப்பாடு, கருத்து சிதையாமை, கோர்வை இவற்றை அடிப்படைகளாகக் கொண்டு சிறிதளவு சுதந்திரத்துடன் வெளிப்பாட்டு சிக்கலற்ற பிரதியாக மொழிபெயர்ப்பது மொழியாக்கம். மொழியாக்க முறை அதிகமும் கவிதை மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்படுகிறது.

**மொழிபெயர்ப்புக்கான வரலாறு :**

கி.மு. 240இல் இலீவியஸ் அந்திரோனிக்ஸ் என்பார் கிரேக்க மொழியில் ஹோமர் எழுதிய ஒடிசி என்ற காப்பியத்தை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்ததே தொன்மையாகும். இதன்பின், சிசிரோ காட்டலஸ் முதலானோர் பண்டைக் கிரேக்க இலக்கிய படைப்புகளையும் பிற துறைசார் நுஸல்களையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தனர். கி.பி. எட்டம் நூற்றாண்டில் அரேபியர்கள் பாக்தாத் நகரில் மொழிபெயர்ப்பு மையம் ஒன்றை நிறுவி கிரேக்க மொழியிலிருந்து மெய்யியல், மருத்துவம். வானநூல், உடலியல், பொருளியல், எண்ணியல். சொற்களஞ்சியம் ஆகியவற்றை அரேபிய மொழியில் உருவாக்கினர். அதன்பின்பு, கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டிலுள்ள டொலடோவில் அரபு மொழியிலிருந்த யுகிலிட்ஸின் கொள்கைகள், குரான். அறிவியல் நூல்கள் முதலானவை இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

*Self-Instructional Material*

அதன்பின், கி.பி. 15ஆம் நூற்றாண்டில் விவிலியம் மற்றும் சமய நூல்கள் ஹீப்ரு, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், டச்சு மொழிகளில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

**தமிழ் மொழிபெயர்ப்பு வரலாறு :**

'தமிழில் உரைநடை வரலாற்றின் தொடக்கம் மொழிபெயர்ப்புகளின் வரலாறுதான்' என்கிறார் மொழிபெயர்ப்பகள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு வரும் ந. முருகேசபாண்டியன் அவர்கள். ஐரோப்பியர் வருகையை அடுத்து கிறித்தவ மத நூல்களம் விவிலியமும் (பைபிள்) தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பின் படந்த நூற்றாண்டில் மத்தியில் சோவியத் யூனியன் பதிப்பகங்களான ராதுகா. முன்னேற்றப் பதிப்பகம், மீர் பதிப்பகம் போன்றன தமிழில் இலக்கியம் மற்றும் பல்துறை சார்ந்த ரஷ்ய நூல்களின் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளன. ரஷ்ய இலக்கியங்களைள் ஒரு படையெடுப்பாக தமிழுக்கு வந்து வரவலாக அவை வாசகரையும் சென்றடைந்தது தமிழ் இல்ககிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். பின், எண்பதுகளில் இலக்கியக் கோட்பாடு, அமெரிக்க, ஐரோப்பியப் படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட போதும் தொண்ணூறுகளில் லத்தீன் அமெரிக்கப் படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டு தீவிரமானதொரு ஆர்வத்துடன் வாசிக்கப்பட்டன. தற்போது லத்தீனமெரிக்கப் படைப்புகள் மீதான தீவிரம் குறைந்துவிட்ட போதும் அப்பெருவிருப்பின் அதிர்வுகளை ஒருவர் இன்னும் உணர முடியம். இன்றைய நிலையில் பரவலாக, மேலை இலக்கியங்கள் மட்டுமல்லாது ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் மற்றும் அதிகம் அறியப்படாத மாநிலங்களிலிருந்தும் மொழிபெயர்ப்பு எனும்போது இந்தியமொழிகளிலிருந்து தமிழுக்கு வந்துள்ள படைப்புகள் குறித்தும் பதிவது அவசியமாகின்றது. பிற இந்திய மொழிகளோடு ஒப்பிடுகையில் மலையாளம், வங்காளம் ஆகிய மொழிப் படைப்புகள் தமிழில் அதிகம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தற்போது வங்காள மொழிப் படைப்புகள் அதிகம் மொழிபெயர்க்கப்படுவதில்லை என்றாலும் தொடர்ந்து மலையாள படைப்புகள் தமிழுக்கு வந்தபடியிருக்கின்றன. கன்னடம், மராத்தி, இந்தி போன்ற மொழிகளிலிருந்தும் படைப்புகள் தமிழுக்கு மொழிபெயர்க்கப்படுகின்றன.

குறிப்பு

சாகித்ய அகாதமி, நேஷனல் புக் டிரஸ்ட் ஆகியன இந்திய மொழி படைப்புகளைத் தமிழுக்குக் கொண்டு வருவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு, குறிப்பாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுவது அரிதாகவே நிகழ்கிறது. மொழிபெயர்ப்பின் மூலம் பல அரிய படைப்புகள் தமிழிலக்கியத்தை அமைந்துள்ளன. அப்படைப்புகளின் பட்டியல் மிக நீளமானது. கடந்த சில ஆண்டுகளில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முக்கியமான சில படைப்புகள்,

1. அந்நியன் - ஆல்பர் காம்யு
2. சொற்கள் - ழாக் பிரவர்
3. குட்டி இளவரசன் - எக்சுபெரி
4. உருமாற்றம் - காப்கா
5. சிதைவுகள் - சினுவா ஆச்சிபி
6. சிலுவையில் தொங்கும் சாத்தான் - ங்கூகி வா தியாங்கோ
7. தூங்கம் அழகிகளின் இல்லம் - யசுனாரி கவாபட்டா
8. சதத் ஹாசன் மாண்ட்டோ படைப்புகள்
9. ஒரு தந்தையின் நினைவுக்குறிப்புகள்
10. ராஜன் கொலை வழக்கு - ஈச்வராச்சாரியார்
11. உலகக் கவிதைகள் - தொகு. பிரம்மராஜன்

இதுபோல தற்போது மொழிபெயர்ப்பில் புவியரசு, பிரம்மராஜன், ஆர்.சிவக்குமார், ஆனந்த், வெ.ஸ்ரீராம், சா.தேவதாஸ், ஜி.குப்புசாமி, குறிஞ்சி வேலன், பாவண்ணன், அமரந்தா, லதா ராமகிருஷ்ணன், எஸ். பாலச்சந்திரன், நிர்மால்யா, அசதா போன்றோர் ஈடுபட்டு வருகின்றனர். தமிழில் மொழிபெயர்க்கென ஒரு இதழும் நடத்தப்படுகிறது. ‘திசை எட்டும்’ என்ற அந்த இதழின் ஆசிரியர் குறிஞ்சி வேலன் ஆவார்.

**அறிவியல் மொழிபெயர்ப்பின் சிறப்புக் கூறுகள் :**

அறிவியல் மொழிபெயர்ப்புகளில் கலைத்துறை மொழிபெயர்ப்புகள் போல் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு

மொழிபெயர்ப்பு இல்லை. இதில் சொல்லுக்கச் சொல் ஆழ்ந்து மொழிபெயர்க்க வேண்டும். அறிவியல் மொழிக்கென்று சில சிறப்புக்கூறுகள் உள்ளன. இவற்றை அறிவியல் மொழிபெயர்ப்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அவை பின்வருமாறு,

குறிப்பு

1. அறிவியல் செயல்முறைகளின் விளக்கமும் செயல்பாடுகளம் இடம்பெறுவதால், அதற்கேற்ற மொழிநடை அறிவியல் மொழியில் இடம்பெறுகிறது.

2. வினை முதலாகிய (Subject) எழுவாய்க்கு முக்கியத்துவம் இல்லாததால் செயல்பாட்டு வினை ஆட்சி அதிகம் உண்டு.

3. பெயராக்க நடை (Nominalized style) அதிகம் கையாளப்படுவதால் சுருக்கத்திற்கும் எளிமைக்கும் இது உதவுகிறது.

4. செய்முறையைக் கூறுமிடங்களில் கட்டளை வாக்கியங்களை அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

5. பொருள்களின் பண்புகளைக் கூறும் வாக்கியங்களில் முக்காலத்திற்கும் பொதுவான தொடர்கள் வழக்கத்தில் உள்ளன.

**கலைச் சொல்லாக்கம் :**

யூஜின் ஊஸ்டர் என்னும் ஆஸ்திரேலியபொறியாளர் கலைச்சொல்லாக்கம்/கலைச்சொல் தரப்படுத்துதல் குறித்து 1931ஆம் ஆண்டு (International Standardization of Technical Terminology) என்னும் நூலை எழுதினார். அதன்பின் ‘கலைச்சொல்லியல்’ வளரத் தொடங்கின. ஒரு புதிய பொருளோ அல்லது கண்டுபிடிப்பின் விளைவாகத்தான் சொற்களின் இன்றியமையாமையும் தேவையும் உருவாகுகிறது.

1930ஆம் ஆண்டளவில் தமிழ் வழியில் அறிவியல் நூல்கள் தோன்றின. அறிவியல் நூல் எழுதக் கலைச்சொற்கள் வேண்டும். இக்கலைச்சொற்களை உருவாக்க முனைந்த அறிஞர் பலர் தொடக்கத்தில் எளிதில் விளங்காத – வெளிப்படையாகப் பொருள் புலப்படாத வடமொழிக் கலப்புச் சொற்களைக் கையாண்டனர். பின்பு பழகு தமிழில் கலைச்சொற்களை உருவாக்க, சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம் முனைந்தது. இதனால் 1936இல் எளிய கலைச்சொற்கள் உருவாயின. கோவையிலிருந்து வெளிவரும் கலைக்கதிர் என்ற இதழ் நீண்ட காலமாகவே கலைச் சொல்லாக்க முயற்சியில் மிக உதவி வந்தது. டாக்டர் ஜி.ஆர். தாமோதரன் அவர்களின் தனிப்பெரும் முயற்சியால் அனைத்துத் துறைகளிலும் கலைச்சொல் ஆக்கம் சிறப்பாக வளர்ந்தது.

**கலைச்சொல் - விளக்கம் :**

ஒவ்வொரு மொழியில் உள்ள கருத்துகளை பிற மொழிகளில் பெயர்த்து எழுதுதல் மொழிபெயர்ப்பு எனப்படுகிறது. மொழிபெயர்ப்பின் உயிர்த்துடிப்பு கலைச்சொற்கள் ஆகும். ஒரு மொழியிலுள்ள ஒரு சொல்லுக்கு ஏற்ற சொற்செறிவும், கருத்தாழமும் மிக்க எளிமையான சொல்லை கலைச்சொல் என்கிறோம்.

1. ஒரு துறையினர் மிகுதியாகப் பயன்படுத்திய பிற துறையினர் வழங்காமல் இருப்பது. antibiotic – எதிர் உயிரி, ஊயவாழனந – எதிர்முனை
2. வழக்கமான அகராதியில் இடம்பெறாதது. Zygonema – சைகோனிமா, Mesothorax - இடை மார்பு
3. நடைமுறையில் ஒரு பொருளும். அறிவியல் உலகில் வேறுபொருளும் கொண்டது. Charge – (பொது அகராதி) குற்றச்சாட்டு, பொறப்பு, கடமை, விலை, பாதுகாப்பு (இயற்பியல்) – மின்னூட்டம்.

என்ற வகையில் கலைச்சொற்களக்குக் கா. பட்டாபிராமன் விளக்கம் தருகிறார்.

**கலைச்சொல்லாக்க நெறிகள் :**

குறிப்பு

இதுவரையான கலைச்சொல்லாக்கத்திற்கு பின்வரும் நெறிகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவை,

1. கலைச்சொல்லின் மூலம் யாது என அறிதல்
2. அவை குறிக்கும் மையக்கருத்தை வரையறுத்தல்
3. சுருக்கமான தமிழ் வடிவம் அமைத்தல்
4. இயன்ற அளவு வழக்கில் உள்ள தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துதல்
5. தனிச்சொற்களாகவோ தொகை வடிவிலோ அமைத்தல்
6. குறிப்பிட்ட கலைச்சொல்லுடன் - இணையத்தக்க முன்னொட்டு அல்லது பின்னொட்டு வகையில் கலைச்சொற்களை உருவாக்கல்.
7. சொல்லாக்கம் இல்லாதபோது, பிறமொழிச் சொற்களுக்குத தமிழ் வடிவம் தருதல்.
8. குறியீடுகள், சமன்பாடுகள், வாய்பாடுகள், கருத்துக் குறிப்புகள் ஆகியன தமிழ் வடிவம் பெறுவதில்லை. அதனால் உள்ளவாறே இருக்க வேண்டும்.

மேற்கண்ட நெறிகள் இதுவரை தமிழாக்க முயற்சியில் மேற்கொள்ளப்பட்டன. வருங்காலத்தில் இதில் மாற்றம் ஏற்படலாம். பின்வருவோர் புதுநெறி காட்டுவது என்பது காலச் சூழற்சியின் விளைவாக இருக்கும்.

குறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Aadhar | - | ஆதாரட்டை, ஆதாரம் | Ambassador | - | தூதுவர், தூதர் |
| Digital currency | - | எண்ம நாணயம் | Digital economy | - | எண்மப் பொருளாதாரம் |
| Digital | - | எண்ம இந்தியா | Messenger | - | தூதுவர் |
| National Digital Library | - | தேசிய எண்ம நூலகம் | Selfie | - | தன்னோவியம், நம் படம் |
| Action | - | செயல் | Active cell | - | இயங்கு கலன் |
| Active card | - | பொருத்து அட்டை | Activity | - | செயல்பாடு |
| Active File | - | நடப்புக் கோப்பு | Address modification | - | முகவரி மாற்றம் |
| Administrator | - | நிர்வாகி | Album | - | தொகுப்பு |
| Alignment | - | இசைவு | Alpha testiong | - | முதற்கட்ட சோதனை |
| Animation | - | அசைவூட்டம் | Append | - | பின்சேர் |
| Application | - | செயலி | Archive file | - | காப்பகக் கோப்பு |
| Application Software | - | பயன்பாட்டு மென்பொருள் | Auto block | - | தானியங்கித் தடை |
| Back space | - | பின்நகர்வு | Bar code | - | பட்டைக்குறி முறை |
| Gitmap | - | நுண் படம் | Browser | - | உலாவி |
| Data | - | தரவு | Data catalog | - | தரவு விவரப்பட்டியல் |
| Dtabase | - | தரவுத்தளம் | Delete | - | அழி |
| Design | - | | Desktop | - | முகத்திரை |
| Device | - | கருவி | Document | - | ஆவணம் |
| W-Vook | - | மென் நூல் | Wsir | - | மாற்றம் செய் |
| Wsir peodilw | - | சுயவிபரத்தை மாற்று | Font | - | உழுத்துரு |
| Footer | - | அடிப்பாகம் | Formatting | - | வடிவமைத்தல் |
| Physician | - | மருத்துவர் | Physiology | - | உடலியக்கவியல் |
| Physiotherapy | - | உடற்பயிற்சி மருத்துவம் | Physiaue | - | உடலமைவு |
| Pica | - | மசக்கை | Phrogen | - | காய்ச்சல் |

குறிப்பு

:

1. சிறு வினா சோழர் கால பெயர் பதிலிகளை எழுதுக.
2. மராட்டியர் காலப் பேச்சு வழக்குச் சொற்கள் ஐந்தினைச் கூறுக.
3. மராட்டியர் காலச் செப்பேடுகளில் காணப்படும் சுருக்க எழுத்துகளை எழுதுக.
4. அறிவியல் தமிழ் என்றால் என்ன?

பெருவினா :

5. மொழிபெயர்ப்புக்கான வரையறையை விளக்கி உரைக.
6. பிராமி எழுத்துகள் பற்றி விளக்கி உரைக
7. மொழிப்பெயர்ப்பாளரின் பண்பு நலன்கள் யாவை என்று எடுத்தியம்பக?
8. அறிவியல் தமிழின் முக்கியத்துவத்தை பற்றி நீ படித்ததை விரித்துரைக.

கட்டுரை வினா :

9. கலைச் சொல்லாக்கம் பற்றி நும் பாடவழி நின்று கட்டுரையாக தருக.
10. மொழிபெயர்ப்பு பற்றிய முக்கியத்துவத்தினை கட்டுரை வடிவில் தருக.

## வானொலித் தமிழ்

பொதுச் செய்திப் பரிமாற்றங்கள் வானொலி மூலம் நடைபெறுகின்றன. நம் நாட்டில் கல்லாதவர்களின் தொகை அதிகமிருப்பதால் வானொலியின் பங்கு மிக முக்கியமானதாகும். வானொலித் தமிழில் இரு வழக்கு நிலையைக் (Diglossis) காண்கிறோம். செய்தி அறிக்கை, அறிவிப்பு, பேச்சு போன்றவை அனைத்தும் உயர்மொழி வழக்கில் அமைந்துள்ளன. உரையாடல், பேட்டி, நாடகம் போன்றவை பேச்சு மொழி வழக்கில் அமைந்துள்ளன. வானொலியில் உயர்தமிழ் வழக்கு, பொதுப் பேச்சுத் தமிழ் வழக்கு இரண்டும் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட்டாலும், உயர் வழக்கில் பொதுப்

பேச்சுத் தமிழும் பொதுப் பேச்சுத் தமிழில் உயர் வழக்குச் சொற்களும் விரவி வருகின்றன.

குறிப்பு

வானொலியில் 'நான்கு கோடி' என்பது 'நாலு கோடி' என்றும் 'ஏறக்குறைய' என்பது 'கிட்டத்தட்ட' என்றும் கூறப்படுகின்றன.

தமிழ் வாக்கியங்களின் சொற்றொடர்கள் ஆங்கிலச் சொற்றொடர்களின் சாயலில் உள்ளன.

'நடப்பு நிதியாண்டு மத்திய அரசின் அனுமதி நாடி இத்திட்டங்கள் காத்திருக்கின்றன'.
போன்ற வாக்கியங்கள் ஆங்கிலத்தைத் தழுவி உள்ளன.

வானொலியில் உலக நடப்புச் செய்திகளைத் தொகுத்துக் கூறும் போது, புதிய சொல்லாக்கமும் நடைபெறுகின்றது. வானொலித் தமிழ் முழுமையாக ஆராயப்பட வேண்டும். எனென்றால் இருபதாம் நூற்றாண்டில் வானொலி, பத்திரிகை மூலம் பொதுக் கிளைமொழியொன்று (Standard Dialect) உருவாக்கின்றது. அ∴து அனைத்துக் கிளைமொழிகளின் பொதுப் பண்பைக் கொண்டதாகும்.

### தொலைக்காட்சித் தமிழ்

பெரும்பாலான மக்கள் தொடர்பு ஊடகங்களில் வானொலியே இடம்பெற்றிருந்த நிலை மாறி இன்றைக்குத் தொலைக்காட்சி மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருக்கின்றது. கண்ணுக்கும் காதுக்கும் பங்களிக்கும் தொலைக்காட்சி அனைத்து மக்களும் விரும்பும் வகையில் உள்ளது. இளையவர் முதல் முதியோர் வரை அனைத்து வயதினருக்கும் ஏற்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும், உலகின் அனைத்துப் பகுதிகளிலும் நடக்கும் நிகழ்வுகளை செய்திகளாக நாம் அறிந்து கொள்ளவும் தொலைக்காட்சிகள் உதவுகின்றன. சிறுவர்களுக்கு என்றே சில தொலைக்காட்சிகள் செயல்படுவதும், தன்னம்பிக்கை தரும்

நிகழ்வுகளை ஒலிபரப்புவதும் வரவேற்கத்தக்கதாக இருக்கின்றது. சில தொலைக்காட்சிகளில் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட தொகுப்புகளை தமிழில் மொழிபெயர்த்து வழங்குகின்றனர். படிப்பறிவில்லாத மக்களும் இந்நிகழ்வுகளைப் பார்த்துப் பயன்பெறுகின்றனர். மிகச்சில தனியார் தொலைக்காட்சிகள் செய்திகள் வழங்குவதில் முழுவதும் தமிழையே பயன்படுத்துவது போற்றத்தக்கதாக இருக்கின்றது. மேலும், சிலவற்றில் தமிழ் குறுக்கெழுத்துப் போட்டி, வார்த்தை விளையாட்டு, ஒரே பொருள் தரும் பிற சொற்களைக் கண்டறிதல், பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ் சொல்லை மக்களிடம் நேரடியாகக் கேட்டறிதல், இதில் பங்கேற்கும் நேயர்களைப் பாராட்டுதல், பரிசளித்தல் போன்ற ஊக்கப்படுத்தும் செயல்பாடுகளால் தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கின்றன.

குறிப்பு

**தமிழ் மொழி மேம்பாட்டில் தொலைக்காட்சி :**

இன்றைய குழந்தைகளும், இளைஞர்களும் பல பிறமொழிச் சொற்களை தமிழ் சொல்லாகவே கருதும் நிலை உள்ளது. தமிழில் கலந்துள்ள இத்தகு சொற்களைக் கண்டறிந்து, அதற்கிணையான தமிழ்ச் சொல்லை தொலைக்காட்சிகள் பயன்படுத்த வேண்டும். மேலும், உலகில் புதிதாக தோற்றம் பெறும் பொருள்களுக்கு புதிய தமிழ் சொற்களை தமிழ் அறிஞர்களைக் கொண்டு உருவாக்கும் வகையில், நிகழ்ச்சிகளை வகுத்திடல் வேண்டும். நம் முன்னோர்களின் அனுபவத்தால் விளைந்த பழமொழிகள், சிந்தனை வளத்தைத் தூண்டும் விடுகதைகள், நன்னெறிகளைப் போதிக்கும் கதைகள்,. அறநூல்களின் சிறப்பு இவற்றை எடுத்துரைக்க வேண்டும். எவ்வாறெனில், மக்கள் தொலைக்காட்சியில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 முதல் 10.00 மணி வரை இடம்பெறும் “நொடிக்கு நொடி அதிரடி” என்ற ஒரு விளையாட்டுப் போட்டி இடம்பெறுகின்றது. அதில்,

| | | | |
|---|---|---|---|
| ஒரு சேர | கடமை | சுடர் | ராகு |
| உபாதி | | | |
| பதுமம் | குவிதல் | ஏழுவாய் | ஒளி |
| ஊர் | | | |
| குவலிடம் | நீங்கு | சினை அகல் | எளியவர் |
| ஓசை | தீ | குவிகை | ஒருமிக்க |
| ஒலி | | | |

*Self-Instructional Material*

குறிப்பு

தாமரை நகை எளிஞர் உற்பத்தி ஆழி

இங்கே சொற்கள் பரவலாக இடம்பெற்றுள்ளது. இச்சொற்களில் இரண்டுச் சொற்கள் ஒரே பொருளைத் தரக்கூடியவை. இவற்றில் சரியான இணையைக் கண்டுபிடிப்பதன் மூலம் அவற்றின் பொருளை நாம் அறிந்துக்கொள்ள முடியும். அதாவது,

நீங்கு - அகல் பதுமம் - தாமரை

எளியவர் - எளிஞர் உற்பத்தி - எழுவாய்

போன்றவாறு அமைக்க வேண்டும் என்பதோடு இது தமிழை அறியும் செயல்பாடாகும். இவ்விளையாட்டின் மூலம் தமிழ்ச்சொல் அகராதிப் பயன்பாட்டினை நாம் தெரிந்துக்கொள்ளவும் முடிகின்றது. இதுபோன்ற விளையாட்டானது விளையாடுபவர்களுக்கு மட்டும் பயன்பெறும் வகையில் அல்லாமல் இவ்விளையாட்டினைப் பார்ப்பவர்களுக்கும் பயன்தரக்கூடியதாகவும் உள்ளது.

மக்கள் மொழியைப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் பயன்படுத்தும்போது, சரியான முறையில் தான் உச்சரிக்கின்றோமா அல்லது பயன்படுத்தி எழுதுகின்றோமா என்ற கேள்வி நம்முள் எழுகின்றது. அவ்வாறு தவறுதலாக பேசியோ, எழுதியோ இருந்தாலும் அவற்றை பிறரிடம் நாம் பெரிய தவறுதலாக் காட்டிக் கொள்வதில்லை. அயல்மொழியான ஆங்கில மொழியைப் பயன்படுத்தும்போது, அம்மொழியை சரியாக பேசுவதற்கும் எழுதுவதற்கும் நாம் முயற்சி செய்கிறோம். ஆனால், தாய்மொழியான நம் தமிழ்மொழியில் உள்ள ஒலி வேறுபாடுகளைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. பெரும்பாலானவர்களுக்கு ‘ல’கர, ‘ள’கர, ‘ழ’கர வேறுபாடு ‘ன’கர, ‘ண’கர வேறுபாடு போன்றவை சரியான முறையில் பயன்பாட்டிலில்லை. இவ்விளையாட்டுகள் மூலம் மொழிக்குரிய ஒலி மற்றும் பொருள் வேறுபாட்டினை அறிந்துகொள்ளும் வகையில் அமைகின்றது. மேலும், ‘தாமரை என்றால் ‘பதுமம்’ என்றும் மீண்டும் தாமரை என்றால் ‘கமலம்’ என்றும் ஒரு பொருள் தரும் பலசொற்களையும் அறியாத மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் இந்நிகழ்ச்சி அமைகின்றது.

விஜய் டிவி-யில் ஒரு வார்த்தை ஒரு இலட்சம் என்னும் நிகழ்ச்சியானது பள்ளி மாணவர்கள் அனைவரும் விரும்பிப் பார்க்கும்

குறிப்பு

வகையில் அமைந்திருக்கின்றது. இந்நிகழ்ச்சியில் அனைத்துப் பள்ளி மாணவர்களும் கலந்துக்கொண்டு தமிழ்மொழி அறிவையும், தமிழ்ப் புலமையையும் பெருக்கிக்கொள்ள உதவுகின்றது.

| முதல் சுற்று | | முதல் வாய்ப்பு | | |
|---|---|---|---|---|
| மருதாணி | - மனம்மரியாதை | மட்டை மலர்ச்சி | | |
| பாய் | - பாடகி | பாதி | பாராட்டு | பாட்டி |
| ரசம் | - ரசனை | ரசீது | ரவை | ரத்து |

இம்முதல் சுற்றில் முதல் வார்த்தையின் முதல் எழுத்தே எல்லா சொற்களின் முதல் எழுத்துக்களாக அமைய வேண்டும். இச்சுற்றில் இரண்டு வாய்ப்புகள் இடம்பெறுகின்றன. இரண்டு அணிகள் பங்குபெறும். ஒரு அணியில் இரண்டு நபர் பங்குபெறலாம். ஒரு நபர் குறிப்புகளை தரவேண்டும். உதாரணமாக 'மனம்' என்னும் சொல்லுக்கு முதல் குறிப்பாக 'உள்ளம்' என்று சொல்லும்போது, மற்றொருவர் 'மனம்' என்று சரியான சொல்லைச் சொல்லுதல் வேண்டும். இதேபோல் ஒவ்வொரு சொல்லுக்கும் மூன்று குறிப்புகள் அதனுடன் தொடர்புடைய வெவ்வேறு தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்திக் கொடுக்க வேண்டும். நல்ல தமிழ் மொழிச் சொற்கள் மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கும், மொழி வளர்வதற்கும் நல்லதொரு நிகழ்ச்சிய இது அமைகின்றது.

மேலும், இந்நிகழ்ச்சிகளில் திருக்குறளும் இடம்பெறுகின்றது. திருக்குறளுக்கு ஒரு சொல் குறிப்பாகக் கொடுக்கப்பட்டு அத்திருக்குறளையும், அதற்கான விளக்கத்தையும் கூறுகின்றனர். இதன் மூலம் உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளை அனைத்து மக்களும் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமைகின்றது. நடுவுலக் கொஞ்சம் டிஸ்டர்ப் பண்ணுவோம் நிகழ்ச்சியில் கோவை, மதுரை, திருநெல்வேலி, சென்னை போன்ற வட்டார வழக்குச் சொற்களும் பயன்பாட்டில் இடம்பெறுகின்றது. இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து விளம்பரங்கள், மருத்துவம் பற்றிய தகவல்கள், செய்திகள், கல்விக்கான தகவல்கள், பட்டிமன்றங்கள், பங்குச் சந்தை நிலவரம், சந்தை நிலவரம், போன்ற நிகழ்வுகளிலும் தமிழ் மொழியானது ஆட்சி செலுத்துகின்றது. இருப்பினும் அவைகளில் முழுமையான தமிழ்மொழியை கையாள்வதில் ஆர்வத்தைக் காட்டுவதில்லை என்பதனை எண்ணும்போது சிறிது வருத்ததையும் ஏற்படுத்துகின்றது.

குறிப்பு

## கல்வெட்டுத் தமிழ்

கல்லின் மீது பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்குக் கல்வெட்டெழுத்து என்று பெயர். இவை அழியாப் பொருள்கள் மீது எழுதப்பட்டுள்ளமையால் பல நூற்றாண்டுகள் கடந்தும் நமக்குக் கிடைத்துள்ளன. ஒரு மொழியின் வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவன கல்வெட்டுக்களே ஆகும். எத்தனையோ பழமையான மொழிகள் கல்வெட்டுக்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. எகிப்திய மொழி, உக்ரிடிக்மொழி, உறிட்டைட்மொழி, பினீசிய மொழி போன்ற மொழிகள் அனைத்தும் கல்வெட்டுக்களிலேயே வாழ்கின்றன. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிறந்த மொழிகளின் அமைப்பையும் ஆக்கங்களையும் அறுதியிடுவதற்கு இவை உதவுகின்றன.

பல்வேறு நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் ஒரு மொழி எவ்வாறு வளர்ந்து வந்தது என்றும் அம்மொழியில் எத்தகைய மாற்றங்கள் உண்டாயின என்றும் பேச்சு மொழிக்கும் இலக்கிய மொழிக்கும் இடையே என்னென்ன மாறுபாடுகள் இருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டுவனவாக அமைகின்றன. திராவிட மொழிகளில் குறிப்பாகத் தமிழ் மொழியில் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்களைக் காண முடிகிறது. இவற்?றுள் மிகப்பழமையானவை பிராமி கல்வெட்டுக்களாகும். இவை கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும். இவற்றைக் கீழவளைவு, மறுகால்தலை, திருவாதவூர், ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல், விக்கிரமங்கலம் போன்ற பல இடங்களில் காணக்கிடக்கின்றன. அசோகர் பயன்படுத்திய பிராமி எழுத்துகளைத் தென்னிந்திய மொழிகளுக்கேற்ப மாற்றியமைத்ததே தென்னிந்தியப் பிராமி எனப்படுகிறது. பொதுவாகத் தமிழ் நாட்டில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் தமிழ், கிரந்தம், வட்டெழுத்து ஆகிய மூன்று வகை எழுத்துக்களால் ஆனவையாக இருக்கின்றது. பிராமி கல்வெட்டுக்களை அடுத்துத் தமிழ் நாட்டில் கிடைப்பது திருநாதர் குன்று கல்வெட்டாகும். முழுதும் தமிழ் எழுத்துகளால் ஆன இக்கல்வெட்டு கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கின்றது.

குறிப்பு

இலக்கியத்திற்கும் கல்வெட்டுக்களில் காணப்படும் மொழிக்குமிடையே பல வேற்றுமைகள் உண்டு. இலக்கிய மொழியில் ஏறாத பல பேச்சு வழக்குகளைக் கல்வெட்டு மொழியில் காணலாம். இக்கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழி வரலாற்றைச் சிறந்த முறையில் உருவாக்கலாம். கல்வெட்டுக்களில் தமிழ்ச் சொற்கள் கிரந்தம், பிராகிருதம், தேவநாகரி போன்ற அயல்மொழி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. கிரந்த எழுத்துகளில் ஒலிப்புடை ஒலிக்கும் ஒலிப்பிலா ஒலிக்கும் வேறுபட்ட வரிவடிவங்கள் உள்ளன. எனவே, கல்வெட்டுக்களின் துணைக்கொண்டு தமிழ் ஒலியன்கள் ஒலிப்புடையனவா ஒலிப்பில்லனவா என்று அறிய இயலுகின்றது.

வரி வடிவம் :

கிரந்த வரிவடிவம், தமிழ் வரிவடிவம், வட்டெழுத்துத் தொடர்பான வளர்ச்சியைக் காட்டும் கல்வெட்டுக்கள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டன. வட்டெழுத்தைப் பொறுத்தமட்டில் கோபிநாதராவ், சிவராமமூர்த்தி, டி.என். சுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகியோர் சேரநாட்டு வரிவடிவமும் பாண்டிய நாட்டு வரிவடிவமும் வேறு என்று கொள்ளவில்லை. பாண்டிய நாட்டில் வழங்கிவந்த வரிவடிம் 'வட்டம்' என்பதற்குத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலக் கல்வெட்டொன்று சான்று பகர்கின்றது. (Travancore Archaeological Series. Vol. 1/P.286)

தமிழ் வரிவடிவமும் வட்டெழுத்தும் தமிழ் மொழியை எழுதுவதற்கே பயன்பட்டன. வட்டம் பிராமியிலிருந்து தோன்றித் தென்னிந்திய சூழலுக்கேற்ப வளர்ந்த வடிவம் என்பாருமுளர். தமிழ் மொழிக்கு வரிவடிவம் இருந்ததற்குச் சான்று தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றது. பழைய வட்டெழுத்தின் முன்னோடியே தமிழ் பிராமியைக் குறிப்பன என்பதைப் பழைய சான்றுகளாகக் கொள்ள வேண்டும். பல்லவர்களில் சிலர் நாகரி எழுத்து வடிவத்தையம் பயன்படுத்தியுள்ளனர். பாண்டியரும் சேரரும் வடமொழியை எழுதக் கிரந்தத்தையும் தமிழ் மொழியை எழுத வட்டெழுத்தையும் பயன்படுத்தியுள்ளனர்.

குறிப்பு

இடைக்காலக் கல்வெட்டுக்களின் இயல்புகளில் ஒன்று, தமிழ் இலக்கண நூலாரின்படி புள்ளிபெற வேண்டிய எழுத்துகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் புள்ளியில்லாது எடுதப்படுவதாகும். புள்ளி என்ற பெயர் எகர ஒகரக்குறில்கள் வழங்குவதாகும். ஆனால், உயிர் எழுத்துகளாகிய எகர ஒகரக் குறில்கள் புள்ளிபெற வேண்டுமென கூறப்படுகின்றது. வடமொழிக்கு வழங்கப்பட்ட பிராமி வரிவடிவத்தைத் தமிழுக்கு வழங்க முற்பட்டபோது தனிமெய்யெழுத்துக்கும் வடமொழியில் வழங்காத எகர ஒகரக் குறில்களுக்கும் புள்ளியிட்டு எழுதும் வழக்கம் தொடங்கியது. எனவே இடைக்கால கல்வெட்டுக்களில் எகர ஏகாரங்களுக்கும் ஒகர ஓகாரங்களுக்கும் வேறுபாடு காணமுடியாது.

மொழியமைப்பு :

உயிர் ஒலியன்கள் :

| | | |
|---|---|---|
| இ ஈ | | உ ஊ |
| எ ஏ | அ ஆ | ஒ ஓ |

ஐ - கூட்டொலி. ஔகாரம் எச்சொல்லிலும் இடம்பெறவில்லை.

மெய் ஒலியன்கள் :

| | | | | |
|---|---|---|---|---|
| ப் | த் | ட் | ச் | க் |
| ம் | ந் | ண் | ஞ் | |
| | | ழ் | | |
| | ல் | ள் | | |
| | ர் | | | |
| | ற் | | | |
| | வ் | | ய் | |

'ங' கரம் சொல்லின் இடையில் ககர வெடிப்பொலிக்கு இன மூக்கொலியாக வருகின்றது. மகர மெய்யின் மாற்றொலியாக 'ங' கர மெய்யைக் கொள்ளலாம். பாண்டியர் கல்வெட்டுக்களில் ஞகர மெய்யும் இந்நிலைக்கு வந்துவிட்டது.

'ன'கரம் 'ந'கரத்தின் மாற்றொலி (Allophone) ஆகும்.

**உயிரொலி மாற்றங்கள் :**

1. அ > இ

படலிகை > பிடலிகை

மலாட்டு > மிலாட்டு

அ > உ

தேவன்கேசவன் > தேவன் கேசுவன்

திருமழபாடி > திருமழுவாடி

2. ஆ > ஓ

பெற்றான் > பெற்றோன்

என்றாம் > என்றோம்

3. இ > அ

ஞாயிற்று > ஞாயற்று

காவிதிப்பாக்கம் > காவதிப்பாக்கம்

இ > உ

அமிர்தம் > அமுர்தம்

4. உ > அ

நுந்தா > நந்தா

ஊருணி > ஊரணி

உ > இ

ஒன்றினுக்கு > ஒன்றிநிக்கு

5. ஐ > ஏ

ஊட்டாமை > ஊட்டாமே

கெடாமை > கெடாமே

6. ஒ > அ

பொலிசை > பலிசை

ஒ > உ

கொடு > குடு

கொணர்ந்து > குணந்து

**மெய்யொலி மாற்றங்கள் :**

1. ஞ > ந

ஞான்ற > நான்று

ஞெகிழந்து > நெகிழ்நது

2. க > ய

பதிகம் > பதியம்

குறிப்பு

Self-Instructional Material

குறிப்பு

திகதி > தியதி

க > ம

சந்திவிக்கிரகப் பேறு > சந்திவிக்கிரமப்பேறு

ய > க

வாரியம் > வாரிகம்

நியதி > நிகதி

3. ந்த் > ஞ்ச்

ஒழிந்து > ஒழிஞ்சி

இசைந்த > இசைஞ்ச

ஐந்தாவது > ஐஞ்சாவது

4. ல் > ள்

மதில் > மதிள்

துலை > துளை

5. ள் > ழ்

திருவாய்க் கேள்வி > திருவாய்க் கேழ்வி

6. ர்க்க > ற்க

நாயனார்க்கு > நாயனாற்கு

தேவர்க்கு > தேவற்கு

ர்ப்ப > ற்ப

எப்பேர்ப்பட்ட > எப்பேறப்பட்ட

கர்ப்பூரம் > கற்பூரம்

7. ற்க் > க்க்

தெற்கு > தெக்கு

மேற்கு > மேக்கு

8. ங்க் > ஞ்ச்

கலிங்கு > கலிஞ்சு

9. ன்ம் > ம்ம்

தேவகன்மி > தேவகம்மி

10. கெடல் (Loss)

போழ்து > போது

கொணர்ந்து > கொணந்து

யாண்டு > ஆண்டு

முறையே ழகரமும் ரகரமும் யகரமும் கெட்டுள்ளன.

கீர்த்தி > கீத்தி

கார்த்திகை > காத்திகை

வாய்க்கால் > வாக்கால்

குறிப்பு

**கல்வெட்டுக்களில் சாசனச் செய்யுள் :**

இலக்கியம் என்ற சொல் செய்யுள் இலக்கியம், உரைநடை இலக்கியம் இரண்டையும் உள்ளடக்கியது. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் 'சாசனச் செய்யுள் மஞ்சரி' என்ற நூல் வெளியிட்டுள்ளார். சாசனச் செயயுள், சாசன உரைநடை என இரண்டாக பகுக்கலாம். சாசனச் செய்யுள்களில் மிக சிறப்பாகக் குறிப்பிடப்படுவது மெய்க்கீர்த்தி என்னும் இலக்கிய வகையாகும். பாட்டியல் நூல்களில் மெய்க் கீர்த்திக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

ஒரு மன்னன் தனது ஆட்சியில் பெற்ற வெற்றிகளை மெய்க்கீர்த்தியில் காணலாம். அவனுடைய ஆட்சிக் காலத்துக் கடைசி கல்வெட்டுக்களில் காணப்படும் மெய்க்கீர்த்திகளில் அவன் அடைந்த வெற்றியையெல்லாம் காணப்படுகின்றது. இராஜரான் காலத்திலிருந்து மெய்க்கீர்த்திகளின் தொடக்கத்தைக் கொண்டு, யார் காலத்தைச் சார்ந்தது எனக் கூறிவிடலாம்.

முதலாம் ராஜராஜன் : 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி'
'திருமகள் போல'

முதலாம் ராஜேந்திரன் : 'திருமன்னி வளர இருநில மடந்தையும்'
'பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட'

**சாசனத்துத் தமிழ் வழக்காறுகள் :**

சாசன வழக்குத் தமிழுக்கும் இலக்கிய வழக்கத் தமிழுக்கும் சில ஒற்றுமைகள் உண்டு தமிழ்மொழியின் உண்மையான வரலாற்றை அறியக் கல்வெட்டுத் தமிழ் பயன்படுகிறது. இன்றைய பேச்சு வழக்குகள் கூட நீண்ட கால வரலாறுடையன என்பது கல்வெட்டுத் தமிழிலிருந்து தெரிந்துக்கொள்ளமுடிகின்றது.

கல்வெட்டுக்களில் வடமொழிச் சொற்கள், சொற்றொடர்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்யும்போது கல்வெட்டு வழக்காறுகளைத் தெரிந்துக்கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஏகபோகம் : ஒரு பூ

அந்தப்புரம் : அகம்படி

தாம்பூலம் : சுருளமுது

திருமேனி : திருவுடம்பு

கர்ப்பக்கிரகம் : உட்கோயில், அகநாழிகை, திருவுண்ணாழிகை

பரிவர்த்தனை : தலைமாறு

சிற்றாயம் : சிறுவரிகள்

பரிவட்டம் : சாத்துக்கூறை

சர்வமானியம் : முற்றூட்டு

உற்சவமூர்த்தி : எழுந்தருளும் திருமேனி

தர்மசாசனம் : அறவோலை

கவசம் : திருக்கொள்கை

அபிசேகமண்டபம் : திருமஞ்சனச் சாலை

கும்பாபிஷேகம் : கலசமாட்டுதல்

அவனிவேதனம் : பாடிகாவல், ஊர்க்காவல்

மொழியின் வளர்ச்சி, மாற்றம், வரலாறு என்ற கண்ணோட்டத்தில் கல்வெட்டுத் தமிழ் முக்கிய இடம்பெறுகின்றது. அக்கல்வெட்டுத் தமிழை நூற்றாண்டு வாரியாகப் பிரித்து நன்கு ஆராயின், தமிழ் மொழி வரலாறு செம்மையாக அமையும்.

## கிளைமொழிகள் (Dialects)

குறிப்பு

மொழிக் குடும்ப வரலாற்றில் (Language Family) மொழியும் மொழி வரலாற்றிற்குக் (History of Language) கிளைமொழிகளும் (Dialects) மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. ஒரு மொழியின் ஆய்வில் மொழியின் இலக்கிய இலக்கண வளம் மட்டுமின்றி, பேச்சுமொழியும், அதனுடன் இணைந்து மொழித் தோற்றமாகிய கிளைமொழிகளையும் அம்மொழியினை உடைய கிளைமொழியியலாளர் (Dialectologist) தாமே சேகரித்த மொழிச் செய்திகளை வரலாற்றின் அடிப்படையில் எந்தச் சொல் யாரால் எங்கு எத்தகைய நோக்கில் சொல்லப்பட்டுள்ளன; அல்லது வழங்கப்பட்டுள்ளன என்பதனை நாம் அடிப்படையில் எந்தச் சொல் யாரால் எங்கு எத்தகையப் பொருளால் வழங்கப்பட்டுள்ளது என்றும், பிறமொழியினால் அது எதன் தாக்கத்தில் வந்தது என்றும் விளக்கம் காணலாம். இதன் அடிப்படையில்தான் ஒரு சொல் பல பொருள் என்ற தன்மையில் 'உத்திரம்' என்ற சொல் 'உத்திரக் கட்டை', பதில் அல்லது அனுமதி என்பதான இரு பொருள்களைக் குறித்தது. பின்னர் காலப்போக்கில் இரண்டாவது பொருண்மையினைச் சுட்ட 'உத்தாரம்' என்ற சொல் தோன்றியது.

கிளைமொழி ஆய்வால் பேச்சு வழக்கின் சிறப்புகளையும், தொன்மையினையும் அறிய இயலும். சான்றாகத் திருநெல்வேலி கிளை வழக்கில் 'நீம்' என்ற சுட்டும் முன்னிலைப் பன்மை என்பதான வடிவம் நிகழ்கால விகுதியாக 'த்' என்று சொல்லும் தான் போன்றவற்றிலும் காணப்படுகின்றன என்பதன் மூலம் கிளைமொழியின் உதவியினால் மொழிக் கூற்றை ஆராயும் நிலைப்பாட்டை உணர இயலுகின்றது. இவ்வாறான போக்கில் ஆராய்ச்சிப் பெருக வேண்டும். காரணம் Dr. செ.வை. சண்முகம் அவர்களின் கூற்றுப்படி மேற்குக் கிளைமொழிதான் தற்போது மலையாள மொழியாக வடிவ மாற்றம் பெற்றுள்ளது என்ற கருத்துடன் அனைத்தினையும் ஆராய வேண்டியுள்ளது.

எழுத்துமொழி வடிவம் இல்லாத மொழிகளின் வரலாற்றை அறிய கீழ்க்காணும் நான்கு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

குறிப்பு

1. அக மீட்டுருவாக்கம் (Interhal Reconstruction)
2. கிளைமொழி புவியியல் (Dialect Geography)
3. புற மீட்டுருவாக்கம் அல்லது ஒப்பியல் முறை (External reconstruction or comparatice method)
4. சொற் கோவைப் புள்ளியியல் (Glottochronolgy)

இவற்றில் சில குறை நிறைகள் உள்ளன. எனினும் இவை ஆய்விற்குத் துணை செய்கின்றன. காரணம் அகமீட்டுருவாக்கமும் புறமீட்டுருவாக்கமும் தான் ஒப்பியில் ஆய்விலும் மொழி வரலாற்று ஆய்விலும் பெரும் துணை நிற்கின்றன. மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த மொழிகள் வெவ்வேறாகப் பிரிந்து சென்று இயங்கும் காலச் சூழல்களைப் பற்றிய ஆய்வுகளைக் கணக்கிடும் போக்கினை 'சொற்கோவைப் புள்ளியில்' இவ்வாறான ஆய்வில் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த வெவ்வேறு மொழிகளிலும் அனைத்திற்கும் பொதுவானப் பயன்பாட்டினை உடையதான சொற்களை ஆராய்வது மிகும் துணை செய்கின்றது மொழி வரலாற்றில். இவ்வகையான ஆய்வின் மூலம் அச்சொற்களின் இயல்பு நிலை, பயன்பாட்டு நிலை, நிலைத்து நிற்கும் தன்மை என்பதானத் தன்மைகளைக் கொண்டு ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது. இது மொழிகளுக்கிடையிலுள்ள தொடர்பு நிலைகளை நிலை நாட்டவும் மொழிகள் பிரிந்த காலச் சூழலையும் கால அளவையும் கணக்கிடவும் படுகின்றன. எழுத்து மொழிகளால் உண்டான ஆவணங்களால் அறிய முடியாத பலவற்றை நம் இதன்மூலம் அறிய இயலுகின்றது. எழுத்துமொழிகள் கிடைக்கப் பெறாத காலத்திற்கும் முற்பட்ட தான சூழல்களில் அமைந்த ஒரு மொழியின் தன்மைகளை ஆராய முற்படுகின்றபோது மேற்சொன்ன ஆய்வு முறைகள் பயன்படுகின்றன.

மொழி வரலாற்றினை எழுதப் பயன்படும் உத்திகளில் மிகவும் நிலைப்பாட்டினை உடைய ஒன்று என்றால் அது 'ஒப்பியல் முறை' (Comparative Method) என்பதுவே ஆகும். ஒரே குடும்பத்தினைச் சார்ந்த பல மொழிகளின் இடையிலானத் தொடர்புகளை ஆராய்தல் என்பதுவே ஒப்பியல் முறை ஆகும். பல மொழிகளை இணைத்து ஒப்பிட்டு ஆராயும் தன்மையினை தொல்மொழி (Proto Language) என்ற

குறிப்பு

சுட்டு, ஒன்றிலிருந்தே மற்றொன்று உருவாகியிருக்க இயலும் என்று கூறுகின்றனர். எல்லா இன மொழிகளையும் (Cognate Language) ஆய்ந்திடுவதன் மூலம் மூலமொழியினையும், அதன் அடிப்படையான மூலச் சொல் வடிவங்களையும் மூல இலக்கணக் கூறுகளையும் நாம் காணலாம். தொல்காப்பியர் தமிழகத்தின் பன்னிரு நிலப்பிரிவுகள் பற்றிப் பேசுகிறார். ஒவ்வொரு நிலப்பிரிவும் ஒரு கிளைமொழியை உடையதாகும். அப்பன்னிரு பிரிவுகளின் பட்டியல் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அவற்றுக்கு இணையான இக்கால வட்டாரப் பகுப்புக்களும், உரையாசிரியர்கள் குறிப்பிடும் அவ்வட்டார வழக்குகளின் சிறப்புச் சொல்லும் குறிக்கப்பட்டுள்ளன.

| **கிளைமொழி வழங்குமிடம்** | **தற்காலப் பெயர்** |
|---|---|
| 1 | 2 |
| 1. தென்பாண்டி நாடு | திருநெல்வேலியின் தென்பகுதி |
| 2. குட்ட நாடு | கோட்டயம், கோழிக்கோடு, மாவட்டங்கள் |
| 3. குட நாடு | வட மலபார் |
| 4. கற்கா நாடு | கோயமுத்தூரின் குன்றுப் பகுதிகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதி |
| 5. சீத நாடு | நீலகிரி, கோயமுத்தூரின் பகுதிகள் |
| 6. பூழி நாடு | கன்னியாகுமரி மாவட்டமாக இருக்கலாம், வேள்நாடு என்பதன் பழைய பெயர் |
| 7. அருவா நாடு, தென்னார்க்காடு | வட ஆர்க்காடு, கடற்கரைப் பகுதிகள் |
| 8. அருவா நாடு | வட ஆர்க்காடு, கடற்கரைப் பகுதிகள் |
| 9. அருவா வடதலை நாடு | தமிழகத்தின் வடக்கு எல்லையை ஒட்டிய பகுதி |
| 10. அருவா வடதலை நாடு | தமிழகத்தின் வடக்கு எல்லையை ஒட்டிய பகுதி |
| 11. வேணாடு | திருவாங்கூரின் தென்பகுதி |
| 12. பாண்டி நாடு | பாண்டிய நாடு |
| 13. மலாடு | தென்னார்க்காட்டில் உள்ள திருக்கோவலூர் |
| 14. புனல் நாடு | சோழநாடு |

குறிப்பு

| இதைக் குறிப்பிட்ட உரையாசிரியரின் பெயர் நச்சினார்க்கினியர் மயிலைநாதர் | கிளைமொழி வடிவம் | உரையாசிரியரால் தரப்பட்ட பொதுவடிவம் |
|---|---|---|
| 3 | 4 | 5 |
| நச்சினார்க்கினியர் | பெற்றம் | ஆ, எருமை |
| மயிலைநாதர் | பெற்றம் | ஆ |
| மயிலைநாதர் | சொன்றி | சோறு |
| நச்சினார்க்கினியர் | தள்ளை | தாய் |
| நச்சினார்க்கினியர் | ஞெள்ளை | நாய் |
| மயிலைநாதர் | தள்ளை | தாய் |
| நச்சினார்க்கினியர் | அச்சன் | தந்தை |
| மயிலைநாதர் | அச்சன் | தந்தை |
| நச்சினார்க்கினியர் | கையர் | வஞ்சர் |
| மயிலைநாதர் | கையர் | வஞ்சர் |
| நச்சினார்க்கினியர் | எலுவன் | ஏடா |
| நச்சினார்க்கினியர் | இகுளை | தோழி |
| நச்சினார்க்கினியர் | தந்துவை | தம்மாமி |
| மயிலைநாதர் | எலுவன் | தோழன் |
| நச்சினார்க்கினியர் | ஞமலி | நாய் |
| நச்சினார்க்கினியர் | பாழி | சிறுகுளம் |
| மயிலைநாதர் | பாழி | சிறுகுளம் |

தான் இழிந்தது எனக் கருதும் சில வழக்குகள் பற்றி வீரசோழியம் குறிப்பிடுகிறது. அவை மூன்று வட்டாரங்களில் பரவியிருந்தன என அதன் உரையாசிரியர் காட்டுகிறார்.

1. கருமண் நிலப்பகுதி (கொங்குநாடு, கோயமுத்தூர், சேலம் மாவட்டங்கள்)
2. காவிரி பாயும் பகுதி (சோழ நாடு)
3. பாலாறு பாயும் பகுதி (பல்லவ நாடு)

முதலில் கூறப்பட்ட வட்டாரத்தில் ழகர ளகர மெய்கள் மயங்கி வருகின்றன.

ழ் > ள் :

நாழி > நாளி, உழக்கு > உளக்கு

கோழி > கோளி, வாழை > வாளை

வழி > வளி, மூழை > மூளை

ன் > ழ்

விளக்கு > விழக்கு, பளிங்கு > பழிங்கு

தளிகை > தழிகை, இளமை > இழமை

குறிப்பு

காவிரி பாயும் பகுதியில் (சோழ நாட்டில்) இரட்டித்த நுனியண்ண வெடிப்பொலியும் இரட்டித்த இடையண்ண வெடிப்பொலியும் மயங்கி வருகின்றன. நெடில் நுனியண்ண வெடிப்பொலி, நெடில் நுனிநா பல் வெடிப்பொலியாகவும், நெடில் நுனிநா பல் வெடிப்பொலி இ, எ, ய் ஆகியவற்றுக்குப் பின்னரும், சிலவிடங்களில் எல்லா ஒலிகளுக்குப் பின்னரும் இடையண்ணச் சாயல் பெற்று நெடில் இடையண்ண, வெடிப்பொலியாவதும் இம்மயக்கத்திற்குரிய காரணங்களாகும்.

வெற்றிலை > வெச்சிலை, முற்றம் > முச்சம், கற்றை > கச்சை

பாலாறு பாயும் பகுதியில் ‘நெல்லின் பக்கத்தில் நின்றது’ ‘வீட்டின் பக்கத்தில் நின்றது’ என்பதற்குப் பதிலாக முறையே ‘நெல்லுக்கா நின்றது’ ‘வீட்டுக்கா நின்றது’ என்னும் மரபுத் தொடர்கள் வழங்குகின்றன.

**இக்காலத் தமிழ் வட்டாரக் கிளைமொழிகள் :**

‘இருக்கிறது’ அல்லது ‘இருக்குது’ என்ற வடிவங்களுக்குப் பதிலாக, இசுலாமியச் செல்வாக்கால், ‘கீது’ என்ற வடிவம் வடஆர்க்காட்டில் அதிலும் குறிப்பாக வேலூரில் வழக்கில் உள்ளது. இது அவ்வட்டாரக் கிளைமொழியின் தனி இயல்பாகும். பழைய ழகர மெய்யின் பல்வேறு மாற்றங்கள் தமிழின் மாறுபட்ட கிளைமொழிகளின் சிறப்பியல்புகளாக உள்ளன. சென்னைத் தமிழில் ழகர மெய் யகர மெய்யாகிறது.

பழம் > பயம்

வட ஆர்க்காடுத் தமிழில் ழகர மெய் சகர மெய்யாகிறது.

*Self-Instructional Material*

குறிப்பு

இழு > இசு

தென் ஆர்க்காட்டுத் தமிழில், அதிலும் குறிப்பாகச் சிதம்பரத் தமிழில் ழகர மெய் ஷகர மெய்யாகிறது.

திருவிழா > விருவிஷா

எண்பதை 'எண்பளது' 'எம்பளது' என உச்சரிப்பது தென் தஞ்சைத் தமிழின் சிறப்பியல்பாகும். பழைய ஆய்தத்தின் இடத்தில் னகர மெய் வந்திருக்கக் கூடும். 'பந்தல்' என்ற சொல் இறந்தவர்களின் வீட்டின் முன்னால் போடப்படும் பந்தலையே குறிக்கும் குறுகிய பொருளில் வழங்குவது செட்டிநாட்டுத் தமிழின் தனி இயல்பாகும். செயல் முடிவதைக் குறிக்க 'இடு' அல்லது 'விடு' என்னும் துணைவினைக்குப் பதில் 'போடு' என்னும் துணைவினையைப் பயன்படுத்துவது கோயமுத்தூர்த் தமிழின் சிறப்பியல்பாகும்.

சிறு வினா :

1. வானொலித் தமிழ் என்றால் என்ன?
2. கிளைமொழிகள் என்றால் என்ன?
3. வீரசோழியம் குறிப்பிடும் மூன்று வட்டார நிலப்பகுதிகளைக் குறிப்பிடுக.
4. மொழி வரலாறு எழுதப் பயன்படும் ஒப்பியல் முறைப் பற்றிக் சிறுகுறிப்பு தருக.

பெருவினா :

5. கிளைமொழிகளும் அதன் பகுதிகளையும் விளக்கி உரைக.
6. தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் யாவை?
7. தமிழகத்தில் காணப்படும் குகைக் கல்வெட்டுகள் பற்றி விளக்கி உரைக.

கட்டுரை வினா :

8. இக்காலத் தமிழ்நாட்டு வட்டாரக் கிளைமொழிகள் பற்றி தொகுத்து எழுதுக.
9. மொழிபெயர்ப்பு பற்றிய முக்கியத்துவத்தினை கட்டுரை வடிவில் தருக.

# தமிழ் வரிவடிவ வரலாறு

குறிப்பு

உலகில் பெரும்பாலான மொழிகள் எழுத்து வடிவம் பெற்றிருக்கவில்லை. சிறுபான்மை மொழிகளே வரிவடிவம் பெற்ற மொழிகளாக உள்ளன. இருபத்து இரண்டு திராவிட மொழிகளிலே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளுக்குத்தான் எழுத்து வடிவம் உண்டு. இலக்கிய வளமில்லாத துளு மொழி முதலில் மலையாள எழுத்திலும் பின்பு கன்னட எழுத்திலும் எழுதப்பட்டது. பழங்குடி மொழியான கூயி மொழியை ஒரியா எழுத்தில் எழுதுகின்றனர். பேச்சு மொழியினை வரிவடிவில் காட்டுவது தான் எழுத்து மொழி. ஆனால், பேச்சு மொழிக்கு இல்லாத சில பண்புகள் எழுத்து மொழிக்கு உண்டு. நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற அறிவுக் கருவூலங்களை நாம் கண்டுப் பயன்படுத்துவதற்கும் நாம் பெற்றுள்ள அறிவுச் செல்வத்தை நமது வழித் தோன்றல்களுக்கு வழங்குவதற்கும் எழுத்து மொழி பெருந்துணையாக உள்ளது.

ஓர் இனத்தின் அறிவும், பண்பாடும், கலையும், நாகரிகமும் அவ்வின எழுத்து மொழியில் பொதிந்து கிடக்கும். எழுத்து மொழி இல்லையேல் மனித வாழ்வில் தொடர்ச்சியான முன்னேற்றம் இருந்திருக்காது. பேச்சு மொழி மனிதனை மனிதனாக்கியது. எனின், எழுத்து மொழியோ மனிதனை நாகரிக மனிதனாக, இயற்கையையே வெல்லும் ஒரு சக்தியாக மாற்றியது. பழமையையும் புதுமையையும் கொண்டு பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலமாக எழுத்துமொழி திகழ்கின்றது. திராவிட மொழிகளிலே தமிழ் மொழியிலேயே மிகப் பழமையான எழுத்துருவத்தைக் காண்கிறோம். தெலுங்கு மொழியின் எழுத்துருவம் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது. கன்னட மொழியின் எழுத்துருவம் கி.பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது. மலையாள மொழியின் உருவம் இக்காலத்திற்குப் பின்னால் தோன்றியதாக இருக்கின்றது. இந்நிலையில்தான் இந்திய மொழிகளில் தமிழ் மொழிக்குத் தனி இடம் இருப்பதும் சமஸ்கிருதத்திற்கு ஒப்ப இதற்குப் பெருமையும் சிறப்பும் உள்ளமையும் பல அறிஞர்கள் உணர்ந்துக்கொண்டனர்.

குறிப்பு

ஆங்கில மொழி அனைத்துலக மொழியாகயிருப்பினும் கிரேக்கமும் இலத்தீனும் இன்றும் பழைய மொழிகளாக நாகரிக மொழிகளாகக் கருதப்படுகின்றன. கிரேக்கம் மிகப் பழமையான எழுத்துருவத்தைக் கொண்டு உலக நாகரிகத்திற்கு அடிகோலியாக விளங்கியது. எழுத்து உருவத்திற்கும் நாகரிகத்திற்கும் தொடர்பு இருப்பது போன்று, எழுத்து உருவத்திற்கும் முன்னேற்றத்திற்கும் தொடர்பு இருப்பதைக் காணலாம். நாகரிக மக்களின் மொழிகள் அனைத்தும் எழுத்துருவத்தைப் பெற்ற மொழிகளாக மிகப் பழங்காலத்திலேயே இருந்துள்ளன. எகிப்து நாகரிகம், சீனா, நாகரிகம், இந்திய நாகரிகம் அனைத்தும் பழமையான நாகரிகங்களாகும். இந்நாகரிக மக்கள் அனைவரும் தங்கள் மொழிக்கு மிகப் பழங்கால முதலே எழுத்துருவங்களைப் பெற்றிருந்தனர். தொல் வரிவடிவங்களின் வளர்ச்சிப் படிகளுக்கும் அந்தந்த நாட்டுப் பண்பாட்டு இயக்கங்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு இதுவரை ஆராயப்படாத ஒன்றாகவே உள்ளது. இந்தியத் தொல் வரிவடிவ இயல், பண்பாட்டு வளர்ச்சியின் ஒரு அம்சமே வரிவடிவ மாற்றம் எனத் தானி எனும் அறிஞர் கூறுகின்றார்.

கிரேக்க எழுத்து முறை, ரோமன் எழுத்து முறை, அரேபிய எழுத்துமுறை, சீனா எழுத்து முறை, எகிப்து நாட்டு ஹீரோகிளிபிக் எழுத்து முறை, எத்தியோப்பிய எழுத்து முறை, பீனிசிய எழுத்து முறை, ஆரமய்க் எழுத்து முறை, இந்திய எழுத்து முறை எனப் பல்வேறு எழுத்து முறைகள் உள்ளன. உலக எழுத்து முறைகளில் கிரேக்க எழுத்து முறைக்குத் தனிச் சிறப்பு உண்டு. கிரேக்க நாகரிகம் மேற்கு நாகரிகத்திற்கு அடிகோலியது போல, மேற்கத்திய எழுத்து முறைக்குக் கிரேக்க எழுத்து முறை அடிகோலியது. இம்முறை பீனிசிய முறையிலிருந்து உருவானது. உலகில் இன்று அதிகமான மொழிகள் இவ்வெழுத்து முறையில்தான் எழுதப்படுகின்றன. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானி, போர்துகீஸ், சிலாவனிக் போன்ற மொழிகளும் பின்னி, ஹங்கேரியன் பொன்ற ஐரோப்பிய மொழிகளும் மலாய் போன்ற கீழை நாட்டு மொழிகளும் இவ்வெழுத்து முறையைப் பின்பற்றுகின்றன.

குறிப்பு

பீனிசிய எழுத்து முறை உலகில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆரமய்க் எழுத்து முறையும் தொல்லெழுத்து இயல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிரியாவுக்கு மேற்கே உள்ள எழுத்து முறைகளுக்குக் கிரேக்கம் தாயகமாக இருப்பது போல, கிழக்கே உள்ளவற்றிற்கு ஆரமய்க் தாயகமாக உள்ளது. பிராமி, பெர்சியன், துருக்கி, மங்கோல் போன்றவை இதனின்றும் பிறந்தவை என்கின்றனர். உலக எழுத்து முறைகளில் எகிப்து நாட்டு ஹீரொகிளிபிக் மிகப்பழமையான ஒன்றாகும். இவ்வெழுத்தே எகிப்து நாகரிகத்தை வெளிக்கொணர்ந்தது. சீன எழுத்து முறை உலக எழுத்து முறைகளில் மிக முக்கியமான ஒன்றாகும். இம்முறைதான் அன்று முதல் இன்று வரை அதிக மாற்றமின்றியே உள்ளது. கி.மு. இரண்டாயிரத்துக்கு முன்பே இவ்வெழுத்து முறை வழக்கில் இருந்துள்ளது. ஷான் வம்சாவளி முதலே இருந்துவரும் இ∴து ஓர் உச்சரிப்பு எழுத்து முறையாகும்.

**மூன்று வகை எழுத்து முறைகள் :**

1. பட எழுத்து முறை (Pictography)
2. எண்ண எழுத்து முறை (Ideographic writing)
3. ஒலி எழுத்து முறை (Phonetic writing)
    1. அசை எழுத்து முறை (Syllabic writing)
    2. அகர எழுத்து முறை (Alphabetic writing)

**பட எழுத்து முறை (Pictography) :**

எழுத்து முறையில் முதன் முதலில் தோன்றிய முறை ‘பட எழுத்து முறையே’ ஆகும். சூரியனைக் காட்ட ஒரு வட்டத்தை வரைந்து காட்டினர். படங்களை வரைந்து செய்தியைக் காட்டுதல் ‘பட எழுத்து முறை’யாகும். இம்முறையினை எம்மொழியினரும் உணரலாம். குறிப்பிட்ட ஒரு பொருளையோ கருத்தையோ உணர்த்தப் பயன்படுமே தவிர, பொருளின் பலவகை வேறுபாடுகளையோ நுட்பங்களையோ உணர்த்தப் பயன்படாது.

**எண்ண எழுத்து முறை (Ideographic writing)**

எண்ண எழுத்து முறையை 'Ideography' என்றுக் கூறுவர். வட்ட வடிவம் சூரியனைக் குறிக்கும். ஆனால், இதனைச் சூரியன் என்றே வாசிப்போம். ஆனால், பட எழுத்து முறையியல் இவ்வாறு வடிவத்தோடு உச்சரிப்பைப் பொருத்திக் காண்பது இல்லை. பட எழுத்து முறையில் அனைவரும் புரிந்து கொள்வர். வட்ட வடிவமான உருவத்தை நாம் 'சூரியன்' என்போம். ஆங்கிலேயர் 'Sun' என்பர். பின்னர் ஒலி எழுத்து முறை வளர்வதற்கு இ∴து காரணமாயிற்று.

**ஒலி எழுத்து முறை (Phonetic writing)**

ஒலி எழுத்து முறையால்தான் பேச்சு மொழியில் காணப்படும் ஒலிகளுக்கும் எழுத்து முறையில் உள்ள வரிவடிவத்திற்குமிடையே ஒரு தொடர்பு ஏற்பட்டது. ஒலி வடிவத்தை வரி வடிவில் காணத் தொடங்கிய நிலையில்தான் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது.

**அசை எழுத்து முறை (Syllabic writing)**

அசைகளை வரிவடிவத்தில் எழுதிய நிலையில்தான் அசை எழுத்துமுறை உண்டானது. அசையெழுத்து முறையில் பல வடிவங்களின் நிலையை உணரலாம். சுமேரியன் ஆப்பு வடிவ (Cuniform) எழுத்துக்கள்தான் அசையெழுத்து வடிவங்களுள் மிகவும் பழமையானதாகும். சுமேரியன், ஏலமைட், எகிப்திய மொழி, ஹிட்டைட், சீனம், கிரேக்கம் மொழிகள் இவ்வெழுத்து முறையைக் கொண்டிருக்கின்றன.

**அகர எழுத்து முறை (Alphabetic writing)**

பெரும்பாலான உலக மொழிகள் அகர எழுத்து முறையையே பின்பற்றுகின்றன. எத்தனையோ நூற்றாண்டு வளர்ச்சியில் தான் இன்றைய மொழிகள் அகர எழுத்து மொழியைக் கொண்டுள்ளன. அசையெழுத்து முறையில் ஏராளமான எழுத்து உருவங்களை நினைவில் கொள்ள

வேண்டும். அகர வகை எழுத்துக்களில் ஓர் உரு ஓர் ஒலியையே குறிக்கும். இவ்வெழுத்து முறைகளின் மூலம் எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சியைக் காணலாம்.

குறிப்பு

பட எழுத்து முறையே எழுத்துகளின் தோற்றத்திற்குக் காரணம் என்றும் பட எழுத்தே எண்ண எழுத்தாகிய பின், ஒலி எழுத்தாகியது என்றும் கருதப்படுகிறது. ஒலியெழுத்திலே அசை எழுத்து, அகர வரிசை முறை என இருவகை முறைமையையும் வளர்ந்து வந்துள்ளது.

எழுத்து வளர்ச்சி பற்றித் தமிழர்களுக்கும் ஒரு கோட்பாட்டு முறை இருந்திருக்கின்றது என்பதனை கீழ்க்காணும் செய்யுள்கள் மூலம் அறியமுடிகின்றது.

**உருவெழுத்து (Phonography) :**

காணப் பட்ட வுருவ மெல்லா
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
வெழுதப் படுவ துருவெழுத் தாகும்.

**உணர்வெழுத்து (Ideography) :**

கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
யுண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்.

**ஒலியெழுத்து (Phonography) :**

இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப்புல னாவ தொலியெழுத் தாகும்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த திருநாதர் குன்று கல்வெட்டில் பண்டைத் தமிழ் எழுத்துக்களைப் பற்றி அறியலாம். தமிழ் நூல்கள் அச்சிடத் தொடங்கப் பெற்ற காலத்தேதான் தமிழ் எழுத்துக்கள்

குறிப்பு

இப்போது காணப்படும் வரிவடிவங்களைப் பெற்றன. இதற்கு முன் தமிழ் வரிவடிவங்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பல மாறுதல்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. தமிழ் நாட்டில் காணப்பெறும் மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எனும் எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. எழுத்து பிராமி எனினும் மொழி தமிழேயாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே தமிழகத்தில் தொடர்ச்சியாகக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் நான்கு வகை எழுத்து முறைகள் காணப்படுகின்றன. மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் காணப்படுகின்றன. வடமொழியை எழுதக் கிரந்த எழுத்துப் பயன்படுத்தப்பட்டது. சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் பண்டைத் தமிழ் எழுத்துக்களும் பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் வட்ட எழுத்துக்களும் காணப்படுகின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்த தமிழ் வரிவடிவத்திலும் எழுதப்பட்ட கல்வெட்டுக்களும் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் கிடைக்கின்றன. பல்லவ காலத்தில் பல்லவ கிரந்தம், தமிழ், நாகரி, வடமொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. சோழர் காலத்தில் நாணயங்களில் ‘நாகரி’ எழுத்து காணப்படுகின்றது. வட்டெழுத்து பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் வழக்கிலிருந்தன. கி.பி. பதினாறு பதினேழாம் நூற்றாண்டில்தான் தற்போது வழக்கத்திலிருக்கும் தமிழ் எழுத்துக்கள் வளர்ச்சி பெற்றன.

**பிராமி எழுத்து :**

மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டி நாட்டில் பல இடங்களில் இக்குகைக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கல்வெட்டுக்கள் சில சொற்களால் சில தொடர்களாலானவை. இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட குகைக் கல்வெட்டுக்களும் தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும் ஏறத்தாழ ஒத்துள்ளன. இரண்டு நாட்டிலும் காணப்பட்ட கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. குகைக் கல்வெட்டுக்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என வரையறுக்கின்றனர் மொழியியலாளர்கள்.

குறிப்பு

வெங்கோபராவ் அவர்கள் கீழவளைவிலுள்ள கல்வெட்டையும் கெமைட்டு என்னும் ஆங்கிலேயர் மருகால்தலையிலுள்ள கல்வெட்டையும் கே.வி. சுப்பிரமணிய அய்யர் பன்னிரண்டு இடங்களில் முப்பது கல்வெட்டுக்களையும் கண்டு பிடித்தனர். இராசு அவர்கள் அரிச்சலூரிலுள்ள கல்வெட்டையும் ஐ. மகாதேவன் அவர்கள் திருவாதவூரிலுள்ள கல்வெட்டையம் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவினர் அழகரை, உறையூர், காஞ்சியிலுள்ள கல்வெட்டுக்களையும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையினர் கொற்கையிலுள்ள கல்வெட்டுக்களையும் கண்டுபிடித்தனர்.

இக்கல்வெட்டுக்களில் ஒலிப்புடை ஒலிகளும் மூச்சுடை ஒலிகளும் காணப்படாமையை நோக்கி இக்கல்வெட்டுக்களின் மொழி தமிழ் என்றும் சில பிராகிருதச்சொற்கள் கலந்திருக்கலாம் என்றும் கூறுவர். பிராகிருதச் சொற்களைக் கொண்டு பிராகிருத மொழிக் கல்வெட்டு என நாராயணராவ் கூறினார். தமிழும் பிராமியும் கலந்த விளங்காத மொழியில் உள்ளன என்றார் டாக்டர் கே.கே.பிள்ளை அவர்கள். எழுத்து பிராமி எனினும் மொழி தமிழே எனக்கூறினார் பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார். ஐராவதம் மகாதேவன் அவர்கள் இக்கல்வெட்டு மொழி தமிழே என்கிறார். கே.வி. சுப்பிரமணிய அய்யர் போன்றோர் இவ்வெழுத்துக்கள் தமிழ் எழுத்துகளே என்கின்றனர். டாக்டர் நாகசாமி அவர்கள் இதனைத் ‘தமிழி’ என வழங்குகின்றார்.

ஆரம்ப காலத்தே தமிழுக்கென ஒரு வடிவம் இருந்தது என்றும் அவ்வடிவத்தில்தான் சங்க இலக்கியங்கள் படைக்கப்பட்டன என்றும் கூறுகின்றனர். ஆனால் அவ்வெழுத்து அமைப்பைப் பற்றி இதுவரை யாரும் அறுதியிட்டுக் கூறவில்லை. அரிச்சலூர் கல்வெட்டு ஒன்றில் ‘ழ’கரம் இருப்பதைச் சுட்டிக்காட்டி, மற்ற மொழிக் கல்வெட்டுக்களில் அஃது இல்லாமையையும் காட்டி அக்காலத்திய தமிழ் எழுத்துக்களினின்றும் பிராமி இதைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். பல்லவர் காலக் கிரந்தத்திற்கு முன் தமிழ் மொழிக்கெனத் தனி எழுத்துக்கள் கிடையாது என்றும் பிராமி எழுத்தைத்தான் நம்பியிருந்தது என்றும் கூறுகின்றனர். டாக்டர் சநீத்குமார் சட்டர்ஜி

அவர்களும் பண்டைத் தமிழ், பிராமி எழுத்துக்களைத் தான் பெற்றிருந்தது என்கிறார். ஆனால், டாக்டர் கே.கே. பிள்ளை அவர்கள் இதனை மறுக்கின்றார்.

குறிப்பு

சிந்துவெளியின் சித்திர எழுத்துக்களே திராவிடப் பெருங்குடி மக்களின் எழுத்துக்களின் மூல வடிவமாக இருக்கலாமென ஹீராஸ் (Heras) அடிகள் குறிப்பிடுகின்றார். மொஹஞ்சாதரோ - ஹரப்பா சிந்து சமவெளி எழுத்துக்கள் பழந்திராவிடமாக இருக்கலாமென கூறுகின்றனர். சிந்து சமவெளி எழுத்து முறையைப் பற்றி நன்கு ஆராய்ந்து முடிவு கண்டால், இந்திய எழுத்து முறையைப் பற்றியும் குறிப்பாகத் தமிழ் எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சியைப் பற்றியும் அறிவதற்குப் பெருந்துணையாக இருக்கும்.

அசோகர் கண்ட பிராமி எழுத்துக்கள் கி.மு. 1ஆம் நூற்றாண்டில் குசான் பிராமியாகவும், கி.பி. 4ஆம் நூற்றாண்டில் குப்த பிராமியாகவும், கி.பி. 7ஆம் நூற்றாண்டில் சித்தமாத்ரிகா பிராமியாகவும், கி.பி. 10ஆம் நூற்றாண்டில் நாகரிக வடிவமாகவும் குடில் வடிவமாகவும் மலர்ந்தது. இதுவே வங்காளி, அசாமி, மைதிலி, ஒரியா, காஷ்மீரி போன்ற மொழிகளுக்கு வரிவடிவமாகத் திகழ்ந்த, பிராமி இந்தியாவிலேயே தோன்றியிருக்க வேண்டுமென மேலைநாட்டு அறிஞர்கள் கருதுகின்றனர். பிராமி எழுத்துக்கள் வடசெமிடிக் எழுத்துக்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டன என்றும் கி.மு. 700இல் தோன்றியிருக்க வேண்டும் என்றும் சிலர் கருதுகின்றனர். பிராமி எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டன. சில இடங்களில் இடமிருந்து வலமாக எழுதப்பட்டன. வடசெடிமிக் வரிவடிவத்திலிருந்து குறிப்பாக ஆரமய்க் வரிவடிவத்திலிருந்து பிராமி பெறப்பட்டதாக டேவிட் டிரின்ஜர் (David Diringer) கருதுகிறார். தானி (Dani)-யும் பிராமியின் தோற்றம் பற்றிய இதே கருத்தைக் கொண்டுள்ளார். சிந்துவெளி எழுத்துக்களிலிருந்து பிராமி தோன்றியிருக்க வேண்டுமெனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். பிராமி திராவிட மொழிக்குரிய வடிவமாயிருந்து பிராகிருதம் அகில இந்திய மொழியான போது அம்மொழி ஏற்றிருக்க வேண்டுமெனச் சுப்பிரமணியம் கருதுகிறார்.

குறிப்பு

பிராமி எழுத்து வடிவம் இந்திய மொழி வடிவங்களின் தாயாகக் கருதப்படுகின்றது. பிராமி எழுத்து முறையில் வடபிராமி, தென்பிராமி என இருவகையுண்டு. தென் பிராமியைத் 'திராவிடி' என்றும் வழங்குவர். வடபிராமி வட இந்திய மொழிகளுக்கேற்றாற்போல அமைந்திருக்கின்றது. தென் பிராமியில் வடமொழிக்கு இன்றியமையாத பல ஒலிகள் இல்லை. அனுஸ்வாரம், விஸர்க்கம் என்பவை இல்லை. மூச்சுடை ஒலிகள் இல்லை. வடமொழிக்கு வேண்டாத எகரக் குறிலும் ஒகரக் குறிலும் உள்ளன. ஆகையால் அவை தொல்காப்பியர் காலத்துப் பழந்தமிழுக்குரிய ஒலிகளை மட்டும் உணர்த்தி வந்தன என்றும் பழந்தமிழ் எழுத்தையொட்டி அமைக்கப்பட்டவை என்றும் சிலர் கருதுகின்றனர்.

'பிராமி லிபி முதலில் வடமொழிக்காக ஏற்படவில்லை என்றும் உயிர் எழுத்துக்களுள் அ, இ, உ ஆகிய மூன்றுக்கும் அதிக சிறப்பை அளிப்பதும் மெய் எழுத்துக்களில் வர்க்க எழுத்துக்களைக் கொள்ளாததுமான ஒரு பாஷைக்கென அமைக்கப்பட்டுப் பின்னால் வடமொழிக்கு உபயோகப்படும்படி புதிய குறியீடுகள் உண்டாக்கப்பட்டன என்றும் எண்ண வேண்டியதுள்ளது. இந்தியாவிலுள்ள மொழிகளில் தமிழ் ஒன்றுதான் இவ்விதம் உள்ளது. அங்ஙனமாயின் பிராமி முதலில் தமிழுக்கென அமைந்த லிபியாக இருத்தல் கூடுமோ? இ∴து ஆராய்தற்குரியது' என்பர் தி. நா. சுப்பிரமணியம் அவர்கள்.

நீண்ட கோடு நெட்டுயிரையும் குறுகிய கோடு குற்றுயிரையும் குகைக் கல்வெட்டில் குறிக்கின்றன. கோட்டின் வேறுபாட்டால் எகர ஏகாரமும் ஒகர ஓகாரமும் வேறுபடுத்தப்படுகின்றன. 'G' என்ற வடிவம் தென்னகப் பிராமியில் 'ழ'கரம் என இனங்காணப்பட்டது. பிராமியில் **%** வடிவம் இகரத்தைக் குறிக்கின்றது. 'n' வடிவம் தகரத்தைக் குறிக்கின்றது. ற, ன, ஏ போன்ற மெய்களும் எ, ஒ போன்ற உயிர்களும் இக்கல்வெட்டுக்களில் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் சொற்றொடரமைப்பு தமிழ் முறைப்படி அமைந்துள்ளது. இக்கல்வெட்டுக்களில் தமிழ் ஒலிமுறைப்படி மாற்றம் பெற்றுள்ளன. அன், ஆன் ஈறுகள் ஆண்பால் படர்க்கை விகுதிகளாகவும் ஓம் ஈறு பலர்பால்

விகுதியாகவும் பயன்படுத்தப்பட்டன. உயிரீற்றுப் பிறமொழிச் சொற்கள் மகரஈறு பெற்றுத் தமிழாயின. இன்று வழக்கிழந்த பழந்தமிழ்ச் சொற்கள் இக்கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளன.

குறிப்பு

பிராமி எழுத்தைத் 'தமிழ்' என்றும் இந்த எழுத்தில்தான் சங்க இலக்கியங்கள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும் என நடன காசிநாதன் கூறுகிறார். தமிழ் மொழிக்குரிய ழ, ள, ற. ன உள்ளன என்றும் அசோகன் காலப் பிராமி எழுத்துக்களான மூச்சுடை ஒலி (aspirated stop) இவற்றில் இல்லை என்றும் இவ்வெழுத்துக்களைத் 'தமிழ்' எனக் கூறுவது பொருத்தமென்றும் கூறுகிறார்.

குகைக் கல்வெட்டு எழுத்துக்கள் பற்றி ஐ. மகாதேவன் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

1. தமிழ்மொழிக்கு உள்ள ஒலிகளே குறிக்கப்பட்டுள்ளன. 'ஸ' எனும் வடவெழுத்தும் 'த' எனும் வர்க்கவெழுத்தும் காணப்படுகின்றன.
2. ழ, ற, ன என்ற எழுத்துக்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
3. ஆரம்ப காலக் குகைக் கல்வெட்டுக்களில் உள்ள புள்ளியில்லா மெய் வடிவு மெய்யை மட்டுமே குறிக்கும்.
4. இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் புள்ளியில்லா மெய்யுருவம் அகரமேறிய மெய்யாகவே வழங்கப்பட்டது.
5. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை.
6. எகர ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.
7. உயிர் மயக்கங்கள் (Vowel clusters) மிகுதி.

இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள காலத்தால் மிகப் பழைய கல்வெட்டுக்கள் யாவும் பிராமி வரி வடிவத்திலேயே உள்ளன. குகைக் கல்வெட்டுக்களுக்கும் பாண்டிச்சேரிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட அரிக்கமேடு பானை மீது எழுதப்பட்ட எழுத்துக்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைச் சுட்டிக் காட்டிய தானி, அவை இரண்டையும் சமகாலத்தவையாக கருதுகிறார். மிகப் பழமையான கல்வெட்டுக்கள் அனைத்தும் பிராமி எழுத்துக்களிலேயே எழுதப்பட்டுள்ளன.

**கிரந்து எழுத்து :**

குறிப்பு

தமிழகத்தில் வடமொழியை எழுதத் தொன்று தொட்டு வழங்கிய எழுத்தைக் கிரந்தம் என்பர். வடமொழியில் கிரந்தம் எனின், நூல் என்று பொருளாகும். வடமொழியை எழுத வழங்கிய எழுத்தையும் கிரந்தம் என்றனர். தமிழகத்தில் வடமொழியை எழுத வழங்கிய எழுத்தும் தெலுங்கு, கன்னடப் பகுதியில் வழங்கிய எழுத்தும் ஒன்றுபோல் இருந்தன. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கிரந்த எழுத்துக்களும் கன்னட தெலுங்கு எழுத்துக்களும் தனித் தனியே பிரிந்து வளரலாயின. குகைக் கல்வெட்டுக்களில் பிராகிருதச் சொற்களை எழுதப் பயன்படுத்திய வடமொழி எழுத்துக்களே கிரந்த எழுத்துக்களின் முன்னோடி ஆகும்.

கி.பி. 8ஆம் நூற்றாண்டில் ஆண்ட இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னனின் காலத்தில் கிரந்த எழுத்துக்கள் மிக அழகாகப் பொறிக்கப்பட்டிருந்தன. பல்லவர்கள் கீழை நாடுகளை வென்றபொழுது அங்கெல்லாம் பல்லவக் கிரந்தம் பரவியது. தமிழகத்தின் தென்பகுதியை ஆண்ட பாண்டியர் கல்வெட்டுக்களில் பயன்படுத்தினர். ஆனைமலை, அழகர்மலை, திருமயம், குடுமியான்மலை, முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களும் வேள்விக்குடி, சின்னமனூர். ஸ்ரீவரமங்கலம், தளவாய்புரம் போன்ற இடங்களின் செப்பேடுகளிலும் கிரந்த எழுத்துக்கள் பொறிக்கப்படிருப்பதைக் காணமுடிகின்றது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தகடூரை ஆண்ட சோழன் ஆட்சிக்காலக் கல்வெட்டுக்களும் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. சோழப் பேரரசர்களும் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர். கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் காசுகளிலும் அக்காலக் கிரந்த எழுத்துகளேக் காணப்படுகின்றது. விசயநகரப் பேரரசர்களும் அவர்களுக்குப் பின்வந்த நாயக்க மன்னர்களும் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர். தமிழ் நாட்டில் தொன்று தொட்டே தமிழ்மொழியுடன் வடமொழியும் எழுதப்பட்டது.

குறிப்பு

தமிழ்நாட்டில் மட்டும் கிரந்த எழுத்துக்கள் பலவும் தமிழ் எழுத்துக்கள் பலவும் ஒரே வடிவமுடையனவாதலாலும் ஆரியர் தமிழ் எழுத்துக்களோடு வடமொழிக்குத் தேவையான சிறப்பு எழுத்துக்களையும் இணைத்துக் கிரந்த லிபியைத் தோற்றுவித்தனர். கிரந்த எழுத்தும் தமிழ் எழுத்தும் கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை பெற்ற மாற்றங்களைச் சிவராமமூர்த்தி அவர்கள் தமது நூலில் எடுத்துக்காட்டுகின்றார். கோபிநாதராவ் அவர்கள் தமிழ் எழுத்து, கிரந்த எழுத்து, வட்டெழுத்து என்பவற்றின் வளர்ச்சிப் படிகளைக் காட்டுகின்றார்.

**தமிழ் எழுத்து :**

தமிழ் நூல்கள் அச்சிடத் தொடங்கிய காலத்தேதான் தமிழ் எழுத்துக்கள் எல்லாம் இப்போது காணப்படும் நிலையான வடிவங்களைப் பெற்றன. தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்தன. அரிச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன. தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்கள் தொண்டை மண்டலம், சோழ மண்டலம் ஆகிய நாடுகளில் பல்லவர்களின் ஆட்சி முதல் காணப்படுகின்றன. கி.பி.7ஆம் நூற்றாண்டில் ஆண்ட மகேந்திரனின் கல்வெட்டு முழுதும் தமிழில் உள்ளது. பல்லவர் காலத்திலும் நிறையக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. டாக்டர் நாகசாமி அவர்கள் சோழர் காலத்திய எழுத்துக்களை முற்காலச் சோழர் எழுத்து என்றும் பிற்காலச் சோழர் எழுத்து என்றும் இருவகையாகப் பிரிக்கின்றார். முற்காலச் சோழர் எழுத்துக்கள் பெரிய எழுத்துக்களாக இருந்தன. இராசராசன் காலம் வரை முற்காலச் சோழர் காலம் எனப்படுகின்றது. பிற்காலச் சோழர் காலக் கல்வெட்டுக்கள் அழகின்றிப் பிழை மலிந்து காணப்படுகின்றன. பல்லவர் ஆட்சியில் தமிழில் எழுதப்பட்டதுபோல வட்டெழுத்திலும் எழுதப்பட்டது. பாண்டியர் கல்வெட்டுக்கள் சில தமிழிலும் பல கிரந்தத்திலும் உள்ளன. அவர்களது செப்பேடுகள் அனைத்தும் வட்டெழுத்திலேயே உள்ளன. சோழரது கல்வெட்டுக்கள் பெரும்பாலும் தமிழிலும் கிரந்தத்திலும் உள்ளன. பாண்டி நாட்டைக் கைப்பற்றியபொழுது வட்டெழுத்திலேயே எழுதினர். பின்னர் பாண்டி மண்டலத்திலும் தமிழிலேயே எழுதத்தொடங்கினர். விசயநகரப்

பேரரசர்களது காலத்தில் வட்டெழுத்து மறைந்து தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னட எழுத்துக்கள் வழங்கலாயிற்று.

குறிப்பு

உ, ஊ, க, ங, த, ந, ய, வ ஆகிய எழுத்துக்கள் தமிழ் மற்றும் கிரந்த எழுத்து வடிவங்களில் ஒரே விதமாக எழுதப்பட்டுள்ளன. அ, ஆ, ஈ, ஒ, ஔ, ட, ற, ர, ல, ள என்னும் எழுத்துக்கள் இரண்டு வரிவடிவங்களிலும் சிறிதளவே மாறுபடுகின்றன. எனவேதான் இதனைக் ‘கிரந்த தமிழ்’ வடிவம் என்றழைக்கப்படுகின்றது. பல்லவ மன்னன் பரமேஸ்வரவர்மனுடைய கூரம் சாசனத்திலுள்ள கிரந்த வடிவத்தையும் தமிழ் வரி வடிவத்தையும் ஒப்பிட்டால், உ, ட, ண, த, ந, ய, வ என்பனவும் உயிர் மெய் வடிவங்களில் வரும். ஆ, இ, ஈ, எ, ஓ எனும் எழுத்துக்களின் குறிகளும் வரிவடிவங்களும் ஒன்றாக இருப்பதைக் காணலாம். க, ர, என்ற எழுத்துக்களே சிறிது வேறுபடுகின்றன. கிரந்த வடிவம் வடமொழியை எழுதப் பயன்படுத்தப்பட்டது. ஆரியர் தமிழ் வரி வடிவத்தை ஏற்று வடமொழிக்குரிய எழுத்துக்களை இணைத்துக் ‘கிரந்தம்’ எனப்பெயரிட்டனர் எனக் கூறுகின்றார் எல்லீஸ். பல்லவர் கிரந்த வடிவத்தையும் தமிழ் வடிவத்தையும் தென்னிந்தியாவில் புகுத்தினர் எனக் கூறுகின்றார். தி. நா. சுப்பிரமணியம் அவர்கள்.

தமிழ் எழுத்துக்கள் காலப்போக்கில் பல மாற்றங்களைக் கண்டது. முதலில் கி.பி. ஏழாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும் கி.பி. பதினோராம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, மெய்யெழுத்துக்களில் சில மேலே கிடைக்கோடும் இடது பக்கம் குத்துக்கோடும் பெற்றமையைக் காணமுடிகின்றது. இத்தகைய மாற்றம் ஏழாம் நூற்றாண்டு வரி வடிவத்திலிருந்து பதினோராம் நூற்றாண்டு வரிவடிவம் பெற்ற எழுத்துக்களாக க, ங, ச, ந, ர போன்ற எழுத்துக்களில் சில, கால் அல்லது கீழ்ப்பகுதி நீண்டு அமைந்தள்ளன. பதினொராம் நூற்றாண்டிலே ஞ, ண, ல, ள போன்ற எழுத்துக்கள் சுழிகளொடு காணப்படுகின்றன. தமிழ் வரிவடிவ மாற்றங்களுக்கு அலங்கார விருப்பமும் எளிமையான போக்கும் ஒரு காரணமாகும். அ, ஆ, இ என்ற உயிர் எழுத்துக்களிலும் ட, ப, ம என்ற மெய் எழுத்துக்களிலும் வளைவு நீக்கி எழுதப்பட்டது. ஏழாம்

நூற்றாண்டில் புள்ளியோடு எழுதப்பட்ட மெய்யெழுத்துக்கள் பதினோராம் நூற்றாண்டிலே புள்ளியின்றி எழுதப்பட்டுள்ளது.

குறிப்பு

கி.பி. பதினோராம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும் கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால், இடப்பக்கதில் ஒரு குத்துக்கோட்டுடன் தொடங்கும் க, ங, ச, த, ந, ர என்பன பதினோராம் நூற்றாண்டில் குத்துக் கோட்டைச் சிறிது வளைவாகப் பெற்றிருந்தன. பதினைந்தாம் நூற்றாண்டில் நேர்த்தன்மையுள்ள நீளமான குத்துக்கோட்டைப் பெற்றன. இந்த மாற்றத்திற்கும் அலங்கார விருப்பமே காரணமென்கின்றனர். க, ச, த ஆகிய எழுத்துக்களின் வளைவுகளும் ங. ந, ம, ழ ஆகிய எழுத்துக்களின் வலப்பக்க வளைவுகளும் பதினோராம் நூற்றாண்டைக் காட்டிலும் பதினைந்தாம் நூற்றாண்டில் சிறதளவு சுழியைப் பெற்ற அ, ஆ, எ, ஞ, ண, ல, ள, ன என்ற எழுத்துக்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் தெளிவாக உள்ளன. இவ்வாறு காலப்போக்கில் தமிழ் எழுத்துக்களில் நிகழ்ந்த மாற்றங்களைக் கல்வெட்டுத் துணை கொண்டு டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றார்கள் .

**வட்டெழுத்து :**

தமிழ் நாட்டில் தமிழ் மொழியை எழுதுவதற்கு வழங்கிய வட்ட வடிவமான தமிழ் எழுத்துக்களை வட்டெழுத்து என்பர். வட்டெழுத்தை அக்காலத்தில் ‘வட்டம்’ என வழங்கியதாகக் குற்றாலக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். வட்டெழுத்தும் பிராமியிலிருந்து தோன்றியதாக டி.ஏ. கோபிநாதராவ் கூறுகின்றார். ஹரிபிரசாத் சாஸ்திரியாரும் கரோஷடி எழுத்திலிருந்து வட்டெழுத்து உருவாகியிருக்க வேண்டும் என்கிறார். இவ்வட்ட எழுத்துக்கள் பிராமி எழுத்திலிருந்து தோன்றி வளர்ந்தவை என்கிறார் டாக்டர் புலர் (Guhler) அவர்கள். ஆரியர்கள் இந்நாட்டிற்கு வருவதற்கு முன்பே தமிழர்கள் நாகரிக நிலையில் இருந்தனர். பிராமி எழுத்துக்கு மூலமான பீனிஷிய எழுத்துக்களிலிருந்து தமிழ் மக்கள் இவ்வட்ட எழுத்துக்களை அமைத்துக் கொண்டிருத்தல் வேண்டும் என்று டாக்டர் பர்னல் (Burnell) அவர்கள் கூறுகின்றார். வட்டெழுத்தும் ஏனைய

கிரந்தம், பழந்தமிழ் எழுத்துக்களைப் போல, பிராமி எழுத்தினின்றும் தோன்றியதே என்கிறார் தி.நா.சுப்பிரமணியம் அவர்கள். டாக்டர் பர்னல் அவர்கள் பிராமியிலிருந்து வட்டெழுத்துக்கள் உருவாகியிருக்க முடியாது என்கிறார்.

குறிப்பு

மிகப் பழைய கல்வெட்டுக்களில் உள்ள வட்டெழுத்து தமிழரின் பழைய எழுத்து என்றும் தொல்காப்பியர் குறிப்பிடும் எழுத்து வடிவங்கள் வட்டெழுத்தையே குறிப்பிடுவதாகவும் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் கூறுகிறார்கள். இவ்வெழுத்தினையே கோலெழுத்து எனவும் கண்ணெழுத்து எனவும் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். வட்டெழுத்து பிராமி எத்தினின்றும் பிறந்தது என்ற கொள்கையை மறுக்கின்றார். பிராமியிலிருந்து பெற்றிருந்தால் ஐம்பத்தாறு எழுத்துக்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால், தமிழிலோ உயிர் மெய்யுமாக முப்பது மட்டுமே உள்ளன. வடமொழிப் பகுதியை எழுதக் கிரந்த எழுத்துக்களும் தமிழ்ப் பக்தியை எழுத வட்டெழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது. ஓவிய எழுத்துக்களின்று ஒலி எழுத்துக்கள் தோன்றியதை எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சி வரலாற்றில் காணலாகிறத. பிராமி எழுத்து அவ்வாறு வளர்ச்சி பெற்றதாகக் தெரியவில்லை.

பிராமி எழுத்துக்களாலான அசோகர் கல்வெட்டுக்கள் தோன்றுவதற்கு முன்பே வட்டெழுத்துக்கள் வழங்கியிருந்தன என வரலாற்றறிஞர் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் குறிப்பிடுகின்றார். சிவராமமூர்த்தி அவர்களும் வட்டெழுத்து தமிழ் எழுத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த செவ்வையற்ற வடிவம் என்கிறார். இவ்வட்டெழுத்துக்களிலிருந்து தான் பல்லவர்கள் கிரந்த எழுத்துக்களையும் இக்காலத்துள்ள தமிழ் எழுத்துக்களுக்கு அடிப்படையாயுள்ள பழைய தமிழ் எழுத்துக்களையும் அமைத்துக்கொண்டனர். வலக்கைப் புறத்திலிருந்து இடக்கைப் புறமாக எழுதப்பட்ட பீனிஷிய எழுத்துக்களிலிருந்து இடக்கைப் பக்கத்திலிருந்து வலக்கைப் பக்கமாக எழுதப்பட்ட வட்டெழுத்துக்கள் தோன்றியிருக்க முடியாது. ஆகவே, பண்டைத் தமிழ் எழுத்துக்களாகிய வட்டெழுத்துக்கள் தமிழ் மக்களாலேயே முற்காலத்தில் அமைக்கப்

பெற்றவை. இவ்வட்டெழுத்தின் திருந்திய வடிவங்களே இப்போதுள்ள தமிழ் எழுத்துக்களாகும். எனவே, தமிழ் எழுத்துக்கள் தமிழ் நாட்டிலேயே தோன்றிய தனி எழுத்துக்களாகும் எனக் கல்வெட்டு அறிஞர் தி.வை. சதாசிவபண்டாரத்தார் கூறுகிறார். மிகப் பழைய எழுத்துக்கள் எனக் கருதும் சுமேரிய எழுத்துக்களும் மொஹஞ்சதாரோ எழுத்துக்களினின்று பிறந்தவை என்று ஹீராஸ் (Heras) குறிப்பிடுகின்றார். திரு நடன காசிநாதன் அவர்கள் தமிழில் பழைய எழுத்துக்கள் (Ancient Tamil Seript) என்ற ஒரு வகை இருந்ததாகவும் அதிலிருந்துதான் வட்டெழுத்துக்களும் இப்பொழுதுள்ள தமிழ் எழுத்துக்களும் தனித்தனியே உருவாயின என்றும் கூறுகிறார்.

தி.நா. சுப்பிரமணியன் அவர்கள் வட்டெழுத்தை ஆராய்ந்து மூன்று காலப் பிரிவாகப் பிரிக்கின்றார்.

1. கி.பி. 700-950 (பழைய முறை)
2. கி.பி. 950-1350 (இடைக்கால முறை)
3. கி.பி. 1350 பின்பு (பிற்கால முறை)

கி.பி. பதினோராம் நூற்றாண்டு வரை கிரந்தத் தமிழுக்கும் வட்டெழுத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. வட்டெழுத்தில் வளைவுத் தன்மை இருந்தமை போன்று கிரந்தத் தமிழும் அதனைப் பின்பற்றத் தொடங்கியது. ஒன்றின் தாக்கம் மற்றதில் இருந்ததில் வியப்பொன்றுமில்லை.

**நாகரி எழுத்து :**

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவின் வடபகுதியில் சமஸ்கிருதத்தை எழுத வழங்கப்பட்ட ஒருவகை எழுத்துக்களை 'நாகரி' என்பர். இதனைத் 'தேவ நாகரி' என்றும் அழைப்பர்.

தேவநாகரி பிராமியிலிருந்து தோன்றியதாகக் கூறுவர் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சிறப்பும் முழுமையும் பெற்றது. தேவநாகரி நெடுங்கணக்கிலிருந்து தமிழ் நெடுங்கணக்கு வேறுபடும் மாற்றத்தை

டாக்டர் மு.வ. அவர்கள் 'மொழி வரலாற்றில்' நன்கு விளக்கியுள்ளார். குப்த அரசர்கள் காலத்தில்தான் பிராமி எழுத்தினின்றும் தேவநாகரி எழுத்துக்கள் உருவாயின என்பர். வடமொழியை எழுதக் கிரந்த எழுத்துக்களோடு நாகரி எழுத்தும் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் நரசிம்மவர்மனின் கல்வெட்டுக் கிரந்த எழுத்திலும், அதே செய்தி நாகரி எழுத்திலும் எழுதப்பட்டுள்ளது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வேணாட்டை ஆண்ட கருநந்தடக்கன் நாகரி எழுத்தில் செப்பேடு வெளியிட்டுள்ளான். உத்தம சோழன், ராஜராஜன், கங்கை கொண்ட சோழன், ராஜேந்திர சோழன் ஆகிய மன்னர்களது பெயர்கள் காசுகளில் நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து தென்னாட்டில் வழங்கிய எழுத்துக்களை 'நந்தி நாகரி' என்பர்.

குறிப்பு

## தொல்காப்பியர் கால எழுத்துக்கள் :

குறிப்பு

தொல்காப்பியத்தில் பண்டை எழுத்துக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. வரிவடிவைக் குறிக்கும் ‘எழுத்து’ என்ற சொல்லும் புத்தகத்தைக் குறிக்கும் நூல் என்ற சொல்லும் தனித்தமிழ்ச் சொற்களாகவே பழந்தமிழில் காணப்படுகின்றன. எழுத்து என்பது ஒலிகளை மாத்திரமின்றி, வரிவடிவையும் குறித்தது என்பதற்குப் பல சான்றுகள் தொல்காப்பியத்தில் உள்ளன. வரிவடிவம் மட்டுமின்றி முறை வைப்பையும் கூறுகின்றார். தமிழ் எழுத்துக்கள் அகர முதல் னகர இறுதியாக இக்கால நெடுங்கணக்கில் காணப்படுவது போன்று தொல்காப்பியர் காலத்தும் முறைப்பட எழுதப்பெற்று வழங்கி வந்தன என்பதைத் தொல்காப்பிய முதற் சூத்தித்தால் அறியலாம்.

“எழுத்தெனப் படுப
அகர முதல்
னகர விறவாய் முப்ப.். தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே”

தொல்காப்பியர் காலத்தே தமிழுக்கு ஒரு நெடுங்கணக்கு வரி வடிவம் உண்டு என்பதை காண்கிறோம்.

**தனி மெய்யெழுத்து வடிவம் :**

தொல்காப்பியர் தனி மெய்யெழுத்திற்கான வடிவத்தினை பின்வருமாறு கூறுகின்றார்.

“புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனைய உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே” -

தொ.எ.71

குறிப்பு

இதில் தனி மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்று இயங்குவதும் உயிர்மெய் ஆகும்போது அகரமேறின் புள்ளி நீங்கி முன்னைய வடிவோடு நிற்றலும் பிறவுயிர்கள் ஏறும்போது வடிவு மாறி நிற்றலும் கூறுகின்றார்.

மெய்யெழுத்துக்களும் எகர ஒகர எழுத்துக்களும் புள்ளி பெற்று நிற்றல் வேண்டும் என்பதையும் மகரக்குறுக்கம் மெய்ப் புள்ளியோ:டு உள்ளே மற்றொரு புள்ளியும் பெறுதல் வேண்டும் என்பதையும்,

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" - தொ.எ.15

"எகர ஒகரத் தியற்கையு மற்றே" - தொ.எ.16

"உட்பெறு புள்ளி உருவா கும்மே" - தொ.எ.14

என்ற சூத்திரங்களில் கூறியுள்ளார்.

"மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்" - தொ.எ.46

தாண்டவராய முதலியார் வெளியிட்ட சேந்தன் திவாகரம் என்ற நூலில் எகர ஒகரங்களில் புள்ளி வைக்கப்பட்டிருப்பதாக மு. அருணாசலம் அவர்கள் தமது 'தமிழ் இலக்கிய வரலாற்றில்' குறிப்பிட்டுள்ளார். என்பதால் மேற்புள்ளி நீங்கிய தனி மெய்யெழுத்துக்கள் இயல்பான அகரத்தோடு சேர்ந்து ஒலிக்கும் என்பது பெறப்பட்டது. 'எகர ஒகரத் தியற்கையு மற்றே' என்ற சூத்திரன்படி எகர. ஒகரங்களை, ஏகார ஓகாரங்களினின்றும் வேறுபடுத்திக் காட்டப் புள்ளி பயன்படுத்தப்பட்டது என்பதை உரையாசிரியர்கள் மூலம் அறிகின்றோம். இந்த மாதிரி உள்புள்ளி அமைப்பு பழைய ஓலைச் சுவடிகளில் இருந்தன என்று

நன்னூல் வெளியீட்டு முகவுரையில் டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு

தொல்காப்பியத்தாலும் உரையாசிரியர்களாலும் தமிழ் எழுத்துக்களின் வரி வடிவம் தொடக்கத்தில் இங்ஙனம் இருந்தது என்பதை ஓரளவு உணரமுடிகின்றது.

கடைச்சங்க காலத்தில் சேர நாட்டிலும், சோழ நாட்டிலும் வழங்கி வந்த தமிழ் எழுத்துக்கள் கண்ணெழுத்துக்கள் என்ற பெயருடையனவாயிருந்தன என்பதைச் சிலப்பதிகாரம் மூலம் அறிகிறோம்.

"கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கலம் மன்னவர்க் களித்து" - சிலம்பு.26.17-171

"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த" - சிலம்பு.15.1-12

"கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி
இருபதினாயிரம்
கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமும்" - சிலம்பு.26.134-136

கண்ணெழுத்துக்கள் ஒரு காலத்தில் முழுவதும் வழக்கிலிருந்திருக்க வேண்டும். கண்ணெழுத்தே பழைய தமிழ் எழுத்து என்பாருமுளர். சிலர் கண்ணெழுத்தையே வட்டெழுத்தென்பாரும் உள்ளனர். இவ்வெழுத்துக்கள் கண் போன்று இருந்தமையால் கண்ணெழுத்துக்கள் என வழங்கிருக்க வேண்டும். சங்க காலத்தில் எண்ணற்ற இலக்கியங்கள் எழுந்தமையால் தமிழுக்கென ஒரு வரி வடிவம் இருந்திருக்க வேண்டும் எனச் சில மொழி அறிஞர்கள் எண்ணுகின்றனர்.

குறிப்பு

நன்னூலாரும், தொல்காப்பியரையொட்டி எழுத்து இன்னதென்பதையும் சிறப்புக் கூறுகளைப் பற்றியும் விளக்கியுள்ளார்.

"மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே"

"தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகர மெய்புள்ளி"

பிற்கால இலக்கண ஆசிரியர்கள் கூறும் எழுத்துப் பற்றிய கருத்துக்கள் :

**பிரயோக விவேகம் :**

"ஆவியெழுத்தச் சொடுசர மாறாமவற்றின் பின்னே
மேவிய மெய்கள் விளம்புமல் லோடுவியஞ்சனமாற்
தாவியெதிர்த்து மதர்த்தரி பாய்ந்திரு தாழ் குழைத்தோய்"

**நேமிநாதம் :**

"ஆதியுயிர் வல்வியையின் ஔவாம் அ.'.தன்றி
நீதியினால் யவ்வியையின் ஐயாகும் - ஏதமிலா
எஒமெய் புள்ளிபெறும் என்ப சஞயமுன்
அஐயாம் ஆதி யிடை"

**இலக்கண விளக்கம் :**

"தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி"

**தொன்னூல் விளக்கம் :**

"தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமும்
சான்றுளித் தோன்றும் தான் எழுத்து இயல்பே"

போன்ற இலக்கண நூல்களும் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவத்தினைப் பற்றி எடுத்துக்கூறுகின்றன.

## எழுத்துச் சீர்திருத்தம

குறிப்பு

இப்போதுள்ள எழுத்துமுறை சிறப்பானதாக இருப்பினும் இதிலுள்ள சில குறைகளை நீக்குவது வரவேற்கத்தக்கதாகும். இதனடிப்படையில் தமிழ் எழுத்து வடிவில் மாற்றம் செய்யும் எண்ணம் எழுந்தபோது தமிழ் எழுத்துக்களில் உள்ள குறைகள் தெரிய தொடங்கின. இவற்றைக் களைவதற்கு பல்வேறு தமிழர்கள் முனைந்ததோடு அவ்வெழுத்துக்களைப் பரப்பியும் பயன்படுத்தியும் எழுதத்தொடங்கினர்.

**வீரமாமுனிவர் :**

கொஸ்தான்சோ ஜுசேப்பே பெஸ்கி (1680 – 1747) (Costanzo Giuseppe Beschi) என்னும் இயற்பெயரும் வீரமாமுனிவர் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவத்தில் மாற்றம் செய்துள்ளார். தலைசிறந்த தமிழறிஞரான இவர் மறைப்பணியும், தமிழ்ப்பணியும் ஆற்றியதோடு, இலக்கணம், இலக்கியம், அராதி, சிறுகதை போன்ற பல துறைகளில் தமிழ் வளர்ச்சிக்குப்பெரிதும் பணியாற்றியுள்ளார்.

**எழுத்துச் சீர்திருத்தம் :**

**உயிரெழுத்துச் சீர்திருத்தம் :**

தமிழின் உயிரெழுத்துக்களில் உள்ள அ, எ, ஒ ஆகிய எழுத்துக்களின் குறில் மற்றும் நெடில் ஒலிப்புக்குரிய குறியீடுகளில் மாற்றம் செய்தவர் வீரமாமுனிவர்.

**அகரத்தையும் ஆகாரத்தையும் வேறுபடுத்தல் :**

வீரமாமுனிவர் காலத்தில் ஆகாரத்தை எழுதும்பொழுது அகரத்தின் மேல் புள்ளியிட்டு எழுதியதை விடுத்து அகரத்திற்கு சுழியிட்டு ஆகாரத்தை எழுதினார்.

அ் > ஆ

**எகரத்தையும் ஏகாரத்தையும் வேறுபடுத்தல் :**

குறிப்பு

வீரமாமுனிவர் காலத்திற்கு முன்னால் 'எ' என்னும் எழுத்து குறிலாகவும் நெடிலாகவும் ஒலிப்புப் பெற்றது. அவர் குறிலுக்கும் நெடிலுக்கும் வேறுபாடு காண்பிக்க எகரத்தில் வருகின்ற மேல் கோடு நீட்டிச் சுழித்தால் அதை நெடிலாக ஒலிக்கலாம் என்று சீர்திருத்தம் கொணர்ந்தார். ஆனால் அச்சீர்திருத்தம் தற்போது வழக்கத்தில் இல்லை. அவர் இயற்றிய தமிழ் - இலத்தீன் (1744) முழுவதிலும் 'ஏ' என்னும் எழுத்தை 'எ'' என்றே எழுதியுள்ளார். இப்போது ஏகாரத்தில் இடப்படுகின்ற கீழ் வளைகோட்டைக் கொண்டு வந்தது யார் என்று தெரியவில்லை.

எ் > எ''

**ஒகரத்தையும் ஓகாரத்தையும் வேறுபடுத்தல் :**

'ஒ'கரத்தின் நெடிலான 'ஓ'காரத்தில் உள்ள கீழுள்ள சுழியைக் கொண்டு வந்தவர் வீரமாமுனிவர் அவர்கள்.

'ஒ' > ஓ

**உயிர்மெய்யெழுத்துச் சீர்திருத்தம் :**

உயிரெழுத்தில் மாற்றம் கொண்டு வந்தது போலவே உயிர்மெய் எழுத்திலும் மாற்றத்தைக் கொண்டு வந்தவர் வீரமாமுனிவர்.

**எகர ஏகார உயிர்மெய் வேறுபடுத்தல் :**

'தேன்' என்பதைத் 'தென்' என்பதிலிருந்து வேறுபடுத்த எகர ஒலி ஏகார ஒலியாக மாற்ற வேண்டும். இவ்வேறுபாட்டைக் காட்ட

வீரமாமுனிவர் எகர ஒலியைச் சுட்டுகின்ற கொம்புக்கு மேலே ஒரு அமைத்து, ஏகார ஒலிபெறச் செய்தார்.

குறிப்பு

தெ்ன் > தேன்

**ஒகர ஓகார உயிர்மெய் வேறுபடுத்தல் :**

கோல் என்னும் கொல்லைக் கொல் என்னும் சொல்லிலிருந்து வேறுபடுத்த ஒகர ஒலி ஓகார ஒலியாக மாற்ற வேண்டும். இவ்வேறுபாட்டை, ஒகர ஒலியைச் சுட்டுகின்ற கொம்புக்கு மேலே சுழி அமைத்து ஓகார ஒலி பெறச் செய்தார்.

தொ்ல் > தோல்

உயிர்மெய்யெழுத்தில் ஆகாரத்தையும் ஓகாரத்தையும் சுட்டும் காலை ரகரத்திலிருந்து வேறுபடுத்தல் :

மான் என்னும் சொல்லிலும் கோன் என்னும் சொல்லிலும் ஆகாரமும் ஓகாரமும் வருகின்றன. அவற்றைக் குறிக்க பயன்படும் கால் ரகரம் போல் இருந்தாலும் அது கீழே வளைவு பெறுவதில்லை. இவ்வாறு வளைவு கொடுத்து நெடிலைச் சுட்டும் காலை ரகரத்திலிருந்து வேறுபடுத்தும் முறை அவர் கொண்டு வரவில்லை. இருப்பினும், தனக்கு முன்னதாகவே சிலர் கிரந்த ரகரம் போன்ற 'ர' இம்முறையைக் கையாண்டியிருப்பதைக் கண்டு தாமும் அதை, தன்னுடைய எழுத்தில் பயன்படுத்தி அதை நிலைபெறச் செய்த பெருமைக்குரியவர் வீரமாமுனிவர்.

□ - ர

இவ்வாறு, 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல், 'எகர ஒகரத் தியற்கையும் அற்றே' என்ற நிலையில் ஏற்பட்ட மாற்றத்தை மேலும் வேறுபடுத்தினார். எகரத்துக்கும் ஒகரத்துக்கும் புள்ளி நீக்கி, ஏகாரத்திற்குக் கால் இட்டும் ஏனைய நெடில் அறிகுறியாகிய 'ா'

குறிப்பு

காலினின்றும் வேறுபடுத்தினார். உயிர் மெய்களில் எகர ஒகரங்களுக்கு ஒற்றைக் கொம்பையும் அமைத்தார். இக்கால கட்டத்தில் வீரமாமுனிவர் தமழ் எழுத்துக்களின் வரிவடிவ மாற்றம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியிருந்தார். உயிரெழுத்திலும் உயிர்மெய்யெழுத்திலும் வீரமாமுனிவர் கொணர்ந்த எகர ஒகர சீர்திருத்தத்தை ஆட்சியாளரும், அச்சகத்தாரும், அச்சடித்தோரும் ஏற்று நடைமுறைக்குக் கொண்டு வந்ததால் அச்சீர்திருத்தம் இன்றும் நிலைபெற்று, அனைவரும் மேற்கொள்ளும் வழக்கமாக மாறிவிட்டது.

மேலும், தாம் செய்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி வீரமாமுனிவர் தமது தமிழ் - இலத்தீன் அகராதியின் (1744) முன்னுரையில் 15ஆம் பத்தியில் விளக்கியுள்ளார். வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தின் சிறப்பை ச. இராசமாணிக்கம், "தொல்காப்பியர் காலத்திலிருந்து தமிழ் எழுத்துக்களை எவராலும் மாற்ற முடியவில்லை. வெளிநாட்டில் பிறந்து, ஏலாக்குறிச்சி என்ற சிற்றூரில் பாமர மக்களிடையே பணிபுரிந்த வீரமாமுனிவர், இத்தகைய சீர்திருத்தத்தைச் செய்து நடைமுறைக்குக் கொண்டு வந்தது செயற்கரிய செயலாகும். வேறொன்றும் செய்யாமல், இஃது ஒன்றை மட்டும் செய்திருந்தாலே அவருக்குத் தமிழில் சிறந்த இடம் கிடைத்திருக்கும்" என்று கூறுவதிலிருந்து முனிவரின் சிறப்பையும், அவர் தமிழுக்குச் செய்த தொண்டினையும் நம்மால் என்றும் நினைவுக்றும் வகையில் அமைந்திருக்கின்றது.

**ஈ.வே.ராமசாமி :**

தந்தை பெரியார் என்றழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமி அவர்கள் தமிழில் எழுத்துச் சீர்திருத்ததை மேற்கொண்டார். சான்றாக, தமிழில் உள்ள 'ா' என்ற துணை எழுத்து எல்லா மெய்களோடும் சேர்த்துக் கோக்கும் வசதியிருக்க, அப்படிச் செய்யாமல் ,, „, *f* என்ற எழுத்துகட்கு மட்டும் தனித்தனி அச்சு வார்ப்புகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இக்குறையை நீக்க னா, ணா, றா, என்று பயன்படுத்த எண்ணினர். இந்த சிந்தனையின் அடிப்படையில்தான் பெரியார் ஈ.வே.ராமசாமி அவர்கள் எழுத்துச் சீர்திருத்தத்தைத் துவங்கி, தமிழ் வரிவடிவத்தை ஆராய்ந்து, அதில் செய்ய வேண்டிய மாற்றங்கள்

குறிப்பு

குறித்துப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், புலவர் குழந்தை, வே. தில்லைநாயகம், பொன்.கோதண்டராமன், இரா.கிருஷ்ணமூர்த்தி, சு. மகாதேவன், கொடுமுடி சண்முகம், இ.ஜே.சந்தர், கு.நல்லதம்பி, வி.சி.குழந்தைசாமி, செ.வை.சண்முகம் போன்றோர் ஆராய்ந்தள்ளனர். மொழியும் எழுத்தும் சமூகத்தின் தேவைக்கும் தொழிலியல் வளர்ச்சிக்குமேற்ப அமைய வேண்டும் என்பதற்கிணங்க அச்சீர்திருத்த முயற்சி அமைந்திருந்தது.

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் காலமாற்றத்திற்கு ஏற்றாற்போல் மொழியில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை, "உதாரணமாக நெருப்புக்கு – சுமார் நூறாயிரம், பதினாயிரம் வருடங்களுக்கு முந்தி சிக்கிமுக்கிக் கற்கள்தான் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தமிழ் மொழி கடவுளால் ஆதியில் பொதிய மலையில் இருந்தோ கைலாய மலையில் இருந்தோ கண்டுபிடிக்கப்பதாகவோ. உபதேசிக்கப்பட்டதாகவோ இருக்கலாம். ஆனால் இன்று நெருப்புக்கு ஒரு பொத்தானை அமுக்குவதோ, ஒரு முனையைத திருப்புவதோ ஆகிய காரியத்தில் வந்துவிட்டது. சாதாரணமாய், 500 வருடங்களுக்கு முந்நி இருந்த மக்களின் அறிவுக்கும் அவர்களுடைய வாழ்க்கை சவுகரியத்துக்கும் இன்று இருக்கும் மக்களின் அறிவுக்கம், வாழ்க்கை அவசியத்துக்கும் எவ்வளவோமாறுதலும், முற்போக்கும் இருந்து வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. அதுபோலவே, இன்னும் ஒரு 100 ஆண்டு அல்லது 500 ஆண்டுகள் சென்றால், இன்றைய நிலையிலிருந்து இன்னமும் எவ்வளவோ தூரம் மாற்றமடைந்து முன்னேற்றங்கள் என்பவை ஏற்படலாம். ஆகையால், மாறுதலைக் கண்டு அஞ்சாமல் அறிவுடைமையுடனும் ஆண்மையுடனும் நின்று விஷயங்களை நன்றாய் ஆராய்ச்சி செய்து, காலத்துக்கும் அவசியத்துக்கும் தக்க வண்ணம் தள்ளுவன தள்ளி, கூட்டுவன கூட்டித் திருத்தம் செய்ய வேண்டியது பகுத்தறிவு கொண்டவன் என்னும் மனிதனின் இன்றியமையாக் கடமையாகும் என்பதை அனேகர் உணர்ந்திருந்தாலும் அதன் பயனாய் இன்றைய தமிழ் எழுத்துக்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பல என்பதைப் பற்றிப் பலருக்கு அபிப்பிராயம் இருந்தாலும், எவரும் தைரியமாய் முன்வராமலே இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய காரியத்துக்கு பாஷா ஞானம்,

குறிப்பு

இலக்கண ஞானம், பொதுக் கல்வி இல்லாத ஒரு சாதாரண மனிதன் முயற்சிக்கலாமா? என்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கலாம். அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், தகுந்த புலமையும், பாஷா ஞானமும். இலக்கண அறிவும் உள்ளவர்கள் எவரும் முயற்சிக்காவிட்டால் என் செய்வது? தவம் செய்வதா? அல்லது ஜெபம் செய்வதா? தமிழ் இன்றல்ல நேற்றல்ல, எழுத்துக்கள் ஏற்பட்டது இன்று நேற்றல்ல. ஆனால், எழுத்துக்கள் கல்லிலும் ஓலையிலும் எழுதும் காலம் பொய் காகிதத்தில் எழுதவும், அச்சு வார்த்துக் கோக்கவும் ஏற்பட்ட காலம் தொட்டு இன்றுவரை, அவற்றில் யாதொரு மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், யாராவது ஒருவர் துணிந்து இறங்க வேண்டியதாயிற்று" என்று பெரியார் கூறுகின்றார்.

பெரியாரின் இந்த துணிச்சலான எழுத்து மாற்றத்திற்கு துணையாக இருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர், சுயமரியாதை இயக்கத்தில் பெரியாருக்கு இணையான சிந்தனையாளராகவும் துடுக்குத்தனமும் கொண்வராக இருந்த குத்தூசி குருசாமி அவர்கள்.

## பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்

| பழைய முறை | - | புது முறை |
|---|---|---|
| ஐ | - | அய் |
| ஔ | - | அவ் |
| , | - | ணா |
| ƒ | - | றா |
| „ | - | னா |
| ˜z | - | ணை |
| ˜y | - | லை |
| ˜s | - | ளை |
| b, | - | ணொ |
| bƒ | - | றொ |
| b„ | - | னொ |

| | | |
|---|---|---|
| n, | - | ணோ |
| n*f* | - | றோ |
| n„ | - | னோ |

குறிப்பு

தமிழக அரசு செய்துள்ள இச்சீர்திருத்தம் திட்டமிட்டுச் செய்த மொழி வளர்ச்சியின் முதல் படியாக இருக்கின்றது.

பெரியார் கடைபிடித்து வந்த மேற்கண்ட எழுத்துகள் ஒழுங்கு கருதி மட்டுமின்றித் தேவை கருதியும் மாற்றம் பெற வேண்டமாகச் சொல்லப்பெற்றது. அந்தத் திருத்தத்தை 1979இல் தமிழக அரசாங்கம் [அன்று முதலமைச்சராக இருந்த ம. கோ. இராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்)] பெரியார் ஈ.வே.ராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அளவில் பின்பற்ற வேண்டும் என்று அரசு ஆணை (அரசாணை எண் 1875) பிறப்பித்தது. படிப்படியாக உலகத ˙தமிழர்கள் அளவில் அந்நடைமுறை பின்பற்றப்பட்டது. ஆயினும் அம்மாற்றத்தை மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள் பெருஞ்சித்திரனாரும் மறுத்தனர். இப்போதைக்குத் தமிழுக்குத் தேவை மொழித் திருத்தமே அன்றி எழுத்துத திருத்தமன்று என்று கடிந்துரைத்தனர். ஆட்சித்துறை, கல்வித்துறை, வழிபாட்டுத்துறை என அனைத்திலும் தமிழே நடைமுறைப்படுத்தப்படுவதும், எல்லாவற்றிலும் கலப்புத் தமிழ்ப் பயன்பத்துவதைக் கடிந்து எதிர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

**வ. செ. குழந்தைசாமி**

கரூர் மாவட்டத்திலுள்ள வாங்கலாம்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தவர். நீர்வளத்துறை வல்லுநரான பேரா. குழந்தைசாமி கரக்பூரிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் தொழில் நுட்பத்தில் முதுகலைப் பட்டம் பெற்றபின் ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் மேற்படிப்பைப் படித்தார். ஜெர்மனியில் அவர் படித்தபோது ஜெர்மனி மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீவிரமான தேடில்கள்

குறிப்பு

நடந்துகொண்டிருந்தன. ஏற்கனவே பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தை ஆதரித்திருந்த பேரா. வ.செ. குழந்தைசாமியும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய புதிய சிந்தனைகள் அங்கே அவருக்குத் தோன்றியது. பேரா. வா.செ.குழந்தைசாமி பெருந்தமிழறிஞர் தேவநேயப் பாவாணரிடம் தமிழ் கற்றவர். கவிஞர் குலோத்துங்கன் என்ற பெயரில் கவிதைகளை எழுதினார். எண்ணற்ற கட்டுரைகளை அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு, இலக்கியம் என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். அவரது 'அறிவியல் தமிழ்' 'வாழும் வள்ளுவர்' 'உலகச் செவ்வியல் மொழிகளின் பரிசையில் தமிழ்' ஆகிய செம்மாந்த நூல்களை தமிழுக்காக இயற்றியுள்ளார்.

"தமிழர்களின் அடையாளம் தமிழால் மட்டுமே"

என்று கூறிய இவர், உலகெங்கும் பரந்துபட்டு வாழும் தமிழர்கள் தம் அடையாளத்தைத் தமிழ் மொழியின் மூலம் மட்டுமே தக்க வைத்துக் கொள்ள முடியும் என்றும் அந்த நோக்கத்தில் தமிழைப் புலம்பெயர்ந்த தமிழர்களும் எளிதாக் கற்கத் தமிழ் எழுத்துக்களைச் சீரமைக்க வேண்டும் என்று ஐம்பது ஆண்டுகளாகப் போராடியவர். கணினித் தமிழ் நாட்டில் வேரூன்றத் தொடங்கும்போது தமிழக அரசு நாடிய குறிப்பிட்ட சில தலைவர்களில் இவரும் ஒருவர்.

தமிழில் உயர்மட்ட அறிவியலும் தொழில்நுட்பமும் கற்பிப்பதில் பெருமுனைப்பு கொண்டு பல முயற்சிகளைத் தொடங்கினார். பல துறைகளின் ஆங்கிலக் கலைச்சொற்களைத தொகுத்து அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்த பெரும்பணியை இவர் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் செயல்படுத்தினார்.

இக்கால தமிழில் 247 எழுத்துகள் இருப்பதாகவும், அதற்காக 107 குறியீடுகளைக் கற்க வேண்டியிருப்பதால் அவற்றைக் குறைத்து 39 குறியீடுகளை மட்டுமே கற்றால் போதுமான வகையில் தமிழ் எழுத்துகள் சீரமைக்கப்பட வேண்டும் என்றும் முனைவர் வா.செ.குழந்தைசாமி வலியுறுத்தினார். மேலும், தமிழின் 247 ஒலிப்புகளுக்கான 125 எழுத்து வடிவங்கள் அல்லாது 39 எழுத்து வடிவங்களைக் கற்றால் போதுமானது

என்றுக் கூறுகின்றார். உலகில் தன் ஆளுமையை விரித்திருக்கிற ஆங்கில மொழிக்கு 26 எழுத்துகளே உண்டென வா. செ. குழந்தைசாமி எடுத்துரைகின்றார்.



'இ'கர, 'ஈ'கார, 'உ'கர, 'ஊ'கார – உயிர்மெய் எழுத்துகளுக்கு மாற்றாகக் குறியீடுகளை உருவாக்கிக்கொள்ளலாம் என்றுக் கூறினார்.

சான்றாக,

கி என்பதை க □ - என்றும்,

கீ என்பதை க ¦ - என்றும்,

கு என்பதை க - என்றும்

கூ என்பதை கக என்றுமாகக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதலாம் என்கிறார். அவ்வாறு எழுதுவதால் 18 x 4 = 72 வரிவடிவங்களைக் குறைத்து, மொத்தம் 39 எழுத்து வடிவங்களே தமிழுக்குப் போதுமானவை என்று அறிவிக்கிறார்.

**20ஆம் நூற்றாண்டு எழுத்துச் சீர்திருத்த முயற்சிகள் :**

- 1930 காரைக்குடியில் இருந்து வெளிவந்த குமரன் இதழில் அதன் ஆசிரியர் முருகப்பா ணா, றா, னா, ணை, ளை, னை என்ற வரிவடிவங்களைப் பயன்படுத்தி ஒரு கட்டுரையை வெளியிட்டு வாசகர் கருத்தை வரவேற்றார்.
- 1933 திசம்பர் 23, 24 நாள்களில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த தமிழன்பர் மாநாட்டில் 15வது தீர்மானமாக எழுத்துச் சீரிருத்தித் தீர்மானம் நிறைவேறியது.
- 1933இல் தமிழ் வரி வடிவ ஆராய்ச்சி என்ற தலைப்பில் சிங்கப்பூர் தமிழ் அறிஞர் சு.சி. சுப்பையா 'சிங்கப்பூர் முன்னேற்றம்' இதழில் கட்டுரை எழுதினார்.

குறிப்பு

- 1935இல் குடியரசு இதழில் பெரியார் எழுத்து என்று குமரன் இதழ் ஆசிரியர் முருகப்பா 1930இல் பயன்படுத்திய மாற்றங்களையும் ஏற்கனவே புழக்கத்தில் இருந்த அய், அவ் ஒலி மாற்றங்களையும் சேர்த்து திருந்திய வரிவடிவத்தைப் புகுத்தித் தொடர்ந்து குடியரசிலும் விடுலையிலும் பயன்படுத்தினார்.
- 1941 சனவரி 18, 19 நாள்களில் மதுரையில் நடைபெற்ற "தமிழ் இலக்கிய மாநாட்டில்" எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1948 பிப்ரவரி 14, 15 நாள்களில் சென்னையில் நடைபெற்ற "அகிலத் தமிழர் மாநாட்டில்" எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் எழுத்துச் சீர்திருத்தக் குழுவும் அமைக்கப்பட்டது.
- 1950இல் தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்த பொழுது எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன.
- 1975 பிப்ரவரி திங்களில் தமிழபப் புலவர் குழு உயிர்மெய் உகர ஊகாரம் உட்பட எழுத்துச் சீர்திருத்த ஆய்வுத் தீர்மானம் நிறைவேற்றியது.
- 1977ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அறிஞர் கருத்தறிந்து எல்லோரும் ஏற்கும் வகையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்வதாக உறுதியளித்தது.
- 1978-79இல் பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழக அரசு, முதற்கட்டமாகப் பெரியார் 1935இல் பயன்படுத்திய வரிவடிவங்களில் அய், அவ் தவிர மற்றவற்றைச் செயற்படுத்தியது.
- 1983இல் சிங்கப்பூர் அரசு இச்சீர்திருத்தத்தை ஏற்றது. 1984 தைத் திங்கள் முதல் செயற்படுத்தியது.

சிறுவினா :

1. பட எழுத்துமுறை என்றால் என்ன?
2. அகர எழுத்துமுறை என்றால் என்ன?
3. எழுத்துச் சீர்திருத்தம் பற்றி பெரியாரின் கருத்து யாது?

4. எண்ண எழுத்து முறை என்றால் என்ன?
5. வட்டெழுத்து என்றால் என்ன?

பெருவினா :

குறிப்பு

6. பிராமி எழுத்துகள் பற்றி விளக்கி உரைக
7. வீரமாமுனிவர் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விளக்கி உரைக.
8. வ.செ. குழந்தைசாமி செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விளக்கி
9. எழுத்துமொழி வடிவம் அல்லாத மொழிகளின் வரலாற்றினை அறிய பயன்படும் முறைகளை விளக்கி உரைக.
10. வீரசோழியம் கூறும் மூன்று வட்டாரங்களை கூறி, அங்கே ழகர ளகர மெய்கள் எவ்வாறு மயங்கி வருகின்றன என்பதை விளக்கி கூறுக.
11. வரிவடிவத்தில மூன்று வகை எழுத்து மறைகளைக் கூறி விளக்கி உரைக.
12. 20ஆம் நூற்றாண்டு எழுத்துச் சீர்திருத்த முயற்சிகளைப் பட்டியலிடுக.

கட்டுரை வினா :

13. எழுத்துச் சீர்திருத்தம் பற்றி நும் பாடவழி நீ அறிவது யாதென தொகுக்க.
14. தமிழின் வரிவடிவ எழுத்து முறையைப் பற்றி எடுத்துரைக.
15. எழுத்துச் சீர்திருத்தம் செய்த தமிழ் சான்றோர்கள் மூவரைப் பற்றி எடுத்துரைக.


பார்வை நூல்கள் :

1. தமிழ் மொழி வரலாறு, தெ.பொ.மீனாட்சிசுந்தரம், பாரி நிலையம், சென்னை-108
2. தமிழ் மொழி வரலாறு, சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், பாரி நிலையம், பிராட்வே, சென்னை – 1.
3. மு. வரதராசனார், மொழி வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், பாரி நிலையம், பிராட்வே, சென்னை – 1.
4. மொழியியல், பேரா. டாக்டர் ரா. சீனிவாசன், சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை – 14. முதல் பதிப்பு : டிசம்பர் 2010

5. திராவிட மொழிகள் பகுதி – 1, டாக்டர் ச. அகத்தியலிங்கம், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 108
6. தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர் மா. இராசமாணிக்கனார், பூங்கொடி பதிப்பகம், 14, சித்திர குளம் மேற்கு, மயிலாப்பூர், சென்னை – 4.
7. தமிழ் வரலாறு, ஞா. தேவநேயப்பாவாணர், பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, சென்னை – 108.

**குறிப்பு**


குறிப்பு


பின்னிணைப்பு
தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் : உயிர் எழுத்துக்கள்
நூற்றாண்டு Century
அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ
கி.மு. 3
கி.பி. 2
கி.பி. 3
கி.பி. 4
கி.பி. 5
கி.பி. 6
கி.பி. 7
கி.பி. 8
கி.பி. 9

குறிப்பு




குறிப்பு





குறிப்பு

குறிப்பு



## குறிப்பு



| வினைவிகற்ப வாய்பாடு | சான்று | இறந்த காலத்தில் வரும் பொழுது வேரில் ஏற்படும் மாற்றம் | இறந்தகால விகுதி | நிகழ்கால விகுதி | எதிர்கால விகுதி | 'செய' வினை யெச்ச விகுதி |
|---|---|---|---|---|---|---|
| I | செய் | - | த் | கிற் | வ் | அ |
| II | ஆள் | ள் > ண் | த் ட் | கிற் | வ் | அ |
| III | கொல் | ல் > ன் | த் ற் | கிற் | வ் | அ |
| IV | அறி | Ø > ந் அல்லது | த் | கிற் | வ் | அ |
| | | | த் ந்த் | கிற் | வ் | |
| V | ஆகு | உ > Ø | இன்~இ | கிற் | வ் | அ |
| VI | நடு | உ > Ø அல்லது | Pத் > PP | கிற் | வ் | அ |
| | CVPu> | CVP> | CVPPu | கிற் | வ் | அ |
| VII | உண் | - | த்>ட் | கிற் | வ் | அ |
| VIII | தின் | - | த்>ற் | கிற் | வ் | அ |
| IX | கேட் (ஏவல் நீங்கலாக) (ஏவலில் 'கேள்' எனவரும்) | - | த்>ட் | கிற் | ப் | க |
| X | கற் (ஏவலில் மட்டும் கல் என்பதாகும்) | - | த்>ற் | கிற் | ப் | க |
| XI | பார் | Ø>த்அல்லது | த் | Ø>க்கிற் | Ø>ப்ப் | Ø>க்க |
| | பார் | - | த் > த்த | க் கிற் | ப்ப | க்க |
| XII | நட | த் > ந் அல்லது | த் | Ø > க்கிற் | Ø > ப்ப | Ø > க்க |
| | நட | | த் > ந்த் | க்கிற் | ப்ப | க்க |

| மூலத்திராவிட மொழி | தமிழ் | மூலத்திராவிட மொழி | தமிழ் |
|---|---|---|---|
| †அ' | அ | †ஊ | ஊ |
| †ஆ | ஆ | †எ | எ |
| †இ | இ | †ஏ | ஏ |
| †ஈ | ஈ | †ஒ | ஒ |
| †உ | உ | †ஓ | ஓ |

# மாதிரிவினாத்தாள் - 1

குறிப்பு

மதிப்பெண்கள் - 75

பகுதி அ – (10 X 2 = 20 மதிப்பெண்கள்)

I. கீழ்க்காணும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. ஒரு மொழியின் வளர்ச்சிநிலையை அறிய உதவும் சான்றாதாரங்கள் யாரைவ?
2. தமிழ் மொழியின் நிலையை தெரிந்துகொள்ள பயன்படும் இலக்கண நூல்கள் யாவை
3. கல்வெட்டுக்களில் உடம்படுமெய் இல்லாமல் எவ்வாறு எழுதப்பட்டுள்ளன?
4. தொல்காப்பியர் கூறும் மூன்று சிறப்பொலிகள் யாவை?
5. சோழர் கால பெயர் பதிலிகளை எழுதுக.
6. மராட்டியர் காலப் பேச்சு வழக்குச் சொற்கள் ஐந்தினைச் கூறுக.
7. வானொலித் தமிழ் என்றால் என்ன?
8. பட எழுத்துமுறை என்றால் என்ன?
9. அகர எழுத்துமுறை என்றால் என்ன?
10. எழுத்துச் சீர்திருத்தம் பற்றி பெரியாரின் கருத்து யாது?

பகுதி ஆ – (5 X 5 = 25 மதிப்ெண்கள்)

II. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. அ. தொல்காப்பியர் வழி தனி மெய்யெழுத்து வடிவத்தினைக் கூறுக.

அல்லது

ஆ. தொல்திராவிடத்தில் உயிர் ஒலியன்கள் பற்றி விளக்கி கூறுக.

குறிப்பு

12. அ. மொழியின் தோற்றத்தினை உரையாசிர்களின் வழிநின்று விளக்கி உரைக.

அல்லது

ஆ. கல்வெட்டுக்கள் வழிநின்று தமிழ்மொழியின் வளர்ச்சியை விளக்கி உரைக.

13. அ. மொழிபெயர்ப்புக்கான வரையறையை விளக்கி உரைக.

அல்லது

ஆ. பிராமி எழுத்துகள் பற்றி விளக்கி உரைக

14. அ. மொழிப்பெயர்ப்பாளரின் பண்பு நலன்கள் யாவை என்று எடுத்தியம்பக?

அல்லது

ஆ. கிளைமொழிகளும் அதன் பகுதிகளையும் விளக்கி உரைக.

15. அ. வீரமாமுனிவர் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விளக்கி உரைக.

அல்லது

ஆ. வ.செ. குழந்தைசாமி செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விளக்கி உரைக.

பகுதி இ - (3 X 10 = 30 மதிப்பெண்கள்)

IIII. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. கல்வெட்டுகள் தமிழ்மொழியின் வரலாற்றினை அறிய எவ்வாறு பயன்படுகின்றன என்பதனை நும் பாடவழி விரித்துரைக.

17. தொல்காப்பியர் கூறும் வேற்றுமை உருபுகளை நும் பாடவழி நின்று விரித்துரைக.

குறிப்பு

18. கலைச் சொல்லாக்கம் பற்றி நும் பாடவழி நின்று கட்டுரையாக தருக.

19. இக்காலத் தமிழ்நாட்டு வட்டாரக் கிளைமொழிகள் பற்றி தொகுத்து எழுதுக.

20. எழுத்துச் சீர்திருத்தம் பற்றி நும் பாடவழி நீ அறிவது யாதென தொகுக்க.

## மாதிரிவினாத்தாள் - 2

மதிப்பெண்கள் - 75

பகுதி அ – (10 X 2 = 20 மதிப்பெண்கள்)

I. கீழ்க்காணும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. ஒரு மொழியினை அறிய இலக்கண நூல்கள் எவ்வாறு பயன்படுகின்றன?
2. அகராதி நூல்கள் ஐந்தினை பட்டியலிடுக.
3. தொல்திராவிட உயிர் ஒலியன்கள் யாவை?
4. பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைச் சான்றுடன் எழுதுக.
5. மராட்டியர் கால செப்பேடுகளில் காணப்படும் சுருக்க எழுத்துகளை எழுதுக.
6. அறிவியல் தமிழ் என்றால் என்ன?
7. கிளைமொழிகள் என்றால் என்ன?
8. எண்ண எழுத்து முறை என்றால் என்ன?
9. அகர எழுத்துமுறை என்றால் என்ன?

10. வட்டெழுத்து என்றால் என்ன?

குறிப்பு

பகுதி ஆ – (5 X 5 = 25 மதிப்பெண்கள்)

II. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. அ. தமிழ் அகராதிகள் பற்றி விளக்கி உரைக.

அல்லது

ஆ. அயல்நாட்டார் குறிப்புகளில் காணப்படும் தமிழ்மொழி பற்றிய பதிவுகள் யாவை?

12. அ. அறிவியல் தமிழின் முக்கியத்துவத்தை பற்றி நீ படித்ததை விரித்துரைக.

அல்லது

ஆ. தொல் திராவிட மெய்யொலியன்கள் பற்றி விளக்கி உரைக.

13. அ. தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் யாவை?

அல்லது

ஆ. தமிழகத்தில் காணப்படும் குகைக் கல்வெட்டுகள் பற்றி விளக்கி உரைக.

14. அ. எழுத்துமொழி வடிவம் அல்லாத மொழிகளின் வரலாற்றினை அறிய பயன்படும் முறைகளை விளக்கி உரைக.

அல்லது

ஆ. வீரசோழியம் கூறும் மூன்று வட்டாரங்களை கூறி, அங்கே ழகர ளகர மெய்கள் எவ்வாறு மயங்கி வருகின்றன என்பதை விளக்கி கூறுக.

15. அ. வரிவடிவத்தில மூன்று வகை எழுத்து மறைகளைக் கூறி விளக்கி உரைக.

அல்லது

ஆ. 20ஆம் நூற்றாண்டு எழுத்துச் சீர்திருத்த முயற்சிகளைப் பட்டியலிடுக.

குறிப்பு

பகுதி இ - (3 X 10 = 30 மதிப்பெண்கள்)

IIII. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொல்காப்பியர் கூறும் சிறப்பொலிகள் பற்றி கட்டுரை வடிவில் தருக.

17. சோழர்காலத் தமிழ்மொழி மாற்றங்களை தொகுத்து கட்டுரை வடிவில் தருக.

18. மொழிபெயர்ப்பு பற்றிய முக்கியத்துவத்தினை கட்டுரை வடிவில் தருக.

19. தமிழின் வரிவடிவ எழுத்து முறையைப் பற்றி எடுத்துரைக.

20. எழுத்துச் சீர்திருத்தம் செய்த தமிழ் சான்றோர்கள் மூவரைப் பற்றி எடுத்துரைக.